
வரமாய்
வந்த தளிரே!
பிரேமா
வரமாய் வந்த தளிரே
பிரேமா
வரமாய்
வந்த தளிரே!
பிரேமா

## முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே,

உங்களை எனது ஐந்தாவது கதையில் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் அளித்து வரும் தொடர் ஆதரவிற்கு எனது நன்றிகள் பல உரித்தாகுக.

எனது கதைகளில் உள்ள நிறை, குறைகளை premaarumugam@yahoo.com என்ற எனது மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவித்து வரும் அனைத்து நல் இதயங்களுக்கும் எனது நன்றி. இந்தக் கதையிலும் உங்களுக்குப் பிடித்த மற்றும் பிடிக்காத விஷயங்களை எனக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் 'அருணோதயம்' திரு. அருணன் ஐயா அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்புடன்

**பிரேமா**

# வரமாய் வந்த தளிரே!

## 1



மகாத்மா காந்தி பிறந்த மாநிலமான குஜராத்தில், சிறிதும் இல்லாத பெரிதும் இல்லாத அந்த நடுத்தர வீட்டில் காலை ஆறரை மணிக்கு மெதுவாகத் தனது படுக்கையில் இருந்து எழுந்தாள் மீரா. இக்கதையின் நாயகி.

அளவான உடல்வாகுடன், கோதுமை நிறத்தில், முகலட்சணத்துடன் இருந்த மீரா ஒவ்வொரு நாளும் தூங்கி எழும்போதுகூட அழகாகவே தோன்றுவாள்.

பத்து நிமிடங்கள் கழித்துத் தனது அறையில் இருந்து வெளிப்பட்ட மீரா தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்த தனது தந்தை மாணிக்கத்தின் அருகே சென்று அவரது மடியில் தலை வைத்துப்

படுத்துக் கொண்டே, ''ஏன்பா எப்போ பார்த்தாலும் நியூஸ் தானா? வேற எதையாச்சும் பார்க்க வேண்டியது தானே?'' என்று கேட்டாள்.

''எனக்குப் பிடிச்சதை நான் பார்க்கிறேன். அதிலே உனக்கு என்ன கஷ்டம்? உனக்குப் பிடிக்கலைன்னா காதை மூடிக்கொள்'' என்றார்.

அவள் அமைதியாக அவரது மடியில் படுத்துத் தனது தூக்கத்தைத் தொடர... கையில் கரண்டியுடன் அவளது அண்ணன் சந்துரு அவர்கள் முன்னே வந்து நின்றான்.

''அப்பா, இன்னைக்குச் சமையல் செய்ய வேண்டியது அவள் டர்ன். மகாராணி எழுந்து வந்ததே லேட். போனாப் போறான்னு நாம தொடங்கி வைப்போம்... அப்புறமா வந்து சேர்ந்துக்குவாள் என்று பார்த்தேன். அவ என்னடான்னா உங்க மடியிலே படுத்துத் தூங்குறாள். நீங்களும் பார்த்துக்கிட்டு சும்மா இருக்கீங்க. இதெல்லாம் நல்லா இல்லை சொல்லிட்டேன்'' என்று கத்தினான்.

''என்மா மீரா அண்ணன் சொல்லுறது நிஜமா?'' என்று மாணிக்கம் கேட்டுக் கொண்டிருக்கும்போதே சந்துரு அவரை முறைத்தான்.

மகனை நோக்கி அசடு வழிந்து விட்டு, ''எழுந்து போய் சமையலைப் பாரு மீரா. உன் வேலையை நீ தான் பார்க்கணும். அம்மா உயிரோடு இருந்திருந்தால் அவளே எல்லாத்தையும் பார்த்திருப்பாள். எப்படின்னாலும் உனக்குக் கல்யாண வயசு வந்திடுச்சு. அதனால சமைக்கத் தெரிஞ்சு இருக்கணும் தானே? போம்மா!'' என்று மகளைத் தன் மடியில் இருந்து எழுப்ப முயற்சித்தார்.



''அப்பா, என் வேலையை அடுத்தவங்களைப் பார்க்கச் சொல்லிட்டு வெட்டியா படுத்துக் கிடக்க நான் ஒண்ணும் சோம்பேறி கிடையாது. நேத்து ஒரு பேச்சு. இன்னைக்கு ஒரு பேச்சும் பேச மாட்டேன். உங்க பையன் தான் நேத்து கடையிலே வைச்சு இன்னைக்கு சமையல் செய்யுறதா ஒத்துக்கிட்டான். இப்போ உங்க முன்னாடி கதையை உல்டா பண்ணுறான்.'' என்று அண்ணன் மீது புகார் படித்தாள்.

தமிழரான மாணிக்கம் தன் குடும்பத்தினருடன் ஐந்து வருடங்களுக்கு முன்பு வரை மும்பையில் தான் வசித்து வந்தார். அவரது மனைவி இறந்த பின்பே அவர் தங்களுக்குச் சொந்தமான மும்பை வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு குஜராத்தில் குடியேறினார்.

மாணிக்கம் குஜராத்தில் மொத்த வியாபாரம் செய்யும் துணிக்கடை ஒன்றை வைத்திருக்கிறார். அங்கே அண்ணனும், தங்கையும் அப்பாவுடன் சேர்ந்து வியாபாரத்தில் ஈடுபடுவது வழக்கம். நேற்று மதியத்திற்கு மேல் மாணிக்கம் வேலை விஷயமாக வெளியே சென்று விட்டார்.

சந்துரு அதே ஊரில் இருக்கும் தன் காதலி தாரிகாவைச் சந்திக்க வெளியே கிளம்பினான். என்னால் தனியா கடையைப் பார்த்துக்க முடியாதென்று மீரா மறுத்தபோது மறுநாள் காலைச் சமையலைத் தான் செய்து தருவதாகப் பேரம் பேசி தங்கையைக் கடையில் இருக்கச் சம்மதிக்க வைத்தான். ஆனால் அவனது காரியம் நேற்றே முடிந்துவிட்ட காரணத்தால் இப்போது வந்து மாற்றிப் பேசுகிறான்.

தந்தையின் முன் தன் காதல் விவகாரத்தை வெளியே சொல்ல முடியாமல் சந்துரு விழித்தான்.

''நான் சொன்னேன் தான். ஒத்துக்கிறேன். அதுக்காக நீ ஒண்ணுமே செய்யாமல் இருந்தால் எப்படி? வா வந்து கொஞ்சமாச்சும் வேலை செய்'' என்று அவளை வம்படியாக எழுப்பி விட்டான்.

''நீ சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரி மாறி மாறிப் பேசுவேன்னு எனக்குத் தெரியுமே'' என்று சொல்லிக் கொண்டே அவனுடன் சமையலைக் கவனிக்கப் புறப் பட்டாள்.

''நான் அப்பா முன்னாடி உன் லவ் மேட்டரைச் சொல்ல மாட்டேங்கிற தைரியத்திலே தானே என்னை இப்போ வேலை வாங்குறே! நீ சரியான ஆள் தான் அண்ணா. எப்போ எதைச் செய்வேன்னு கணிக்க முடியாது'' என்று நொடித்துக் கொண்டே மீரா தன் வேலைகளைத் தொடர்ந்தாள்.

''ஒரேடியா முடியாதுன்னு சொல்லலையே மீரா. பாரு.. இப்பவும் உனக்குப் பாதி வேலை செஞ்சு தரேன் என்று தானே சொல்லுறேன். என் செல்லத் தங்கச்சி இல்லே... அண்ணனுக்கு ஹெல்ப் பண்ணுவியாம்'' என்று தங்கையின் தாடையைப் பிடித்துக் கொஞ்சினான்.

அதில் மகிழ்ந்தவளாய், ''சரி நீ போ. நானே மீதி வேலையைப் பார்த்துக்கிறேன்'' என்று அண்ணனை அனுப்பி வைத்தாள்.

அவர்கள் சாப்பிடும்போது சந்துரு மீராவின் திருமண விஷயமாகப் பேச்செடுத்தான்.

''ஏன் சந்துரு, தாரிகா கல்யாணத்துக்கு அவசரப் படுத்துறாளா?'' என்று மீரா அவனது காதில் முணு முணுக்க,



''அப்போ என் தங்கச்சி பத்தி எனக்கு அக்கறை இல் லைன்னு சொல்லுறியா?'' என்று அவன் உள்ளே போன குரலில் சொன்னதும்,

''அண்ணா, நான் சும்மா ஜோக்குக்கு சொன்னேன். சாரி'' என்று மீரா மன்னிப்புக் கேட்டாள்.

''தாரிகாவோட அக்காவுக்கே இன்னும் கல்யாணம் ஆகலை'' என்று தங்கையிடம் கிசுகிசுத்துவிட்டு தன் அப்பாவை நோக்கி,

''நீங்க சொல்லுங்கப்பா. மீரா கல்யாண விஷயமா என்ன முடிவு பண்ணியிருக்கீங்க?'' என்று கேட்டான்.

''பார்க்க ஆரம்பிச்சிட வேண்டியது தான் சந்துரு. அவளுக்கு இருபத்தி ரெண்டு வயசாகிடுச்சே!'' என்று சொன்னவர்,

மகளைப் பார்த்து, ''நீ சொல்லும்மா. உனக்கு எப் படிப்பட்ட மாப்பிள்ளை பார்க்கணும்?'' என்று கேட்டார்.

அவள் சற்றும் தாமதிக்காமல், ''எனக்குத் தமிழ்நாட் டிலே மாப்பிள்ளை பாருங்கப்பா'' என்று சொன்னாள்.

''ஏன்டா மீரா அவ்வளவு தூரத்திலே?'' என்று ஆச் சரியமாக மாணிக்கம் விசாரிக்க,

''இல்லைப்பா. நாம தமிழர்கள் அப்படிங்கறது நாம தமிழ் பேசுறதால மட்டும் தான் தெரியுது. மத்தபடி நமக்கும் தமிழ்நாட்டுக்கும் சுத்தமாத் தொடர்பில்லாமல் போயிடுச்சு. நீங்க தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்தாலும் வேலைக்காக மும்பை வந்து செட்டில் ஆகிட்டீங்க. இப்போ அஞ்சு வருஷமா குஜராத்தில் இருக்கோம். இப்போ இந்த ஊரிலே நான் எங்கே போனாலும் என்னைப்

பார்த்த உடனே மதராஸி அப்படின்னு கண்டு பிடிச்சிடு றாங்க. என் முகம் பக்கா தமிழ் முகமா இருக்கிறதா என் பிரண்ட்ஸ் சொல்லுவாங்க. அப்படி இருக்கிறப்போ நாம தமிழ்நாட்டோட தொடர்பில்லாமல் இருந்தால் எப்படிப்பா? நான் என் கல்யாணத்துக்குப் பிறகாவது தமிழ் நாட்டிலே வாழணும் பா'' என்று கண்களில் கனவு மிதக்கச் சொன் னாள்.

மகளிடம் இருந்து அப்படி ஒரு பதிலை எதிர்பார்க்காத மாணிக்கம் யோசனையில் மூழ்கினார்.

மகள் சொல்வது போல் தமிழ்நாட்டுத் தொடர்பே அறுந்து விட்டது. இப்போ யாரிடம் சொல்லி மாப் பிள்ளை தேடுவது என்று விழித்தார்.

அடுத்த வாரத்தில் மாணிக்கத்திடம் வந்த சந்துரு, ''அப்பா, சொத்து வாங்கணும்ன்னு சொன்னீங்களே? எந்த ஊரிலே வாங்கப் போறீங்க?'' என்று கேட்டான்.

''இங்கே இருக்கிற வீடு, கடை, மும்பை வீடு... இது எல்லாமே உனக்குத் தான் சந்துரு. இந்த சொத்து மீராக்கு சீதனமாக் கொடுக்கப் போறதால அவ ஆசைப்படி தமிழ்நாட்டிலே வாங்கலாம்ன்னு பார்க்கிறேன். நீ என்ன சொல்லுறே?''

''அப்படியே செய்யலாம். அப்போ நான் சென்னை யிலே ஏதாச்சும் சொத்து அமையுதான்னு பார்க்கிறேன்'' என்று சொல்லிச் சென்றான்.

அடுத்த மாதமே அவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் விதமாக ஒரு சொத்து அமைய அதை ரிஜிஸ்டர் பண்ணுவதற்காக மாணிக்கம் சென்னை செல்லத் தயாரானார்.



''மீரா, கிளம்பும்மா. நீதான் கையெழுத்துப் போட ணும்'' என்று மாணிக்கம் சொன்னதும்,

''அப்பா, இப்போதைக்கு உங்க பேரிலேயே வாங் குங்க. ஆனால் நானும் உங்க கூட சென்னைக்கு வரேன். எனக்குத் தமிழ்நாட்டைப் பார்க்கணும்'' என்றாள்.

மாணிக்கம் எவ்வளவோ வற்புறுத்தியும் அவள் அந்த சொத்தை தன் பேரில் வாங்கச் சம்மதிக்கவில்லை.

சந்துரு தன் தந்தையிடம், ''அப்பா, உங்களுக்கு சென்னையிலே உதவி செய்ய யாராச்சும் இருக்காங் களா?'' என்று கேட்டான்.

''எங்க ஊர் பெரியவர் மகாலிங்கம் ரொம்ப வருஷமா சென்னையிலேதான் இருக்கார். நான் போய் அவரைப் பார்த்துக்கிறேன் சந்துரு.''

''அவர்கிட்டே போன் பண்ணி சொல்லிட்டீங்களா?'' அவர் கூட தான் தங்கப் போறீங்களா? இல்லை ஹோட்ட லிலா?''

''அவர் போன் நம்பர் எனக்குத் தெரியாது சந்துரு. அவரை நான் பார்த்து ரொம்ப வருஷம் ஆச்சு. ஆனால் அவர் வீடு இருக்கும் இடம் எனக்கு ரொம்ப நல்லாத் தெரியும். அவர் வீட்டில் தங்க முடியாது சந்துரு. அவர் ரொம்பப் பெரிய பணக்காரர். அவருக்கு இந்த சொத்து வாங்குற விஷயத்திலே அனுபவம் அதிகம் இருக்கும் என்பதால்தான் அவர்கிட்டே இது பத்தி கலந்து பேச லாம்ன்னு நினைக்கிறேன். மத்தபடி அவரை தொந்தரவு செய்ய முடியாது'' என்றார்.

மாணிக்கமும், மீராவும் சென்னைக்குக் கிளம்பினர்.

# 2



வந்தாரை வாழ வைக்கும் தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரத்தில் புரசைவாக்கம் பகுதியில் அந்த அழகிய பங்களா வீற்றிருந்தது. அதைக் கடந்து செல்வோர் அதன் பிரமாண்டத்தைப் பார்த்து ஒரு முறை நின்று பார்த்துவிட்டுச் செல்வார்கள்.

உள்ளே நுழைந்ததும் அங்குள்ள தோட்டம் ரம்மியமாய் இருக்கும். கார் நிறுத்துமிடத்தைத் தாண்டி வீட்டின் உள்ளே நுழைந்தால் பெரிய வரவேற்பறை இருக்கும். அங்கிருக்கும் எழுபது இன்ச் தொலைக்காட்சி அதன் பிரமாண்டத்தை மேலும் அதிகரிக்கும் வண்ணம் வீற்றிருக்கும். ஆனால் அலங்காரப் பொருட்கள் அறவே இருக்காது. அதைப் பார்த்தாலே பெண் இல்லாத வீடு என்று எளிதில் சொல்லிவிடலாம்.

''கமலா சாப்பாடு ரெடியா? ஷ்யாம் சாப்பிட வந்திடுவான்'' என்று மகாலிங்கம் தன் வீட்டு வேலைக்காரியான கமலாவிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

எழுபத்தொரு வயதான மகாலிங்கமும், அவரது மகன் வழிப் பேரன் ஷ்யாமும் தான் இந்த வீட்டு உறுப்பினர்கள்.

தாய் தகப்பன் இல்லாத ஷ்யாமிற்கு அவனது தாத்தா தான் ஒரே சொந்தம், பந்தம், ஆதரவு எல்லாமே!

தாத்தாவின் தொழிலை ஷ்யாம் தான் பார்த்துக் கொண்டான். பேரனிடம் தொழிலை ஒப்படைத்துவிட்டு



ஒரேடியாக ஒதுங்கி விடாமல் மகாலிங்கம் இந்த வயதிலும் அலுவலகம் சென்று கொண்டு தான் இருந்தார்.

ஷ்யாம் மாடியில் உள்ள தன்னுடைய அறையில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான்.

ஆறடிக்கும் குறைவான உயரமும், அதற்கேற்ற பருமனும், அலை அலையாய் படியும் கேசமும், எந்தப் பெண்ணையும் ஒரு முறை திரும்பிப் பார்க்க வைக்கும் முக வசீகரமும் அவனிடத்தில் உண்டு. தனது பேரனின் கம்பீரத்தை என்றும் போல் இன்றும் மகாலிங்கம் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''சாப்பிடலாமா தாத்தா?'' என்று கேட்டுக் கொண்டே சாப்பாட்டு மேஜையின் முன்னே அமர்ந்தான்.

''கமலம்மா'' என்று அவன் குரல் கொடுக்க ஆரம்பிக்கும்போதே கமலா உணவைப் பரிமாற சமையலறையில் இருந்து வந்தார்.

அவன் அமைதியாகச் சாப்பிட்டுவிட்டுத் தனது காரை எடுத்துக் கொண்டு அலுவலகம் சென்றான்.

மகாலிங்கம் வரவேற்பறையில் அமர்ந்து கொண்டு செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது காவலாளி அவரை இன்டர்காமில் அழைத்தான்.

''ஐயா, யாரோ மாணிக்கம்ன்னு ஒருத்தர் உங்களைப் பார்க்க வந்திருக்கார். உள்ளே விடவா?''

''மாணிக்கமா? எந்த மாணிக்கம்? அவருக்கு எவ்வளவு வயசு இருக்கும்?''

''ஐயா, அவருக்கு அம்பது வயசு இருக்கும். உங்க ஊர்க்காரர்ன்னு சொல்லுறார்.''

''அந்த மாணிக்கமா? உள்ளே விடுப்பா'' என்று சொன்னவர் நாளிதழை மடித்து வைத்துக் கொண்டே வாசலை நோக்கி நடந்தார்.

''ஐயா, நல்லா இருக்கீங்களா? என்று கேட்டுக் கொண்டே மாணிக்கம் உள்ளே நுழைந்தார்.

''வாப்பா மாணிக்கம். உன்னைப் பார்த்து எத்தனை வருஷமாச்சு! இந்தப் பக்கம் எட்டிப் பார்க்காமல் மும்பை யிலே இருந்துட்டியேப்பா.''

''என்னங்க ஐயா செய்யுறது. என் பொண்டாட்டி தமிழ் பொண்ணு தான் என்றாலும் எனக்கு தொழில் மும்பை யிலே அமைஞ்சதால அங்கே போய் இருந்தோம். ஆனா அவ அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி இறந்து போயிட் டாள். அவ இறந்த பிறகு மொத்த வியாபாரம் செய்யுற வாய்ப்பு வந்ததால நான் குஜராத்துக்குப் போயிட்டேன். இப்போ அங்கே தாங்க ஐயா இருக்கேன்.''

''உன் சம்சாரம் இறந்துட்டாளா? நல்ல பொண்ணு. ம்ம்ம்... நமக்குக் கொடுத்து வைக்கலை. இங்கேயும் என் பையன் சுரேஷும் அவன் பொண்டாட்டியும் இறந்து போயிட்டாங்க'' என்று மகாலிங்கம் சொன்னதும்,

இருவரும் ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்லிக் கொண்டனர்.

கமலா கொண்டு வந்து தந்த காபியை பருகிக் கொண்டே மீராவின் தந்தை தான் சொத்து வாங்க வந்த விஷயத்தைச் சொன்னதும்,

''ரொம்ப நல்ல விஷயம். வாப்பா, நானே கூட இருந்து உனக்கு முடிச்சுத் தரேன்'' என்று சொல்லி மகாலிங்கம் தனது காரில் அவரை அழைத்துக் கொண்டு சென்றார்.



பத்திரப் பதிவு வேலை முடிந்த பின் மகாலிங்கம் மீராவின் தந்தையை அவர் தங்கி இருக்கும் ஹோட்ட லுக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் ரிசப்ஷனில் காத்திருந்தனர். மீராவை அறையில் இருந்து கீழே வரச் சொல்லி மாணிக்கம் அவளுக்கு போன் செய்தார்.

மகாலிங்கத்தை மீராவிற்கு அவளது தந்தை அறிமுகப் படுத்த... மீரா, ''நமஸ்தே!'' என்று தனது கரம் குவித்து வணக்கம் தெரிவித்தாள்.

''உனக்குத் தமிழ் தெரியாதாம்மா?'' என்று சிறிது வருத்தம் எட்டிப் பார்த்த குரலுடன் மகாலிங்கம் கேட் டார்.

மீரா புன்முறுவலித்துக் கொண்டே, ''எங்க வீட்டிலே நாங்க எப்போதுமே தமிழ்ல தான் பேசுவோம். சின்னச் சின்ன வார்த்தைகள் என்னையும் அறியாமல் ஹிந்தி யிலே வந்திடும். அவ்வளவுதான்'' என்று விளக்கம் சொன்னதும் மகாலிங்கம் அவளைப் பார்த்து முறுவலித் தார்.

அருகிலிருந்த மகாலிங்கத்தைக் கண்டு கொள்ளாமல் மீரா தன் தகப்பனை மிரட்ட ஆரம்பித்தாள்.

''சாப்பிட்டீங்களாப்பான்னு கேட்குறதுக்காக எத்தனை தடவை போன் பண்ணினேன்! ஏன் எடுக்கலை? கரெக்ட் டைம்க்கு சாப்பிட வேண்டாமா? வருஷம் ஏற ஏற உங்களுக்கு இளமை திரும்புதா? பத்தாதுக்கு ப்ரஷர், சுகர்ன்னு ஊரிலே இருக்கிற எல்லாத்தையும் உடம்புக்குள்ளே பூட்டி வைச்சிருக்கீங்க. ஏன்ப்பா இப்படி இருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''நான் தான் காலையிலே போகும்போதே என்னை எதிர்பார்க்காமல் நீ கரெக்ட் டைம்க்கு சாப்பிடுன்னு சொல்லிட்டுத் தானே போனேன்.''

''அப்பா...'' என்று கடுப்புடன் மொழிந்தவள், ''நான் உங்க சாப்பாட்டைப் பத்திக் கேட்டால் நீங்க என்னைப் பத்தி சொல்லிக்கிட்டு இருக்கீங்க...'' என்றதும்,

மீராவின் தந்தையை முந்திக் கொண்டு மகாலிங்கம், ''உங்க அப்பாவை கரெக்ட் டைம்க்கு நான் சாப்பிட வைச்சுட்டேன் மீரா'' என்றார்.

அவள் உடனே மகாலிங்கத்தின் புறம் திரும்பி, ''தாங்க்ஸ் தாத்தா'' என்றாள்.

அவள் தன்னைத் தாத்தா என்று அழைத்ததும் தன் பேரன் ஷ்யாம் மீது தோன்றும் அதே பரிவு அவள் மீதும் தோன்றியது.

தனக்கொரு பேத்தி இருந்திருந்தால் இப்படித் தானே வளர்ந்து நிற்பாள் என்ற எண்ணம் தோன்ற அவளை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவள் தன் தந்தையை மிரட்டியதில் வெளிப்பட்ட அவளது பாசத்தைப் பார்த்தவருக்கு, 'இப்படி ஒரு பெண்ணைத் தான் தன் பேரனுக்குக் கட்டி வைக்க வேண்டும்!' என்ற எண்ணம் தோன்றியது.

'ஏன் இப்படி ஒரு பெண்ணை என்று சிந்திக்க வேண்டும்? இவளையே கட்டி வைத்தால் என்ன?' என்ற எண்ணம் மனதில் உதயமானதும் மகாலிங்கம் தன் மனக் கண்ணில் அவளைத் தன் பேரன் அருகே நிற்க வைத்துப் பார்த்து மகிழ்ந்தார்.

''உன் பொண்ணு ரொம்ப வளர்ந்துட்டாள் மாணிக்கம். மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்கலையா?'' என்று கேட்டார்.



''பார்க்கணும் ஐயா, என் பையன் வேற ஒரு பொண்ணை லவ் பண்ணுறான்'' என்று மாணிக்கம் சொன்னதும் மீரா அவரை ஆச்சரியமாக ஏறிட்டாள்.

''அண்ணனும் தங்கச்சியும் எனக்கு எதுவும் தெரியாதுன்னு நினைச்சிக்கிட்டு இருக்காங்க'' என்று சொல்லிச் சிரித்தவர்,

''அந்தப் பொண்ணும் தமிழ் பொண்ணு தான். அவங்க வீட்டிலே வந்து நம்மகிட்டே கல்யாணம் பேசும் முன்னாடி நான் என் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைச்சிடணும் இல்லையா? இவளுக்குத் தமிழ்நாட்டிலே வாழணும்ன்னு ஆசையா இருக்காம்'' என்று சொன்னதும் மகாலிங்கத்திற்கு மகிழ்ச்சி கூடியது.

அவர்கள் இருவரும் ஊருக்கு என்று திரும்புகிறார்கள் என்பதைக் கேட்டறிந்த மகாலிங்கம் தங்களது தொழிற்சாலைக்குக் கண்டிப்பாக வரவேண்டும் என்று அவர்கள் இருவருக்கும் அழைப்பு விடுத்தார்.

அதன்படி அவர்கள் ஊருக்குக் கிளம்பும் முன்னால் அவருடைய தொழிற்சாலைக்கு வந்தார்கள்.

இவர்கள் இருவரின் பேரைக் கேட்டதும் அவர்களை மரியாதையாக மகாலிங்கத்தின் அறைக்கு வழி நடத்திச் சென்றார்கள். இருவரும் அந்தப் பெரிய தொழிற்சாலையை பிரமிப்புடன் பார்த்துக் கொண்டே வந்தனர்.

அப்போது எதிரே ஷ்யாம் நடந்து வந்தான். அவனது கம்பீரத்தையும், தோரணையும் கண்ட மீராவிற்குள் ஒரு இனம் புரியாத படபடப்பு வந்தது.

இவர்கள் அருகே வரும் முன்பே அவன் ஒரு அறைக் குள் சென்று மறைந்தான்.

'சே! பக்கத்திலே வரும் முன்னாடி போய்விட்டானே? யாராக இருப்பான்? பெரிய போஸ்டில் இருப்பவனாத் தான் இருக்கும்' என்று மீரா நினைத்துக் கொண்டே மகாலிங்கத்தின் அறைக்குள் நுழைந்தாள்.

இந்த ரூமுக்குள் தானே அவனும் போனான் என்று நினைத்துக் கொண்டே மீரா உள்ளே நுழைய... மகாலிங்கம் இவர்கள் இருவரையும் ஆர்வத்துடன் வர வேற்றார்.

அவர் ஷ்யாமை இவர்களுக்கு அறிமுகப்படுத்தியதும், 'ஆகா! இவன் தான் கம்பெனி முதலாளியா? மீரா, அவன் பக்கம் திரும்பாதே!' என்று அவள் மனம் அவளுக்குக் கட்டளையிட்டது.

ஆனால் அதை கண் கேட்க வேண்டுமே? அது அவன் இருக்கும் பக்கமே ஒரப் பார்வை பார்த்துக் கொண் டிருந்தது.

இரண்டு நிமிடங்கள் அங்கே இருந்த ஷ்யாம் மாணிக் கத்துடன் பேசிவிட்டு அந்த அறையை விட்டு வெளி யேறினான்.

மகாலிங்கம், "ஒரு நிமிஷம்... நீங்க பேசிக்கிட்டு இருங்க. நான் இதோ வந்துடுறேன்" என்று சொல்லி வெளியேறினார்.

அந்த மேஜையில் ஷ்யாம் யாரிடமோ பரிசு வாங்கு வது போல ஒரு போட்டோ வைக்கப்பட்டிருந்தது.

மீரா அதைக் கையில் எடுத்துப் பார்த்தாள். ஷ்யாமின் உருவத்தை லயித்துப் பார்த்தவள் அதிலேயே மூழ்கிப்



போக... அருகிலிருந்த மாணிக்கத்திற்கு மகளின் செயல் கண்டு படபடப்பு உண்டானது.

"மீரா" என்று அவர் அழைத்தவுடன் அவள் அந்த போட்டோவை மேஜை மேல் வைத்து விட்டாள்.

சரியாக அந்த நேரம் மகாலிங்கம் உள்ளே நுழைய... மீராவின் தந்தை மகளிடம் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று நினைத்து அமைதியானார்.

மகாலிங்கம் மீராவின் தந்தையிடம் தந்து, "மாணிக்கம், எனக்கு சுத்தி வளைச்சுப் பேச வராது. உன் பொண்ணை என் பேரனுக்குக் கட்டிக் கொடுக்கிறாயா?" என்று கேட்டதும் மாணிக்கத்திற்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

அவர் சட்டென மகளின் புறம் தன் பார்வையைத் திருப்ப... அவளது முகத்தில் கோடிப் பிரகாசம் தெரிந்தது.

மகாலிங்கம் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனார்.

"நான் உன் பொண்ணைப் பார்த்த உடனே எனக்கு இந்த எண்ணம் வந்திடுச்சு. அதுக்குத் தான் உங்களை இங்கே வரச் சொன்னேன். பொண்ணும் மாப்பிள்ளையும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கணும் இல்லையா? ஷ்யாம் இப்போ மீராவைப் பார்த்திட்டு சம்மதம் சொல்லிட்டான். உனக்கும் உன் குடும்பத்துக்கும் சம்மதம்ன்னா நாம மேற்கொண்டு பேசலாம்" என்று சொன்னதும்,

"ஐயா, நீங்க பெரிய இடம்..." என்று மாணிக்கம் தயங்கியதும்,

"எனக்கோ, என் பேரனுக்கோ பொண்ணு பெரிய பணக்கார இடத்தில் இருந்து வரணும்கிற ஆசையோ,

எண்ணமோ கிடையாது. அதனால கட்டின புடவை யோட நீ பொண்ணை அனுப்பி வைச்சால் போதும். அவனுக்கு அப்பா, அம்மா இல்லாததால நான் தான் அவனுக்கு இருக்கிற ஒரே உறவு. வரப் போற பொண்ணு அவனுக்கு நல்ல மனைவியாவும், எனக்குப் பாசமான பேத்தியாவும் இருந்தால் போதும். நீ உன் பொண்ணு மற்றும் பையன்கிட்டே கேட்டுச் சொல்லு. போகும் முன்னாடி பேக்டரியைச் சுத்திப் பார்த்திட்டுப் போங்க'' என்று சொல்லி அவர்களுடன் ஒரு ஆளையும் சுற்றிக் காட்டுவதற்கு அனுப்பி வைத்தார்.

மாணிக்கத்திற்கு தொழிற்சாலையைச் சுற்றி வந்தபோது அவர்களது செல்வ நிலைமை இன்னமும் நன்றாகப் புரிந்தது. இரு முறை ஷ்யாம் அவர்களைக் கடந்து சென்றான். தொழிலாளிகள் ஷ்யாம் மீது வைத்திருக்கும் மரியாதை நன்கு புலப்பட்டது.

விடைபெறுவதற்கு மகாலிங்கத்தின் அறைக்குள் வந்தபோது மீராவின் தந்தை, ''நான் உங்க பேரனோட விருப்பத்தை அவர்கிட்டே நேரா கேட்டுத் தெரிஞ்சுக் கணுமே ஐயா'' என்றார்.

மகாலிங்கம், ''வெளியே போனதும் வலது பக்கத்தில் அவன் ரூம் இருக்கு. நீயே போய் அவன்கிட்டே பேசிட்டு வாப்பா'' என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தார்.

ஷ்யாமிடம் பேசிவிட்டு வந்ததும் மாணிக்கத்தின் முகத்திலுமே சந்தோஷ ஒளிவட்டம் தெரிந்தது. அவர் ஹோட்டல் அறைக்குத் திரும்பியதும் தன் மகனுடன் பேசினார்.



''பெரிய இடம்ன்னா...'' என்று சந்துருவும் அவரைப் போலவே தயங்கினான். அவனது தந்தை மகாலிங்கம் சீர் வேண்டாம் என்று சொன்னதை மகனுக்கு எடுத்துக் கூறினார்.

''மீராக்குப் பிடிச்சிருக்காப்பா?''

''ரொம்ப... அதனால தான் நம்ம தகுதிக்கு மீறின இடமா இருந்தாலும் பரவாயில்லைன்னு இந்தக் கல்யாணத்தைப் பத்திப் பேசுறேன். இல்லைன்னா வேண்டாம்ன்னு ஒரே வார்த்தையிலே மறுத்திருப்பேன். அதுவும் போக அவங்க தாத்தா எங்க ஊர்க்காரர் தான். ரொம்ப நல்ல மனுஷன்.''

''பையன் குணத்தை விசாரிச்சீங்களா? பணக்காரப் பையன்... ஏதாச்சும் கெட்டப் பழக்கம்...'' என்று சந்துரு கேட்டதும்,

''நானும் அதைப் பற்றித் தான்டா யோசிக்கிறேன். என்ன செய்யலாம்? யார்கிட்டே விசாரிக்கலாம்?''

''எனக்குத் தெரிஞ்ச ஒரு பிரண்டு சென்னையிலே இருக்கான். அவனுக்கு யாரையாச்சும் தெரியுமான்னு கேட்கிறேன்'' என்று சொல்லி போனை வைத்தான்.

தகப்பனும், தமையனும் ஷ்யாமின் குணநலன்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பது கூட மீராவிற்குத் தெரியவில்லை. அவள் கனவு லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

சந்துரு தன் நண்பனுக்கு போன் செய்து விசாரிக்க...

''எந்த ஷ்யாம்?'' என்று கேட்டவனிடம் சந்துரு விளக்க,

"ஹேய் அந்த ஷ்யாமா? எனக்குத் தெரிஞ்சு அந்த ஷ்யாமுக்கு சிகரெட், தண்ணி, பொண்ணு இந்த மூணுமே பிடிக்காது. நீ தாராளமா உன் தங்கச்சியைக் கட்டிக் கொடுக்கலாம்" என்று சொல்லிவிட காரியங்கள் மளமளவென்று நடந்தேறின.

அடுத்த நாற்பது நாட்களில் முஹூர்த்தம் என்று நாள் குறிக்கப்பட்டது. அவர்கள் ஊருக்குக் கிளம்பும் முன்பே மகாலிங்கம் மீராவை முஹூர்த்தப் புடவையைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி கல்யாண வேலையைத் தொடங்கி வைத்தார். சந்துருவிற்குக் காட்டுவதற்காக மகாலிங்கம் தன் பேரன் போட்டோ ஒன்றைக் கொடுத்தனுப்பினார்.

## 3



குஜராத் திரும்பியதும் நாட்களை எண்ணிக் கொண்டு மீரா காத்திருந்தாள். ஆனால் அவளுக்கு ஷ்யாம் இது வரை தன்னிடம் தனியாகப் பேசவில்லை என்ற பெரிய மனக்குறை இருந்தது.

திருமணத்திற்கு இன்னமும் இரண்டு வாரங்களே இருந்த போது...

தங்களது கடையில் இருந்து சந்துரு வெளியேறினான். அவன் எங்கே செல்கிறான் என்று கேட்பதற்காக மீரா அவன் பின்னோடு சென்றாள்.

"அண்ணா..." என்று கூவி அழைத்தாள்.



காரைத் திறக்கப் போனவன் தங்கை என்ன சொல்ல வருகிறாள் என்று கேட்பதற்காக அவளை நோக்கி வர... மீராவும் அவனை நெருங்கி வந்தாள்.

அப்பொழுது பூமி அதிர்ந்து ஆட்டம் காண ஆரம்பித்தது. அண்ணனும், தங்கையும் ஒருவரை ஒருவர் பற்றுக கோலாக பற்றிக் கொண்டனர்.

அவர்கள் என்னவென்று உணரும் முன்பே கண் முன்னால் கட்டிடங்கள் அனைத்தும் இடிந்து விழ ஆரம்பித்தது.

'பூகம்பமா?' என்று அவர்களது மூளைக்குள் மின்னல் வெட்டியபோது அந்தத் தெருவில் உள்ள அனைத்துக் கட்டிடங்களும் சீட்டுக் கட்டினால் கட்டப்பட்ட மாளிகை போல் சரிய ஆரம்பித்திருந்தன.

அண்ணன், தங்கை இருவரும் ஒருவரை ஒருவர் பற்றியபடி பீதியில் உறைந்து போய் நின்றிருந்தனர்.

இடிந்த கட்டிடத்தின் செங்கல் தெறித்து விழுந்து அவர்கள் இருவரையும் காயப்படுத்தியது.

இரண்டு நிமிடங்கள் நீடித்த பூகம்பம் அடங்கிய பின்பே அவர்களால் அசைய முடிந்தது. ஆனால் அப்போதும் கண் முன்னால் சரிந்த கட்டிடமும், அதற்குள் சிக்கித் தவித்த பல உயிர்களின் கூக்குரலும் அவர்களது மனதை பாதித்து மூளையை ஸ்தம்பிக்கச் செய்திருந்தது. கால்கள் அசைய மறுத்தன.

பல திசைகளில் இருந்தும் 'காப்பாத்துங்க!' என்ற ஒற்றை வார்த்தையே பல மொழிகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. அதுவே... அந்த தீனக் குரல்களே அவர்களது மூளையை எட்டி அவர்களை இயங்கவும் வைத்தது.

''அண்ணா, வா காப்பாத்தலாம்'' என்று மீரா அழைத்தாள்.

''என்னைப் பார்க்க தாரிகா வந்தாள். பக்கத்தில் உள்ள பூங்காவில் தான் நிற்கச் சொன்னேன். அவளுக்கு என்னாச்சுன்னு பார்க்கணும்'' என்று சொன்னவன், தங்கையின் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் தன் காதலியைத் தேடி ஓடினான்.

அவனது செயல் மீராவின் இதழ்களில் ஒரு இகழ்ச்சிப் புன்னகையைத் தோற்றுவித்தது.

இவனுக்கு இரண்டு தெரு தள்ளி வீட்டில் இருக்கும் தந்தை என்னவானார் என்று பார்க்கணும் என்று தோன்றவில்லை. கண் முன்னே கடை ஊழியர்களும், வாடிக்கையாளர்களும் மாட்டிக் கொண்டு தவிப்பதைப் பார்த்து அவர்களைக் காப்பாற்றுவோம் என்று தோன்றவில்லை. ஆனால் காதலியைப் பார்க்க ஓடுகிறான் என்ற நினைவு கசப்பைத் தந்தது.

ஆனால் அவனைப் பற்றி நினைப்பதற்கு இதுவல்ல நேரம்! யாரைக் காப்பாற்றுவது? பெற்ற தந்தையா? அல்லது கண் முன் இருக்கும் கடை ஊழியர்களா?

சுயநலத்தை மனிதாபிமானம் வெல்ல மீரா அவர்களது கடையை நோக்கி... இல்லையில்லை அந்த இடிந்த கட்டடத்தை நோக்கி ஓடினாள்.

தன்னால் முடிந்தவரை அங்கிருந்த கற்களை அகற்றி கை கொடுத்து அவர்களைத் தூக்கி விட முயன்றாள்.

பெண்ணான அவளிடம் வலு குறைவாகத் தான் இருந்தது. ஆனால் கண் முன்னால் துடிக்கும் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவளது உடலுக்கு புது சக்தியைக் கொடுத்தது.



தன் முழு பலத்தையும் பிரயோகித்து முதல் ஆளைக் காப்பாற்றினாள்.

ஒரு உயிரைக் காப்பாற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சியும், கூட உதவி செய்ய இன்னொரு துணை கிடைத்த விட்ட தெம்பும் சேர்ந்து அவளை முன்பை விட முனைப்பாய் செயல்பட வைத்தது.

அவ்விருவரும் சேர்ந்து இடிபாடுகளுக்கு நடுவில் சிக்கியிருந்த அடுத்த உயிரை மேலே இழுக்கப் போராடினார்கள். பார்க்கும் இடமெல்லாம் பிழைத்து இருந்தவர்கள் தங்களால் முடிந்த அளவிற்கு பிற உயிர்களைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

இவன் என்ன மதம்? என்ன ஜாதி? என்ற கேள்வி காப்பாற்ற நினைப்பவர்களிடமும் எழவில்லை. சிக்கித் தவித்துக் கொண்டிருந்தவர்கள் மனதிலும் எழவில்லை. கண் முன்னே போராடும் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் மட்டும் தான் அவர்களின் முன்னே தெரிந்தது.

இது தான் வாழ்க்கையின் நிதர்சனம் இது புரியாமல் தான் மனிதர்களில் பலர் என ஜாதியென்றும், என மதமென்றும் பேசிக் கொண்டு வாழ்க்கையை இழக்கிறார்கள்.

ஒரு மணி நேரப் போராட்டத்திற்குப் பின் சில உயிர்களை மீட்டாள். இனி இங்கே தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பது மீராவிற்குப் புரிந்து போனது. இதற்கு மேல் இயந்திரத்தை வைத்துத் தான் அந்த

இடிந்த கட்டிடங்களை அகற்ற முடியும் என்று புரிந்தது.

அப்பா... அவரைப் பார்க்க வேண்டுமே! காரை எடுத்துச் செல்வோமா என்று அது இருந்த திசையில் பார்வையைத் திருப்பினாள்.

அதுவும் சேதமடைந்திருந்தது. அது ரோட்டில் ஓடக் கூடிய நிலையில் இல்லை என்பது புரிந்தது. அதன் பின்னே ரோடைப் பார்த்தவளுக்கு... எந்த வாகனமும் ஓடக் கூடிய நிலையில் ரோடே இல்லை என்பது புரிந்தது.

மீரா தன் வீட்டை நோக்கி ஓடினாள். ஆனால் வழியெங்கும் வலியால் அலறும் குரல்களைக் கேட்டவளால் அதற்கு மேல் செல்ல முடியாமல் ஆங்காங்கே நின்று தன்னால் ஆன உதவியைச் செய்துவிட்டே நகர்ந்தாள்.

வழியும் ரத்தத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தன் உடல் வலியையும் பொருட்படுத்தாது தந்தையைப் பார்த்தே தீர வேண்டும் என்ற வைராக்கியத்தில் முன்னேறிச் சென்றாள்.

இவ்வளவு நேரத்திற்கு அப்பா என்னைப் பார்க்க வரவில்லை என்றால்... ஒரு வேளை அப்பாவிற்கு... அவளால் அதற்கு மேல் சிந்திக்க முடியவில்லை.

கால்கள் துவண்டன! கண்கள் இருண்டன! உடல் நடுங்கியது! நடுவீதியில் அமர்ந்து விட்டாள்.

'மீரா துவளாதே! நம்பிக்கை இழக்காதே! இவ்வளவு நேரமும் நீ உதவி செய்தது போல் உன் தந்தையும் அங்கிருப்பவர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கலாம் தானே?' என்று மனசாட்சி எடுத்துக் கூறியவுடன் தனது மனோ சக்தியைத் திரட்டிக் கொண்டு எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.



பூகம்பம் நிகழ்ந்து மூன்று மணி நேரங்கள் ஆன பின்பே அவளால் அவளது வீட்டை அடைய முடிந்தது.

அவர்களது கடையைப் போல வீடும் தரை மட்டமாகி இருந்தது.

'ஐயோ அப்பா! அப்பா' என்று கத்திக் கூப்பிட நினைத்தாள். ஆனால் அவளது தொண்டையைத் தாண்டி வார்த்தை வரவில்லை. கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு நின்றது.

அந்த இடிந்த வீட்டின் முன்னே தெருவில் அமர்ந்து கொண்டு செய்வதறியாது திகைத்தாள்!

அடுத்துத் தான் செய்ய வேண்டியது என்ன என்று அவளுக்குப் புரியவில்லை. ஏதோ ஒன்றை நாம் மறந்து நிற்கிறோம். என்ன அது என்று தன் நினைவலையில் தேடிப் பார்த்தாள். சில பல நொடிகளுக்குப் பின்னே அண்ணன் என்ற வார்த்தை அவளது நினைவிற்கு வந்தது.

அண்ணன்... சந்துரு... அவன் என்னவானான்? மூன்று மணி நேரத்திற்கு முன்பு சென்றவன் எங்கே இருக்கிறான்? காதலியைப் பார்க்கச் சென்றவன் மூன்று மணி நேரமாக ஏன் திரும்பி வரவில்லை? ஒரு வேளை தாரிகாவிற்கு... இல்லை சந்துருவிற்கே எதுவும் ஆகிவிட்டதா?

இப்பொழுது அப்பாவைத் தேடுவதா? இல்லை அண்ணனையா? என்று கலங்கி அமர்ந்திருந்தவளின் தோளை ஒரு கரம் தொட்டது.

திரும்பிப் பார்த்தாள். அங்கே உடலில் சில இடங்களில் அடிபட்டு ரத்தம் வழிந்தோட அவளது தந்தை நின்று கொண்டிருந்தார்.

''அப்பா!'' என்று கூவிக் கொண்டே தாவி அவரை அணைத்துக் கொண்டு கதறினாள்.

மீரா என்ற வார்த்தையைக் கூட மாணிக்கத்தால் உச்சரிக்க முடியவில்லை.

தன் மகள் உயிரோடு இருக்கிறாள் என்ற உண்மை அவரது கண்களில் கண்ணீரைக் கட்டுக்கடங்காமல் உற்பத்தி செய்தது.

''நீ உயிரோடு... இங்கே எல்லோரையும் காப்பாத்த... என்னால வரமுடியலை... சந்துரு...'' என்று கோர்வையாகப் பேச முடியாமல் அவர் தடுமாற,

''அண்ணனுக்கும் ஒண்ணுமில்லைப்பா. நானும் இவ்வளவு நேரம் அங்கே உதவி செஞ்சிட்டுத் தான் வரேன். அதான் உடனே வர முடியலை. வாங்கப்பா. போவோம்'' என்று தந்தையைக் கூட்டிக் கொண்டு நடந்தாள்.

சந்துருவிற்கு ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்ட போதும் அவனைக் காணாததால் மீராவிற்கு பயமாகத் தான் இருந்தது.

இந்திய ராணுவம் உதவி செய்ய களத்தில் இறங்கியிருந்தது. International Federation of Red Cross and Red Cresent societyயும் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்ய ஆரம்பித்து இருந்தது.

கண் முன்னே கிடந்த மனித சடலங்களும், இடிந்த கட்டிடங்களும் மக்களின் மனதை வெகுவாகப்



பாதித்தன. அவர்களது மனநிலை இயல்பு நிலைக்கு மாற இன்னும் எத்தனை நாட்கள் ஆகுமோ?

மீராவும், மாணிக்கமும் அவர்களது கடைக்கு வந்து சேர்ந்தபோது சந்துருவும் அங்கே வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்த பின் தான் மீராவிற்கு உயிரே வந்தது. அவனும் சிலருக்கு உதவி செய்ததாகக் கேள்விப்பட்டதும் மீரா சந்தோஷம் அடைந்தாள்.

மீரா தன் அண்ணனிடம் மெதுவான குரலில் தாரிகா பற்றி விசாரித்தாள்.

''அவளுக்கும் ஒண்ணுமில்லை மீரா. அவ ஏற்கனவே இன்னைக்கு மதியம் ஊருக்குக் கிளம்ப டிக்கெட் வைச்சிருந்தாள். அதனால அவள் அவங்க வீட்டுக்குக் கிளம்பிட்டாள்'' என்றான்.

தாரிகா சந்துரு இருக்கும் ஊரில் ஹாஸ்டலில் தங்கி வேலை பார்ப்பவள்.

நேரம் செல்லச் செல்ல பசி அவர்களை வாட்டியது. அதிகப்படியான வேலை... அதுவும் பழக்கமில்லாத வேலை செய்தது அவர்களுக்கு அகோரப் பசியைத் தூண்டியது.

எங்கே சென்று எதை வாங்குவது? முதலில் பணத்திற்கு எங்கே போவது?

பூகம்பம் நிகழ்ந்த போது தெருவில் நின்று கொண்டு நண்பருடன் பேசிக் கொண்டிருந்த மாணிக்கத்தின் சட்டைப் பையில் பணம் சுத்தமாக இல்லை. மீராவின் கையிலும் பணமில்லை. சந்துருவிடம் மட்டும் இரண்டாயிரம் பணம் இருந்தது. குஜராத்தில் அதுவே அவர்களின் சொத்தாய் மாறிப் போனது.

இரண்டாயிரம் ரூபாய்! இரண்டு லட்சம் பைசாக்கள்! அதை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? அவர் களது எதிர்காலத்திற்கு என்ன வழி? முதலில் வயிற்றுப் பசிக்கு என்ன வழி?

கையில் பணமிருந்தும் உணவை வாங்க கடை வேண்டுமே? கடைகளெல்லாம் இடிந்த நிலையில் இருக்க... எங்கே சென்று வாங்குவது?

இயற்கையின் சீற்றத்தின் முன்னே அரசனும் ஆண்டி யாவான். பணம் படைத்தவர்கள், இல்லாதவர்கள் என்ற எந்தப் பாகுபாடுமின்றி அனைவருமே சமநிலையில் தான் இருந்தனர். 'அடுத்தது என்ன?' என்ற கேள்வி தான் அனைவரின் மனதிலும் எழுந்தது.

அங்கே தோன்றியிருந்த இலவச மருத்துவ சேவை மையத்தில் தங்கள் காயங்களுக்கு மருந்திட்டுக் கொண்டனர்.

அரசாங்கம் உணவுப் பொட்டலங்களை விநியோகம் செய்ய ஆரம்பித்திருந்தது. மாணிக்கம் தன் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு அந்த நீண்ட வரிசையில் நின்றார். மீராவிற்கும், சந்துருவிற்கும் கை நீட்டி உணவை வாங்கு வதற்கு மனம் கூசியது.

பிள்ளைகளின் மன உணர்வைப் படித்த மாணிக்கம், ''கோவிலில் கை நீட்டி பிரசாதம் வாங்க மாட்டோமா? அப்படி நினைச்சுக்கோங்க. இப்போ கௌரவம் பார்க்கும் நிலையிலே நாம இல்லை'' என்றார்.

அவர்கள் அந்த உணவை வாங்கி உண்டு முடித்த போது இருட்டத் தொடங்கியிருந்தது.



எங்கே சென்று தங்குவது? அதுவும் பெண் பிள் ளையை வைத்துக் கொண்டு. அவளது வாழ்க்கை... என்ற எண்ணம் எழுந்தபோது தான் மகாலிங்கத்தின் நினைவு வந்தது.

'சொத்தெல்லாம் இழந்த நிலையில் அவர் என் மகனைத் தன் பேரனுக்குக் கட்டி வைப்பாரா? இல்லை கல்யாணத்தை நிறுத்துவாரான்னு தெரியலையே? ஏற்கனவே அவர் அந்தஸ்திற்கும் என் அந்தஸ்திற்கும் ஏணி வைச்சாலும் எட்டாது. கட்டின புடவையோடு அனுப்பச் சொன்னார் தான். ஆனாலும் இப்போது?

கல்யாணம் நடக்கவில்லை என்றாலும் உதவியாவது கேட்கலாமா? வேண்டாமா?'' என்று அவர் தடுமாறிக் கொண்டிருந்தார். சந்துருவின் கைப்பேசி மட்டுமே இருந்தது. அதிலிருந்து அவரது எண்ணைத் தொடர்பு கொள்வோமா என்று மாணிக்கம் நினைத்த பொழுது,

அவர்களைக் கடந்து சென்றவர்கள், ''எந்த போனும் போக மாட்டேங்குது. சிக்னல் பிரச்சனை'' என்று குஜராத்தியில் சொல்லிச் சென்றனர்.

'என்னை மகாலிங்கத்திடம் பேச வேண்டாம் என்று கடவுளே சொல்கிறார் போல!' என்று மாணிக்கம் நினைத்துக் கொண்டார்.

''அப்பா, நம்மளோட மும்பை வீடு இந்த மாசத்தோடு காலியாகுது. அதனால அடுத்த மாசத்திலிருந்து நாம அங்கே தங்கிக்கலாம். ஆனால் இந்தக் குறை மாசத்தைச் சமாளிக்கணுமே! கையிலே இருக்கிற பணத்தை வைச்சு சென்னைக்குப் போயிடலாம். அந்த தாத்தா நமக்கு ஏதாச்சும் உதவி செய்வாரா?

சென்னையிலே உள்ள நம்ம சொத்தை வித்துக் கொடுத்தால் கூடப் போதும். அந்த பணத்தை வைச்சு நம்ம மும்பையிலே பிழைச்சுக்கலாம். ஆனால் இப்போ உடனடியா சென்னைக்குப் போக முடியாது. ரயில்வே ஸ்டேஷன் முழுசும் ஆளுங்க நிரம்பி வழியுறாங்களாம். இப்போ என்ன செய்யலாம்? என் யோசனை சரியாப்பா?'' என்று சந்துரு கேட்டதும், மாணிக்கம் மகனின் திட்டத்தில் பெருமிதமே அடைந்தார்.

சந்துரு தங்கையின் திருமணம் குறித்து எதுவும் பேசவில்லை. ஷ்யாம் பற்றியோ அவனது தாத்தா பற்றியோ ஒன்றும் தெரியாமல் எதைச் சொல்வது? தங்கையின் மனதில் நம்பிக்கையை விதைப்பதா? அல்லது அவளது திருமணக் கனவை மறக்கச் சொல்வதா? என்று புரியாமல் குழம்பினான்.

மீராவிற்கும் தன் திருமணம் என்னவாகுமோ என்ற கவலை வந்தது. ஆனால் அவள் அதை வெளியே காட்டவில்லை.

மாணிக்கம், ''காலையில யோசிப்போம் சந்துரு. நம்ம காரைத் திற. இன்னைக்கு நைட்டுக்கு இது தான் நமக்கான வீடு'' என்று சொன்னார். அதைத் திறந்து மூவரும் அதில் அமர்ந்து கொண்டார்கள்.

கண்ணாடி உடைந்து ஒரு பக்கம் சேதமடைந்த நிலையில் இருந்தாலும் உட்காருவதற்கு ஒரு இருக்கையும் தலைக்கு மேலே ஒரு கூரையும் கிடைத்த திருப்தியில் அவர்கள் மூவரும் இருந்தனர்.

இந்தியாவில் உள்ள அனைத்து தொலைக்காட்சி செய்திகளிலும் குஜராத் பற்றிய செய்தியே பிரதான இடம் பெற்றது.



இன்று குஜராத்தில் காலை பதினோரு மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இரண்டு நிமிடங்களுக்கும் மேலாக நீடித்த இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.9 ஆகப் பதிவாகியுள்ளது. ஏறக்குறைய இருபதாயிரம் பேர் உயிரிழந்து இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. ஒன்றரை லட்சம் பேருக்கு காயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நான்கு லட்சம் வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இடிபாடுகளில் சிக்கியிருந்தபோது பிராண வாயு பற்றாக்குறை (Asphyxia) காரணமாக மூச்சுவிட முடியாமல் இறந்தவர்களின் எண்ணிக்கையே அதிகம் என்று மருத்துவர்கள் தகவல் தெரிவிக்கின்றனர்.

சென்னையில் அமர்ந்து கொண்டு இதைப் பார்த்த மகாலிங்கம் பதறினார்.

தன் பேரனை அழைத்து விஷயம் சொன்ன பொழுது... அவனோ, ''எனக்கு மதியமே விஷயம் தெரியுமே!'' என்று சொல்லிச் சென்றான்.

இவனை நம்பி பிரயோஜனம் இல்லை என்றுணர்ந்த மகாலிங்கம் உடனே குஜராத்திற்குப் பயணம் மேற்கொண்டார்.

அங்கே குஜராத்தில்... மூவரும் இரவெல்லாம் தூக்கம் வராமல் தவித்தனர்.

சந்துரு... வீட்டிற்குத் தலைமகனாய் தங்களது எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தை எப்படி ஈட்டுவது? சென்னையில் உள்ள மனையை எப்பொழுது விற்க முடியும்? அவசரத்தில் விற்பதால் பணம் குறைவாகத் தான் கிடைக்குமோ? என்ன தொழில் தொடங்குவது? என்று நினைத்து கவலைப்பட்டான்.

மாணிக்கம்... அவருக்கு எதிர்காலத்தைப் பற்றியெல் லாம் கவலையில்லை. நாளை... அதைப் பற்றி மட்டும் தான் சிந்தித்து பயந்து கொண்டிருந்தார். காலையில் மீரா எங்கு சென்று குளிப்பாள்? உடுத்துவதற்கு வேறு துணி இல்லாத நிலையில் யாரிடம் கை ஏந்தி நிற்பது? என்று மாணிக்கம் தன் மகளை நினைத்தே அதிகம் கவலைப் பட்டார்.

மீரா... கண்முன்னே கண்ட உயிர் போராட்டமும், உயிரற்ற சடலங்களும் அவளுக்குப் பய உணர்வை அளித்து அவளைத் தூங்க விடாமல் செய்தது.

அரைகுறையாய் தூங்கி அவர்கள் கண் விழித்தபோது சந்துருவின் போன் அலறியது. மகாலிங்கம் தான் அழைத் திருந்தார். அதன் பின் அவரே அவர்களை சென்னைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய அனைத்து ஏற்பாடு களையும் கவனித்துக் கொண்டார்.

மகாலிங்கத்திடம் உதவி கேட்கலாமா வேண்டாமா என்று இரு மனதாய் இருந்த மாணிக்கத்திற்கு... அவரே நேரில் வரவும் தன் பெண் கல்யாணம் எவ்விதச் சிக்கலும் இல் லாமல் நடந்து விடும் என்ற நம்பிக்கை வந்து விட்டது.

சந்துருவும் மீராவும் கூட மகாலிங்கத்தைப் பார்த்த வுடன் நிம்மதியடையப் பெற்றனர்.

# 4



மகாலிங்கம் அவர்கள் மூவரையும் சென்னைக்கு அழைத்து வந்தார். தற்காலிகமாக ஒரு வீட்டை



வாடகைக்கு அமர்த்தி அவர்களை அதில் தங்க வைத் தார்.

அவர்களது செலவிற்குப் பணம் கொடுத்தார். ஆனால் அதை கடனாகத் தான் பாவிப்பேன் என்று மீராவின் தந்தை சொன்னதை மகாலிங்கம் ஏற்றுக் கொண்டார்.

மகாலிங்கத்திடம் மீராவின் தந்தை தங்களது எதிர்காலம் குறித்து சந்துரு சொன்ன யோசனையைத் தெரிவித்தார்.

''எங்களோட சென்னை சொத்தை உங்களால வித்துத் தர முடியுமா ஐயா?'' என்று தயக்கத்துடன் கேட்டார்.

'நல்லவேளை அந்தச் சொத்தை என் பேரில் வாங்க வில்லை. இல்லையென்றால் இன்று அப்பாவும், அண் ணனும் இந்தச் சொத்து என்னோடது என்று சொல்லி விற்கத் தயங்கி இருப்பார்கள்' என்று நினைத்து மீரா சந்தோஷம் அடைந்தாள்.

மகாலிங்கம், ''இப்பத்தான் ரெண்டு நாள் முன்னாடி அந்த இடத்தோட டாக்குமென்ட்ஸ் என் கைக்கு வந்தது. நல்லவேளை லேட்டா வந்துச்சு. இல்லைன்னா நான் உங்களுக்கு அனுப்பி... அதுவும் மண்ணோட மண்ணா போயிருக்கும். அப்புறமா புது பத்திரம் வாங்க நிறைய நாள் ஆகும். இடத்தை விக்குறதிலும் கால தாமதம் ஆகியிருக்கும். ஏதோ அந்த மட்டுக்கு அந்தப் பத்திரம் என்னிடமே நல்ல நிலைமையில் இருப்பதால் தப்பிச் சோம்'' என்று பெருமூச்சு விட்டவர்,

''மாணிக்கம், நீ ஒண்ணும் கவலைப்படாதே. எனக் குத் தெரிஞ்ச புரோக்கரிடம் சொல்லி உன் இடத்தை விற்க நான் ஏற்பாடு பண்ணுறேன். ஒரு வேளை ஆள் சரியா அமையலைன்னா நானே வாங்கிக்கறேன்.

கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு வாரம் தான் இருக்கு. கல்யாணம் முடிஞ்சதும் நீங்க மும்பையிலே போய் செட்டில் ஆகிக்கோங்க. அதுவரைக்கும் கல்யாண வேலையில் எனக்கு உதவியா இருங்க'' என்றார்.

''என்னங்க ஐயா உதவின்னு பெரிய வார்த்தை யெல்லாம் சொல்லுறீங்க. என் பொண்ணு கல்யாணம்... நான் தான் எல்லா வேலையும் செய்யணும். ஏற்கனவே வரதட்சணை வேண்டாம்னு சொல்லிட்டீங்க. இப்போ நகை கூடப் போட முடியாத நிலையிலே நாங்க இருக் கோம். எதையும் பெருசு பண்ணாமல் நீங்க இருக்கீங்க. நீங்க போய் உதவின்னு....'' என்று மாணிக்கம் வருத்தத் துடன் சொல்லவும்,

''அதை விடுப்பா...'' என்று மகாலிங்கம் அவரைச் சமாதானப்படுத்தினார்.

சந்துரு மகாலிங்கத்திடம் ஷ்யாமைப் பார்க்க விருப்பம் தெரிவித்தான்.

''இப்பவே என் கூட ஆபீஸுக்கு வா, வந்து உங்க வீட்டு மாப்பிள்ளையைப் பாரு'' என்று அழைத்தார்.

மாணிக்கமும் உடன் சென்றார். மீராவிற்கும் அவனைப் பார்க்க வேண்டும் போல் ஆசையாக இருந்தது. ஆனால் அதை அவள் வெளியே சொல்ல வில்லை.

அலுவலகத்திற்கு வந்த சந்துருவை, மகாலிங்கம் தன் போனுக்கு அறிமுகப்படுத்தினார். ஷ்யாம் அவனுக்கு கை கொடுத்து வரவேற்றான்.

போட்டோவை விட நேரில் இன்னும் அதிக கம்பீர மாக இருந்தவனைப் பார்த்த சந்துருவிற்கு அவனை



உடனே பிடித்துப் போனது. மீராவிற்கு ஏற்ற மாப்பிள்ளை தான் என்று முடிவு கட்டிக் கொண்டான்.

அவர்களை உபசாரமாய் உட்காரச் சொன்னது மட் டுமே ஷ்யாம் அவர்களிடம் பேசிய வார்த்தைகள். அதன் பின்பு அவர்கள் அங்கே இருந்த இருபது நிமிடங்களில்... ஷ்யாம் ஒன்று போனில் பேசினான். இல்லை என்றால் அவனது பி.ஏ. அவனது அறைக்குள் நுழைந்து எதை யாவது கேட்டுக் கொண்டிருந்தார்.

மாணிக்கம் ஷ்யாமிடம், ''நீங்க பிசியா இருக்கீங்க. நீங்க உங்க வேலையைப் பாருங்க. நாம அப்புறமாப் பார்க்கலாம்'' என்று சொல்லிக் கிளம்பினார்.

மாணிக்கம் தன் வருங்கால மாப்பிள்ளை தன் வேலை யில் மும்முரமாய் இருந்ததால் தான் தங்கள் இழப்பு குறித்து எந்த வருத்தமும் தெரிவிக்கவில்லை என்று நினைத்துக் கொண்டார், பாவம்!

வீட்டிற்கு வந்த தகப்பனிடமும், ஷ்யாமைப் பற்றி விசாரிக்க நினைப்பதும், வெட்கம் வந்து அவளது நினைப்பைத் தடுப்பதுமாய் மீரா தனக்குள் கபடி ஆடிக் கொண்டிருக்க...

சந்துருவே, ''மாப்பிள்ளை சூப்பரா இருக்கார், மீரா. உனக்கு ரொம்ப பொருத்தமா இருக்கார். ரொம்பப் பெரிய ஆள் போல! செம பிசியா இருக்கார். பணத்தைப் பெருசா மதிக்காத மனுஷங்களா இருக்காங்க. நீ ரொம்பக் கொடுத்து வைத்தவள்'' என்று ஷ்யாம் பற்றியும், அவனது குடும்பம் பற்றியும் பெருமைப்பட்டுக் கொண் டான்.

மீரா இறக்கை இல்லாமலே வானில் பறக்க ஆரம்பித் தாள்.

அந்த இரு வாரங்களில்...

கல்யாணத்திற்கு முன் ஒரு முறையாவது ஷ்யாம் தன்னை நேரிலோ கைப்பேசியிலோ தொடர்பு கொள்வான் என்று எதிர்பார்த்து மீரா ஏமாந்து போனாள்.

மகாலிங்கம் மாணிக்கத்தின் இடத்தை விற்றுத் தர ஏற்பாடு செய்தார். மனை விற்ற பணம் வந்ததும், மீராவின் அப்பா மகாலிங்கத்திடம் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

தொழில் தொடங்குவது சம்பந்தமாக சந்துரு இரு முறை மும்பை சென்று வந்தான்.

ஷ்யாம் வழக்கம் போல் தனது வேலைகளில் மூழ்கினான்.

கல்யாண நாளும் விடிந்தது. மீராவிற்கு அலங்காரம் செய்து மணமேடைக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஷ்யாம் பட்டு வேஷ்டி, சட்டை அணிந்த மணமேடையில் அமர்ந்து கர்ம சிரத்தையாய் மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தான்.

மீரா அவன் ஒரு முறையாவது தன்னை நிமிர்ந்து பார்ப்பானா என்ற ஆவலுடன் அவனையே பார்த்தபடி நடக்க... அவன் அவளை நிமிர்ந்து பார்க்கவே இல்லை. அதனால் ஏற்பட்ட சிறு மனச் சிணுங்கலுடன் மேடையில் அவனது அருகில் சென்று அமர்ந்தாள்.

குறித்த நேரத்தில் சுற்றமும், நட்பும் சூழ்ந்திருக்க ஷ்யாம் மீராவின் கழுத்தில் தாலி கட்டினான். அதன் பின்பு நடந்த சடங்குகளின் போதும் ஒரு முறை கூட அவன் அவள் புறம் திரும்பவில்லை.



ரகசிய சிரிப்பு, ரகசிய பேச்சு, ரகசிய சீண்டல் என்று எதையுமே செய்ய அவன் முயற்சிக்கவில்லை.

இவர் ஏன் இப்படி இருக்கிறார்? ஒரு வேளை நம்மை பிடிக்கவில்லையோ என்ற நினைப்பு எழுந்தவுடன் மீராவின் வயிற்றுக்குள் ஒரு பய பந்து உருண்டது.

அன்று மாலையே அவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சி இருந்ததால் மதியம் கூட அவர்களுக்கு ஓய்வில்லாமல் போனது.

வரவேற்பு மேடையில் அருகில் இருந்தவளிடம் ஷ்யாம் இயல்பாய் பேசவில்லை. அதே சமயம் மேடை ஏறி பரிசு கொடுக்க வருபவர்களை கர்ம சிரத்தையாய் மனைவிக்கு அறிமுகப்படுத்தினான்.

அதனால் அவளிடம் அவன் பேசவே இல்லை என்று சொல்லிவிட முடியாது. பேசினான்! அளவோடு பேசினான்! வார்த்தையை அளந்து பேசினான்!

அன்று இரவு மீரா ஷ்யாம் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டாள். அவனது வீட்டின் பிரம்மாண்டம் அவளுக்கு மிரட்சியைத் தந்தது.

அவள் அருகே வந்த மகாலிங்கம், "வாம்மா மீரா. ரெண்டு ஆம்பிளைங்க இருந்த வீடு. அதனால நாங்க எதையும் பெருசா கண்டுக்கிட்டதில்லை. உனக்கு எதையாச்சும் மாத்தணும்ன்னு தோணுச்சின்னா அதை மாத்திக்கோ. இனிமே இந்த வீடு உன் பொறுப்பு" என்று சொன்னதும் மீராவிற்கு ஒரு புறம் இதமாகவும், மறுபுறம் தன்னால் பொறுப்பாகச் செயல்பட முடியுமா என்ற பயமும் ஒரு சேரத் தோன்றின.

மாடியில் தான் ஷ்யாமின் அறை என்று சொல்லி அங்கு அனுப்பி வைக்கப்பட்டாள்.

அவனைத் தனி அறையில் சந்திக்கப் போகிற ஆவலும், பயமும் போட்டி போட அவள் தனது கணவனின்... தங்களின் அறைக்குள் நுழைந்தாள்.

ஷ்யாம் அறையில் இல்லை என்பதைப் பார்த்த மீரா குழம்பினாள். பின்னர் அந்த அறையை ஆராய்ச்சி செய்தாள். அவனது அறை மிகப் பெரிதாக இருந்தது. அங்கே ஒரு புறம் படுக்கையும், மற்றொரு புறம் சோபாவும் இருந்தன. தொலைக்காட்சியும் இருந்தது.

எங்கே போனார் என்று கணவனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே அந்தப் படுக்கையில் அமர்ந்து காத்திருக்க ஆரம்பித்தாள்.

பத்து நிமிடங்கள் கடந்தும் அவன் வரவில்லை. உடல் அசதியினால் மீராவினால் உட்கார்ந்து இருக்க முடியவில்லை. அதனால் அவள் படுக்கையில் மெல்லச் சரிந்தாள். அப்படியே தூங்கியும் போனாள்.

# 5



அவள் கண் விழித்துப் பார்த்தபோது காலை ஆறு மணி. அருகில் திரும்பிப் பார்த்தாள். அங்கே ஷ்யாம் தூங்கிக் கொண்டிருந்தான்.

'ஐயோ விடிந்து விட்டதா? நான் எப்போது தூங்க ஆரம்பித்தேன்? இவர் எப்போது வந்தார்? என்னை ஏன் எழுப்பவில்லை?' என்று அவளது மனதில் வரிசையாய் கேள்விகள் பிறந்தன.



குளியலறைக்குச் சென்று குளித்து முடித்து அவள் கீழே இறங்கி வர... மகாலிங்கம் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்.

''வாம்மா மீரா. பேப்பர் படிக்கிறாயா?'' என்று கேட்டார்.

''இல்லை தாத்தா. நான் போய் உங்களுக்கு காபி போட்டுக் கொண்டு வரட்டுமா?''

''வேண்டாம் மீரா. இங்கே எல்லா வேலையும் செய்ய வேலைக்காரங்க இருக்காங்க. நீ அவங்களை மேற்பார்வை பார்த்தால் போதும்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே சமையலறையில் இருந்து கமலா வெளிப்பட்டார்.

மகாலிங்கம் மீராவைப் பார்த்து, ''இவ தான் கமலா. ஷ்யாம் கமலம்மான்னு கூப்பிடுவான். அவன் பிறந்ததில் இருந்தே இங்கே வேலை செய்யுறாள். நம்ம அவுட் ஹவுஸில் தான் தங்கி இருக்காள்'' என்று அறிமுகப் படுத்தினார்.

கமலம்மா மீராவிற்குக் காபி நீட்ட... மீரா 'சுக்ரியா' என்று சொல்லி வாங்கிக் கொண்டாள்.

''சுக்கு காபி இல்லைம்மா'' என்று கமலா சொன்னதும் மகாலிங்கம் சிரிக்க ஆரமபித்தார்.

''அம்மாடி மீரா, ஷ்யாம்க்கு மட்டும் தான் ஹிந்தி நல்லா தெரியும். நீ தமிழிலேயே பேசு. இல்லைன்னா இப்படித் தான் ஆகும்'' என்றார்.

மீரா அவரைப் பார்த்து தலையசைத்து விட்டு, ''டி.கே.'' என்றாள். அப்பொழுது அவளது பார்வை கமலாவின் பக்கம் திரும்பியிருந்தது.

''ஐயோ இது டீயும் இல்லைம்மா. காபி. உனக்கு டீ தான் வேணுமா?'' என்று கமலா அப்பாவியாய் கேட்க, மகாலிங்கம் மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தார்.

மீரா புன்முறுவலுடனே, ''இல்லை கமலம்மா. சுக்ரியான்னா ஹிந்தியிலே நன்றின்னு அர்த்தம். டி.கே.ன்னா சரின்னு அர்த்தம்'' என்று விளக்கியதும் கமலா அசடு வழிந்தவாறு சென்றார்.

ஷ்யாமைப் பின்பற்றி மீராவும் கமலாவை கமலம்மா என்று கூப்பிட்டதினால் அவள் எல்லா விஷயங்களிலும் தன் கணவனைப் பின்பற்றுவாள் என்று மகாலிங்கம் நினைத்துக் கொண்டார்.

அன்று காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள ஷ்யாம் வீட்டுக் குலதெய்வம் கோவிலுக்குச் சென்றனர். செல்லும் வழியில் மீராவின் வீட்டில் அரை மணி நேரம் தலையைக் காட்டிவிட்டுச் சென்றனர்.

ஒரு முழு நாள் கணவனின் அருகே இருந்து கவனித்துப் பார்த்ததில் அவன் அனைவரிடமும் அளந்து தான் பேசுகிறான் என்பதை மீரா கணக்கிட்டாள்.

அவன் அன்றும் மீராவிடம் தனியாகப் பேச முயற்சிக்கவில்லை. அன்று இரவு அவர்களுக்கிடையே நடந்த கூடலின் போதும் கூட அவன் அவளிடம் செல்லச் சீண்டல்களை மேற்கொள்ளவில்லை. ஏதோ கடமையை நிறைவேற்றுபவனாய் தான் நடந்து கொண்டான்.



அவனது நடத்தை மீராவிற்கு குழப்பத்தை உண்டு பண்ணியது. தாய் இருந்தால் தாயிடம் கேட்கலாம். தாய் ஸ்தானத்தில் மாமியார் இருந்தாலாவது அவரிடம் கேட்கலாம். இப்பொழுது யாரிடம் கேட்பது?

ஆனால் முன் இரவிற்குப் பின், மீராவிற்குக் கணவனிடம் உரிமையுடன் பேசும் ஒரு நெருக்கம் ஏற்பட்டிருந்தது. அவர் நெருங்கிப் பேசவில்லை என்றால் என்ன? நான் பேசிவிட்டுப் போகிறேன் என்ற எண்ணம் தோன்றவும் சின்னச் சின்னப் பேச்சுக்களைத் தொடங்கி வைத்தாள்.

முதல் நாள் போல் தடுமாறாமல்... அவனிடம் இருந்து எழுந்திருங்க, குளிங்க, சாப்பிடுங்க என்பது போன்ற பேச்சுக்கள் இயல்பாய் வந்தன.

அவன் சாப்பிட்டு மாடிக்குப் போனதும் மீரா தோட்டத்திற்குச் சென்று செம்பருத்திப் பூவை பறித்து வந்தாள். மலர்களோடு வீட்டினுள் நுழைந்தவள் பூஜை அறையைத் தேட... அப்படி ஒன்று அங்கு இல்லவே இல்லை.

'பொம்பளை இல்லாத வீடுங்கிறது சரியாத்தான் இருக்கு. நாமளும் நேற்று வெளியே போற அவசரத்திலே இதைக் கவனிக்கலை. இன்னைக்கு முதல் வேலையா பூஜையறையை உருவாக்கணும்' என்று எண்ணமிட்டவாறு நடு ஹாலில் நின்று கொண்டு அவள் திட்டமிட்டுக் கொண்டிருக்க...

ஷ்யாம் அவளைத் தாண்டிச் சென்றான். அவளிடம் நின்று பேசாமல் அவன் தன் போக்கில் சென்று கொண்டிருந்தான்.

'எங்கே போகிறார்?' என்று அவள் அவன் பின்னே சென்று எட்டிப் பார்க்... அவன் காரை எடுத்துக் கொண்டு சென்று விட்டான்.

'நம்மகிட்டே ஒண்ணும் சொல்லாமல் எங்கே கிளம்பிட்டார்?' என்று குழம்பியவளாய் மீரா கணவனின் கைப்பேசிக்கு அழைத்தாள்.

'ஹலோ!' என்ற ஷ்யாமின் கம்பீரக் குரலைக் கேட்டு ரசித்துக் கொண்டே, "ஹலோ, நான் தாங்க" என்றாள்.

"நான் தான் என்றால் யாரு?" என்று எதிர்முனையில் பிறந்த கேள்வியில் மூண்ட எரிச்சலை மறைத்துக் கொண்டு.

"நான் தான் மீரா!" என்று பதிலளித்தாள்.

"என்ன வேணும்?"

"எங்கே போறீங்க?"

"ஆபீஸுக்கு."

'இன்னைக்கே இவர் ஆபீஸுக்குக் கிளம்பிட்டாரா?' என்று மீராவிற்கு ஏமாற்றமாக இருந்தது.

"ஏன் சொல்லாமல் போயிட்டீங்க?"

"யாருகிட்டே சொல்லணும்?"

முதலில் இருந்தே ஒற்றை அல்லது இரட்டை வார்த்தையில் அவன் பதில் சொல்லியது மீராவிற்கு கடுப்பைக் கிளப்பியது என்றால் அவனது கடைசி கேள்வி அவளுக்குக் கடும் கோபத்தை வரவழைத்தது.

"ம்ம்ம் பக்கத்து வீட்டுக்காரங்கிட்டே" என்று முதலில் இடக்காய் பதில் சொன்னவள் அதன் பின்னே, "என் கிட்டே தான்... ஏன் சொல்லாமல் போனீங்க?" என்றாள்.



"இதுக்குத் தான் போன் பண்ணினாயா?" என்று கேட்டதும் அழைப்புத் துண்டிக்கப்பட்டது.

மீரா மீண்டும் முயற்சிக்க... எடுத்தவன், "இப்போ என்ன?" என்று அலுப்புடன் கேட்டான்.

"லைன் கட்டாகிடுச்சுங்க. அதான் போட்டேன்" என்று தக்கத்துடன் சொன்னாள்.

"லைன் கட் ஆகலை. நான் தான் பேசி முடிச்சாச்சுன்னு கட் பண்ணினேன்" என்று சொன்னவன் மீண்டும் அழைப்பைத் துண்டித்தான்.

மீரா தன் கைப்பேசியை வெறித்தவாறே, 'கல்யாணம் ஆன ரெண்டாவது நாளிலேயே வேலைக்குப் போகிறார். பொண்டாட்டி கிட்டே தானாப் பேசவும் மாட்டேங்கிறார். சரி நாமளா பேசுவோம் என்றாலும் போனை கட் பண்ணுறார். ஒரு வேளை இவர் சரியான முசுடோ?" என்று நினைத்தாள்.

பத்து மணி அளவில் மகாலிங்கமும் அலுவலகத்துக் கிளம்பிச் சென்றார். மீரா சமையலறைக்குச் சென்று மதியம் என்ன சமையல் என்று கேட்டறிந்தாள்.

"அவருக்கு என்ன சாப்பாடு பிடிக்கும்?" என்று கமலாவிடம் கேட்டதற்கு,

"ஷ்யாம் தம்பி எதையும் வேணும் வேணாம்ன்னு சொல்லாது. எது கொடுத்தாலும் சாப்பிடும்" என்று கமலா பதில் சொன்னார்.

மீரா மனதிற்குள், 'இவங்க இந்த வீட்டில் வேலை செய்யுறவங்க மட்டும் தானே! அதான் அவருடைய விருப்பங்களைத் தெரிஞ்சு வைச்சுக்கலை போல! இதுவே அவ

ரோட அம்மாவா இருந்தால் அவருக்கு விருப்ப மானதைத் தெரிஞ்சு வைச்சிருப்பாங்க' என்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அடுத்த சில நாட்களிலேயே அவளது நினைப்பு பொய்யாகியது. கமலம்மா சொன்னதே சரி என்ற முடிவிற்கு மீராவிற்கு வரும்படி செய்தது அவள் கணவனே!

எதைச் சமைத்து வைத்தாலும் சாப்பிட்டான். நன்றாக இருக்கிறது என்ற பாராட்டும் கிடையாது. இது எனக்குப் பிடிக்கவில்லை என்ற குறையும் சொல்லவில்லை.

அதே போல் சமைத்த உணவை மீரா தான் பரிமாற வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் கிடையாது. மீராவே முன் வந்து பரிமாறினால் எதிர்ப்பதும் கிடையாது.

ஞாயிற்றுக் கிழமையாவது வீடு தங்குவான் அல்லது தன்னை வெளியே அழைத்துச் செல்வான் என்று அவள் எதிர்பார்த்ததிற்கு நேர் மாறாக தான் அன்றும் நடந்து கொண்டான்.

அன்றும் வழக்கம் போல் வெளியே சென்றான். அவன் எங்கே போகிறான் என்றோ எப்பொழுது திரும்பி வருவான் என்றோ மீராவிடம் தெரிவிக்கவில்லை. அது மாதிரியெல்லாம் சொல்லிச் செல்லும் பழக்கம் தான் அவனிடத்தில் கிடையாதே!

பார்க், பீச், சினிமா, கோவில் என்று எங்கேயுமே மீரா அவனுடன் செல்லவில்லை.

ஒருமுறை அவளே தன் வாய் திறந்து. ''என்னங்க நாம சினிமாவுக்குப் போவோமா?'' என்று கேட்டாள்.

''எப்போ?''



'எதுக்கு என்று கேட்காமல் எப்போ என்று கேட் கிறானே' என்று அகமகிழ்ந்தாள்.

'கிடைத்த வாய்ப்பை விடக் கூடாது' என்று எண் ணியவளாய், ''இன்னைக்கு சாயங்கால ஷோவுக்கு போவோமா?'' என்று கேட்டாள்.

''ம் சரி'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

கணவன் தன்னைத் தானாக வெளியே அழைத்துச் செல்லவில்லை என்றாலும் கேட்டவுடனே அழைத்துப் போக சம்மதித்து விட்டானே என்று மீராவிற்கு சந்தோஷத்தில் தலை கால் புரியவில்லை.

மாலை எப்பொழுதும் வரும் என்று காத்திருக்க ஆரம் பித்தாள். மாலையில் அவள் மிதமான ஒப்பனையுடன் தயாராகக் காத்திருக்க...

நேரம் சென்று கொண்டே இருந்தது. அவன் வந்த பாடில்லை.

அவனது கைப்பேசிக்குத் திரும்பத் திரும்ப அழைத்துப் பார்த்து சோர்ந்து போனாள். ரிங் போய்க் கொண்டே இருந்தது. அவன் எடுத்துப் பேசவே இல்லை.

ஷ்யாம் அன்று இரவு எட்டு மணிக்கு வீட்டிற்கு வந் தான். கணவன் இன்ன காரணத்தினால் தான் தாமதமாகி விட்டது என்று தன்னைச் சமாதானம் செய்வான் என்று மீரா காத்திருக்க... அவனோ அந்த நினைப்புகூட இல்லாமல் மாடியேறிச் சென்றான்.

மீரா அவன் பின்னே செல்லாமல் கீழேயே அமர்ந்து விட்டாள்.

சிறிது நேரத்திற்குப் பின் சாப்பிட வந்து அமர்ந்தான். மீரா எழுந்து சென்று அவனுக்கு உணவு பரிமாற வில்லை. ஏற்கனவே மீரா கமலம்மாவையும் அவுட் ஹவுஸிற்கு அனுப்பி விட்டாள்.

கணவன் தன்னைச் சாப்பாடு எடுத்து வைக்க அழைப் பான்... அவனுடன் சண்டை போடலாம் என்று இவள் காத்திருக்க...

அவன் தானாக மேஜையில் இருந்த உணவைத் தட்டில் வைத்துக் கொண்டு தன் கைப்பேசியைப் பார்த்துக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தான்.

மீராவிற்கு பிரஷர் ஏறியது. 'என்ன ஒரு அலட்சியம்!' என்று மனதுக்குள் பொங்கிக் கொண்டு இருந்தாள்.

கைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தவன் மீராவின் புறம் திரும்பி, ''நிறைய தடவை கூப்பிட்டு இருக்கே! என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

இருந்த இடத்தில் இருந்து அசையாமல், ''சினி மாவுக்குக் கூட்டிட்டுப் போறீங்கன்னு சொன்னீங்களே! அதை ஞாபகப்படுத்தலாம்ன்னு பார்த்தேன்'' என்றாள்.

''ஓ'' என்று சொன்னவன் தொடர்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.

மீராவிற்கு, 'அவ்வளவு தானா? ஓ என்ற ஒற்றை எழுத்துத் தானா? வேற எந்த சமாதானமோ, விளக்கமோ கிடையாதா?' என்று ஆத்திரமாக வந்தது.

சாப்பிட்டு முடித்தவன் பிசினஸ் வீக்லியில் மூழ்கிப் போனான். நாளைக்குச் சீக்கிரமாக வந்து உன்னைக் கூட்டிட்டுப் போகிறேன் என்று அவனும் சொல்ல வில்லை. அதன் பின்பு வெளியே கூட்டிட்டுப் போறீங் களா என்று இவளும் கேட்கவில்லை.



# 6

நடுவில் ஒரு நாள் மகாலிங்கம் தான் மீராவைத் தங்கள் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். மீரா முன்பே ஒரு முறை வந்திருந்த போதும் இன்று உரிமை யுடன் வரும்போது அவளுக்குக் கிடைத்த மரியாதையே வேறாக இருந்தது.

அவளை நேரே ஷ்யாமின் அறைக்கே கூட்டிச் சென் றார். அங்கே அவன் பம்பரமாகச் சுழல்வதைப் பார்த்து மீராவிற்கே பாவமாக இருந்தது. ஒரே ஆளாய் அத்தனை வேலைகளையும் செய்கிறாரே என்று கணவனுக்காகப் பரிதாபப்பட்டாள்.

'அலுவலகத்தில் அதிகப்படியான வேலை இருந்த தால் தான் நாங்கள் பூகம்பத்தால் பாதிப்படைந்த போது எங்களைப் பார்க்க வரவில்லை போல! ஆனால் போனி லாவது விசாரித்து இருக்கலாம். அதைக்கூட ஏன் செய்ய வில்லை?' என்று எண்ணியவள்,

அன்று இரவு அவன் வீடு வந்ததும், ''உங்களுக்கு போனிலே பேசுறது அவ்வளவா பிடிக்காதா?'' என்று மொட்டையாக ஆரம்பித்தாள்.

''ஏன் அப்படிக் கேட்கிறே? நான் ஒரு பிசினஸ் மேன். பேசப் பிடிக்காதுன்னு சொன்னால் என்னால எப்படி பிசினஸ் பண்ண முடியும்?''

''அப்போ ஏன் நாங்க குஜராத் பூகம்பத்திலே மாட்டித் தவிச்சப்போ நீங்க போன் பண்ணி விசாரிக்கலை?''

''என்னன்னு விசாரிக்கணும்? எதுக்கு விசாரிக்கணும்?''

''இப்படிக் கேட்டால் என்ன சொல்லுறது? சந்தோஷத்தைப் பகிர்ந்துகிட்டால் அது இரட்டிப்பாகும். துக்கத்தைப் பகிர்ந்து கிட்டால் அது பாதியாகும் என்று சொல்லுவாங்க இல்லையா...''

''அன்னைக்குத் தாத்தா நேரில் வந்ததால உங்க துன்பம் போச்சா? இல்லை அவரோ நானோ போன் பண்ணி விசாரித்திருந்தால் உங்க துன்பம் போயிருக்குமா?'' என்று எதிர்கேள்வி கேட்டான்.

'உங்க தாத்தா அவர் கடமையைச் சரியாத்தான் செஞ்சார். ஆனால் நீங்க ஏன் செய்யலை என்பது தான் என் கேள்வி. ஆனால் நான் இதுக்கு மேல் கேள்வி கேட்டு... நீ என்ன எனக்கு அவ்வளவு முக்கியமானவளாங்கிற ரேஞ்சுக்கு ஏதாச்சும் நீங்க எதிர்கேள்வி கேட்டு வைச்சால்... அதை என் மனசு தாங்காது. அதனால இந்தப் பேச்சை நான் இதோட முடிச்சிக்கிறேன் டா சாமி!' என்று மனதுக்குள் முடிவெடுத்தாள்.

மீரா அந்த வீட்டிற்குள் நுழைந்த அன்றே மகாலிங்கம் ஒரு பெரிய நகைப் பெட்டியைக் கொடுத்து, ''இதெல்லாம் உன் பாட்டி மற்றும் உன் அத்தையோடது மீரா. உனக்குப் பிடிச்சதை வைச்சுக்கோ. பிடிக்காததை மாத்திவிடு'' என்று சொன்னதோடு அல்லாமல் அவளை நகைக் கடைக்கு அழைத்துச் சென்று சில நகைகளை மாற்றியும் தந்தார்.



பூகம்பத்தில் தங்களது உடைமைகளை எல்லாம் தொலைத்துவிட்டுச் சென்னை வந்து இறங்கிய உடன் மீராவைக் கடைக்கு அழைத்துச் சென்ற மகாலிங்கம் பெட்டி பெட்டியாய் துணிகள் வாங்கிக் கொடுத்திருந்தார்.

அதனால் மீராவிற்கு நகை, துணிக்குப் பஞ்சமில்லை. ஆனாலும்...

ஒரு நாள் இரவு மீரா நடு இரவில் ஐயோ என்று அலறிக் கொண்டே எழுந்து அமர்ந்தாள். அவளுக்கு வியர்வை ஆறாகப் பெருகி ஓடியது. முதலில் மலங்க மலங்க விழித்தவள் அதன் பின்பே தான் கண்டது கனவு என்று புரிந்து சமாதானம் அடைந்தாள்.

அவளது அலறலில் விழித்த ஷ்யாம் 'என்ன?' என்பது போல் தலையை உயர்த்தி அவளைப் பார்க்க...

''பூகம்பத்தில் மாட்டிக்கிட்டதில் இருந்து அப்பப்போ இப்படித் தான் கெட்ட கனவா வருது'' என்றுமீரா சொன்னதும்,

ஓ என்று சொல்லிவிட்டு தலையைச் சரித்துப் படுத்துக் கொண்டான்.

இந்த ஓ என்ற எழுத்தைக் கண்டுபிடிச்சவன் மட்டும் என் கையில் கிடைச்சான்... என்று மீராவிற்கு கடுப்பாக இருந்தது.

இதற்கு முன்பு இரு முறை இப்படி அலறிக் கொண்டு மீரா விழித்த பொழுது சந்துருவும், மாணிக்கமும் மீராவின் தலையை வருடி, ஆறுதல் வார்த்தைகள் கூறி, தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து என அவளைப் பலவிதமாய் தேற்றுவார்கள்.

ஆனால் ஷ்யாம் இது எதையுமே செய்யாது ஒரு 'ஓ'வை மட்டும் உதிர்த்துவிட்டுத் தன் தூக்கத்தைத் தொடர்ந்ததைப் பார்த்த மீராவிற்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

ஐந்து நிமிடங்கள் மனதுக்குள்ளே கடவுளைத் துதித்து தன்னைத் திடப்படுத்திக் கொண்டு படுக்கையில் சரிந்தாள். ஆனாலும் மனம் நிம்மதியில்லாமல் தவித்தது. தூக்கம் வர மறுத்தது.

எப்படி வரும்? இது நாள் வரை அவளது பூகம்பக் கனவில் முகமறியா யாரோ மாட்டிக் கொண்டது போல வரும். ஆனால் இன்றைய கனவில்... இடிபாடுகளில் மாட்டிக் கொண்டு முழிப்பது ஷ்யாம். அவனைக் காப்பாற்ற முடியாமல் தத்தளிப்பது மீராவாயிற்றே!

மீரா கணவனை ஒட்டிப் படுத்துக் கொண்டாள். கொஞ்சம் மனம் தெளிவானது போலத் தோன்றவும் மேலும் அவனை நெருங்க அவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டு தூங்கினான்.

வாய் வார்த்தையால் சமாதானம் செய்யாது போனாலும் தனது அணைப்பின் மூலம் அவன் ஆறுதல் அளித்தான். தாயின் கதகதப்பு கிடைத்த சந்தோஷத்தில் அவளும் நிம்மதியாய் உறங்கினாள்.

திருமணமாகி ஒன்றரை மாதங்கள் கடந்த நிலையில்...

ஒரு நாள் ஷ்யாம் மாலை அவசர அவசரமாக வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான்.

''எங்கே ஷ்யாம் கிளம்பிட்டே?'' என்று மகாலிங்கம் கேட்டார்.



''பார்ட்டிக்குப் போய்கிட்டு இருக்கேன் தாத்தா.''

''மீராவையும் கூட்டிட்டுப் போயேன் ஷ்யாம்.''

''மீராவையா? என்று இழுத்துக் கொண்டே மணி பார்த்தவன், ''டைம் ஆகுது. இப்படியே வரதுன்னா வரச் சொல்லுங்க. டிரஸ் பண்ணனும்ன்னா நேரமாகிடும்'' என்றான்.

'அதைக்கூட துரை என்னைப் பார்த்துச் சொல்ல மாட்டாரோ?' என்று மீரா மனதிற்குள் கணவனைத் திட்டிக் கொண்டிருக்க...

மகாலிங்கம், ''மீரா, கோவிலுக்குப் போகணும்ன்னு நீட்டா டிரஸ் பண்ணி ரெடியா தானேம்மா இருக்கே. அவன் கூடக் கிளம்பு!'' என்று சொன்னார்.

தாத்தாவின் பேச்சை மீற முடியாமலும், கணவனுடன் வெளியே செல்லும் ஆசையிலும் மீரா அவனுடன் சென்றாள். கோவிலுக்குச் செல்வதற்காக வைத்திருந்த பர்ஸை மட்டும் எடுத்துக் கொண்டு அவனுடன் நடந்தாள்

மீராவிற்கு காரில் ஏறிச் சிறிது தூரம் சென்ற பின்பே, தான் செல்போன் எடுத்து வரவில்லை என்ற நினைப்பு வந்தது.

'என்னை யார் கூப்பிடப் போகிறார்கள்? அப்பாவோ, அண்ணனோ தான் கூப்பிடுவார்கள். இவருடன் தானே போகிறேன். அதனால் இவர் போனில் கூப்பிட்டுப் பேசிக் கொள்வார்கள்' என நினைத்துக் கொண்டாள்.

வழக்கம் போல் அவன் அமைதியாக வந்தான். மீரா கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் ஒன்றிரண்டு வார்த்தைகளில் பதில் சொல்லிக் கொண்டே வந்தான்.

மீரா கணவன் வண்டியை வேகமாகவும், அதே சமயம் லாவகமாகவும் ஓட்டுவதைக் கண்டு வியந்தாள்.

அந்த பிரம்மாண்ட நட்சத்திர ஹோட்டலின் உள்ளே வண்டியை நிறுத்தினான். அவனுடன் இறங்கி நடந்து செல்லும் பொழுது மீராவிற்குப் பெருமையாக இருந்தது. கணவனது கம்பீரத்தை வழக்கம் போல் ரசித்துக் கொண்டே முகம் கொள்ளா பூரிப்புடன் அவனுடன் இணைந்து நடந்தாள்.

அந்தப் பெரிய ஹால் முழுவதும் ஆட்கள் குழுமி யிருந்தனர்.

''ஹேய் ஷ்யாம்!'' என்று அங்கிருந்தோர் அவனை ஆவலுடன் வரவேற்றனர்.

அங்குள்ள யாரையுமே மீராவிற்குத் தெரியாது என்பதால் மீரா கணவனை விட்டு நகராது அவனுடனே ஒட்டிக் கொண்டு அலைந்தாள்.

அதற்காக தன்னை ஏதாவது திட்டுவானோ என்று கூட பயந்தாள். ஆனால் அவன் அது போல் எதுவும் சொல்லவில்லை.

அங்கிருந்த சிலர் மது அருந்திக் கொண்டிருந்தனர்.

அதைப் பார்த்த மீரா, 'எனக்குத் தெரிஞ்சு இவருக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் இல்லை. ஆனால் தண்ணி அடிப்பாரான்னு தெரியலையே! இதுவரை இவர் மீது மது வாடை வந்ததில்லை. சந்தர்ப்பம் கிடைச்சால் குடிப் பாரோ?

ஐயோ எனக்கு எந்த வாடையே ஆகாதே! இவர் கொஞ்சமா குடிப்பாரா? இல்லை ஓவராவா? வண்டி ஓட்டும் அளவிற்கு நிதானத்தோடு இருப்பாரா? எனக்குக்



கார் ஓட்டத் தெரிந்தாலும் வீட்டுக்குப் போகும் பாதை தெரியாதே! என்ன செய்யப் போகிறேன்?' என்று பதைபதைத்தாள்.

'ஏ லூசு மீரா! அவன் குடிப்பானா இல்லையான்னு தெரியும் முன்னாடி எதுக்கு எதை எதையோ நினைச்சுக் கவலைப்படுறே?' என்று மனசாட்சி அவளைப் பார்த்து கேட்டவுடன் சற்றே நிம்மதியுற்றாள்.

அவளது நிம்மதிக்குச் சொற்ப ஆயுள் என்பது போல் பேரர் ஒருவர். ஒரு தட்டு நிறைய கோப்பைகளுடன் ஷ்யாம் அருகே வந்து, ''சார், எடுத்துக்கோங்க'' என்றான்.

'இவரா தேடிப் போகலைன்னாலும் அவங்க விட மாட்டாங்க போலவே!' என நினைத்து நொந்து போனாள்.

மீரா ஷ்யாமையே துடிக்கும் இதயத்துடன் பார்த் திருக்க...

ஷ்யாமின் அருகில் இருந்தவர் அந்த பேரரிடம், ''சார் இதெல்லாம் குடிக்க மாட்டார். சார்க்கும், அவர் மனைவிக்கும் நீ போய் கூல் டிரிங்க்ஸ் எடுத்திட்டு வா'' என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

மீரா மனதிற்குள் ஆனந்தக் கூத்தாடினாள்.

அப்பொழுது மேற்கத்திய இசை இசைக்கப்பட்டது. சிலர் அதற்கேற்ப அசைந்தாடினார்கள்.

நவநாகரீகமாக உடை அணிந்த ஒரு பெண் ஷ்யாம் அருகே வந்து, ''ஹாய் ஷ்யாம்! என் கூட ஜோடியா ஆட வரீங்களா?'' என்று தன் வலது கையை நீட்டியவாறே கேட்டாள்.

மீராவிற்கு அந்தப் பெண்ணையும் பிடிக்கவில்லை. அவளது உடையையும் பிடிக்கவில்லை. அதைவிட அவளது வார்த்தைகளைச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

'இவ ஏன் என் புருஷன் கூட ஜோடி போட்டு ஆட நினைக்க வேண்டும்?' என்ற பொறாமை உணர்வு மீராவிற்குள் கொளுந்துவிட்டு எரிந்தது.

''உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புரியாதா? எனக்கு இதெல்லாம் பிடிக்காது. நீ வேற ஜோடி தேடிக் கொள்'' என்று ஷ்யாம் எரிச்சலுடன் சொல்ல,

''கமான் ஷ்யாம், பட்டிக்காடு மாதிரி பிகேவ் பண்ணாதீங்க. பாரினில் போய் படிச்சவர் மாதிரி நடந்துக்கோங்க. எப்போ பார்ட்டிக்கு வந்தாலும் டிரிங்க்ஸ் அடிக்காமல் ஓரமா ஒதுங்கிக்கிட்டு இருக்கீங்க. லைஃபை என்ஜாய் பண்ணுங்க ஷ்யாம்...'' என்று அவள் ஓரெட்டு முன்னே வர...

ஷ்யாம் ஓரெட்டு பின்னே நகர்ந்தான். அவனுக்குப் பின் பக்கமாக நின்றிருந்த மீராவின் மீது மோதி நின்றான்.

மீராவைப் பார்த்தவளின் கண்கள் பளிச்சிட்டன. ஷ்யாம் மீராவின் தோள் மேல் கை போட்டுக் கொண்டே அந்தப் பெண்ணைப் பார்த்து, ''நான் என் பார்ட்னரோடு தான் வந்திருக்கேன். நீ உனக்கு வேற பார்ட்னரைத் தேடிக் கொள்'' என்று அறிவுறுத்தினான்.

அந்தப் பெண்ணோ அலட்சியமாக, ''இது யாரு? உங்க வைஃபா? எப்பவுமே வைஃப் கூட தான் ஜோடி போடணுமா என்ன? நானெல்லாம் பார்ட்டிக்குப் பார்ட்டி ஆளை மாத்தலையா?'' என்று நக்கலாகக் கேட்டாள்.



ஷ்யாம் ஒரு நிமிர்வுடன் அந்தப் பெண்ணின் கண்களைப் பார்த்து, ''எனக்கு மத்தவங்களைப் பத்தி எதுவும் தெரியாது. ஆனா இந்த ஷ்யாம்க்கு வாழ்க்கை முழுக்கும் ஒரே பார்ட்னர் தான்'' என்று திருப்பிக் கொடுத்தான்.

அந்தக் கணம் மீரா மிகவும் பெருமிதமாக உணர்ந்தாள்.

'இது போதும்! இந்த ஒரு வார்த்தைக்காகவே நீங்க என்ன செய்தாலும் நான் பொறுத்துப் போவேன்' என்று மனதிற்குள் சந்தோஷப்பட்டாள்.

அவளது நினைப்பை அவளே மாற்றிக் கொள்ளும் காலம் வரும் என்பதை அறியாதவளாக மனம் பூரிப்படைந்தாள்.

அவர்கள் சாப்பிட்டு முடித்தவுடன்... ஒரு குடும்பம் ஷ்யாமின் அருகே வந்து, ''ஷ்யாம், எங்க வண்டி ரிப்பேர் ஆகிடுச்சு. நீங்க எங்களை வீட்டிலே விடுறீங்களா?'' என்று கேட்டனர்.

அவர்கள் நான்கு பேர் இருந்தனர். 'இவர்கள் நான்கு பேரும் எப்படி பின் சீட்டில் அமர்வார்கள்?' என்று மீரா யோசிக்க ஆரம்பித்தாள்.

அவர் அப்படிக் கேட்டவுடன் ஷ்யாம் திரும்பி மீராவைப் பார்த்தான். அவள் ஒன்றும் சொல்லாமல் நிற்கவும்...

அவன் அவர்களிடம் திரும்பி, ''போகலாம், வாங்க...'' என்றான்.

ஷ்யாமும், அந்தக் குடும்பமும் முன்னே நடக்க மீரா அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

அந்த ஹோட்டல் காவலாளி அவனது காரை வாயிலில் கொண்டு வந்து நிறுத்த... ஷ்யாம் டிரைவர் சீட்டில் ஏறி அமர்ந்தான். அந்த குடும்பத் தலைவர் ஷ்யாம் அருகே அமர்ந்து கொள்ள... எஞ்சிய மூவரும் பின் சீட்டில் அமர்ந்து கொண்டனர்.

மீரா திகைத்துப் போய் நின்றாள். 'நான் எங்கே உட்காருவது?' என்று அவள் விழித்துக் கொண்டு நிற்கையிலேயே... ஷ்யாம் காரைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

மீரா அடிபட்ட பார்வையுடன் விக்கித்து நின்று விட்டாள்.

## 7



'என்ன நடக்குது இங்கே? இவர் பாட்டுக்கு ஒண்ணும் சொல்லாமல் போய்விட்டார்?' என்று சில நொடிகள் விழித்துக் கொண்டு நின்ற மீரா சுற்றுப்புறம் உணர்ந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்.

அந்த ஹோட்டல் ஊழியர்கள் 'நீ என்ன ஒட்ட வந்த கேஸா?' என்று நினைத்து தன்னைப் பார்ப்பதாக ஒரு நினைப்பு எழ, மீரா அவசரமாக அந்த ஹோட்டலை விட்டு வெளியேறினாள்.

வெளியே வந்தவள் வீட்டிற்கு போன் செய்யலாம் என நினைத்தாள். அப்பொழுது தான் அவளுக்குத் தான் கைப்பேசி எடுத்து வராதது நினைவிற்கு வந்தது.



பொதுத் தொலைபேசி தேடி யாருக்கு அழைத்து, என்னவென்று சொல்வது என்று ஒரு விநாடி சிந்தித்தாள்.

'டிரைவர் அப்போதே வீட்டுக்குப் போயாச்சு. தாத்தா மட்டும் தான் இருப்பார். இந்த நேரத்திலே அவரை எதுக்குக் காரை எடுத்திட்டு வரச் சொல்லணும்? அப்படியே வரச் சொன்னாலும் அதுவரைக்கும் நான் எங்கே போய் நிற்பது?'' என்ற கேள்வி எழுந்தவுடன் வீட்டிற்குத் தானே சென்று விடுவது என்று தீர்மானித்தாள்.

பர்ஸில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று பார்வையிட்டாள். சில பத்து ரூபாய் நோட்டுகளும், சில்லரைகளும் தான் இருந்தன. வீட்டிற்கு அருகே இருக்கும் கோவிலுக்கு இது போதும். ஆனால் வெகு தூரத்தில் இருக்கும் இந்த ஹோட்டலில் இருந்து வீடு செல்வதற்கு இது போதாதே? என்ன செய்வது? என்று சில நொடிகள் திகைத்தாள்.

அதன் பின் ஒரு ஆட்டோவில் ஏறி வீடு சென்று, அங்கே பணம் வாங்கிக் கொடுத்துவிடலாம் எனத் தீர்மானித்து ஓடும் ஒரு ஆட்டோவைக் கை காட்டி நிறுத்தினாள்.

ஆட்டோவை ஓரங் கட்டிய அந்த ஆட்டோ ஓட்டுநர், ''எங்கம்மா போகணும்?'' என்றான்.

''புரசைவாக்கம் போகணுங்க.''

''தாசப்பிரகாஷ் பக்கமா இல்லை மோட்சமா?''

''இல்லைங்க புரசைவாக்கம்...'' என்று மீரா சொன்னாள்.

பாவம் சென்னைக்குப் புதிதாக வந்திருக்கும் மீரா தாசப்பிரகாஷ் விற்கு ஆட்டோ ஓட்டுநர் குறிப்பிட்ட தாசப்பிரகாஷ்

என்பது ஒரு ஹோட்டல் என்றும், மோட்சம் என்பது ஒரு சினிமா தியேட்டரில் பெயர் என்றும் தெரிய வில்லை.

அவன் இரண்டையுமே அவள் இறங்க வேண்டிய இடத்தைத் தெரிந்து கொள்வதற்காக... ஒரு அடையாளத் திற்காகக் கேட்டான்.

இவளோ தெய்வத் திருமகள் படத்தில் விக்ரம் நிலா, நிலா என்று சொல்வது போல் புரசைவாக்கம், புரசை வாக்கம் என்று சொல்லிக் கொண்டு இருந்தாள்.

அந்த ஆட்டோ ஓட்டுநர் அவளை மேலும் கீழுமாக அளவிட்டு, ''உனக்கு அட்ரஸ் தெரியுமா? நானூறு ரூபா ஆகும்'' என்றான்.

அவனது பார்வையில் மிரண்டவளாக, அவனை வேண்டாம் என்று சொல்லி அனுப்பி வைத்தாள்.

'எனக்கு அட்ரஸ் மட்டும் தான் தெரியுது. வழி தெரியாது. அதனால ராத்திரி நேரத்தில் ஆட்டோவில் போவது அவ்வளவு பாதுகாப்பு கிடையாது' என நினைத் தவள் பேருந்தில் பயணம் செய்ய முடிவெடுத்து, அரு கிலிருந்த பேருந்து நிறுத்தத்திற்கு சென்றாள்.

பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தவர் களிடம் அவளது வீட்டு முகவரி சொல்லி எந்தப் பேருந்தில் பயணம் செய்ய வேண்டும் என்று கேட்டுத் தெரிந்து கொண்டாள். ஒருவரோடு நிறுத்தாமல் மூன்று பேர்களிடம் கேட்டு அது சரியான தகவல் தான் என்பதை உறுதி செய்து கொண்டாள். அவர்கள் குறிப்பிட்ட பேருந்திற்காக காத்திருக்க ஆரம்பித்தாள்.



பேருந்து வந்ததும் பயணச் சீட்டு வாங்கி ஜன்ன லோரமாக அமர்ந்தாள். அதுவரை அடக்கி வைத்திருந்த கண்ணீர் கன்னங்களில் உருண்டோடியது.

'இவர் மனசிலே என்னைப் பத்தி என்ன நினைச்சிக் கிட்டு இருக்கார்? நானா இவரை பார்ட்டிக்கு கூட்டிட்டுப் போகச் சொன்னேன்? பிடிக்கலைன்னா விட்டுட்டுப் போயிருக்கலாம் தானே! அதை விட்டுட்டு...

இவர் இது மாதிரியெல்லாம் நடப்பது எதைக் காட் டுது? பொறுப்பில்லாத் தனத்தையா? ம்ஹூம் அப்படிச் சொல்லிவிட முடியாது. பொறுப்பில்லை என்றால் தொழிலை தூக்கி நிறுத்த முடியாதே?

ஆனால் என் விஷயத்தில் எதைப் பொறுப்பாக நிறைவேற்றி இருக்கார்? எப்பொழுதுமே ஒரு அலட் சியம்... பொறுப்பில்லாத்தனம்... அக்கறையில்லாத் தன்மை... இவற்றில் ஏதேனும் ஒன்று கண்டிப்பாக வெளிப்படுகிறது.

ஏன் நான் இவருக்குப் பிடிக்காத பொண்டாட்டியா? தாலி கட்டிய கடமைக்காக கூட வைச்சிருக்காரா? அப் படின்னா இவர் எப்பவுமே இப்படித் தான் இருப் பாரா? இவர் இயல்பாய் எப்போ என்னிடம் பேசுவார்? பாசமாய் எப்போ நடந்துக்குவார்? காலமெல்லாம் நான் இவற்றை இவரிடம் எதிர்பார்த்து ஏமாந்து தான் போக ணுமா?'

மனதுக்குள் கேள்வி கேட்டுக் கொண்டு அழுகை யுடன் பேருந்தில் பயணம் செய்தவள் சரியான நிறுத் தத்தை விசாரித்து இறங்கி வீட்டை நோக்கி நடக்க ஆரம் பித்தாள்.

அங்கே வீட்டில்... மகாலிங்கம் இவர்கள் இருவரின் வருகைக்காகக் காத்திருந்தார். ஷ்யாம் வீட்டிற்குள் நுழைந்தான்.

ஷ்யாம் மட்டும் நுழைவதைப் பார்த்துக் குழம்பியவராய், "மீரா எங்கேடா?" என்று கேட்டார்.

"அவ இன்னும் வரலையா?" என்று ஷ்யாம் அசட்டையாகக் கேட்டதும் மகாலிங்கத்திற்குக் கோபம் வந்துவிட்டது.

"என்னடா சொல்லுறே? உன் கூட தானே வந்தாள்? என்னாச்சு?" என்று கேட்டதும்,

ஷ்யாம் நடந்ததைச் சொன்னான். மகாலிங்கத்திற்கு வந்த கடுப்பில் அவருக்குப் பேரனை நாலு அறை அறையலாம் போல வந்தது.

முதலில் மீராவை அழைத்துப் பேசுவோம் என எண்ணியவராய் அவளது கைப்பேசிக்கு முயற்சிக்க... அழைப்பு மணி அவருக்கு வெகு அருகில் கேட்டது. அவர்கள் வீட்டுச் சாப்பாட்டு மேஜையில் இருந்த கைப்பேசியைப் பார்த்து நொந்து போனார்.

'அச்சோ போனையும் கொண்டு போகலையா? இப்போ நான் என்ன செய்வேன்? எங்கே போய் தேடுவேன்? இப்படிப் பொண்டாட்டியைப் பொறுப்பில்லாமல் விட்டுவிட்டு வந்திருக்கானே?' என்று புலம்பிக் கொண்டே வாயிலைக் கடந்து கேட்டிற்கு வர... சரியாக அந்த சமயம் மீரா தெருவில் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

வயதான காலத்தில் தன் பொருட்டு வாசலில் காத்திருந்தவரைப் பார்த்ததும் மீராவிற்கு அழுகை



கூடியது. அவள் ஒன்றும் பேசாமல் அவரைக் கடந்து வீட்டை நோக்கி நடக்க,

"இப்போ தான்மா எனக்கு விஷயம் தெரிஞ்சது. நீ செல்போனையும் கொண்டு போகலை போலிருக்கு" என்று சொல்லிக் கொண்டே மகாலிங்கம் அவளைப் பின் தொடர்ந்தார்.

மீரா வீட்டிற்குள் நுழைய அங்கே ஷ்யாம் கால் மேல் கால் போட்டு அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

எப்பொழுதும் கணவனது தோரணையை ரசித்துப் பார்ப்பவளுக்கு... இன்று அவன் உட்கார்ந்திருக்கும் தோரணை கடும் கோபத்தை உண்டு பண்ணியது. 'தெனாவட்டா உட்கார்ந்து இருக்கிற லட்சணத்தைப் பாரு!' என்று மனதுக்குள் திட்டினாள்.

ஷ்யாம் வீட்டினுள் நுழையும் மீராவைப் பார்த்ததும்... அவள் பின்னே வந்து கொண்டிருந்த தாத்தாவைப் பார்த்து, "வந்துட்டாளா? நான் தான் அப்போவே சொன்னேன் தானே! அவ வந்திடுவான்னு. நீங்க தான் வீணா கவலைப்பட்டீங்க" என்றான்.

'இவனை அறையலைன்னாலும் முகத்தில் அடிக்குற மாதிரி நாலு கேள்வியாவது கேட்கணும்' என நினைத்த மகாலிங்கம், "எதுக்குடா பாதியிலே அவளை விட்டுட்டு வந்தே? உனக்கு அறிவில்லை?" என்று கேட்டார்.

"இப்போ எதுக்கு என்கிட்டே கத்துறீங்க? அந்த ஃபாமிலி வந்து என்னைக் கூட்டிட்டுப் போங்கன்னு சொன்னதும் நான் இவளைத் திரும்பிப் பார்த்தேன். இவ

என்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போங்கன்னு சொல்லலையே!'' என்று எதிர்வாதம் செய்தான்.

'இவன் என்ன லூசா?' என்பது போல் மகாலிங்கம் விழிக்க...

மீரா ''உங்க பார்வைக்கு அது தான் அர்த்தமா? நான் என்ன நினைச்சேன்னா... அவங்களைக் கொண்டு போய் அவங்க வீட்டிலே இறக்கி விட்டுட்டு நம்ம வீட்டுக்குப் போவோமான்னு பொண்டாட்டியான என்கிட்டே பெர்மிஷன் கேட்குறீங்க போலன்னு'' என்று அழுகையும், ஆத்திரமுமாகச் சொன்னாள்.

'அங்கே அவர் பார்வைக்கு அது அர்த்தம் என்று எடுத்துக் கொண்டாலும் வீட்டிற்கு வந்த பின்பு மனைவி இன்னமும் வீடு திரும்பலையே என்று கொஞ்சமாவது பதற்றப்பட்டு இருக்கிறாரா? வயசான தாத்தா வெளியே வந்து நிற்கிறார். இவர் இங்கே புத்தகம் படிக்கிறார்... அதுவும் கால் மேல் கால் போட்டு' என்று நினைத்ததும் மீராவிற்கு மேலும் ஆத்திரம் அதிகரித்தது.

அங்கே அதற்கு மேல் நிற்க முடியாதவளாக மாடிப்படி நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

மகாலிங்கம் ஷ்யாமிடம், ''அவங்களை வீட்டிலே விட்டுட்டு மீராவைக் கூட்டி வர நினைச்சேன் என்றாவது சொல்லுவாய் என்று பார்த்தேன்'' என்றார்.

''என்னைப் பொய் சொல்லச் சொல்லுறீங்களா? பிசினஸிலே சில சமயம் பொய் சொல்ல வேண்டியிருக்கும். அங்கே சொல்வது வேற... வீட்டிலே எதுக்கு அநாவசியமாய் பொய் சொல்லணும்?'' என்றதும் மகாலிங்கம் மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டார்.



'போடா உண்மை விளம்பி! பெரிய அரிச்சந்திர பிரபு! வந்துட்டான். பொண்டாட்டியை எப்படிப் பார்த்துக்கணும் என்று தெரியாத உனக்கெல்லாம் எதுக்குடா பொண்டாட்டி?'' என்று திட்டிக் கொண்டே மீரா தங்களது அறைக்குள் சென்று படுத்துக் கொண்டாள்.

இதுவரை மீரா தகப்பனிடமோ, தமையனிடமோ ஷ்யாம் தன்னிடம் ஒட்டியும் ஒட்டாமலும் நடந்து கொள்ளும் முறையைச் சொன்னதில்லை.

'அவர்களே சொத்தை இழந்து இப்போது தான் வாழ்க்கையை முதலில் இருந்து ஆரம்பிக்கிறார்கள். இதில் நாம வேற மனக் கஷ்டத்தைச் சொல்லி அவர்களை கவலைக்குள்ளாக்கக் கூடாது' என்று முடிவு செய்திருந்தாள்.

ஆனால் நடப்பவற்றைப் பார்த்தால்... சீக்கிரமாகச் சொல்ல வேண்டி வருமோ என்று எண்ணிக் கொண்டே தூங்கிப் போனாள்.

மறுநாள் காலையில் எழுந்தவள் குளித்து முடிந்த பின் கீழே சென்றாள். அமைதியாகத் தன் வேலைகளைத் தொடர்ந்தாள். மகாலிங்கத்திற்கும் அவளிடம் என்னவென்று சமாதானம் சொல்வது என்று தெரியவில்லை.

சாப்பிட்டு முடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் மீரா வாந்தி எடுக்க... மகாலிங்கம் டாக்டரை வரவழைத்தார்.

மீரா மனதிற்குள் கணக்கிட்டாள். தான் கருவுற்றிருக்கலாம் என்ற சந்தேகம் அவளுக்கு வந்தது.

இனி என் வாழ்க்கைக்கு இந்தக் குழந்தை தான் துணையா என்று நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மருத்துவர் வந்து அவளது சந்தேகத்தை உறுதி படுத்திவிட்டுச் சென்றார்.

மகாலிங்கம் சந்தோஷத்துடன் டாக்டரை வழி அனுப்புவதற்காக அவரைப் பின் தொடர்ந்து சென்றார்.

மீரா சோர்வாக சோபாவில் அமர்ந்திருக்க... ஷ்யாம் அவள் அருகே சென்று அவளது உச்சியில் முத்தமிட்டான். அவளது உடலெல்லாம் சிலிர்த்தது. அவன் ஒரு நாளும் இது போன்ற நெருக்கத்தைக் காட்டியிராததால் அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனந்த அதிர்ச்சி தான்.

அவன் மீதிருந்த கோபம் கூட நொடியில் காணாமல் போனது. மீரா ஷ்யாமிடம், ''உங்களுக்குக் குழந்தைங்கள் என்றால் ரொம்பப் பிடிக்குமா?'' என்று கேட்டாள்.

அவன் முறுவலித்துக் கொண்டே தனது தோளைக் குலுக்கி விட்டுச் சென்றான்.

'இதற்கு என்ன அர்த்தம்?' என்று நினைத்து மீரா குழம்பினாள். அவள் தனது தந்தையை அழைத்து இந்த சந்தோஷச் செய்தியைப் பகிர்ந்தாள்.

# 8



மகள் தாயாகப் போகும் விஷயமறிந்த மாணிக்கம் மும்பையில் இருந்து மகளைப் பார்க்க வந்திருந்தார்.

அவர் வீட்டிற்குள் நுழையும் போது ஷ்யாம் அலுவலகம் செல்லத் தயாராகி இருந்தான். அதனால் அவன்



அவரிடத்தில் இரண்டு நிமிடம் பேசிவிட்டு அலுவலகம் கிளம்பி விட்டான்.

மாணிக்கமும் தொழிலைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி அன்று இரவே மும்பை கிளம்பி விட்டதால் மகள் மற்றும் மருமகனுக்கு இடையே அவ்வளவாக நெருக்கம் இல்லை என்பது அவருக்குத் தெரியாமலே போனது.

மீராவிற்கு அவ்வப்போது தான் வாந்தி வந்தது. அதனால் அவளால் தனியாகச் சமாளிக்க முடிந்தது.

கர்ப்பமாகி மூன்றாவது மாதம் நடக்கையில் மீராவிற்கு ஜுரம் வந்தது. காலையில் அவளால் படுக்கையில் இருந்து எழுந்து கொள்ளவே முடியவில்லை.

ஷ்யாம் வழக்கம் போல் எழுந்து குளித்துத் தயாராகி சாப்பிட வந்தான்.

''எங்கேடா மீரா? காலையிலேயே இருந்து கண்ணிலேயே காணோம்?'' என்று தாத்தா அவனை விசாரிக்க,

''ரூமிலே தான் தாத்தா இருக்காள். படுத்திருக்காள்.''

''படுத்திருக்காளா? ஏன்? ஏதாச்சும் உடம்பு சரியில்லையா?'' என்று மகாலிங்கம் கேட்ட பின்பே ஷ்யாமிற்கு 'அப்படி இருக்குமோ?' என்ற சந்தேகம் தோன்றியது.

அவன் உடனே மாடி ஏறி வந்து அவளைத் தொட்டு உலுக்க... அவளது உடல் கொதித்தது கண்டு அவளுக்கு ஜுரம் என்று முடிவு கட்டிக் கொண்டான்.

கீழே இறங்கி வந்தவன், ''தாத்தா, அவளுக்கு ஜுரமா இருக்கு. டாக்டரை வரச் சொல்லுங்கள்'' என்று

சொன்னவன் சாப்பிட்டுவிட்டு அலுவலகம் கிளம்பி விட்டான்.

மகாலிங்கம் மருத்துவர் வந்ததும் அவரையும், பெண் துணைக்கு கமலாவையும் கூட்டிக் கொண்டு மீராவின் அறைக்குள் நுழைந்தார்.

மருத்துவர் அவளுக்கு ஊசி போட்டு மருந்து மாத்திரைகள் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார். கமலா தான் அருகிலிருந்து கவனித்துக் கொண்டார்.

மீரா கமலம்மாவிடம், ''அவர் எங்கே?'' என்று தன் கணவரைப் பற்றி விசாரிக்க,

''தம்பி உனக்கு ஜுரம்ன்னு டாக்டரைக் கூட்டி வந்து காட்டுங்கன்னு சொல்லிட்டு ஆபீசுக்குப் போயிடுச்சே!'' என்று கமலா சொன்னதும், மீரா வருத்தம் அடைந்தாள்.

'எனக்கு ஜுரம்ன்னு தெரிஞ்சும் ஆபீஸுக்குப் போயிட்டாரா? ஏன்? ஒரு நாளைக்கு லேட்டாப் போனால் குறைஞ்சா போயிடுவார்?' என்று அவனைத் திட்டினாள்.

ஏதாவது முக்கியமான மீட்டிங் இருந்திருக்கும் என்று அப்போதும் ஒரு மனது அவனுக்கு வக்காலத்து வாங்கத்தான் செய்தது.

ஆனால் அன்று அவன் வீடு திரும்பும் வரை அவளுக்கு போன் செய்து கூட விசாரிக்கவில்லை என்று தெரிந்ததும் அவன் மேல் கோபமும், ஆத்திரமும் வந்தது.

இரவு எட்டு மணிக்கு வீடு திரும்பியவன், மீரா படுத்திருப்பதைப் பார்த்து, ''என்ன அதுக்குள்ளே தூங்கப் போய் விட்டாய்?'' என்று கேட்டான்.



'அது கூட மறந்து போச்சா?' என்று நினைத்தவள் அவனை முறைத்துக் கொண்டே, ''எனக்கு ஜுரம்'' என்று அவனுக்கு ஞாபகப்படுத்தினாள்.

''காலையிலே உனக்கு ஜுரம் இருந்துச்சு இல்லே!'' என்று சொல்லிக் கொண்டே அவன் குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

வெளியே வந்த பின்பாவது தன்னருகே வந்து நலம் விசாரிப்பான் என்று பார்த்தால்... குளியலறையில் இருந்து வந்தவன் கீழே இறங்கிப் போய்விட்டான்.

'அவ்வளவுதானா உங்க விசாரிப்பு?' என்று மீரா நொந்து போனாள்.

'நீ விசாரிக்கலைன்னா போடா! எங்கப்பா மூணு தடவை போன் பண்ணி விசாரிச்சார். எங்கண்ணன் ரெண்டு தடவை கூப்பிட்டுக் கேட்டான். உங்க தாத்தா ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை எட்டிப் பார்த்தார். உன்னை எதிர்பார்த்து ஒண்ணும் நானில்லை!'' என்று திட்டிக் கொண்டு பிரச்சனையை அத்தோடு விட்டு விட்டாள்.

நாட்கள் வேகமாகக் கடந்தது. மீராவிற்கு இப்பொழுதெல்லாம் ஷ்யாமின் நடவடிக்கைகள் பழகிப் போயின. அவன் இப்படித்தான் என்று மனதைத் தேற்றி வாழக் கற்றுக் கொண்டாள்.

மீராவை பிரசவத்திற்கு மும்பைக்கு அனுப்புவதற்கு மகாலிங்கம் சம்மதிக்கவில்லை.

''எப்படியும் உங்க வீட்டிலும் பெண் துணை இல்லை. அதனால் இங்கேயே இருக்கட்டும். இங்கே வேலைக்காரர்கள் நிறைய பேர் இருக்காங்க. அவள் ஏற்கனவே

காண்பிச்ச ஹாஸ்பிட்டலிலேயே காட்டிக்கலாம்'' என்று மீராவின் தந்தையிடம் சொல்லிவிட்டார்.

அவளுடைய பிரசவ நாளும் நெருங்கியது.

இன்று அவளது தந்தை மாணிக்கம் மும்பையில் இருந்து வருகிறார். மகளது பிரசவத்தை ஒட்டி அவளுடனே இருக்க வேண்டும் என்பதற்காக அவர் மீராவின் வீட்டிற்கு வருகிறார். மீரா தந்தையின் வரவிற்காக ஆசையுடன் காத்திருக்கலானாள்.

மீரா சோபாவில் அமர்ந்து நாளிதழைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது இடுப்பில் ஒரு வலி சுருக்கென்று தைத்தது.

என்னவென்று அவள் உணரும் முன் அது மறைந்தது. பிரமை போல என்று எண்ணிக் கொண்டாள்.

அடுத்த சில நிமிடங்களில் மீண்டும் ஒரு வலி வந்தது. வலி தானோ என்று மீரா ஆராய்ச்சியில் இறங்க... அடுத்த பத்து நிமிடங்களில் வலி அதிகரித்து அது பிரசவ வலி தான் என்று அவளுக்குக் காட்டிக் கொடுத்தது.

மீரா கமலாவை அழைத்துக் கூற... அவர் மகாலிங்கத்திடமும், ஷ்யாமிடம் சொல்வதற்கு விரைந்தார்.

ஷ்யாம் வேகமாக மீராவின் அருகே வந்தான். மீரா அவனது சட்டையை இறுக்கிப் பற்றியபடி தனது பல்லைக் கடித்துக் கொண்டு வலியைத் தாங்கினாள்.

மகாலிங்கம் மருத்துவமனையைக் கூப்பிட்டு விவரம் சொல்லிவிட்டு போன் அருகே விரைந்தார்.



''ஷ்யாம் அவளை அப்படியே நடத்திக் கூட்டிட்டு வா'' என்று சொன்னதும்,

''தாத்தா, இன்னைக்கு குழந்தை பிறந்திடுமோ?'' என்று ஷ்யாம் ஆவலுடன் கேட்டான்.

''ஆமாடா. கண்டிப்பா இன்னைக்குப் பிறந்துவிடும்'' என்று தன் கொள்ளுப் பேரப் பிள்ளை பிறக்கப் போகும் சந்தோஷத்தில் இருந்தவரின் மீது,

அவரது பேரன், ''தாத்தா, உங்க சத்தியம் ஞாபகம் இருக்கா?'' என்று கேட்டு அலுங்காமல் குண்டைத் தூக்கிப் போட்டான்.

மகாலிங்கம் வெலவெலத்துப் போனார். அவரது முகம் வெளிற ஆரம்பித்தது.

'ஐயோ! இவன் அதை இன்னமும் மறக்கவில்லையா? எந்த நேரத்தில் வந்து எதைப் பேசுகிறான்?' என்று அவர் விழித்துக் கொண்டு நிற்க...

ஷ்யாம் தொடர்ந்து பேசி மீராவையும் அதிர்ந்து போக வைத்தான்.

''தாத்தா, நீங்க என்ன சொன்னீங்க? கல்யாணம் பண்ணி குழந்தை பெத்துக்கிட்டால் என்னை கார் ரேஸுக்கு அனுப்புறேன் என்று சொன்னீங்க தானே! நீங்க சொன்னபடி நான் கல்யாணமும் பண்ணிக்கிட்டேன். இதோ இன்னைக்கு குழந்தையும் பொறக்கப் போகுது. இனிமேல் உங்களால என்னைத் தடுக்க மடியாது. நான் கார் ரேஸுக்குப் போகப் போறேன்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

மீரா தன்னால் முடிந்த மட்டிற்கும் மகாலிங்கத்தை முறைத்தாள். கணவனைப் பிடித்திருந்த பிடியை விலக்கினாள்.

அப்பொழுது மீண்டும் வலி வந்து தாக்க 'அம்மா' என்று அலறினாள்.

''ஷ்யாம், அவளைத் தூக்கு. டைம் ஆகுது...'' என்று மகாலிங்கம் பதற...

ஷ்யாம் அவளைத் தூக்க முயல... மீரா, ''என்னைத் தொட வேண்டாம்'' என்று கத்தினாள்.

''லூசா மீரா நீ? வலியில துடிச்சுக்கிட்டு இருக்கே. இப்போ போய் ஹாஸ்பிடலுக்கு வர மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறே!'' என்று அவளது ஒதுக்கத்திற்கு அவளது பயம் காரணம் என நினைத்துக் கொண்டு சொன்னவன் அவள் தடுத்ததையும் மீறித் தூக்கிக் கொண்டு சென்றான்.

'மனசைக் கொன்னுட்டு உடம்புக்கு வைத்தியம் பார்க்க நினைக்கிறாயாடா?' என்று மீரா மனதுக்குள் அரற்றினாள்.

அவளைக் காரின் பின்னிருக்கையில் அமர வைத்தவன், டிரைவர் சீட்டில் ஏறி அமர்ந்தான். முன் பக்கம் மகாலிங்கம் ஏறியதும் காரை ஓட்ட ஆரம்பித்தான்.

மகாலிங்கம், ''ஏன்டா இப்போ போய் அதையெல்லாம் பேசுறே?'' என்று கேட்டார்.

''உண்மையைத் தானே சொன்னேன். கல்யாணமே வேண்டாம்ன்னு இருந்தேன். நீங்க தானே என்னிடம் வந்து அது மாதிரி சொன்னீங்க'' என்றதும்,

'இவனிடம் பேசினால் இவன் இதே ரீதியில் தான் மேலும் ஏதாவது உளறுவான்' என நினைத்த மகாலிங்கம், ''பேசாமல் ரோட்டைப் பார்த்து ஓட்டு'' என்று கடுப்புடன் சொன்னார்.



மீராவிற்கு பல விஷயங்கள் தெளிவாகப் புரிந்தது.

அவனது ஒட்டாத நடவடிக்கை... குழந்தை பிறக்கப் போகிறது என்று டாக்டர் சொன்ன அன்று அவன் கொடுத்த முத்தம்... அது பிள்ளைக்கான சந்தோஷத்தைக் கொண்டாட தந்தது கிடையாதா? கார் ரேஸுக்குப் போவதற்கான அனுமதி கிடைத்துவிட்ட சந்தோஷமா? என்று நினைக்கும்போதே கசந்து வழிந்தது.

அவன் வேகத்துடனும், லாவகத்துடனும் கார் ஓட்டுவது எப்படி என்று மீராவிற்கு இன்று புரிந்தது.

ஊரில் இருந்து வந்த மாணிக்கம் நேராக மருத்துவமனை விரைந்தார். மீராவிற்கு சுகப் பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்தது.

# 9

மீரா அறைக்கு மாற்றப்பட்டதும் மீராவின் அப்பாவும், மகாலிங்கமும் அவளை வந்து பார்த்தனர். தங்களது பேத்தியைக் கண்டு பூரித்தனர்.

மீரா கண்ணோரம் நீர் துளிர்க்க கணவன் வருவானோ என்று ஆவலாக அறை வாயிலைப் பார்த்திருக்க... அவன் வரவில்லை. கமலா தான் வந்தார்.

கமலா மீராவோடு மருத்துவமனையில் தங்கிக் கொள்வதென ஏற்கனவே முடிவு செய்திருந்தபடியால் அங்கேயே இருந்து விட்டார்.

அன்று மாலை மாணிக்கம் வெளியே சென்றிருக்கும் போது மகாலிங்கம் மீராவின் அறைக்குள் நுழைந்தார்.

மீரா கமலாவிடம், ''கமலம்மா நீங்க கொஞ்ச நேரம் வெளியே இருங்க'' என்றாள். அவர் எழுந்து வெளியே போனார்.

மகாலிங்கத்திற்கு வியர்க்க ஆரம்பித்தது. பேரன் மனைவி தன்னைக் கேள்விக் கணைகளால் துளைக்கப் போகிறாள் என்பது அவருக்குப் புரிந்து போனது.

மீரா சுற்றி வளைக்காமல், ''ஏன் தாத்தா இப்படிச் செஞ்சீங்க?'' என்று கேட்டாள்.

அவர் அமைதியாய் நின்று கொண்டிருந்தார்.

''உங்க பேரனுக்கு கல்யாணத்திலே விருப்பம் இல்லைன்னா அப்படியே விட வேண்டியது தானே? சின்ன பிள்ளையை மிட்டாயைக் காட்டி ஏமாத்துற மாதிரி... நீ பிள்ளையைப் பெத்தால் உனக்கு ரேஸ் போக அனுமதி தரேன் என்று சொல்லி இருக்கீங்க. சரி நீங்களும் உங்க பேரனும் எக்கேடோ கெட்டுப் போங்க. ஆனால் என் வாழ்க்கையோட ஏன் விளையாடுனீங்க?

உங்களுக்கு யார் அந்த அதிகாரம் கொடுத்தா? நான் கட்டினால் உங்க பேரனைத் தான் கட்டுவேன் என்று உங்ககிட்டே வந்து சொன்னேனா? இல்லை இவரை விட்டா எனக்கு வேற மாப்பிள்ளையே கிடைக்காதுன்னு எங்க அப்பா உங்க காலிலே விழுந்தாரா? சொல்லுங்க... எதை வைச்சு என்னை பலி ஆடா நிறுத்துனீங்க?'' என்று கோபத்துடன் இரைந்தாள்.

''இல்லைம்மா அவனுக்குன்னு ஒரு குடும்பம் வந்திட்டால் அவனோட ரேஸ் பைத்தியம் தெளிஞ்சிடும்ன்னு நினைச்சேன்.''

''அப்படின்னா அவர் பைத்தியத்தைத் தெளிய வைக்க இன்னொரு பெண்ணை சங்கடப்பட வைப்பீங்களா?



இதை நீங்க கல்யாணம் பேசும்போதே சொல்லி இருக்கணுமா வேண்டாமா? உங்க கண்டிஷனுக்கு ஒத்துக்குற பொண்ணைப் பார்த்து அவருக்குக் கட்டி வைச்சிருக்கணும்...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே கதவைத் தட்டி அனுமதி வாங்கிக் கொண்டு மீராவின் தந்தை உள்ளே நுழைந்தார்.

அவருக்கு எதுவோ சரி இல்லை என்று புரிந்தது.

'காலையில் இருந்து மாப்பிள்ளை இந்தப் பக்கம் எட்டி கூடப் பார்க்கவில்லை. பார்க்க வந்திருக்கும் தாத்தா விடம்... வயதில் பெரியவர் என்ற கூடப் பார்க்காமல் மீரா கத்திக் கொண்டிருக்கிறாள். என்ன தான் நடக்கிறது?' என்று குழம்பினார்.

'என்ன நடக்கிறது என்று யாரிடம் கேட்பது? மகளிடமா அல்லது மகாலிங்கத்திடமா? மகாலிங்கத்திடம் என்னால் கேட்க முடியாது. அவர் வயதில் பெரியவர், சம்பந்தி முறை...

அதோடு மட்டுமல்லாமல் அவரது பணபலமும் என்னை அவரிடம் கேள்வி கேட்க விடாமல் கட்டிப் போடும்.

தன் பெண் புகுந்த வீட்டில் நன்றாக வாழ வேண்டும் என்று நினைக்கும் எந்த ஒரு தகப்பனாலும் மாப்பிள்ளை வீட்டினரை எதிர்த்து எந்த ஒரு கேள்வியும் கேட்டுவிட முடியாது. இது இந்த நாட்டில் பெண்ணைப் பெற்றவர்களின் சாபக்கேடு.

மகாலிங்கத்திடம் தான் கேட்க முடியாது. மீராவிடம் கேட்போமா? ஆனால் இன்று எப்படி மீராவிடம் விசா

சிக்க முடியும்? அவளே சோர்ந்து போய் படுத்திருக்கிறாள்.

மாப்பிள்ளை மருத்துவமனைக்கு வந்து விட்டால் அப்படி ஒன்றும் பெரிய பிரச்சனை இல்லை. ஏதோ அவர்களுக்குள் சிறு தகராறு என்று எடுத்துக் கொள்வோம்' என்று மாணிக்கம் தீர்மானித்தார்.

ஆனால் அவரது மாப்பிள்ளையோ மருத்துவமனைப் பக்கம் எட்டியும் பாராமல் அவரது வயிற்றில் புளியைக் கரைத்தான்.

மூன்று நாட்கள் மட்டுமே மீரா மருத்துவமனையில் இருந்தாள். மூன்று நாட்களில் இரண்டு முறை மட்டுமே மகாலிங்கம் வந்தார். ஷ்யாம் வரவேயில்லை.

மீரா திட்டியதற்கு பிறகு மகாலிங்கம் ஒரு முறை தான் வந்தார். அப்பொழுது அவரிடம் பேசும் துணிவு மீராவின் தந்தைக்கு இல்லை.

மூன்றாவது நாள் வீட்டிற்குச் செல்லலாம் என்று மருத்துவர்கள் சொன்னவுடன் மீரா மகாலிங்கத்திடம், ''நான் மும்பைக்குப் போறேன். என்னோட துணிமணி எல்லாம் இங்கே கொண்டு வந்து தரச் சொல்லுங்க'' என்றாள்.

மகாலிங்கம் வருத்தம் தோய்ந்த முகத்துடன் ஒரு பார்வை பார்த்தார். 'இது தான் உன் முடிவா?' என்று கேளாமல் கேட்டது அவர் பார்வை.

மகளின் முடிவைக் கேட்ட மாணிக்கம் அதிர்ந்தார். மகாலிங்கம் அந்த அறையை விட்டு வெளியேறியதும்,

''மீரா என்னடா பிரச்சனை? எதுவா இருந்தாலும் அப்பாகிட்டே சொல்லுடா. நானும் அண்ணனும்



உனக்காக இருக்கோம். உனக்கும் மாப்பிள்ளைக்கும் ஏதாவது சண்டையா? நான் மாப்பிள்ளைகிட்டே பேசட்டுமா?'' என்று பரிதவித்தார்.

''நான் உங்ககூட நம்ம வீட்டுக்கு வரக்கூடாதாப்பா?''

''என்னம்மா இப்படிக் கேட்கிறே? அது உன் வீடு.''

''அப்படின்னா இப்போதைக்கு எந்தக் கேள்வியும் கேட்காதீங்க. என்னை மட்டுமில்லை... இங்க இருக்கிற யார்கிட்டவும் எந்தக் கேள்வியும் கேட்காதீங்க. நாம மும்பைக்குப் போகலாம்'' என்று சொன்னாள்.

மகாலிங்கம் அவளின் ஆசைப்படியே அவளது துணிகள் அடங்கிய பெட்டியையும், மும்பை செல்வதற்கான விமான டிக்கெட்டையும் கொண்டு வந்து கொடுத்தார்.

மீரா எடுத்த முடிவில் மாணிக்கத்திற்கு உடன்பாடு இல்லை என்றாலும் அவளிடம் கோபம் காட்டுவதற்கோ, புத்தி சொல்வதற்கோ இது நேரம் அல்ல என்று உணர்ந்து அவளைத் தன்னுடன் மும்பைக்கு அழைத்துச் சென்றார்.

பிரசவம் முடிந்த பின் ஒரு பெண் தன் தாய் வீட்டில் இருப்பது சகஜமான ஒன்று தானே என்று நினைத்தார்.

ஆனால் நாட்கள் வாரங்களாக விரைந்தோடியும் ஷ்யாம் வரவில்லை என்றதும் மாணிக்கத்திற்குமே மருமகன் மீது கோபம் வரத்தான் செய்தது. சந்துருவிற்கு தங்கையைப் பார்க்கும் போதெல்லாம் ஷ்யாமின் மேல் ஆத்திரம் பொங்கும்.

நேரில் சென்று அவன் சட்டைக் காலரைப் பிடித்து சண்டை போடவேண்டும் என்று நினைப்பான். ஆனால்

தங்கையின் மனநிலை தெரியாமல் எதுவும் செய்யக் கூடாது என்று மௌனம் சாதிப்பான்.

அவனது தங்கையோ அதற்கு மேல் மௌனம் சாதித்தாள். 'ஷ்யாம்' என்று சந்துரு தொடங்கினாலே அந்த இடம் விட்டு நகர்ந்து விடுவாள்.

சந்துரு தன் தந்தையிடம் சென்று பேசினான்.

''அப்பா, மீராவைப் பத்தி என்ன தான் முடிவு பண்ணி இருக்கீங்க? அவளிடமோ தாத்தாவிடமோ பேச வேண்டியது தானேப்பா. இப்படி அமைதியா எத்தனை நாளைக்கு தான் இருப்பது?''

''அவ வந்து ஒரு மாசம் தானே சந்துரு ஆகுது. ஒரு பொண்ணுக்குக் குழந்தை பிறந்தால் அம்மா வீட்டில் மூன்று அல்லது ஐந்து மாதம் வரை இருப்பாங்க தானே'' என்று மாணிக்கம் மகனிற்கு சமாதானம் சொன்னார்.

'இது வாழ்நாள் பந்தம். இங்கே வார்த்தைகள் தவறாகப் பிரயோகப் படுத்தப்பட்டால் உறவுகளுக்கு நடுவில் விரிசல் அதிகமாகி விடும். அவர்கள் வீட்டுப் பிரச்சனை. அதில் நாம உள்ளே நுழைந்து பஞ்சாயத்து பண்ணாமல் அதுவாகவே சரி ஆகி விடக்கூடும்' என்று மாணிக்கம் எதிர்பார்த்தார்.

'எத்தனை மாசம் வேண்டும் என்றாலும் அவ இருக் கட்டும். ஆனால் புருஷன்காரன் வந்து போய் இருக்க வேண்டாமா?' என்று சந்துரு கேட்கத் தான் நினைத் தான். ஆனால் அதைக் கேட்டு தந்தையை வருத்தப்பட வைக்க வேண்டாம் என்று நினைத்தான். அவனுமே பிரச்சனையை குழந்தைக்கு ஐந்து மாதம் முடிந்த பின் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தான்.



ஆனால் இரண்டாம் மாதமே அவர்களது நினைப் பிற்கு மீரா முற்றுப்புள்ளி வைத்தாள்.

அவள் சென்னைக்குத் திரும்பிச் செல்லப் போவ தில்லை என்றும் மீறி வற்புறுத்தினால் குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியேறி விடுவேன் என்றும் மிரட்டி னாள்.

அதைக் கேட்ட சந்துரு ஷ்யாம் அல்லது தாத்தாவிடம் நியாயம் கேட்கிறேன் என்று எகிறினான். அப்படி ஒன்று நடந்தால் தான் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டினாள்.

வீட்டை விட்டுச் செல்வேன், தற்கொலை செய் வேன் என்றெல்லாம் மிரட்டவும் அவளது தந்தையும், அண்ணனும் செய்வதறியாது திகைத்தனர். சிறு வயது தொட்டு மீராவின் பிடிவாதத்தைப் பார்த்தவர்கள் என்ப தால் அவளது பேச்சை மீறும் துணிவு அவர்கள் இருவருக் குமே இல்லை.

ஆனால் அவளது முடிவை ஏற்கவும் முடியாமல் கவலை அப்பிய முகத்தோடு வலம் வந்தவர்களைப் பார்க்க மீராவிற்கே சகிக்கவில்லை. அவர்கள் இருவரை யும் அழைத்துப் பேசினாள்.

''அப்பா, நீங்க ரெண்டு பேரும் இப்படி இருந்தால் எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்குப்பா.''

''நீ இப்படி இருக்கிறதைப் பார்த்தால் நாங்க மட்டும் சந்தோஷப்பட முடியுமா மீரா?'' என்று சந்துரு கேட் டதும்,

''இப்ப நான் என்னதான் செய்யணும் என்று எதிர் பார்க்கிறே?'' என்று எதிர்கேள்வி கேட்டாள்.

''உனக்கும் ஷ்யாமிற்கும் சரி வரலை என்றால் பேசாமல் விவாகரத்து...'' என்று சந்துரு தொடங்கவும்,

''சந்துருருரு...'' என்று தகப்பன், மகள் இருவருமே அலறினார்கள்.

''நான் இப்ப சொல்லுறதை நல்லா கேட்டுக்கோங்க. எங்களுக்குள்ளே பிரச்சனை இப்ப இல்லை... கல்யாணம் ஆன நாள் தொடங்கி இருக்கு. அது எங்க ரெண்டு பேருக்கு இடையில் இருப்பது. அதை நான் வெளியே சொல்ல விரும்பலை. ஆனால் இந்த ஜென்மத்திற்கு எனக்கு அவர் மட்டும் தான் கணவனாக முடியும். இந்த வாசகம் எனக்கும் மட்டும் அல்ல, அவருக்கும் பொருந்தும். அவருக்கும் இந்த ஜென்மத்தில் நான் ஒருத்தி மட்டும் தான் மனைவி. இதை நான் சொல்லலை. அவரே சொன்னார். அவரோ நானோ இந்த எண்ணத்தில் இருந்து மாறப் போறதில்லை'' என்று மீரா தீர்மானமாகச் சொன்னதும்,

''அப்படின்னா நீங்க சேர...'' என்று தொடங்கிய தந்தையை இடைமறித்தவள்,

''சேரலாம். சேராமலும் போகலாம். அது காலத்தின் கையில் இருக்கு. எந்த மனப் புண்ணையும் காலம் மாற்றும் என்று சொல்லுவார்கள். எங்களின் வாழ்க்கையை காலம் தீர்மானிக்கட்டும். நீங்க அமைதியா இருங்க. என்னையும் நிம்மதியா இருக்க விடுங்க.'' என்று முடித்துக் கொண்டாள்.

தனக்கு ஒரே கணவன் தான் என்று சொன்னதை விட, தன் கணவனும் வேறொரு பெண்ணை மணக்க மாட்டான் என்று உறுதியாகச் சொன்ன பெண்ணின் கூற்றில் மாணிக்கம் மகிழவே செய்தார்.



ஆனால் அதே சமயம் வீண் பிடிவாதம் பிடித்து இவர்கள் இருவரும் சேராமல் நாட்களை கடத்தி விடுவார்களோ என்றும் பயந்தார். குழந்தை அவர்களை இணைக்கும் பாலமாய் செயல்படக் கூடும் என்று நம்பினார்.

மகாலிங்கத்திடம் பிரச்சனை என்னவென்று போனிலாவது விசாரிப்போம் என்று தகப்பனும் மகனும் முடிவு செய்தனர். அதைக் கேட்டுக் கொண்டே சரியாக அந்த நேரம் அங்கே வந்த மீரா அவர்களை முறைத்துப் பார்த்துக் கொண்டே குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.

அவள் ஒரு ஆட்டோவில் ஏறிச் சென்றுவிட... மாணிக்கமும், சந்துருவும் அந்த ஜனசமுத்திரத்தில் அந்த ஆட்டோவை தொடர்ந்து விரட்டிச் சென்று கண்டு பிடித்து அவளை வீட்டிற்குக் கூட்டி வருவதற்குள் படாத பாடுபட்டனர்.

இனி ஒரு முறை தாங்கள் அவள் விஷயத்தில் தலையிடுவதில்லை என்று அவர்கள் இருவரும் சத்தியம் செய்த பின்பே மீரா வீட்டிற்குள் நுழைந்தாள்.

அதன் பின் வாழ்க்கை ஒரு இயந்திர கதியுடன் சென்றது.

மகாலிங்கம் மட்டும் மாதம் ஒரு முறை தவறாமல் தன் கொள்ளுப் பேத்தியைப் பார்க்க வந்து விடுவார். ஒரு சில மணி நேரங்களே அவர் மீராவின் வீட்டில் செலவழிப்பார். வரும் பொழுதெல்லாம் மாணிக்கத்திடம் மீராவின் செலவிற்கான பணத்தைக் கொடுத்துவிட்டுச் செல்வார்.

மாணிக்கம் முதலில் மறுத்துப் பார்த்தார்.

"நீயும் என்னைக் கொல்லாதே மாணிக்கம். அவங்க ரெண்டு பேரும் என் பேத்திங்க. அவங்களுக்கு நான் செலவு செய்யாமல் வேற யார் செய்வா? ஏற்கனவே என் சொத்தை மூணா பிரிச்சு ஷ்யாம் பேரில் ஒரு பங்கும், மீதியை இவங்க ரெண்டு பேர் பேரிலும் எழுதி வைச்சிட்டேன். அப்படி இருக்கும்போது நீ இந்தப் பணத்தை வாங்க மாட்டேன் என்று சொன்னால்..." என்று வருத்தப்பட்டு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொள்ளவும்.

மீராவின் தந்தைக்கு அதை வாங்குவதைத் தவிர வேற வழி இல்லாமல் போனது.

ஒவ்வொரு முறையும் மகாலிங்கத்துடன் ஷ்யாம் வரு வானோ என்று மீரா ஆவலுடன் எதிர்பார்ப்பான். ஆனால் மனதில் எழும் ஆவல் முகத்தில் தெரியா வண்ணம் மறைப்பாள்.

அதே போல் மகாலிங்கமும் மீரா தன் கணவனைப் பற்றி ஏதேனும் விசாரிப்பாளா என்று ஆவலாக எதிர் பார்ப்பார். மீரா ஷ்யாம் பற்றி விசாரிக்கும் தினம் அவனை எப்பாடுபட்டாவது தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என முடிவு செய்திருந்தார். ஆனால் அவள் ஒரு முறை கூட ஷ்யாம் பற்றி எந்தக் கேள்வியும் எழுப்ப வில்லை.

குழந்தை பிறந்து ஒரு வருடம் ஆன போது சந்துரு - தாரிகாவின் திருமணத்தை நடத்த மாணிக்கம் ஏற்பாடு செய்தார்.

திருமணப் பத்திரிகையை நேரில் சென்று மாப்பிள் ளைக்கு வைப்பதா வேண்டாமா என்று அவர் குழம்பிக்



கொண்டிருக்க... மீரா அங்குள்ள யாரையும் அழைக்க வேண்டாம் என்று சொல்லி விட்டாள்.

ஆனால் அடுத்த முறை கொள்ளுப் பேத்தியைப் பார்க்க வந்த மகாலிங்கத்திடம் மாணிக்கம் பத்திரி கையை நீட்டினார். வந்த இடத்தில் திருமணப் பத்திரிகை வைக்கிறார்களே என்று எண்ணாமல் மகாலிங்கம் பெருந் தன்மையாய் நடந்து கொண்டார்.

திருமணத்திற்கு மகாலிங்கம் மட்டும் தான் வந்தார். அதற்கும் ஷ்யாம் வரவில்லை. அது சரி இவர்கள் போய் அவனை அழைத்தார்களா என்ன?

தாரிகாவும், மீராவும் நன்றாகப் பேசிக் கொண்டார்கள். சந்துருவும், தாரிகாவும் மீராவின் பெண் மேல் பாசமாக இருந்தார்கள். ஆனால் அதற்கும் சோதனைக் காலம் வந்தது. அவர்களது திருமணம் ஆகி ஒரு வருடம் முடி யும் தருவாயில் தாரிகாவும் கருவுற்றாள்.

அதன் பின் தான் மீராவிற்கு பிறந்த வீட்டிலும் சோதனை கட்டம் தொடங்கியது.

தனக்கு ஒரு பிள்ளை உருவானதும் தாரிகா தன் பாச வட்டத்தை தன் கணவன், தன் குழந்தை என்று சுருக்கிக் கொள்ள விரும்பினாள்.

தாரிகா இல்லாத பொழுது தான் சந்துரு மீராவிடமும், அவள் குழந்தையிடமும் பாசமாகப் பழகினான். மனைவி யின் முன்னிலையில் ஒதுங்கிப் போனான். அவன் மீதும் தப்பில்லை.

ஒன்று பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். அப்படித் தீர்க்க முடியாத பட்சத்தில் இருக்கும் பிரச்சனையை

மேலும் வளர விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சந்துருவும் இரண்டாவது முறையைத் தான் பின்பற்றினான்.

என்ன செய்வது என்று புரியாமல் மீரா தடுமாறிக் கொண்டிருந்தாள். மாணிக்கமும் நடப்பவற்றை செய்வதறியாத பார்த்துக் கொண்டிருந்தார்.

வழக்கம் போல் மகாலிங்கம் தன் பேத்தியைப் பார்க்க மும்பை வர... அன்று மாணிக்கம் மாரடைப்பால் பாதிக்கப்பட்டார். அவரே மீராவின் தந்தையை மருத்துவமனையில் சேர்த்தார்.

மருத்துவர்கள் மகாலிங்கதிடம் வந்து, ''பிழைக்கிறது கஷ்டம்'' என்று சொல்லிச் சென்றார்கள்.

மகாலிங்கம் உள்ளே சென்று மீராவின் தந்தையிடம் பேசினார். அவர் 'மீரா' என்று கஷ்டப்பட்டு உச்சரிக்க... மீரா வரவழைக்கப்பட்டாள்.

மகளைப் பார்த்த அவளது தந்தை, அவள் புறமும் மகாலிங்கத்தின் புறமும் மாறி மாறி கை நீட்டினார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது மீராவிற்குப் புரிந்தது. தந்தை தன்னைக் கணவன் வீட்டிற்குச் செல்லச் சொல்கிறார் என்பது புரிந்தது. அது அவரின் கடைசி ஆசை என்பதை உணர்ந்த மீரா சரி என்னும் விதமாகத் தலை ஆட்டினாள்.

மாணிக்கத்தின் முகத்தில் அப்படி ஒரு பிரகாசம் வந்தது. அந்த நிறைவோடு அவரது ஆன்மாவும் பிரிந்தது.



# 10

மாணிக்கத்தின் காரியங்களெல்லாம் முடிந்த பின்... அதாவது அவர் இறந்து ஒரு மாதம் கழித்து மீராவையும், அவளது குழந்தையையும் சென்னைக்கு அழைத்துச் செல்ல மகாலிங்கம் வந்திருந்தார்.

மீராவிற்கு அவருடன் செல்வதில் இஷ்டமில்லை. தந்தையின் இறப்பிற்குக் கூட வராதவன் இருக்கும் வீட்டிற்குச் செல்வதா என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் பிறந்த வீட்டில் தான் ஒரு வேண்டாத சுமை ஆகி விட்டதும், தகப்பனின் கடைசி ஆசையை நிறைவேற்ற எண்ணியும் அவருடன் சென்னைக்குக் கிளம்ப அரை மனதாகச் சம்மதித்தாள்.

மகாலிங்கம் மீராவை அழைத்துப் பேசினார்.

''மீரா, உனக்கு இப்போ கூட சென்னைக்கு வருவதில் இஷ்டமில்லைன்னு எனக்குத் தெரியும். நான் உங்கிட்டே சில விஷயங்கள் சொல்லுறேன். அதுக்கு அப்புறமாவது உன்னால ஷ்யாமைப் புரிஞ்சுக்க முடியுதான்னு பாரு.

எனக்கு அந்தக் காலத்திலே இருபத்தியோரு வயசிலே கல்யாணம் பண்ணி வைச்சுட்டாங்க. ஷ்யாமோட அப்பா சுரேஷ் எங்களுக்கு ஒரே பையன். என் பையன் காலேஜ் முதல் வருஷம் படிக்கும்போது என் மனைவி நோய் வாய்ப்பட்டு இறந்து போனாள்.

என் பையன் காலேஜிலேயே போய் பாடத்தைத் தவிர மீதியெல்லாத்தையும் கத்துக்கிட்டு வந்தான். சிகரெட், தண்ணின்னு ஒண்ணு பாக்கிவிடாம எல்லாக் கெட்ட பழக்கமும் அவனிடம் இருந்துச்சு. அவன் காலேஜ் முடிச்சு வந்தபோது...

* * *

சுரேஷ் மகாலிங்கத்திடம் வந்து, ''அப்பா நான் இந்த வருஷத்தோட காலேஜ் முடிச்சிட்டேன். இனிமேல் நான் படிக்க வேண்டிய அவசியமில்லை. இனி ஜாலியா லைஃபை என்ஜாய் பண்ணப் போறேன்'' என்று அறிவித்தான்.

''சுரேஷ், படிப்பு முடிஞ்சிடுச்சு. சரி... எப்போ வேலைக்குப் போகப் போறே?''

''வேலைக்கா? நான் எதுக்குப்பா வேலைக்குப் போகணும்?''

''உனக்கு வெளியே போய் வேலை செய்யப் பிடிக்கலைன்னா நம்ம கம்பெனியிலே வேலைக்கு சேர்ந்துவிடு.''

''அப்பா என்ன விளையாடுறீங்களா? நம்ம கம்பெனிக்கு நான் தான் முதலாளி. அங்கே போய் நான் வேலை செய்யணுமா?''

''அப்படின்னா உன் பொறுப்பிலே சின்ன கம்பெனி ஒன்னை ஆரம்பிச்சுத் தரேன். அதை நீ சரிவரச் செஞ்சதும் நேரா என் சேரில் வந்து உட்கார்ந்துவிடு.''

''நீங்க என்னப்பா என்னை வேலைக்குப் போகச் சொல்றதிலேயே குறியா இருக்கீங்க. நான் உங்களுக்கு



ஒரே பிள்ளை. நீங்க சம்பாதிச்சு வைச்சதையெல்லாம் அனுபவிக்கப் பிறந்தவன்.''

மகனது பேச்சைக் கேட்ட மகாலிங்கம் 'இவன் என்ன இப்படிச் சொல்கிறான்!' என்று அதிர்ந்தார்.

''அப்போ என்னதான்டா செய்யுறதா உத்தேசம்?''

''நான் கல்யாணம் பண்ணப் போறேன்?''

''என்னது கல்யாணமா? உனக்கு இருபத்தோரு வயசு தான்டா ஆகுது!'' என்று அதிர்ந்து விழித்தவரிடம்,

''உங்களுக்குக் கல்யாணம் ஆனபோது என்ன வயசு?'' என்று சுரேஷ் நக்கலாகக் கேட்க,

''அந்தக் காலமும் இந்தக் காலமும் ஒண்ணாடா?'' என்று கேட்டார்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் என் கூடப் படிச்ச சுமாவை லவ் பண்ணுறேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கல்யாணம் பண்ணி வைங்க. ஏன்னா சுமாவுக்கு அப்பா, அம்மா கிடையாது. அவ அவளோட மாமா வீட்டிலே இருக்காள். அவளால ரொம்ப நாள் அங்கே இருக்க முடியாது'' என்று சொல்லி விட்டுச் சென்றான்.

மகன் மனசு மாறுவான் என்று மகாலிங்கம் காத்திருக்க... அவன் தன் பிடியிலே உறுதியாய் இருந்தான். மகாலிங்கம் தான் தன் மனதை மாற்ற வேண்டியதாகிப் போனது.

கல்யாணம் பண்ணி வைத்தாலாவது பொறுப்பாய் மாறுவான் என நினைத்து அவரும் மகனது திருமணத்தை முடித்து வைத்தார்.

'கொடுமை கொடுமைன்னு கோவிலுக்குப் போனால் அங்கே ரெண்டு கொடுமை ஜிங்கு ஜிங்குன்னு ஆடுச் சாம்!' என்ற பழமொழிக்கு ஏற்ப மகனைக் காட்டிலும் மருமகள் பொறுப்பில்லாதவளாக இருந்தாள்.

கல்யாணம் ஆகி முதல் வருடத்திலேயே ஷ்யாம் பிறந்தான். மகனும், மருமகளும் தன் சொத்தை அழித்து விடுவார்கள் என்று பயந்த மகாலிங்கம், தனது சொத்தை தன் காலத்திற்குப் பின் பேரன் ஷ்யாமைச் சென்றடைய வேண்டும் என்று உயில் எழுதினார். அவர்கள் இரு வருக்கும் மாசம் இவ்வளவு என்று செலவிற்கு மட்டும் பணம் தந்தார்.

குழந்தையையும் கவனிக்காமல் அவர்கள் ஊர் சுற் றினர். இளம் வயதில் விதவையான கமலாவை பேர னைப் பார்த்துக் கொள்வதற்காக மகாலிங்கம் ஏற்பாடு செய்தார்.

ஷ்யாம் கமலாவின் பொறுப்பில் வளர அவனது பெற்றோர் இருவரும் பொறுப்பில்லாமல் அலைந்தனர். ஷ்யாமிற்கு இரண்டரை வயதானது.

ஒரு நாள் அலுவலகத்தில் இருந்து வந்த மகாலிங் கத்திடம் ஷ்யாம், ''தாத்தா நீ ஆபீஸ் போய்க்கினு வந் துட்டியா? உனக்கு சாயா வேணுமா? இட்லி துன்னுறியா?'' என்று கேட்டான்.

மகாலிங்கம் ஆடிப் போனார். கமலாவிடம் வளரும் குழந்தைக்கு கமலாவின் பாஷை தானே வரும்?

அடுத்த இரண்டு தினங்கள் பேரனை ஊன்றிக் கவனித்ததில் அவனது செய்கைகள் அனைத்துமே



கமலாவிடம் இருந்து கற்றுக் கொண்டதாக இருக்க... மகாலிங்கம் நொந்து போனார்.

பணக்கார மகாலிங்கத்தின் பேரன் குடிசைவாசிகள் போல் நடப்பதும், பேசுவதும் என்றால்... அவரால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

அதை அவனது பெற்றோரின் கவனத்திற்கு கொண்டு சென்றார். அவர்கள் அதைக் கண்டு கொள்ளவில்லை என்று தெரிந்ததும் பேரனை போர்டிங் ஸ்கூலில் சேர்த் தார்.

அப்பா, அம்மா, தாத்தா என்று உறவுகளின் மத்தியில் வளர வேண்டிய பச்சிளங் குழந்தையான ஷ்யாம் எல்.கே.ஜி.யிலேயே விடுதியில் சேர்க்கப்பட்டான்.

அலுவலகத்தையும் கவனித்துக் கொண்டு, மாதம் ஒரு முறையாவது விடுதிக்கும் சென்று பேரனை மகா லிங்கம் பார்த்து வருவார். சுரேஷும், சுமாவும் அதையும் செய்ய மாட்டார்கள்.

வருடங்கள் செல்லச் செல்ல விடுமுறைக்குக் கூட ஷ்யாம் வீட்டிற்கு வரவில்லை.

அவன் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது மஞ்சள் காமாலை நோய் அவனைத் தாக்கியது. அதனால் ஷ்யாமை விடுதியில் இருந்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

கண்கள் எல்லாம் மஞ்சள் நிறமாக மாறியிருக்க எதையுமே சாப்பிட முடியாமல் பிள்ளை சோர்ந்து போய் படுத்திருந்தான். அவனால் வெறும் பழச்சாறு மட்டுமே பருக முடிந்தது.

சுமாவும், சுரேஷூம் ஒரு நாளும் மகனிடம் பாசமாய் பேசியது கிடையாது. விடுமுறை இல்லாத காலத்தில் அவன் வீட்டில் என்ன செய்கிறான் என்று கமலாவிடம் விசாரித்தார்கள்.

கமலா அவனுக்கு வந்த நோய் பற்றி எடுத்துக் கூறியதும் ஓ என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டனர். அருகில் கூட வந்து பார்க்கவில்லை. அவர்கள் ஊர் சுற்றுவதற்கென்று வெளிநாடு கிளம்பியது தெரிந்ததும் "இப்படிக் கூட மனுஷ ஜென்மங்க இருப்பாங்களா?" என்று கமலா தான் பொரிந்து தள்ளினாள்.

பத்து நாளில் பத்து கிலோ எடை குறைந்து பரிதாப மாக நின்ற ஷ்யாமைப் பார்த்து பெறாத கமலா தான் கண்ணீர் விட்டாள். பத்து நாளும் ஷ்யாம் தன் அறை யிலே பொழுதைத் தனிமையில் கழித்தான். விடுதியில் தனியாய் வளர்ந்தவனுக்கு அந்தத் தனிமை பெரிதாகத் தெரியவில்லை.

அவனுக்கு நோய் குணமாகி விடுதிக்குச் செல்லும் வரைக்கும் கூட அவனது பெற்றோர் தங்கள் வெளி நாட்டுப் பயணத்தில் இருந்து திரும்பவில்லை. மகா லிங்கம் வெறுத்துப் போனார்.

ஷ்யாமிற்கு பன்னிரெண்டாம் வகுப்பு முழு ஆண்டு பொதுத் தேர்வு நடந்து கொண்டிருக்கும் போது சாலை விபத்தில் சுரேஷூம், சுமாவும் இறந்து போனார்கள்.

ஷ்யாமிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. 'அப்படியா?' என்று மட்டும் கேட்டவன் மறுநாள் தனக்குத் தேர்வு இருக்கிறது என்று குறிப்பிட்டு, தன்னால் வர முடியாது என்று சொல்லிவிட்டான்.



மகாலிங்கமும், 'தன் மகனும், மருமகளும் ஷ்யாமின் பெற்றவர்களாய் இதுவரை எந்தக் கடமையை சரியாகச் செய்திருக்கிறார்கள்? இப்போது பேரன் வந்து கொள்ளி போடும் கடமையைச் செய்வதற்கு?' என்று நினைத்தார்.

'இப்படிப்பட்ட ஜென்மங்களெல்லாம் அநாதையாய் போய்ச் சேர வேண்டியது தான். ஆனால் எனக்குப் பெத்து வளர்த்த கடமை இருக்கே? அந்தக் கடமையினால் அதை யும் நானே செய்யுறேன்' என்று சொல்லி அவர்களது இறுதிச் சடங்கை மகாலிங்கம் நிறைவேற்றினார்.

* * *

பேரனது இளமைப் பருவத்தில் நடந்தவற்றை மீராவிடம் சொல்லிக் கொண்டிருந்த மகாலிங்கம், "என் பையன் தொழிலை நல்லா பார்த்துக்கிட்டு இருந்தான் என்றால் நான் என் பேரன் பக்கத்திலே இருந்து கவனிச் சிக்கிட்டு இருந்து இருப்பேன். என் மனைவியும் உயி ரோட இல்லாமல் என்னால தனியா வீட்டையும், தொழி லையும் பார்த்துக்க முடியலை. அதனால பாதிக்கப் பட்டது ஷ்யாம் தான்.

ஆனால் என் பேரன் படிப்பிலே ரொம்ப கெட்டியா இருந்தான். எல்லாத்திலேயும் ஃபர்ஸ்ட் ஃபாரின் வரை போய் படிச்சிட்டு வந்தான். அப்படி இருந்தும் எந்தக் கெட்டப் பழக்கத்துக்கும் ஆளாகாமல் இருந்தான் என்று சந்தோஷப்பட்டேன்.

ஆனால் எங்கிருந்தோ இந்த கார் ரேஸ் பைத்தியம் ஒட்டிக்கிட்டது. நீயே சொல்லு மீரா... எனக்கு இருக்கிற ஒரே சொந்தம் அவன் தான். அவனுக்கு ஏதாச்சும் ஒண்ணு நடந்துச்சுன்னா..." என்று சொன்னவர் கண் மூடி அமைதி யாக இருக்க,

மீரா அவரது கைப் பிடித்து தட்டிக் கொடுத்து ஆறுதல் அளிக்க முயன்றாள்.

தனது கண்களைத் திறந்தவர், ''அதான் அவனைக் கட்டுப்படுத்த நான் தற்கொலை பண்ணிக்குவேன் என்று மிரட்டினேன். அதுக்குப் பின்னாடி தான் அவன் கார் ரேஸ் பத்திப் பேசாமல் இருந்தான். உன்னைப் பார்த்ததும் எனக்கு உன்னை ஷ்யாமுக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்ன்னு ஆசையா இருந்துச்சு.

நான் ஷ்யாம்கிட்டே பேசினேன். அவனுக்குக் கல்யாணம் பண்ணிக்கிறதிலே இஷ்டம் இல்லைன்னு சொல்லிட்டான். நான் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். அவன் கேட்கலை. நான் கார் ரேஸுக்குப் போகக் கூடாதுன்னு சொன்னீங்க தானே? அப்போ நான் உங்க பேச்சைக் கேட்டேன் இல்ல... இப்போ என் பேச்சை நீங்க கேளுங்கன்னு சொன்னான்.

அவன் அப்படிச் சொன்னதும் தான் என்ன சொல்றோம்ன்னு பெரிசா ஆராய்ச்சி பண்ணாமல் நீ கல்யாணம் பண்ணி குழந்தைப் பெத்துக்கிட்டால் நான் உன்னை ரேஸுக்கு அனுப்புறேன் ஷ்யாம் என்று சொன்னேன்.

ஒரு குடும்பம், பிள்ளை குட்டின்னு ஆனதுக்கு பின்னாடி அவன் அது பற்றி மறந்து போவான் என்று நம்பி தான் மீரா அப்படி ஒரு கண்டிஷன் போட்டேன். ஆனால் என்னால நீங்க ரெண்டு பேரும் இவ்வளவு கஷ்டப்படுவீங்கன்னு நினைக்கலை'' என்று சொல்லும் போது அவரது கண்களில் இருந்து கண்ணீர் வடிய ஆரம்பித்தது.

எழுபத்தியைந்து வயதான பெரியவர் குழந்தையாய் மாறி தன் முன்னால் கண்ணீர் விடுவதைப் பொறுக்க



முடியாமல் மீரா அவரிடம், ''போதும் தாத்தா. அழாதீங்க. கஷ்டமா இருக்கு. வாங்க நாம கிளம்புற வேலையைப் பார்ப்போம்'' என்று சொன்னாள்.

தனது தந்தையின் இறப்பிற்குக் கூட வரவில்லை என்று ஷ்யாம் மேல் கோபத்தில் இருந்த மீரா, 'அவரோட அப்பா, அம்மா சாவுக்கே போகாதவர் என்னோட அப்பா சாவுக்கு மட்டும் எப்படி வருவார்? அவங்க அப்பா மாதிரி எங்கப்பா ஷ்யாமை ஒதுக்கி வைக்கலை தான் என்றாலும் ரொம்பவும் ஒட்டியும் பழகவில்லை தானே!' என நினைத்துத் தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

ஷ்யாமின் இளமைப் பருவ கதையைக் கேட்ட பின் கணவனின் மீதிருந்த கோபம் கொஞ்சம் குறைந்தது என்பதால் ஓரளவிற்கு விருப்பத்துடனே சென்னை செல்லக் கிளம்பினாள்.

அவளது முகத்தில் தெரிந்த தெளிவைக் கண்ட மகாலிங்கம் 'ஒரு வேளை ஷ்யாமின் இளமைப் பருவக் கதையை முன்பே கூறி இருந்தால் அவர்களது பிரிவு தவிர்க்கப்பட்டிருக்குமோ!' என்று எண்ணினார்.

'காலம் கடந்து ஏற்படும் ஞானோதயத்தால் என்ன பயன்?' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டார்.

# 11

மகாலிங்கம் மீராவுடனும் தன் இரண்டரை வயது கொள்ளுப் பேத்தியுடனும் விமானத்தில் சென்னை வந்து இறங்கினார்.

மீரா தன் மகள் அவளது முதல் விமான பயணத்தை ரசித்து மகிழ்வதைப் பார்த்து, 'இவளது வளமான வாழ்க்கையைக் கெடுப்பதற்கு நான் யார்?' என்று நினைத்துக் கொண்டாள்.

வீடு நெருங்க நெருங்க கணவனை எதிர்கொள்ளப் போகும் தயக்கத்துடனும், படபடப்புடனும் மீரா வந்தாள். அவள் எதிர்பார்த்ததிற்கு நேர்மாறாக அவன் வீட்டில் இல்லை.

இவர்கள் வீட்டை அடையும் பொழுது மதியம் இரண்டு மணி. விமானத்திலேயே சாப்பிட்டு விட்டபடியால் வீட்டிற்குள் நுழையும் முன்பே குழந்தை தூங்கி விட்டாள்.

மீரா அவளை தாத்தாவின் அறையில் படுக்க வைத்தாள். மகாலிங்கம் அவளது பெட்டிகளையெல்லாம் ஷ்யாமின் அறைக்குக் கடத்தினார். அவரும் ஓய்வு எடுப்பதாகச் சொல்லி அவரது அறைக்குள் நுழைந்து விட்டார்.

மீரா வந்திருப்பதைக் கேள்விப்பட்ட கமலம்மா அவுட் ஹவுஸில் இருந்து ஓடி வந்தார்.

''மீராம்மா வந்துட்டியா? எப்படி இருக்கே? குழந்தையைக் கூட்டி வந்திருக்கியா?'' என்று ஆவலுடன் கேட்டதும் மீராவிற்கு சந்தோஷமாக இருந்தது.

'எப்படியும் தன் கணவன் தன்னை இவ்வளவு சந்தோஷத்துடன் வரவேற்கப் போவதில்லை. தன்னையும் இந்த வீட்டில் ஒரு ஜீவனை ஆசையாய் வரவேற்கிறதே!'' என நினைத்து சந்தோஷம் அடைந்தாள்.



அப்பொழுது தான் கமலாவின் பேச்சை மீரா கூர்ந்து கவனித்தாள். இந்த முப்பது வருடத்தில் அவரது பேச்சு கொஞ்சம் மாறியிருப்பது அவளுக்குப் புரிந்தது. தாத்தா சொன்ன அளவிற்கு மோசமில்லை என்று எண்ணிக் கொண்டாள்.

''நீங்க எப்படி இருக்கீங்க? குழந்தையைக் கூட்டி வந்து இருக்கேன் கமலம்மா. தாத்தா ரூமிலே தூங்குகிறாள். இனிமேல் இங்கே தான் இருப்பேன்'' என்றாள்.

''உங்க அப்பா இறந்துட்டாராமே? பெரிய ஐயா சொன்னார். அதுக்கு அப்புறமா தான் உனக்கு இங்கே வர மனசு வந்துச்சா?''

''அப்படியெல்லாம் இல்லை கமலம்மா. என்னமோ இங்கே வரது அப்படியே தள்ளிப் போச்சு.''

''நீ ரொம்ப நல்லவள்ன்னு நினைச்சேன் மீராம்மா. ஆனா நீயும் நம்ம தம்பியோட அம்மா மாதிரி இப்படி இருந்துட்டியே கண்ணு.''

'பொறுப்பில்லாத சுமாவோட என்னை ஒப்பிடுவதா?' என்று மீராவிற்கு கோபம் வந்தது.

''ஏன் உங்க ஷ்யாம் தம்பி வந்து பார்க்க வேண்டியது தானே? ஒரு நாளாச்சும் அவர் பொண்ணை வந்து பார்த்தாரா?'' என்று மீரா கேட்டதும், கமலம்மா அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

''எப்படி வரணும்ன்னு நீ எதிர்பார்க்கிறே? அதுவே பாவம் அடிபட்டு நடக்க முடியாமல் இருந்துச்சு.''

''யாரு நடக்க முடியாமல் இருந்தது?'' என்று விழித்துக் கொண்டே மீரா கேட்க.

'என்ன இந்தப் பொண்ணு இப்படிக் கேட்குது?' என்று அவளுக்கு மேல் விழித்துக் கொண்டே கமலா, ''நம்ம ஷ்யாம் தம்பி தான்'' என்றார்.

''அவரா? அவருக்கு அடிபட்டுச்சா? இது எப்போ?'' என்று திகைத்துப் போய் கேட்ட மீராவிடம்,

''என்னம்மா இப்படிக் கேட்கிறே? ரெண்டு வருஷத்துக்கு மேலா தம்பி படுக்கையிலே தானே கிடந்தார்'' என்று கமலம்மா சொன்னவுடன்,

மீராவிற்கு உலகம் சுற்றியது. அப்படியே தரையில் அமர்ந்து விட்டாள். கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடி கன்னங்களை நனைக்க ஆரம்பித்தது.

''ரெண்டு வருஷமாவா? எப்படி ஆச்சு? எனக்குத் தெரியாதே!''

''ஐயோ! உனக்குத் தெரியாதா? நம்ம பெரிய ஐயா உன்கிட்டே சொல்லலையா?''

பெரிய ஐயா என்று கமலம்மா சொன்னவுடன் மீரா விருட்டென்று எழுந்து தாத்தாவின் அறைக்கு ஓடினாள்.

, வழியும் கண்ணீருடன் தன் அறைக்குள் நுழைந்த பேரன் மனைவியை நிமிர்ந்து பார்த்த மகாலிங்கத்தின் அருகே வந்தவள்,

''ஏன் தாத்தா அவருக்கு அடிபட்டதை என்கிட்டே சொல்லாமல் மறைச்சீங்க?'' என்று பொங்கி வந்த அழுகையுடன் கேட்டாள்.

''இங்கே உட்காரும்மா!'' என்று அருகில் இருந்த நாற்காலியைக் காட்டி அவளை அதில் அமரச் சொன்னார்.



அவள் அதில் அமர்ந்ததும், ''யாரு சொன்னா? கமலாவா?'' என்று கேட்டார்.

''அவங்க சொல்லலை தாத்தா. ஏன் உன் புருஷனைப் பார்க்க வரலைன்னு என்னைக் குற்றம் சாட்டினாங்க.''

''நீ அப்போவே வந்திருந்தா உன் பொண்ணைக் குறை சொல்லியிருப்பாங்க. உன் பொண்ணு பிறந்த நேரம் தான் அவ அப்பாவைப் படுக்க வைச்சிருச்சுன்னு. போகட்டும் விடு'' என்று சொன்னவர் நடந்ததைச் சொல்ல ஆரம்பித்தார்.

''உனக்குக் குழந்தை பிறந்த அன்னைக்கு சாயங்காலம்... ரேஸ்க்கு அனுமதி கிடைச்ச சந்தோஷத்தில் ஷ்யாம் பைக்கை வேகமாக ஓட்டி இருக்கான். ரோடில் ஆக்ஸிடென்ட் ஆகி... அடிபட்டு ஹாஸ்பிட்டலில் சேர்த்தோம். டாக்டர்களெல்லாம் அவன் பிழைப்பது கஷ்டம்ன்னு சொல்லிட்டாங்க.

உன்கிட்ட சொல்லவா வேண்டாமான்னு எனக்குள்ளே நிறைய குழப்பம். நீயும் ஹாஸ்பிட்டலில் இருப்பதால் உடனே உன்கிட்டேயும் விஷயம் சொல்ல வேண்டாம் என்று தீர்மானித்தேன். நீ ஹாஸ்பிட்டலில் இருந்து வீட்டுக்குக் கிளம்பும் முன்னால் அவன் உயிருக்கு ஆபத்தில்லைன்னு டாக்டர்கள் சொல்லிட்டாங்க. ஆனால் எழுந்து நடப்பது கஷ்டம்ன்னு சொன்னாங்க.

முதுகுத் தண்டு வடத்திலே நல்ல அடி. காலில் மல்டிபிள் பிராக்சர்ஸ். நிறைய தடவை அறுவை சிகிச்சை செஞ்சாங்க. ரெண்டு வருஷத்துக்கும் மேலா படுக்கையிலே தான் எல்லாம். பாவம் ரொம்ப கஷ்டப்பட்டான். இப்போ தான் ரெண்டு மாசமா நடக்க ஆரம்பிச்சிருக்கான்.''

சிறிது நேரம் அமைதியாக வீற்றிருந்தவள், ''அவருக்கு ஆக்சிடென்ட் நடந்தது எந்த பேப்பரிலும் வரலையா? எப்படி எங்க அப்பாக்குத் தெரியாமல் போச்சு? நான் தான் படுத்துக் கிடந்தேன். ஆனால் எங்க அப்பா...'' என்றதும்.

''இல்லைம்மா. அவன் தன்னோட பைக்கிலே போகலை. அந்த பைக்கிலே இருந்து கிடைச்ச டிரைவிங் லைசன்ஸை வைச்சு போலீஸ் தப்பா தகவல் கொடுத்திட்டாங்க. மறுநாள் பேப்பரில் அந்த பிரண்டோட பேர் தான் வந்தது. போலீஸுக்கு விஷயம் தெரிஞ்ச பின்பும் நான் தான் என் பேரன் பேர் வெளியே வராமல் பார்த்துக்கிட்டேன். அவன் படுத்த படுக்கையாகிட்டான் என்ற விஷயம் வெளியே தெரிஞ்சால் பிசினஸ் பாதிக்கப்படும் மீரா. அதனால அவன் வெளிநாடு சென்று இருக்கான் என்று சொல்லி தான் நிறைய நாள் சமாளித்தேன்.''

'ஓ! அது தான் எங்களுக்கு விஷயம் தெரியாமலே போயிடுச்சா?' என்று நினைத்து பெருமூச்சு விட்டவள், ''எங்ககிட்டே நீங்க சொல்லி இருக்கலாம் தாத்தா'' என்று வருத்தத்துடன் மொழிந்தாள்.

''என் வாழ்க்கையைக் கெடுத்துட்டீங்களேன்னு அன்னைக்கு என்னை குறை சொன்னே! இவன் எழுந்து நடப்பானா இல்லையான்னு தெரியாமல் உன்னையும் கஷ்டப்படுத்தணுமான்னு தோணுச்சு. நீ என்னைப் பார்த்து உங்க பேரனுக்கு நர்ஸ் வேலை பார்க்க நான் தான் கிடைச்சேனா என்று கேட்டு விடுவாயோன்னு பயந்து போய் தான் சொல்லலை.



அவனைப் பத்தி நீயோ, இல்லை உன்னைப் பத்தி அவனோ விசாரிச்சால் உங்க ரெண்டு பேரையும் ஒன்னு சேர்த்திருப்பேன். ஆனால் கடைசி வரை ரெண்டு பேருமே வைராக்கியமா இருந்துட்டீங்களேம்மா.

இப்பவும் உன் அப்பா சொல்லலை என்றால் நீ நம்ம வீட்டுக்கு வந்திருக்க மாட்டாய். உன் அப்பா செய்ததைத் தான் நானும் செய்வதாக இருந்தேன். அதாவது... நீங்க ரெண்டு பேரும் சேரணும் என்பது தான் எனது கடைசி ஆசை என்று என் உயிலில் குறிப்பிட்டு இருக்கேன். என் பேரன் அதை மீற மாட்டான் என்று நினைத்தேன். ஆனால் அதற்கு அவசியமில்லாமல் உங்கப்பா முந்திக்கிட்டார்'' என்ற ஆற்றாமையுடன் சொன்னார்.

மீராவிற்கு மகாலிங்கத்திடம், 'கணவனின் இக்கட்டான நேரத்தில் பணிவிடை செய்வது ஒரு மனைவியின் கடமை. அந்தக் கடமையை நான் செய்ய மாட்டேன் என்று நீங்களா எப்படி என்னைப் பற்றி ஒரு முடிவுக்கு வரப் போச்சு?' என்று கேட்டு சண்டை போடணும் போல் தான் இருந்தது.

ஆனால் இந்த இரண்டரை வருடங்களில் தொழிலையும் கவனித்து, பேரனுக்காக மருத்துவமனையிலும் துணை இருந்து... இது பற்றாது என்று மாதா மாதம் எங்களைப் பார்க்க மும்பை வந்து... இந்த வயதான காலத்தில் இவர் எங்களுக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார். நானும் என் வார்த்தைகளால் நோகடிக்கக் கூடாது' என்று முடிவெடுத்தாள்.

என்னைப் பார்க்க வரவில்லையே என்று இத்தனை நாளா எத்தனை முறை நான் அவரைத் திட்டியிருப்பேன்.

அவருக்கு உடல்நிலை குணமடைய வேண்டும் என்று கோயிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணுவதை விட்டு அவரை மனதுக்குள் அர்ச்சித்து வந்திருக்கிறேன். நான் மட்டுமா? என் குடும்பமும் தான் என்று நினைத்த பொழுது.

''அப்பாகிட்டே சொன்னீங்களா தாத்தா?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

''உங்கப்பாக்கு ஹார்ட் அட்டாக் வந்து ஹாஸ்பிட்டலில் இருந்தப்போ தான்மா சொன்னேன். உன்னைப் பத்தி ரொம்பக் கவலைப்பட்டார். அப்போ தான் ஷ்யாம் பத்தி சொன்னேன். அவனுக்கு அடிபட்டது வருத்தமா இருந்தாலும் வலுவான காரணம் இருக்கப் போய் தான் ஷ்யாம் உன்னைத் தேடி வரலைன்னு உன் அப்பாக்கு சந்தோஷம் தான் மீரா'' என்றார்.

'அவரது உயிர் பிரியும் முன் என் வாழ்க்கை குறித்து நம்பிக்கை அவருக்குக் கண்டிப்பா வந்திருக்கும்' என நினைத்து மீரா சந்தோஷமடைந்தாள்.

அவரது அறையில் இருந்து வெளியேறி மாடியில் உள்ள தங்களது அறைக்குள் சென்றாள். இரண்டரை வருடங்களுக்குப் பின் தங்களது அறைக்குள் நுழைந்ததும் அவளையும் அறியாமல் ஒரு சிலிர்ப்பு அவளுக்குள் ஓடியது.

அறையைச் சுற்றி வந்தாள். எப்பொழுதுடா கணவனைக் காண்போம் என்ற ஆவல் அதிகரித்தது.

மீரா சந்துருவின் கைப்பேசிக்கு அழைத்தாள்.

''ஹலோ மீரா பத்திரமா போய் சேர்ந்துட்டீங்களா?''



''அண்ணா...'' என்றவளுக்கு துக்கத்தில் பேச்சே எழும்பவில்லை.

''மீரா, என்னாச்சு? மாப்பிள்ளை ஏதாச்சும் திட்டினாரா? என்ன விஷயம்?'' என்று சந்துரு பரிதவித்துப் போனான்.

ஒருவாறு தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ''நான் இன்னும் அவரைப் பார்க்கலைண்ணா, அவருக்கு...'' என்று தாத்தா சற்று முன் சொன்ன விஷயத்தைத் தெரிவித்தாள்.

''ஐயோ ஆக்ஸிடென்டா? நமக்கு இது தெரியாமல் போச்சே மீரா. உன் கல்யாண சமயத்திலே என் பிரண்டு ஒருத்தன் கிட்டே தான் ஷ்யாமோட குணத்தைப் பத்தி விசாரிச்சேன். அவன் ஒரு நாள் ஷ்யாம் என்று தொடங்கினான். நான் தான் ஷ்யாம் பத்தி எதுவும் பேசாதேன்னு சொல்லி அவன் வாயை அடைச்சிட்டேன். ஒருவேளை இதைத் தான் சொல்ல வந்தானோ என்னவோ? நான் இப்பவே அங்கே கிளம்பி வந்து மாபிள்ளையைப் பார்க்கிறேன்'' என்று சந்துரு சொன்னான்.

ஷ்யாமின் மனநிலை தெரியாமல் சந்துரு இங்கு வர வேண்டாம் என்று நினைத்த மீரா,

''இல்லைண்ணா. நீ நேரிலே வரவேண்டாம். இப்போ தான் நல்லாகிடுச்சாமே! நானே அவரை நைட் தான் பார்ப்பேன். அதனால நீ நாளைக்கு அவருக்குப் போன் பண்ணி விசாரிச்சுக்கோ. அப்புறம் அண்ணா...'' என்று தயங்கியவள்,

''சும்மா சொல்லு மீரா'' என்று சந்துரு சொன்னதும்,

''ஒருவேளை அவர் சரியா பதில் சொல்லலை என்றால் எனக்காக மன்னிச்சிடு'' என்று சொன்னாள்.

"சரிம்மா" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்த சந்துருவின் மனம் நிறைந்திருந்தது. தங்கையின் மனம் கணவன் புறம் சாய ஆரம்பித்து விட்டது என்பதால் அவனுக்கு தங்கையின் எதிர்கால வாழ்க்கை குறித்து சிறிது நம்பிக்கை வந்தது.

மீரா தான் மும்பையில் இருந்து கொண்டு வந்திருந்த பெட்டிகளில் உள்ள துணிகளை வெளியே எடுத்து பீரோவில் அடுக்கி வைக்க ஆரம்பித்தாள்.

மகாலிங்கம் தூங்கி எழுந்த கொள்ளுப் பேத்தியை சமையலறைக்கு அழைத்து வந்து, "உனக்குச் சாப்பிட என்ன தேவைன்னாலும் இவங்ககிட்டே கேளு. இவங்க தான் கமலம்மா" என்று சொல்லி கமலாவிடம் அறிமுகப் படுத்தினார்.

கமலா அந்தக் குழந்தையின் கன்னம் கிள்ளி முத்தம் கொடுத்தார்.

சரி என்று தலையாட்டிய பேத்தியிடம், "உங்கம்மா மாடியிலே இருக்காள் போ" என்று அனுப்பி வைத்தார்.

மீரா தங்களது அறைக்குள் நுழைந்த மகளின் கை கால்களைக் கழுவிவிட்டு வேறு உடை அணிவித்து தலை வாரி கீழே அனுப்பி வைத்தாள்.

இது தான் உன் தந்தையின் வீடு என்று அவள் தன் மகளிடம் சொல்லவில்லை. அவன் சும்மாவே ஒரு முசுடு. குழந்தையிடம் எப்படி நடந்து கொள்வானோ என்ற பயமே அதற்குக் காரணம்.

மகாலிங்கமும் ஷ்யாமிடம், தான் மீராவையும் குழந்தையையும் அழைத்து வருவது பற்றி தகவல் தெரிவிக்கவில்லை.



# 12



ஆறு மாதமாக படுக்கையில் அமர்ந்த வண்ணம் ஷ்யாம் அலுவலக வேலைகளைப் பார்த்து வந்தாலும் கடந்த ஒரு மாதமாகத்தான் அலுவலகம் சென்று வருகிறான். அன்று ஆறு மணி போல் ஷ்யாம் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பினான்.

வீட்டிற்குள்ளே நுழைந்த ஷ்யாம் வரவேற்பறையில் சுவாதீனமாய் அமர்ந்து தொலைக்காட்சியில் கார்ட்டூன் சேனலைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் குழந்தையைப் பார்த்து புருவம் உயர்த்தினான்.

அந்தக் குழந்தை ஆகாய நீல வண்ணத்தில் பிராக் அணிந்து இருந்தாள். தோள் வரை வளர்ந்திருந்த அவளது பட்டுப் போன்ற கேசத்தில் அதே நிறத்தில் கிளிப் செருகி இருந்தாள். முட்டைக் கண்களும், குண்டுக் கன்னங்களுமாகப் பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தாள்.

'யார் இந்தக் குழந்தை? வீட்டிற்கு யாராவது விருந்தினர் வந்திருக்கிறார்களா?' என்று தனது பார்வையை வீட்டைச் சுற்றி சுழல விட்டான். அங்கே யாரும் வந்ததற்கான எந்த ஒரு அடையாளமும் காணப்படவில்லை.

'வழி மாறி வந்தது போலவும் தெரியவில்லையே! வழி மாறி இருந்தால் குழந்தை மருண்ட பார்வை பார்க்குமே! இங்கே அதுவும் இல்லை. உட்கார்ந்திருக்கும் தோரணையைப் பார்த்தால் சொந்த வீட்டில்

அமர்ந்திருப்பது போல் அல்லவா இருக்கிறது!' என்று எண்ணிக் கொண்டே,

அவளது அருகே சென்ற ஷ்யாம், ''யார் நீங்க? யாரைப் பார்க்க வந்து இருக்கீங்க?'' என்று கேட்டான்.

பார்த்துக் கொண்டிருந்த நிகழ்ச்சியில் இருந்து கண்ணைத் திருப்ப மனமே இல்லாமல்... தன் அருகில் கேட்ட குரலால கவனம் கலைக்கப்பட்டு அவள் திரும்பிப் பார்க்க...

உயரமும், அதற்கேற்ற பருமனுமாய் தன்னருகே நின்று கொண்டிருந்த ஷ்யாமைப் பார்த்துக் கொஞ்சமும் பயப்படாமல், ''உங்களுக்கு என்ன வேணும்? எதுக்கு என்னை டிஸ்டர்ப் பண்ணுறீங்க?'' என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு கேட்டாள்.

அவள் தன் முகத்தைச் சுளித்துக் கொண்டு கேட்ட விதத்தில் ஷ்யாமிற்கு சிரிப்பு வந்தது.

ஒரு புன்முறுவலுடனே, ''சாரி. நான் உன்னை டிஸ்டர்ப் பண்ண விரும்பலை. ஆனால் உங்களுக்கு யார் வேணும்? யாரைப் பார்க்க வந்து இருக்கீங்க?'' என்று அவன் மீண்டும் அதே கேள்விகளைக் கேட்க...

அவனை ஒரு விசித்திரப் பார்வை பார்த்தவள், ''இது எங்க தாத்தா வீடு. உங்களுக்கு என்ன வேணும்?'' என்று அவனையே திருப்பிக் கேட்டாள்.

ஷ்யாமிற்கு அவளது தோரணையும், கேள்வியும் வியப்பைத் தந்தது. 'இதப் பாருடா இந்தக் குட்டியை! என் வீட்டிலே உட்கார்ந்து கொண்டு என்னையே அதிகாரம் பண்ணுவதை!' என்று நினைத்தவன்,



''இது என்னோட தாத்தா வீடு'' என்று அழுத்திச் சொன்னான்.

அவனது மகளோ அவனை மேலிருந்து கீழாக ஒரு பார்வை பார்த்தாள். அவளது பார்வையில் தனக்குப் பரிச்சயமான சாயல் தெரியக் கண்டு ஷ்யாம் குழம்பி னான். 'எங்கேயோ பார்த்திருக்கிறேனே!' என்று தனது நினைவலைகளைத் தட்டி எழுப்ப முயற்சித்தான்.

அதுவரை தந்தையும், மகளும் என்ன பேசுகிறார்கள் என்பதை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த மகாலிங்கம் ஒன்றும் தெரியாதவரைப் போல் அவர்கள் அருகே வந்து நின்றார்.

''தாத்தா இது என் வீடு தானே?'' என்று அவரது கொள்ளுப் பேத்தி அவரைப் பார்த்துக் கேட்டாள்.

''ஆமாடா குட்டி. உன்னோட வீடு தான்'' என்று அவரும் அதை ஆமோதிக்க...

''எப்போதிருந்து தாத்தா?'' என்று ஷ்யாம் அவரைப் பார்த்து ஆச்சரியமாகக் கேட்க,

''என்ன எப்போதிலிருந்து?'' என்று ஒன்றும் அறியாத வரைப் போல் மகாலிங்கம் நடிக்கவும்,

''இந்தக் குழந்தை உங்க பேத்தியாகவும், இந்த வீடு அவளோடதாகவும் மாறிய கதையைத்தான் கேட்கிறேன்'' என்று அவன் படு நக்கலாகக் கேட்டான்.

'நான் உனக்கே தாத்தாடா!' என்பது போல் அவரும் சற்றும் சளைக்காமல், ''அவ பிறந்ததில் இருந்தே என்னோட பேத்தி தான். என் சொத்தெல்லாம் அவளுக்கு இல்லாமல் வேறு யாருக்குடா?'' என்றார்.

"சரி நீங்க எப்படியோ போங்க. ஒழுங்கா கேட்டால் பதில் சொல்ல மாட்டீங்க" என்று சொல்லிக் கொண்டே அந்த இடம் விட்டு நகர எத்தனிக்க...

அந்த சமயம் பார்த்து அவனது மகள் மகாலிங்கத் திடம், "இது யாரு தாத்தா?" என்று கேட்டாள்.

அவர் தன் பேரன் முகத்திலேயே தன் பார்வையைப் பதித்தவாறே, "இவர் தான் உன் டாடிடா குட்டி" என்றார்.

அவ்விடம் விட்டு நகர நினைத்தவன் சரேலெனத் திரும்பி அவரை ஏறிட்டான். அவனது முகத்தில் இருந்த அவனது மன உணர்வுகளை அந்த முதியவரால் கண்டு பிடிக்க முடியவில்லை.

அவன் தன் உணர்ச்சிகளை வெளியே காட்டாது பாறை போன்ற முகத்துடன் இருந்தான்.

அவனது மகளோ முகமெல்லாம் சந்தோஷம் பொங்க, "என் டாடியா? ஷ்யாம் டாடியா?" என்றாள்.

'நமக்கு இந்தக் குழந்தையையும் தெரியவில்லை. அவள் பெயரும் தெரியவில்லை. ஆனால் அவளுக்கு நம்ம பேராவது தெரிந்திருக்கிறது. பரவாயில்லை' என்று நினைத்தவன்,

"உன் பேர் என்ன?" என்று மகளைப் பார்த்துக் கேட்டான்.

"தியா டாடி" என்று உற்சாகமாய் சொன்னவள் அவன் அருகே செல்ல ஆரம்பித்த சமயம்,

"ஓ! அப்படியா?" என்று சொல்லிக் கொண்டே அவன் மாடிப்படி நோக்கி நகர்ந்தான்.

குழந்தையின் பூ முகம் நொடியில் வாடியது.



அதை உணராதவனாய் அவன் மாடிப்படிகளில் ஏற ஆரம்பித்தான். மீரா மேல்படியில் நின்று கொண்டு அவனது புறக்கணிப்பையும், மகளது வாட்டத்தையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள்.

அவன் மேலே ஏறி வர வர அவளது இதயத் துடிப்பு அதிகரிக்க ஆரம்பித்தது. மகளது வாட்டம் கூட மனதை விட்டுத் தற்காலிகமாக மறைந்தது.

இரண்டரை வருடங்கள் கழித்து கணவனைக் கண்டதும் மனம் முழுவதும் அவனே நிறைந்திருப் பதைக் கண்டு மீரா அதிசயித்தாள். மேனிக்குள் ஒரு சிலிர்ப்பு ஓடியது. அவளால் நின்ற இடத்தில் இருந்து அசையக்கூட முடியவில்லை. தனது பார்வையைக் கணவன் முகத்தில் இருந்து பிரித்தெடுக்கவும் முடிய வில்லை.

'இத்தனை நாள் இவரைப் பாராமல் நாம் எங்கி இருக் கிறோமோ? இல்லையென்றால் ஏன் அவரைக் கண் டதும் நமக்குள் இத்தனை மாற்றம்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

'இதே அவரைப் பார். அன்றும் இன்றும் மாறாமல் அப்படியே உணர்ச்சியில்லாமல் இருக்கிறார். கொஞ்ச மாவது நம்மைப் பார்த்து ஆச்சரியப்படுகிறாரா பாரு!' என்று மனதுக்குள் கணவனை அர்ச்சித்தவள்,

அவன் அருகே வந்ததும் அவனது சட்டைக் காலரைக் கொத்தாகப் பிடித்து, 'ஏன்டா இத்தனை நாளா என் னையும், உன் பொண்ணையும் பார்க்க வரவேயில்லை? ஏன் உனக்கு நடந்த விபத்தைக் கூட என்னிடம் தெரிவிக்கவில்லை?' என்று உரிமையுடன் அவளுக்குச் சண்டை போட வேண்டும் போல் தான் இருந்தது.

ஆனால் அவள் அதைச் செய்யவில்லை. அவனைக் கண்டதில் அவளது குரல் கூட தடைபட்டுப் போய் இருந்தது.

அருகே பார்க்கும் போது அவன் முன்பை விட மெலிந்திருப்பது கண்ணில் பட தனது தொண்டையைக் கமறி சரி செய்து கொண்டு, ''எப்படி இருக்கீங்க? ஆக்ஸிடெண்ட் ஆகி நடக்க முடியாமல் இருந்தீங்களாமே!'' என்று கேட்டாள்.

அவளது குரலில் அவன் மீதான அக்கறை, பாசம், காதல் என அனைத்தும் வெளிப்பட்ட போதும்...

அதை எதையும் உணராதவனாய், ''இப்போ நல்லா இருக்கேன். தாங்க்ஸ் ஃபார் ஆஸ்கிங்'' என்று கூறி அவளைத் தாண்டிச் சென்றான்.

'எனக்கு அடிபட்ட போது என் மனைவியாய் என் னருகே இருக்காமல் இத்தனை நாள் என்ன செய்தாய்?' என்று அவன் தன்னைப் பார்த்துக் கேட்க மாட்டான் என்பது அவள் எதிர்பார்த்ததே.

ஆனால் இப்படி, 'நீ விசாரித்ததற்கு நன்றி!' என்று சொல்லிச் செல்வான் என்று எதிர்பார்க்காததால் அதிர்ந்து போய் நின்றாள்.

இப்பொழுது செல்லும் அவனையே ஏக்கத்துடன் பார்ப்பது அவள் முறையானது. அவன் அறைக்குள் சென்று மறைந்ததும் தனது பார்வையைத் திருப்பினாள்.

அப்பொழுது தான் மகளின் ஏமாற்றம் நிறைந்த முகம் நினைவிற்கு வந்தவளாக அவளிடம் விரைந்தாள்.

'இதற்குத்தான்... இவன் இப்படி விட்டேற்றியாக நடந்து கொள்வான் என்பதற்காகத்தான் நான் இத்தனை



நாளும் என் பெண்ணிடம் அவள் தந்தையைப் பற்றி எதுவும் சொல்லாமல் இருந்தேன்' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

படியிறங்கி வந்தவளிடம், ''என்னம்மா மீரா! உன் பொண்ணுகிட்டே ஒண்ணும் கேட்காமல் போறான் என்று வருத்தப்படுறியா?'' என்று மகாலிங்கம் கேட்டார்.

''தாத்தா, அவர் என்னையும் பெருசா விசாரிக்கலை. தன் ரத்த சொந்தமான பொண்ணையும் சரியா விசாரிக்கலை. அவருக்கு எல்லோரும் ஒண்ணு தான் என்று நினைக்குறப்போ... அவரால் எப்பவும் ஏமாற்றம் அடையும் ஒரு மனைவியா நான் சந்தோஷப்படுறேன். ஆனால் என் பொண்ணு வாடி நிற்குறதைப் பார்க்குறப்போ ஒரு அம்மாவா வருத்தப்படுறேன்'' என்று சொன்னவள் மகளிடம் சென்று அவளைத் தன் மடியில் இருத்திக் கொண்டு அவளை அணைத்துக் கொண்டாள்.

தாயிடம் ஒன்றிய தியாவிடம் மகாலிங்கம், ''தியா குட்டி, ஏன் முகம் வாடி இருக்கீங்க? என்னாச்சு'' என்று விசாரித்தார்.

'ஏன் உங்களுக்குத் தெரியாதா?' என்பது போல் உஷ்ணப் பார்வை பார்த்த மீராவைக் கண்டு கொள்ளாது அவர் மீண்டும் தன் கொள்ளுப் பேத்தியிடம் அதே கேள்வியைக் கேட்டார்.

''எங்க டாடிக்கு என்னைப் பிடிக்காதா தாத்தா?'' என்று பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டு தியா கேட்டதும் மீரா தன் கண்களை இறுக மூடித் தன் துன்பத்தை அடக்கினாள்.

"ஏன் குட்டி அப்படிக் கேட்கிறே?"

"அவர் ஏன் என்கிட்டே நின்னு பேசாமல் போயிட் டார்?"

மகாலிங்கமோ குழந்தையின் கேள்வியில் யோசனை யில் ஆழ்ந்தார்.

'எப்படியும் மீரா தன்மானம், சுயகவுரவம் என்ற போர்வையில் ஷ்யாமிடம் நெருங்கப் போவதில்லை. ஆனால் அது போன்ற உணர்வுகளெல்லாம் குழந்தைக்கு ஏது? இவர்கள் இருவரையும் தியாவை வைத்துத் தான் வழிக்குக் கொண்டு வரவேண்டும்' என்று முடிவு செய்தார்.

அதனால் அவர் தியாவிடம், "இதை ஏன் நீ உன் டாடியைப் பார்த்துக் கேட்கலை? அவனிடமே கேளு" என்று சொல்லிக் கொடுத்தார்.

அறைக்குள் சென்ற ஷ்யாம் ஐந்து நிமிடத்தில் தனது முகம், கை, கால் கழுவி வேறு உடை அணிந்து கீழ்தளம் வந்தான்.

அவன் வரவேற்பறையில் உள்ள சோபாவில் அமர்ந் ததும் மீரா அவனுக்கு காபி எடுத்து வரச் சென்றாள். அவன் தொலைக்காட்சியில் செய்தி சேனல் ஒன்றை வைத்துப் பார்க்க ஆரம்பித்தான்.

மகாலிங்கம் தியாவிடம், 'போய் கேளு!' என்று சைகை செய்தார்.

அவளும் மெல்ல ஷ்யாமின் முன்னே சென்று நின்று, "ஏன் டாடி! உங்களுக்கு என்னைப் பிடிக்காதா?" என்றாள்.



அவளது குரலில் ஏக்கமும்... அவளது முகத்தில் என்னைப் பிடிக்கும் என்று சொல்வாய் தானே என்ற எதிர்பார்ப்பும் இருப்பதைக் கண்டவன் என்ன சொல்வ தென்று சில நொடிகள் கண் மூடி யோசித்தான்.

பின் அந்தப் பிஞ்சுக் குழந்தையின் கள்ளமில்லா முகத்தைப் பார்த்தவன், "நீ டாடிக்கு ஒரே பொண்ணு தானே? உன்னைப் பிடிக்காமல் போகுமா?" என்று கேள்வி எழுப்பினான்.

அவன் சொன்ன பதில் புரியாத திறுசில் நின்று கொண்டிருந்த குழந்தையிடம், "உன்னை அப்பாக்குப் பிடிக்கும்" என்று நேரடியாகச் சொன்னான். அவனையும் அறியாமல் அவனது கை அவளது கேசத்தை வருடிக் கொடுத்தது.

மொட்டாய் குவிந்திருந்த தியாவின் முகம் மலர்ந்து விரிந்தது. சோபாவில் ஏறி அவனது கன்னத்தில் முத்தம் பதித்து, "தாங்க்ஸ் டாடி" என்று சொன்னாள்.

அந்த பிஞ்சு இதழ்களின் ஸ்பரிசம் அவனை ஒரேடி யாக மெய் சிலிர்க்க வைக்கவில்லை என்றாலும்... அவளது மலர்ச்சியும், நன்றி அறிவிப்புடன் கூடிய முத்தமும் ஷ்யாமின் மனதில்... ஒரு ஓரத்தில் ஒரு சிறு மாற்றம் விளைவித்தது நிஜம்.

தந்தைக்கு முத்தம் கொடுத்த அடுத்த நொடி மகாலிங் கத்தின் புறம் திரும்பியவள், "தாத்தா, எங்க டாடிக்கு தியாவைப் பிடிக்குமாம்" என்று சந்தோஷத்துடன் கூவி னாள்.

அந்தச் செய்தியை தன் தாயிடம் தெரிவிப்பதற்காக அடுக்களை நோக்கி ஓடினாள்.

கணவனுக்கு காபி தயாரித்துக் கொண்டிருந்த மீராவின் காதில் அவன் கூறியது தெளிவாக விழுந்தது.

அதைக் கேட்டதும் அவள் மனதில், 'எப்போதிலிருந்து?' என்ற கேள்வியும், அவளது இதழ்களில் இகழ்ச்சிப் புன்னகையும் ஒருங்கே பிறந்தன.

# 13



அடுக்களைக்குள் ஓடி வந்த தியா தன் தாயிடம் தனது சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டதும் மீரா தன் மனதை மறைத்தவளாய், "என் தியா குட்டியை யாருக்காச்சும் பிடிக்காமல் போகுமா? அவள் ஸ்மார்ட் பேபியாச்சே!" என்றாள்.

தாயின் கூற்றில் மேலும் மகிழ்ந்தவளாய் தியா மீராவைக் குனியச் செய்து அவளது கன்னத்திலும் ஒரு முத்தம் பதித்தாள்.

தியா அங்கிருந்த கமலாவிடம், "கமலம்மா எனக்குப் பசிக்குது. சாப்பிட ஏதாச்சும் தாங்க." என்று கேட்டுக் கொண்டு அடுக்களையிலேயே தங்கிவிட... மீரா காபியை எடுத்துக் கொண்டு வரவேற்பறை நோக்கிச் சென்றாள்.

மீரா கொடுத்த காபியை ஒரு தாங்க்ஸ் சொல்லி வாங்கிக் கொண்ட ஷ்யாமிடம் அவனது தாத்தா. "உன் பொண்ணை உனக்கு நிஜமாவே பிடிக்குமா ஷ்யாம்?



எப்போதிலிருந்து?" என்று மீரா சற்று முன் தன் மனதில் நினைத்த கேள்வியைக் கேட்டார்.

"உண்மையைச் சொல்லணும்ன்னா அவளை நான் இன்னைக்கு தான் முதன் முதலாப் பார்க்கிறேன். அதனால அவளை எனக்குப் பிடிக்கும் பிடிக்காதுன்னு எப்படிச் சொல்ல முடியும்?"

"அப்புறம் எப்படி உன்னைப் பிடிக்கும்ன்னு சொன்னே? பொய் சொன்னியா ஷ்யாம்?" என்று அவர் நம்ப முடியாத ஆச்சரியத்துடன் கேட்க...

"அதுக்காக உண்மையை அப்படியே அந்தக் குழந்தையிடம் சொல்ல முடியுமா? பாவம் இல்லையா?" என்று கேட்டவன் தொலைக்காட்சியில் மூழ்கி விட்டான்.

'வியாபார விஷயத்தில் மட்டும் தான் நான் பொய் சொல்வேன். வீட்டில் எக்காரணம் கொண்டும் பொய் சொல்ல மாட்டேன் என்று சொல்பவனின் வாயில் இருந்து பொய்யா?' என்று மீராவும், மகாலிங்கமும் அதிசயித்துப் போனார்கள்.

ஷ்யாம் என்னும் இரும்பு வளைகிறதா?

தியா ஒரு தட்டு நிறைய முறுக்குகளுடன் அடுக்களையில் இருந்து வந்தாள். வந்தவள் நேராக ஷ்யாமின் அருகே சென்று சோபாவில் அமர்ந்தாள்.

"உங்களுக்கு வேணுமாப்பா?" என்று கேட்டுக் கொண்டே தட்டை அவனிடம் நீட்ட... அவன் வேண்டாம் என்று மறுத்தான்.

"ஏன் உங்களுக்கு முறுக்கு பிடிக்காதா? அப்போ என்ன பிடிக்கும்?" என்று ஆரம்பித்தவளின் பேச்சு

தனக்குப் பிடித்தது, பிடிக்காதது என்று எல்லாவற்றையும் சுற்றி வந்தது.

'மகள் பேசுவதைக் கணவன் பொறுமையுடன் கேட்பானா? இல்லை முகத்தில் அறைந்ததைப் போல் எதையாவது சொல்லி விடுவானா?' என்று மீரா பதைப்புடன் நின்று கொண்டிருந்தாள்.

அதனால் ஒரு கட்டத்தில் அவளே மகளிடம், ''தியா போதும். அப்பாவை தொந்தரவு பண்ணாதே. அவர் ஆபீஸில் இருந்து டயர்டா வந்திருப்பார். மீதிக் கதையை அப்புறமா பேசலாம்'' என்றாள்.

மீராவின் பேச்சைக் கேட்டவள் அப்படியா என்பதைப் போல் தந்தையின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க...

அவனோ, ''உனக்கு வாய் வலிக்கலையா? நீ பாட்டுக்குத் தொடர்ந்து பேசிக்கிட்டே இருக்கே!'' என்றான்.

எனக்கு வாய் வலிக்கவில்லை என்பதை அவள் தன் தலையை அசைத்து வேக வேகமாக மறுக்கவும்,

''ஆனால் அப்பாக்கு காது வலிக்கும். அதனால மீதிக் கதையை நாளைக்குச் சொல்லுறியா?'' என்றான்.

சரி என்று ஆமோதித்த தியாவின் முகம் ஒரேடியாக வாடவில்லை என்றாலும் அதில் சிறிது ஏமாற்றம் தென்படவே செய்தது.

அதைக் கண்ட மீரா அவளைத் தூக்கிக் கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள். அங்கே தியா தன் தாயுடன் ஓடிப் பிடித்து விளையாடியதில் அவளுக்குத் தந்தையின் நினைவும், அவன் தந்த ஏமாற்றமும் மறைந்து தான் போனது.



இரவுச் சாப்பாட்டிற்குப் பின் அவர்கள் மூவரும் மாடிக்குச் சென்றனர்.

''டாடி உங்க ரூம் ரொம்பப் பெருசா இருக்கு'' என்று தியா சொன்னதும் அவன் புன்முறுவல் புரிந்தான்.

''இது இனிமே தியா ரூமும் தானே?'' என்று ஷ்யாமைப் பார்த்துக் கேட்டு, அவள் தன் உரிமையை நிலை நாட்ட முயன்றாள்.

''நீ இந்த ரூமிலே தான் இருக்கப் போறேன்னா இது உன் ரூமும் தான்'' என்று அவன் சொன்னதும்,

''நான் இங்கே தான் தூங்கப் போறேன்'' என்று சொன்னவள் மீராவிடம் திரும்பி,

''ஹைய்யா ஜாலி! அம்மா பாரு! தியா ரூம் எவ்ளோ பெருசு!'' என்று தன் கண்களை உருட்டிக் கைகளை விரித்துச் சொன்னவள் அங்கே தனியாக இருந்த குட்டிப் படுக்கை அருகே சென்று அங்கு வைத்திருந்த தலையணை, போர்வை என எல்லாவற்றையும் பார்வையிட்டாள்.

அதில் டோரா, புஜ்ஜி படங்களைப் பார்த்தவளுக்கு சந்தோஷம் தாங்கவில்லை.

''டாடி, உங்களுக்கும் டோரா பிடிக்குமா?'' என்று அவனிடம் ஆவலே உருவாகக் கேட்டாள்.

அவனோ மிகத் தீவிரமாக, ''உங்க அம்மா பேரு மீரா தானே? அது யாரு டோரா?'' என்றான்.

மீரா அவனைப் பார்த்து முறைக்க... அவன் ஏன் அவள் புறம் திரும்புகிறான்?

''உங்களுக்கு டோரா தெரியாதா? பேக் பாக், புஜ்ஜி...'' என்று அவள் ஒவ்வொன்றாக அடுக்கவும்,

''இவங்கெல்லாம் யாரும்மா? உன் பிரண்ட்ஸா?'' என்று அவன் அப்பாவியாய் கேட்டதும்,

தியா தன் காலைத் தரையில் உதைத்துக் கொண்டு, ''அப்பா, அதெல்லாம் கார்ட்டூன்ப்பா'' என்று கடுப்புடன் சொன்னாள்.

''ஓ! கார்ட்டூனில் வருவாங்களா? அதுக்கு எதுக்கு நீ டென்ஷன் ஆகுறே! எனக்கு அவங்களையெல்லாம் தெரியாது. இப்போ எதுக்கு அவங்களைப் பத்திக் கேட்கிறே?''

''இந்த பெட்ஷீட்டிலே அந்தப் படம் இருக்கு. நீங்க வாங்கினீங்களா?''

''நான் வாங்கலை. தாத்தா வாங்கியிருப்பார்.''

அப்பாவும், மகளும் பேசிக் கொண்டிருக்க... எங்கே படுப்பது என்று தெரியாமல் மீரா குழம்பிப் போய் நின்று கொண்டிருந்தாள். முன்பு மாதிரி கணவன் அருகே தூங்குவதா? இல்லை மகள் அருகிலா? மக ளோட படுக்கை சிறியதாக இருந்தது. அதனால் கண்டிப் பாக அதில் இரண்டு பேர் தூங்க முடியாது என்று அவள் சிந்தித்துக் கொண்டிருக்க,

அப்பொழுது தியா, ''அம்மா இதிலே டோரா படமெல் லாம் போட்டிருக்கு. இந்த பெட் எனக்குத் தான். நீங்க டாடி கூட படுத்துக்கோங்க. அது தான் பெருசா இருக்கே!'' என்று தாயைப் பார்த்துச் சொன்னவள்,

தந்தையிடம், ''அப்பா, அம்மாக்கு கொஞ்சம் ப்ளேஸ் குடுங்க!'' என்று சிபாரிசு வேறு செய்தாள்.

சரி என்று சொல்லி ஒரு ஓரமாக அமர்ந்து ஷ்யாம் எகனாமிக்ஸ் டைம் புத்தகத்தில் மூழ்கினான். மீரா



படுக்கையின் மற்றொரு ஓரத்தில் படுத்துக் கொண்டு தூங்கினாள்.

காலையில் கண் விழித்துப் பார்க்கும் பொழுது ஷ்யாம் மீராவின் மீது தன் கையைப் போட்டுக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான்.

கணவனின் முகத்தை மிக அருகில் பார்த்த மீரா, அன்று ஹெல்மெட் போட்டிருந்ததால் முகத்திற்கு எந்த சேதமும் ஏற்படவில்லை போல. முதுகுத் தண்டுவடம் மற்றும் கால்களில் தான் நல்ல அடி என்று நேற்று தாத்தா சொன்னார். அந்த இடங்களில் தான் அறுவை சிகிச்சை நடந்ததற்கான தழும்புகள் இருக்கும். அதைப் பார்க்க வேண்டும். ஆனால் என்னவென்று இவரிடம் கேட்பது? தயக்கமும், குற்ற உணர்வும் அவளை ஷ்யாமிடம் இது குறித்துப் பேசவிடாமல் தடுத்தது.

# 14

அன்று காலைச் சாப்பாட்டிற்குப் பின் ஷ்யாம் வழக்கம் போல் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் அலுவலகம் செல்வதற்கு வாசலில் காலை வைக்க...

''டாடி...'' என்ற அலறல் சத்தம் அவனை மேலே நடக்க விடாமல் தடுத்தது.

''என்ன தியா?'' என்று கேட்டுக் கொண்டே அவன் திரும்பிப் பார்க்க,

அவனருகில் ஓடி வந்த தியா, ''எங்கே போறீங்க?'' என்று கேட்டாள்.

'எதற்குக் கேட்கிறாள்? நானும் கூட வருவேன் என்று சொல்லுவாளோ?' என்ற குழப்பத்துடனும், பயத்துடனும், ''ஆபீஸ் போறேன்'' என்றான்.

''ஏன் தியாகிட்டே சொல்லாமல் போறீங்க?''

'இது என்னடா வம்பாப் போச்சு! இதுவரைக்கும் நான் என் தாத்தாகிட்டேகூட சொல்லிட்டுப் போனதில்லை. கல்யாணத்துக்குப் பின்னாடி இவ அம்மா இதே கேள்வியை கேட்டபோதும் அவளிடம் சொல்லிவிட்டுப் போகும் பழக்கத்தை நான் ஏற்படுத்திக்கலை. மூணு வயசு கூட ஆகாத இவகிட்டே நான் சொல்லிட்டுப் போகணுமா? எல்லாம் என் நேரம்!' என்று நினைத்துக் கொண்டவன் ஒன்றும் சொல்லாமல் நகர ஆரம்பிக்க..

தியா ஓடிச் சென்று அவன் கால்களைக் கட்டிக் கொண்டு, ''பை சொல்லிட்டுப் போங்க.'' என்றாள்.

''எனக்கு ஆபீஸுக்கு டைம் ஆகுது. என் காலை விடு'' என்று சொன்னவன், மீரா அல்லது தாத்தா யாராவது கண்ணில் படுகிறார்களா என்று தன் பார்வையை ஓட்டினான்.

ஒருவரும் தென்படவில்லை. எப்படித் தென்படுவார்கள்? அவர்கள் இருவரும் தான் தாங்கள் இருக்கும் இடத்தில் மறைவாக நின்று கொண்டு நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்களே!

''தியா விடு'' என்று ஷ்யாம் தன் குரலை உயர்த்திச் சொல்ல,

''நீங்க பை சொல்லுங்க. அப்போ தான் விடுவேன். வெளியே போனால் தியாகிட்டே பை சொல்லணும். உங்களுக்கு இது கூடத் தெரியாதா?'' என்று தந்தையின் பிடிவாத குணம் தனக்கும் உண்டு என்பதை தியா காட்டினாள்.



வேறு வழியில்லாமல், ''அப்பா ஆபீஸ் போயிட்டு வரேன். பை'' என்று சொன்னதும்,

அவன் கால்களை விடுவித்தவள், ''பை. டாட்டா'' என்று தன் பிஞ்சுக் கை விரித்து அவனுக்கு டாட்டா காட்டினாள்.

மகாலிங்கமும், மீராவும் தியாவை மனதில் மெச்சிக் கொண்டனர்.

மீரா கேட்டுக் கொண்டபடி அன்று பகலில் சந்துரு ஷ்யாமை அழைத்துப் பேசினான். ஷ்யாம் அவன் கேட்ட கேள்விகளுக்கு உரிய பதிலைத் தந்தான். அவமதிப்பாய் எதுவும் சொல்லவில்லை.

அடுத்த நாள் ஷ்யாம் அலுவலகத்திற்குச் செல்லும் பொழுது மகளிடம் சொல்லிக் கொள்ளாமலே செல்ல முயல...

அவன் முன்னே வந்த தியா தன் இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு, ''உங்களுக்கு ஒரு தடவ சொன்னா புரியாதா? தினம் சொல்லணுமா?'' என்று தன் தாய் அவனை மிரட்டும் வார்த்தைகளைக் கொண்டு தந்தையை மிரட்டினாள்.

ஷ்யாமிற்கு அவளது செய்கையும், வார்த்தைகளும் புன்முறுவலை வரவழைத்தது.

முறுவலித்துக் கொண்டே, ''அம்மா தாயே! போயிட்டு வரேன்'' என்று சந்தோஷமாக அலுத்துக் கொண்டே விடைபெற்றான்.

அடுத்து வந்த இரு நாட்களுமே தியா வந்து கேட்ட பின்பே அவளிடம் சொல்லிவிட்டு விடைபெற்றான்.

ஆனால் ஐந்தாவது நாள் தானே முன் வந்து தியாவிடம், ''அப்பா ஆபீஸ் போயிட்டு வரேன்'' என்று அவள் கேட்கும் முன்பாகச் சொன்னான்.

''வெரி குட்!'' என்று மகளது பாராட்டைப் பெற்றுக் கொண்டு சிரிப்புடனே அலுவலகம் சென்றான்.

அதே போல் முதல் வாரம் முழுவதும் மாலை வீடு திரும்பியதும் கடனே என்று மகள் கூறும் கதைகளைத் தள்ளி நின்று கேட்டுக் கொண்டிருந்தவன் அடுத்த வாரத்தில் அவளது அருகில் அமர்ந்து கேட்கும் நிலைக்கு மாறினான்.

மூன்றாவது வாரத்தில் இருந்து மகளைத் தன் மடியில் அமர்த்திக் கொண்டு அவளைப் பேச வைத்துக் கேட்க ஆரம்பித்தான். நான்காவது வாரம் தானும் தன்னுடைய அனுபவங்களை மகளிடம் பகிர ஆரம்பித்தான்.

அப்பா, மகள் உறவைப் பொறுத்த வரையில் அவனிடம் நாளுக்கு நாள் நல்ல முன்னேற்றம் தெரிந்தது.

ஆனால் மீராவைப் பொறுத்த வரை... அவன் அவளை நெருங்கவும் இல்லை. விலக்கவும் இல்லை.

ஆனால் இரண்டரை வருடங்களுக்கு முன்பிருந்த நிலையில் சிறிது மாற்றம் தென்பட்டது என்று தான் சொல்ல வேண்டும். சிறு முன்னேற்றமாக மகளிடம் விடைபெறும்போது மனைவியைப் பார்த்து தலையாட்டிவிட்டுச் செல்ல ஆரம்பித்தான். மகளிடம் அவளது தாய் பற்றி ஒன்றிரண்டு பேச்சு அவனது வாயில் இருந்து வரும்.



ஒரு நாள் மீரா சமையலறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். தியா அங்கே அமர்ந்து கொண்டு பிளாஸ்டிக்கினால் ஆன ஆங்கில எழுத்துக்களை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தாள்.

அப்போது அங்கு வந்த மகாலிங்கம், ''தியா குட்டி, என்ன பண்ணுறீங்க?'' என்று கேட்டார்.

''தியா இங்கிலீஷ் லெட்டர்ஸ் படிக்கிறாள்'' என்று அவள் சொன்னதும்,

''தியாக்கு லெட்டர்ஸ் தெரியுமா? இன்னும் ஸ்கூலுக்கே போகலையே! அப்புறம் எப்படித் தெரியும்?'' என்று மகாலிங்கம் ஆச்சரியமாகக் கேட்டார்.

''அம்மா சொல்லித் தந்தாங்க'' என்று தாத்தாவைப் பார்த்துச் சொன்னவள், ''அம்மா என்ன லெட்டர் எடுக்கணும்?'' என்று தாயைப் பார்த்துக் கேட்டாள்.

மீரா, ''எஸ் (S)'' என்று சொன்னதும் தியா அந்த எழுத்துக் குவியலில் இருந்து அதைத் தேடி எடுத்துக் கொண்டு போய் ஃபிரிஜ்ஜில் ஒட்டினாள்.

அந்த எழுத்துக்களின் பின்னே சிறு காந்தம் ஒட்டப்பட்டிருந்தது. அதனால் அது ஃபிரிஜ்ஜில் ஒட்டிக் கொண்டது.

''அம்மா கரெக்ட்டா?'' என்று தியா கேட்டதும்,

திரும்பிப் பார்த்த மீரா, ''கரெக்ட் குட்டிம்மா. இப்போ டி (D) எடுங்க'' என்றாள்.

மகாலிங்கம் மீராவைப் பார்த்து, ''பரவாயில்லையே. நல்லா டிரைன் பண்ணியிருக்கே.'' என்றார்.

அவரைப் பார்த்து முறுவலித்துக் கொண்டே, ''இது தான் தாத்தா விளையாட்டின் மூலம் கல்வி. ஒரு வாரம்

முழுசும் நாலு லெட்டர் மட்டும் வைச்சுப் பழக்கினேன். அடுத்த வாரம் இன்னொரு நாலு லெட்டர் சேர்த்துக்குவேன். அப்படியே இருபத்தாறு லெட்டரையும் பழக்கிட்டேன்'' என்றாள்.

''அப்போ எழுதக்கூடக் கத்துக் கொடுத்து இருக்கியா?''

''இல்லை தாத்தா. அவளுக்கு பென்சில் பிடிக்கிற வயசா என்ன? சும்மா கண் முன்னாடி பார்க்கிற படமெல்லாம் என்னவென்று சொல்லித் தருவேன். அது மனசிலே ஏறினால் போதும்'' என்று சொன்னவள் அவரது முகத்தையே பார்த்துக் கொண்டு நிற்க,

''சொல்லும்மா... என்ன விஷயம்? என்னிடம் என்ன சொல்ல விரும்புறே?'' என்று மகாலிங்கம் எடுத்துக் கொடுத்ததும்,

''இவளை விஜயதசமி அன்று பிரி.கே.ஜி.யில் சேர்க்கலாம்ன்னு பார்க்கிறேன். தினமும் ஒரு ரெண்டு மணி நேரம் அவ வயசு பிள்ளைங்களோட பொழுதைப் போக்கிட்டு வரட்டுமே! எந்த ஸ்கூலில் சேர்க்கலாம்ன்னு...'' என்று இழுக்கவும்,

''அவ்வளவு தானே! கவலையை விடு. என் பேத்தியை ஸ்கூலில் சேர்ப்பது என் பொறுப்பு'' என்று சொல்லிவிட்டார்.

## 15



மகாலிங்கம் தான் சொன்னபடி விஜயதசமி அன்று தியாவை பள்ளியில் சேர்த்தார். முதல் வாரம் தியா உற்சாகமாகவே பள்ளிக்குச் சென்றாள்.



''எனக்கு மூணு பிரண்ட்ஸ் கிடைச்சிருக்காங்க... எங்க மிஸ் தியாவை குட் கேர்ள் சொன்னாங்க... புது ரைம்ஸ் சொல்லவா...'' என்று எதையாவது சொல்லிக் கொண்டு உற்சாமாகவே வளைய வந்தாள்.

ஆனால் அடுத்த வாரத்தின் முதல் நாளான திங்கட்கிழமை அன்று பள்ளிக்குச் செல்ல மாட்டேன் என்று அடம் பிடித்தாள்.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் திங்கட்கிழமை பள்ளிக்குச் செல்ல மறுப்பது சிறு குழந்தைகளின் இயல்பே என்று மீரா எண்ணியதற்கு நேர் மாறாக தியாவின் மறுப்பிற்கான காரணம் அமைந்தது.

''எல்லாரும் அவங்க டாடி தான் வராங்க. நானும் டாடி கூடத் தான் ஸ்கூல் போவேன்'' என்று அடம் பிடித்தாள்.

மீராவின் சமாதானம், தாத்தாவின் கெஞ்சல்களெல்லாம் தியாவின் பிடிவாதத்தின் முன்பு பிசபிசுத்துப் போயிற்று.

அன்று காலையில் விரைவாகவே அலுவலகம் சென்ற ஷ்யாமின் கைப்பேசி எண்ணிற்கு அழைத்த மகாலிங்கம், ''நீ உடனே வீட்டுக்கு வா'' என்று மட்டும் சொல்லிவிட்டு வைத்து விட்டார்.

அவன் திரும்பி அவரிடம் பேச முயற்சிக்க... மகாலிங்கம் எந்த அழைப்பையும் ஏற்று பேரனிடம் பேசவில்லை.

என்னவென்று தெரியவில்லையே என்று குழப்பத்துடன் வீடு வந்து சேர்ந்தவனிடம் மகாலிங்கம் தியாவின் கோரிக்கையைச் சொன்னதும்,

''ஏன் தாத்தா அவள் தான் குழந்தை. புத்தி இல்லாம அடம் பிடிக்கிறாள் என்றால் உங்களுக்குமா இல்லை. இது ஒரு பிரச்சனைன்னு என்னை ஆபீஸிலே இருந்து வர வைச்சு இருக்கீங்க. நான் என்ன அங்கே வெட்டியாவா இருக்கேன். பாதி மீட்டிங்கிலே வந்திருக்கேன்'' என்று சொன்னவன் திரும்பி மனைவியை முறைத்தான்.

'அடம் பிடிக்கிறது இவர் பொண்ணு. வரச் சொன்னது இவரோட தாத்தா. அவங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு என்னை முறைக்கிறதைப் பாரு' என்று மீரா மனதுக்குள் கணவனுக்கு வசைபாடினாள்.

உரிமை இருக்கும் இடத்தில் நான் கோபத்தைக் காட்ட முடியும் என்பதைக் கணவன், மனைவி இருவருமே புரிந்து கொள்ளவில்லை.

மகளிடம் குனிந்து, ''அம்மா இல்லைன்னா தாத்தா கூட ஸ்கூலுக்குப் போ தியா'' என்றான்.

''முடியாது'' என்ற சொல் அழுத்தத்துடனும், சத்தத்துடனும் வந்தது.

'அப்போ ஸ்கூலுக்குப் போகாதே!' என்று மனதில் நினைத்துக் கொண்டவனாக அவன் வெளியேற,

மகாலிங்கம் அவனைத் தடுத்து, ''டேய்! அவ தான் முடியாதுன்னு சொல்றாளே! நீ ஒண்ணும் சொல்லாமல் போனால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டார்.

''ஆமா உங்க பேத்தி ஐ.ஏ.எஸ். டிரைனிங்கிக்குப் போகிறாள். ஒரு நாள் டிரைனிங் போயிடுச்சேன்னு நீங்க வருத்தப்படுறீங்க. ஏன் தாத்தா கடுப்பைக் கிளப்புறீங்க. படிக்கிறது பிரி.கே.ஜி. அவ ஸ்கூலுக்குப் போனால் என்ன போகாவிட்டால் என்ன?'' என்று சொன்னவன் யாரோட பதிலுக்குக் காத்திருக்காமல் காரில் ஏறிச் சென்று விட்டான்.



தியாவும் தன் பிடிவாதத்தில் இருந்து சற்றும் தளராதவளாக அன்று பள்ளி செல்ல மறுத்து விட்டாள்.

மகளது ஏமாற்றம் படிந்த முகத்தைப் பார்த்த மீரா தன் மனதுக்குள் ஒரு திட்டம் தீட்டினாள்.

அன்று மாலை தியாவை அழைத்த மீரா, ''தியா குட்டி, இப்போ அப்பா ஆபீஸில் இருந்து வருவாங்க. அவர் உன்னை ஸ்கூலிலே விடமாட்டேன் என்று சொல்லிட்டுப் போனார் தானே! அதனால நீ அவர் கூடப் பேசாதே'' என்று மகளுக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

''ஏன் பேசக்கூடாது?''

''அப்போ தான் அப்பா உன்னை நாளைக்கு ஸ்கூல் கூட்டிட்டுப் போவாங்க.''

''அப்படின்னா தியா டாடிகிட்டே பேச மாட்டாள்'' என்று அந்தச் சின்னக் குட்டி தாயின் கருத்துக்கு உடன்பட்டது.

ஷ்யாமின் கார் சத்தம் கேட்டவுடன் மீரா தியாவை அழைத்துக் கொண்டு சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

வீட்டின் உள்ளே நுழைந்த ஷ்யாம் தினமும் தன்னை எதிர்கொண்டு அழைக்கும் தன் மகளைக் காணாது குழம்பினான். 'மேலே நம்ம ரூமில் இருக்காளோ?' என்று நினைத்துக் கொண்டு இரண்டிரண்டு படிகளாகத் தாவி ஏறிச் சென்றான்.

அவன் அறைக்குள் சென்று மறைந்ததும் மீரா தன் மகளுடன் சமையலறையில் இருந்து வெளியேறி தாத்தாவின் அறைக்குக் கூட்டிச் சென்றாள்.

''தியா, தாத்தா கூட உட்கார்ந்து டி.வி. பாரு'' என்று சொல்லி மகளை மகாலிங்கத்தின் பொறுப்பில் விட்டு விட்டு வெளியேறினாள்.

ஷ்யாம் தங்களது அறையிலும் மகள் இல்லையென் றதும் முகம், கை, கால் கழுவிக் கொண்டு உடை மாற்றி விட்டுக் கீழ் தளம் வந்தான்.

அவன் சோபாவில் அமர்ந்ததும் மீரா அவனுக்கு காபியை எடுத்துக் கொண்டு வந்தாள்.

'தாத்தா கார் வீட்டிலே நிக்குது. மீராவும் இங்கே தான் இருக்கிறாள். அப்படின்னா தியா வீட்டில் தான் இருக்கிறாள்' என்று ஷ்யாமின் மனம் கணக்கிட்டது.

மீரா நீட்டிய காபியை வாங்கிக் கொண்டவன் அவ ளிடம், ''தியா எங்கே?'' என்று கேட்டான்.

'இவருக்கு இவர் முன்னாடி நிற்கிற பொண்டாட்டி கண்ணுக்குத் தெரிய மாட்டாள். அவகிட்டே ரெண்டு வார்த்தை பேசுவோம்ன்னு தோணாது. ஆனால் மக ளிடம் அஞ்சு நிமிஷம் பேசலைன்னதும் தாங்க முடிய லையோ?' என்று கடுப்பானவன் அவனை முறைத்துக் கொண்டே பதிலொன்றும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்தாள்.

'கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல் முறைச்சிக் கிட்டுப் போகிறாள். இவளுக்கு ஏன் மேலே அப்படி என்ன கோபம்? என் பொண்ணை நானே கண்டு பிடிச் சிக்கிறேன்' என்று நினைத்தவன்,



''தியா...'' என்று சப்தமாகக் கூப்பிட்டான்.

தொடர்ந்து அவன் மூன்று முறை கத்திக் கூப்பிட் டதும் மீராவின் நாடகத்தை அறியாத மகாலிங்கம் தியாவை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறி வரவேற்பறைக்கு வந்தார்.

வந்தவர் தன் பேரனிடம், ''இப்போ எதுக்குடா வீடே அதிரும்படி கத்துறே?'' என்று கேட்டார்.

அவன் அவருக்குப் பதில் சொல்ல முனையவில்லை. அவருடன் வந்த தன் மகளைப் பார்த்து, ''தியா பேபி, ஏன் அப்பாவைப் பார்க்க இவ்வளவு நேரமும் வெளியே வரலை?'' என்று கேட்டான்.

தியா தாய் சொல்லைத் தட்டாத மகளாய் அவனுக்குப் பதில் சொல்லாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

மகளின் செய்கை அவனுக்குச் சிரிப்பை வர வழைத்தது.

''பேபி இவ்வளவு நேரமும் என்ன செஞ்சீங்க?'' என்று அவன் அடுத்த கேள்வியைக் கேட்டான்.

எங்கே அவன் முன்னால் நின்று கொண்டிருந்தால் மகள் பேசி விடுவாளோ என்று பயந்த மீரா, ''தியா, வா. நாம மாடிக்குப் போகலாம்'' என்றதும், தியா தந்தையைச் சட்டை செய்யாது மீராவிடம் ஓடினாள்.

பேத்தியின் அமைதியும், மீராவின் செய்கையையும் கண்ட மகாலிங்கம், 'இது காலையில் தன் பேரன் அலட்சியமாய் சென்றதற்கு மீராவின் பதில் நடவடிக்கை' என்பதைப் புரிந்து கொண்டார்.

தியாவின் அமைதியும், அலட்சியமும் ஷ்யாமிற்கு மனதின் ஓரத்தில் ஒரு வலியை உண்டு பண்ணியது.

அறைக்குள் சென்ற மீரா தங்களது துணியை மடித்து வைக்க ஆரம்பித்தாள். அவள் எதிர்பார்த்தபடியே அடுத்த இரண்டாவது நிமிடத்தில் ஷ்யாம் அறைக்குள் நுழைந்தான்.

வந்தவன் மகளைத் தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டு, "தியா, பேபி, அப்பாகிட்டே பேச மாட்டீங்களா?" என்று கேட்டான்.

அப்பொழுதும் அவள் அமைதியாக இருக்க...

"தியாவும் பேசலைன்னா அப்பா கூட யார் பேசுவா? அப்பா பாவம் இல்லையா?" என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான். மேலும், "தியா, குட் கேர்ள் ஆச்சே! அவ அப்பா கூடப் பேசாமல் இருக்க மாட்டாளே!" என்று ஆச்சரியம் காட்டிச் சொன்னதும்,

"தியா குட் கேர்ள். அவ அப்பா கூடப் பேசுவாள்" என்று நொடியில் தன் பேசாவிரதத்தைக் கைவிட்டவள் அத்தோடு நில்லாமல், "அம்மா தான் பேசக் கூடாதுனு சொன்னாங்க" என்று தாயைப் போட்டும் கொடுத்தாள்.

மகளுக்கு கார்ட்டூன் சேனலை வைத்து அதில் அவளது கவனத்தைத் திசை திருப்பியவன் மீராவிடம் வந்து, "இப்போ எதுக்கு என்னையும் என் பொண்ணையும் பிரிக்கப் பார்க்கிறே?" என்று கேட்டான்.

"அவ என் பொண்ணு" என்று மீரா ஒரு சண்டைக்குப் பிள்ளையார் சுழி போட,

"அவ எனக்கும் தான் பொண்ணு. நான் அவளோட அப்பா. எங்க ரெண்டு பேருக்கும் இடையிலே நீ வராதே!" என்றான்.



"அப்படி உங்க பொண்ணு மேலே அவ்வளவு பாசம் வைச்சிருந்தீங்கன்னா அவளோட நியாயமான ஆசையை நிறைவேத்த வேண்டியது தானே? அவ உங்ககிட்டே அதிகப்படியாவா எதிர்பார்த்தாள்? எல்லோரையும் மாதிரி தன் அப்பாவோட ஸ்கூல் போய் இறங்கணும் என்று ஆசைப்படுறாள். தன் பிரண்ட்ஸ் முன்னாடி இது தான் தன் அப்பான்னு காட்டிப் பெருமைப்படணும்ன்னு நினைக்கிறாள். அது ஒரு தப்பா?" என்று எடுத்துச் சொன்னதும்,

மீராவின் முன்னே நின்று கொண்டு பார்வையை அவளது முகத்தில் இருந்து அகற்றாதவாறு, "தியா..." என்று கத்திக் கூப்பிட்டான்.

"என்ன டாடி?" என்று ஓடி வந்த மகளைத் தூக்கியவன், "நாளையிலிருந்து உன்னை அப்பா ஸ்கூலில் கொண்டு போய் விடுறேன்" என்றான்.

"தாங்க்ஸ் டாடி" என்று தியா அவனது கன்னத்தில் முத்தமிட்டாள்.

"நான் ஒண்ணும் மத்தவங்க சொல்லுறாங்களேன்னு இதைச் செய்யப் போறதில்லை. எனக்கு என் பொண்ணு மேலே பாசம் இருக்கு. அதுக்காகத்தான் இதைச் செய்யுறேன்" என்றவன் மகளோடு கீழிறங்கிச் சென்றான்.

செல்லும் கணவனையே பார்த்துக் கொண்டு நின்ற மீரா மகளின் ஆசை நிறைவேறப் போவதற்காக சந்தோஷப்பட்ட அதே நேரம், கணவன் தன்னை மற்றவள் என்று சொன்னதற்காக வருந்தினாள்.

கணவன் மாறி வருவது அவளுக்குப் புரிந்து தான் இருந்தது. அவன் தன்னை தியா அளவிற்கு நேசிக்க

வில்லை என்பதும் தெரிந்த விஷயமே! இருப்பினும் அவன் இன்று தன்னை வெளியாளாய் ஒதுக்கி வைத்த உண்மை அவளுக்கு கவலை அளித்தது.

சிறிது நேரம் கழித்துக் கீழே சென்றவள் மகளுக்கான உணவை ஊட்டி முடித்ததும் மொட்டை மாடிக்குச் சென்று அங்குள்ள சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண் டாள்.

ஷ்யாம் தொலைக்காட்சியின் செய்திகளில் மூழ்கி இருந்தான். இரவு ஒன்பது மணி ஆனதும் அவனுக்குப் பசித்தது.

மீரா ஏன் தன்னைச் சாப்பிட அழைக்கவில்லை என்று சுற்றி முற்றிப் பார்த்தான். மீரா கண்ணுக்குத் தென்பட வில்லை என்றதும் மடியில் உறங்கிக் கொண்டிருந்த மகளை சோபாவில் படுக்க வைத்துவிட்டு மகாலிங் கத்தின் அறைக்குச் சென்றான்.

''நீங்க சாப்பிட்டீங்களா தாத்தா?'' என்று அவரை விசாரித்தான்.

''அப்பவே மீரா என்னையும் தியாவையும் சாப்பிட வைச்சுட்டாளே. நீ இன்னமும் சாப்பிடலையா? போய் சாப்பிடு'' என்று மகாலிங்கம் சொன்னார்.

சமையலறையில் அவன் எட்டிப் பார்க்க... கமலம்மா, ''தம்பி, சாப்பாடு வைக்கவா?'' என்று கேட்டார்.

இத்தனை வருடங்களாக ஷ்யாமிற்கு கமலம்மாவின் கையால் பரிமாறிச் சாப்பிட்டுத் தான் பழக்கம் என்ற போதிலும்... இப்பொழுது இரண்டு மாதமாக மீரா பரிமாற சாப்பிட்ட பழக்கத்தினால் அவன் அவரிடம்,



''இல்லை கமலம்மா. நீங்க போங்க. எனக்கு மீரா பரிமாறுவாள்'' என்று சொல்லி அவரை அவுட் ஹவு ஸிற்கு அனுப்பி வைத்தான்.

கதவைப் பூட்டியவன் மீரா கீழ்தளத்தில் இருப்பதற் கான அறிகுறி தென்படவில்லை என்றதும் தூங்கும் மகளைத் தூக்கிக் கொண்டு மாடியேறினான். மகளை அவளது படுக்கையில் படுக்க வைத்தவன் அறையிலும் மீராவைக் காணாது குழம்பினான்.

பின் அவளைத் தேடிக் கொண்டு மொட்டை மாடிக்கு வந்தான். அங்கே உள்ள பெஞ்சில் சோகமே உருவாக அமர்ந்திருந்த மனைவியைக் கண்டான்.

'இப்போ என்ன ஆகிடுச்சுன்னு இந்நேரம் இங்கே வந்து உட்கார்ந்திருக்காள்? எதுக்கு இவ்வளவு சோகம்? நான் கோபமாக் கூடப் பேசலையே! எனக்கும் என் பொண்ணுக்கும் குறுக்கே நிக்காதேன்னு தானே சொன் னேன்' என்று அவன் தன் மூளையைத் தட்டி யோசிக் கும்போது தான் அவளைப் பார்த்து தான் மற்றவள் என்ற வார்த்தையைப் பிரயோகித்தது நினைவிற்கு வந்தது. அதைத் தான் சொன்ன பொழுது அவளது முகம் மாறி யதும் ஞாபகத்திற்கு வந்தது.

அது அதிகப்படியான வார்த்தையோ? ஆகா ஷ்யாம்! இதுக்கு தான் வாயைத் திறக்கக் கூடாதென்பது. வாயைக் கொடுத்து மாட்டிக்கிட்டியே! சரி எப்படியாவது பேசிச் சமாளிப்போம்' என்று நினைத்து அவளருகில் சென்று அமர்ந்தான்.

சுற்றி வளைக்காமல், ''ஏதோ பேச்சு வாக்கிலே உன்னை மத்தவங்கன்னு தெரியாமல் சொல்லிட்டேன்.

அதுக்காக ஃபீல் பண்ணுறியா? நான் உன் கழுத்திலே தானே தாலி கட்டினேன். அப்புறம் எப்படி நீ மத்தவளாக முடியும்? சாரி'' என்றான்.

ஷ்யாமின் வாயில் இருந்து சாரி என்ற வார்த்தை வந்ததை நம்ப முடியாத ஆச்சரியத்தோடு மீரா பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சமாதானம் பேச வந்ததே ஆச்சரியம் என்றால் மன்னிப்புக் கேட்டது அதை விட ஆச்சரியமான விஷயம் அன்றோ?

மீரா பதில் சொல்லும் முன்பு, ''எனக்குப் பசிக்குது. வா சாப்பிடப் போகலாம்'' என்று சொன்னான்.

மீரா அவனைப் பார்த்து முறைத்தாள். 'ஓ! அதுக்குத் தான் என்னைச் சமாதானப்படுத்த வந்தீங்களா?' என்று கேளாமல் கேட்டது அவள் பார்வை.

''என்னாச்சு? திரும்பவும் எதுவும் தப்பா சொல்லிட்டேனா? முன்னே பின்னே யாரிடமாவது சமாதானம் பேசப் போய் இருந்தால் தானே எனக்கு அதைச் சரியா செய்யத் தெரியும்'' என்று வாய்விட்டுப் புலம்பியவன்,

''நான் சாப்பிட வேண்டாம். தியா கீழே தனியா தூங்கிக்கிட்டு இருக்காள். தூக்கத்தின் நடுவிலே எழுந்தால் பயந்து அழப் போறாள். வா போவோம்'' என்று அழைத்தான்.

தன்னை அணைத்து ஆறுதல் அளிக்கவில்லை என்றாலும், இறங்கி வந்து தன்னிடம் மன்னிப்புக் கேட்டுச் சமாதானம் பேசும் நிலைக்கு அவன் வந்ததே பெரிய விஷயம் என்று நினைத்த மீரா, கீழே தனியாகத் தூங்கும் மகளையும் கருத்தில் கொண்டு அவனுடன் கீழே இறங்கிச் சென்றாள்.



மனைவியுடன் அறைக்குள் நுழைந்தவன் அறையைத் தாளிட்டுவிட்டுப் பேசாமல் சென்று படுத்துக் கொண்டான்.

மீரா அவனது செய்கையைப் பார்த்து, 'கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தானே பசிக்குதுன்னு சொன்னார். இப்போ வந்து படுத்துக்கிட்டார். என்ன விஷயம்?' என்று சிந்தித்துப் பார்த்தாள்.

அவன் தனக்கு பயந்தே சாப்பிடாமல் சென்று படுத்திருப்பது புரிந்து முறுவல் புரிந்தாள்.

''பசிக்குதுன்னு சொன்னீங்களே! சாப்பிட வாங்க'' என்று அழைத்தாள்.

'இப்பொழுது எழுந்து போனால் திட்டுவானோ? என்ன செய்யலாம்?' என நினைத்து அவன் விழிக்க... மீராவிற்கு சிரிப்பு வந்தது.

''எனக்கும் பசிக்குது. வாங்க சாப்பிடலாம்'' என்று சொன்னதும் எழுந்து அவள் பின்னோடு சென்றான்.

திருமணமாகி மூன்றரை வருடங்கள் கழித்து சாதாரணக் கணவன் மனைவியாய் சின்னச் சண்டையும், அதற்கான சமாதானமுமாய் அவர்கள் இருவரும் வாழ்க்கையை இயல்பாய் வாழ ஆரம்பித்தார்கள்.

# 16

**தா**ரிகாவின் வளைகாப்பிற்கு என சந்துரு மீராவை அழைப்பதற்காக சென்னை வருவதாகச் சொன்னான்.

மனைவியை மூன்று நாட்கள் தனியே விட முடியாதென்ப தால் விமானத்தில் வந்து அதிலேயே திரும்பப் போவ தாகத் தெரிவித்தான்.

தன்னால் அண்ணனிற்கு எதற்கு வீண் செலவென்று நினைத்த மீரா, ''நமக்குள்ளே என்ன அண்ணா பார்மா லிட்டி. நானும், தாத்தாவும் நீ நேரில் வந்து கூப்பிட்டால் தான் வருவோம்ன்னு சொல்லப் போவதில்லை. இவர் வருவது டவுட் தான். எங்களுக்காக நீ அலைய வேண் டாம். போனிலேயே கூப்பிட்டால் போதுண்ணா'' என்று சொன்னாள்.

மகாலிங்கமும், ''நீ உன் தங்கச்சி வீட்டுக்கு எப்போ வேணா வரலாம் சந்துரு. ஆனால் வந்தால் நாலு நாள் தங்குற மாதிரி வரணும். இப்படிச் சும்மா காலில் வெந்நீரைக் கொட்டினது போலெல்லாம் வரக்கூடாது. எங்களைக் கூப்பிடுறதுக்காகன்னா நீ வரத் தேவை யில்லை. நீ போனிலே கூப்பிட்டாக் கூட நாங்க முதல் ஆளா அங்கே வந்து நிற்போம்'' என்று மீராவின் கருத் தையே ஆமோதித்தார்.

ஷ்யாம் விழாவிற்கு வருகிறானா என்று விசாரித்த பொழுது அவன் அலுவலக வேலையைக் காரணம் காட்டி மறுத்து விட்டான்.

வளைகாப்பன்று காலையில் சென்னையில் இருந்து கிளம்பலாமா என்று மகாலிங்கம் கேட்டதற்கு, மீரா மறுப்புத் தெரிவிக்கவில்லை.

காலை 5.30 விமானத்தில் பயணம் செய்ய பயணச் சீட்டு வாங்கி இருந்தார்கள். அதனால் அவர்கள் அதிகாலை 4.30 மணிக்கே விமான நிலையத்தில் இருக்க



வேண்டும் என்பதால் முதல் நாள் இரவே மீரா பெட் டியைத் தயார் செய்து தாத்தாவின் அறையில் வைத்து விட்டாள்.

அன்றிரவு ஷ்யாம் வெகு நேரத்திற்குப் பின்பே வீடு வந்தான். அதனால் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து மீரா குளித்துத் தயாராவது ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த வனுக்குத் தெரியாமலே போனது.

உடை மாற்றி தன்னுடைய அலங்காரத்தை முடித் தவள் தூங்கும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓசை எழுப்பாது அறையை விட்டு வெளியேறினாள்.

''என்னம்மா மீரா போலாமா?'' என்று கேட்ட மகா லிங்கத்திடம்,

''நான் ரெடி தாத்தா. தியாவை அண்ணன் வீட்டுக்குப் போன பின்னால் குளிக்க வைச்சுக்கலாம்'' என்று சொன்னவள் வீட்டை விட்டு வெளியேறினாள்.

டிரைவர் தயாராகக் காத்திருக்க... அவர்கள் குறித்த நேரத்தில் விமான நிலையம் சென்று காலை 7.30 மணிக்கு மும்பையில் இறங்கினார்கள்.

இங்கே சென்னையில் காலையில் சற்று தாமத மாகத்தான் ஷ்யாம் படுக்கையை விட்டு எழுந்தான். மீரா எப்பொழுதும் சீக்கிரம் எழுந்து விடுவாள் என்பதால் அவள் அறையில் இல்லாததை அவன் கண்டு கொள்ள வில்லை.

ஆனால் மகள் படுக்கையில் இல்லை என்றதும், 'தூங்கி எழுந்ததும் என்னைத் தானே என் பேபி எழுப்பு வாள். அது கூடத் தெரியாத அளவுக்கு அசந்து

தூங்கிட்டேனா?' என நினைத்துக் கொண்டே பல் துலக்கச் சென்றான்.

கீழே இறங்கி வந்தான். வீடே அமைதியாக இருந்ததைப் பார்த்துக் குழம்பியவன், 'என்னாச்சு என் தியா பேபிக்கு? ஓவர் சைலன்ட்டா இருக்காள்' என்று நினைத்துக் கொண்டே வர,

கமலா அவன் எதிரே வந்து, ''தம்பி காபி குடிக்குறீங்களா?'' என்று கேட்டார்.

அவன் பதில் சொல்லும் முன்பே, ''தியா பாப்பா ஊருக்குப் போயிட்டதாலே வீடே சத்தமில்லாமல் இருக்கு. நல்லாவே இல்லை'' என்று புலம்பிக் கொண்டே சென்றார்.

'என்னது ஊருக்குப் போயிட்டாங்களா? எத்தனை மணிக்கு ஃபிளைட் என்று தெரியலையே! நான் அதி காலையிலே போவாங்க என்று நினைக்கலையே!' என்று நினைத்துக் கொண்டே மனைவியின் கைப் பேசிக்கு முயன்றான். அது ஸ்விட்ச் ஆப் செய்யப் பட்டுள்ளது என்றே வந்தது. இன்னும் விமானத்தில் தான் இருக்காங்க போல என நினைத்துக் கொண்டு குளித்துத் தயாராக ஆரம்பித்தான்.

வீட்டிற்கு வந்த மீராவை தாரிகா நல்ல முறையில் வரவேற்றாள். 'அவரவர் இடத்தில் இருந்ததால் தான் தகுந்த மரியாதை கிடைக்கும் போல!' என்று மீரா எண்ணிக் கொண்டாள்.

காலை ஒன்பது மணிக்கு மேல் ஷ்யாம் திரும்பவும் மீராவின் கைப்பேசிக்கு முயற்சிக்க... மீரா ''ஹலோ!'' என்று சொன்னதும்,



''ஏன் சொல்லாமல் போனே?'' என்று கேட்டான்.

கணவனது கேள்வியில் மீராவிற்கு முறுவல் வந்தது.

''நீங்க எப்போதெல்லாம் என்னிடம் சொல்லிட்டுப் போனீங்க?'' என்று அவள் திருப்பிக் கேட்டதும்,

''நீ போனை தியாகிட்டே கொடு'' என்றான். மீராவின் முறுவல் அதிகமானது. அவள் கைப்பேசியைத் தன் மகளிடம் தந்தாள்.

''ஹலோ டாடி!'' என்று தியாவின் குரலைக் கேட்டதும்,

''தினமும் அப்பா தியாக்கு பை சொல்லிட்டுத் தானே போனேன். ஆனால் தியா மட்டும் சொல்லாமல் போயிட்டாள்'' என்று அவன் மகள் மீது குற்றம் சொல்ல,

''எனக்கு ஃபிளைட்டிலே வந்தது தெரியாதே டாடி. நான் கண் முழிச்சப்போ காரிலே தான் வந்தேன்'' என்று தந்தைக்கு விளக்கம் சொன்னாள்.

அவளிடம் சிறிது நேரம் பேசிவிட்டு வைத்தவன் அடுத்ததாக தன் தாத்தாவை அழைத்தான்.

பேரனிடம் சிரித்துக் கொண்டே அவர் பேசி முடித்து வைத்ததும் அவரருகில் சென்ற மீரா, ''என்ன தாத்தா, ஏன் சொல்லாமல் போனீங்கன்னு உங்களுக்கும் டோஸ் விழுந்துச்சா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''உங்களுக்குமா புத்தி இல்லைன்னு அவன் என்னை நேராத் திட்டலை. மத்தபடி அப்படித் தான் கேட்டான்'' என்று சொல்லிச் சிரித்தார்.

''அப்புறம் எப்படிச் சமாளிச்சீங்க?''

"நான் உங்க பாட்டிகிட்டேயே சொல்லிட்டுப் போக மாட்டேன்டா என்று சொல்லித் தான் சமாளிச்சேன்."

"உங்க குடும்பமே இப்படித்தானா?" என்று போலி வியப்புக் காட்டி மீரா கேட்டதும்,

"ஆனாலும் உன் புருஷன் அளவுக்கு நான் மோசம் கிடையாதும்மா. நான் போயிட்டு வந்து எங்கே போனேன் என்று சொல்லிடுவேன்" என்றதும் மீரா அவரை முறைத்தாள்.

"சரி வாம்மா நாம போய் விழாவைக் கவனிப்போம்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே நகர்ந்தார்.

இதையெல்லாம் சற்றுத் தொலைவில் இருந்து சந்துரு பார்த்துக் கொண்டிருந்தான். முன்பெல்லாம் மகாலிங்கம் மும்பை வந்தால் மீரா அவரிடம் ஓரிரு வார்த்தைகள் தான் பேசுவாள். ஆனால் அவள் இப்பொழுது அவரை உரிமையுடன் முறைத்துக் கொண்டு பேசுவதையும், அவள் முகத்தில் தெரிந்த சந்தோஷத்தையும், வந்த கொஞ்ச நேரத்திலேயே 'எங்க டாடி!' என்று மூச்சுக்கு முன்னூறு தடவை தியா தொடர்ந்து சொல்லிக் கொண்டு இருந்ததையும் பார்த்த சந்துருவிற்கு சந்தோஷமாக இருந்தது.

வளைகாப்பிற்கு தாரிகாவிற்கு தங்க நெக்லஸை மீரா சார்பாக வீட்டிற்குப் பெரியவராய் மகாலிங்கம் பரிசளித்தார்.

ஷ்யாமிற்கு அன்று முழுவதும் அலுவலகத்தில் வேலையே ஓடவில்லை. அடிக்கடி தன் பெண்ணிடம் போனில் பேசிக் கொண்டு தான் இருந்தான். ஆனாலும் எதையோ இழந்தது போல் மனம் வெறுமையாக இருந்தது.



அன்று வீடு திரும்பியதும் அந்த வெறுமை அதிகரிக்கவே செய்தது.

அன்று இரவு எட்டு மணிக்கு மீராவை அழைத்தவன், "நாளைக்கு எத்தனை மணி ஃப்ளைட்டிலே கிளம்புறீங்க?" என்று விசாரித்தான்.

"நாளைக்கு நைட் ஏழு மணிக்குங்க" என்றதும்,

"என்னது நைட்டா?" என்று கேட்டவன் அழைப்பைத் துண்டித்தான்.

அடுத்த பத்தாவது நிமிடம் திரும்பவும் கூப்பிட்டான்.

"காலையிலே ஒன்பது மணி ஜெட் ஏர்வேஸ்'ல டிக்கெட் போட்டுட்டேன். தாத்தா கையிலே டிக்கெட் கிடைக்க ஏற்பாடு செஞ்சிட்டேன். அதிலே கிளம்பி வந்திடுங்க" என்று சொல்லிவிட்டு வைத்து விட்டான்.

'அடடா ஒரு நாள் கூடப் பொண்ணைப் பிரிஞ்சு இருக்க முடியலையா?' என்று நினைத்து மீரா சிரித்துக் கொண்டாள்.

மறுநாள் சென்னை விமான நிலையத்தை அடைந்து அவர்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்த பொழுது மணி ஒன்றை நெருங்கிக் கொண்டிருந்தது.

தியா கீழே கமலம்மாவிடம் கதை அளக்க ஆரம்பித்தாள். மீரா மாடிக்குச் சென்று தனது வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள்.

இவர்கள் வீட்டை அடைந்த ஐந்தாவது நிமிடம் ஷ்யாமின் கார் வீட்டிற்குள் நுழைந்தது.

அவனைக் கண்டதும், "டாடி" என்று கூவிக் கொண்டே அவனை நோக்கி தியா ஓடி வந்தாள்.

மகளைத் தூக்கி அணைத்துக் கொண்டவன், 'இந்த முகத்தைப் பார்க்காமல் தான் நேற்று முழுவதும் வெறுப்பாக இருந்தது' என்று எண்ணிக் கொண்ட மனைவியைத் தேடினான்.

''அம்மா எங்கேடா தியா?'' என்று கேட்டதும்,

''மாடியிலே இருக்காங்க'' என்றாள்.

மகளைத் தூக்கிக் கொண்டு படியேறிச் சென்றவன் மீராவிடம் தனியாகப் பேசாது போனாலும் அவன் பார்வை அவளையே தொடர்ந்திருந்தது.

## 17



ஷ்யாம் அன்று அலுவலகத்தில் இருந்து சீக்கிரமாகவே வீடு திரும்பினான்.

''ஹை! அப்பா வந்தாச்சு!'' என்று தியா துள்ளிக் குதித்தாள்.

''தியா பேபி, அப்பா வெளியே போறேன். அதான் சீக்கிரமாவே வந்துட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே அவளைத் தூக்கிக் கொண்டு மாடியேறினான். மீராவும் அவர்களைத் தொடர்ந்தாள்.

''எங்கேப்பா போறீங்க?''

''பார்ட்டிக்கும்மா?''

''அப்படின்னா?''



இதற்கு என்னவென்று பதில் சொல்வது என்று அவன் குழம்பி நிற்கையிலே, ''தியா உங்க கூட வரட்டுமா?'' என்று கேட்டாள்.

ம்ம்ம் என்று சில நொடிகள் யோசித்தவன், ''சரி அப்பா உன்னையும் கூட்டிட்டுப் போறேன். வேற டிரஸ் போட்டுட்டு வா'' என்றான்.

''ஹை ஜாலி! அம்மா தியா டாட்டா போறாள். வேற டிரஸ் போடுங்க!'' என்று சொல்லிக் கொண்டே போட்டிருந்த ஆடையைக் கழட்ட ஆரம்பித்தாள்.

மகளது சந்தோஷத்தில் மனம் நிறைந்தவளாக அவளுக்கு வேறு உடை அணிவித்து அவளது தலையை வாரி கிளிப் போட்டு விட்டாள்.

மீராவைப் பார்த்து, 'நீயும் வருகிறாயா?' என்று ஷ்யாமும் கேட்கவில்லை, 'நானும் வரட்டுமா?' என்று மீராவும் அவனிடம் கேட்கவில்லை.

அவர்கள் இருவரும் கிளம்பிச் செல்வதைப் பார்த்த மகாலிங்கம் மீராவிடம், ''நீ போகலையாம்மா?'' என்று கேட்டார்.

அவரைப் பார்த்து முறுவல் புரிந்த மீரா அவரது கேள்விக்குப் பதில் அளிக்கவில்லை.

'இந்தப் பொண்ணுக்கு எப்போ தான் நல்ல காலம் பிறக்குமோ?' என்று வருந்திய மகாலிங்கம் வாசலுக்குச் சென்று தன் பேரனிடம்,

''ஷ்யாம், டிரைவரை வண்டி ஓட்டச் சொல். வரும் போது தியா தூங்க ஆரம்பிச்சிடுவாள். தனியா வேற கூட்டிட்டுப் போகிறாய். அதனால் வண்டி ஓட்டக் கஷ்டமாயிருக்கும்'' என்றார்.

ஷ்யாம் தாத்தாவின் சொல்படி டிரைவரை அழைத்துக் கொண்டு தன் நண்பன் விழாவை ஏற்பாடு செய்திருந்த ஹோட்டலுக்குச் சென்றான்.

ஷ்யாம் தன் மகளுடன் வந்ததைப் பார்த்த அவன் நண்பர்கள், ''எங்கேடா உன் வைஃப்?'' என்று கேட்டார்கள்.

ஒருவர் விடாமல் ஷ்யாமைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்க...

'என்ன இது... முன்னாடி நாம தனியா வரும்போது யாரும் இந்தக் கேள்வியை நம்மைப் பார்த்து கேட்டதில்லையே! இப்போ பொண்ணோட வந்ததும் உன் பொண்டாட்டியை எங்கே என்று கேட்குறாங்க. அவளையும் கூட்டி வந்திருக்கணுமோ?' என நினைத்தவன் அங்குள்ளவர்களை நோட்டம் விட்டான்.

அனைவருமே குடும்பத்தோடு வந்திருந்தனர். இல்லையெனில் தனியாக வந்திருந்தனர். எந்த ஆணும் தன் குழந்தையை மட்டும் கூட்டிக் கொண்டு வரவில்லை என்பதை ஆராய்ந்து அறிந்தவன்,

'தனிக்காட்டு ராஜாவா வாழ்ந்திட்டதாலே நமக்கு இந்த சின்ன விஷயம் கூடத் தெரியலை. நமக்குத் தான் தெரியலை. அவளாவது நம்மோட சேர்ந்து கிளம்பி வந்திருக்கலாம் தானே!' என்று மனைவி மீது மனதுக்குள் புகார் படித்துக் கொண்டிருந்தான்.

இனிமேல் எந்தப் பார்ட்டிக்குப் போனாலும் மீராவையும் கூட்டிக் கொண்டு தான் போகணும் என்ற தீர்மானத்தை எடுத்தான்.

விழாவின் போது மகளைத் தூக்கிக் கொண்டோ, தன் கைப்பிடியில் வைத்துக் கொண்டோ இருந்தான்.



அங்கிருந்த குழந்தைகளோடு தியா விளையாட நினைக்க சரியென்று அவளை அனுப்பி வைத்தான். நண்பர்களுடன் அரட்டையில் மூழ்கிப் போனான்.

''சாப்பிடப் போகலாமா?'' என்று நண்பன் ஒருவன் கேட்டதும் மகளுக்கு முதலில் சாப்பாடு ஊட்ட வேண்டும் என்று நினைத்து அவளைத் தேடிப் போனான்.

குழந்தைகளின் மத்தியில் அவளைக் காணாது குழம்பினான். அங்கிருந்த குழந்தைகளிடம் விசாரித்த போது அவர்கள் தெரியாது என்று கை விரித்து விட்டனர்.

பெண்கள் மத்தியில் இருக்கிறாளா என்று அங்கு சென்று விசாரிக்க... அங்கும் காணவில்லை என்றதும் பதட்டமடைந்தான். அவனுடன் சேர்ந்து வேறு சில நண்பர்களும் தேட ஆரம்பித்தனர். அந்த ஹாலில் அவள் இல்லை என்பது ஊர்ஜிதமானது.

ஷ்யாமிற்கு உலகமே அஸ்தமித்தது போல் இருந்தது. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை மூளை சிந்திக்க மறுத்தது.

அவன் அசையாமல் நிற்பதைப் பார்த்த அவன் நண்பன், ''டேய் ஷ்யாம்! கிடைச்சிடுவாடா. வாடா. ஹோட்டல் முழுசும் தேடுவோம். கீழே ஒரு ரெஸ்டாரண்ட் இருக்கு. அங்கே பார்க்கலாம். பாத்ரூம்... இப்படி எல்லா இடத்திலும் தேடலாம்'' என்று சொன்னான்.

நண்பர்கள் ஆளுக்கொரு திசையில், ஆளுக்கொரு இடமாய் தேடிப் பார்த்தனர். அடுத்த பதினைந்தாவது நிமிடத்தில் அனைவரும் ஒரே இடத்தில் ஒன்று கூடினர்.

'தியாவைக் காணவில்லை' என்று அனைவருமே சொல்ல ஷ்யாமிற்கு பயம் பற்றிக் கொண்டது. கைகள் நடுங்க ஆரம்பித்தன.

'தியா பேபி எங்கேடா இருக்கே?' என்று மனதுக்குள் அரற்ற ஆரம்பித்தான்.

'ஒரு வேளை காரில் சென்று அமர்ந்திருப்பாளோ?' என நினைத்து டிரைவரைக் கைப்பேசியில் அழைத்து விசாரித்தான். அங்கிருந்தும் சாதகமான பதில் கிடைக்க வில்லை என்றதும் ஷ்யாம் சோர்ந்து போனான்.

நண்பர்கள், ''ஷ்யாம், போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்திடுவோம்'' என்று சொன்னதும்,

''ம்ம்ம் வேற வழி இல்லை. அதைத் தான் செய்யணும். அதுக்கு முன்னாடி என் தாத்தாகிட்டே பேசிட்டு வரேன்'' என்று சொல்லி மகாலிங்கத்திற்கு போன் செய்தான்.

அந்தப் பக்கம் மகாலிங்கம் போனை எடுத்ததும், ''தாத்தா, தி...யா..வை கா..ணோ..ம்'' என்று தொண்டை அடைக்கக் கூறினான்.

''என்னடா உளறுறே? தியா, மீரா கூட வீட்டுக்கு வந்துட்டாளே!'' என்று மகாலிங்கம் சொன்னதும் ஷ்யாம் அழைப்பைத் துண்டித்தான்.

மனம் முழுவதும் நிம்மதி உணர்வு பரவியது. அதன் பின் மனைவியின் மீது கோபம் சுறுசுறுவென வந்தது.

நண்பர்களிடம் விவரம் தெரிவித்துவிட்டு சாப்பிடாமலே அங்கிருந்து கிளம்பினான்.

அங்கே வீட்டில்... பேரனிடம் பேசி முடித்த மகாலிங்கம் மீராவை தேடிச் சென்று,



''ஏன்மா மீரா ஷ்யாம்கிட்டே சொல்லாமலே தியாவை தூக்கிட்டு வந்துட்டியா? அவன் குழந்தையைக் காணோம் என்று பதறியடிச்சு போன் பண்ணுறான். என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

''உங்க பேரனுக்கு சதை ஆடுதா தாத்தா?'' என்று ஒரு கசந்த முறுவலுடன் மீரா கேட்டதும்,

மகாலிங்கம் முதலில் திகைத்தார். பின், ''நீ செஞ்சது சரிதான். இந்தப் பயலுக்கு இப்படிச் செஞ்சால் தான் உறைக்கும். நான் உன் பக்கம் இருக்கேன்'' என்று அவளது திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு தூங்கச் சென்றார்.

மீரா மகளைச் சாப்பிட வைத்த பின் தூங்க வைத்தாள். கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

வீட்டை அடைந்து காரில் இருந்து இறங்கிய ஷ்யாம் மீராவை முறைத்துக் கொண்டே இரண்டிரண்டு படிகளாக தாண்டி மாடிக்குச் சென்றான். வீட்டின் கதவை அடைத்து விட்டு தங்களது அறைக்குள் மீரா நுழைந்தாள்.

அங்கே ஷ்யாம் தூங்கும் குழந்தையைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். அருகில் சென்று பார்த்தபோது அவனது கைகள் நடுங்கிக் கொண்டிருப்பது புரிந்தது.

ஷ்யாம் அசையாது மகளை அணைத்தபடி, 'தியாவிற்கு ஆபத்தில்லை. அவள் நல்லபடியாக என் கைக்குள் தான் இருக்கிறாள்' என்பதையே திரும்பத் திரும்பச் சொல்லி தன் மனதிற்குள் அந்த நினைப்பைப் பதிய வைத்தான்.

ஐந்து நிமிடங்கள் கழிந்த பின்பே அவளைப் படுக்கையில் படுக்க வைத்துவிட்டு வந்தான்.

ஷ்யாமின் தாக்குதலைச் சமாளிப்பதற்காக மீரா தயாராய் சோபாவில் அமர்ந்து இருந்தாள்.

மகளைப் படுக்கையில் விட்டவன் நேரே அவளிடம் வந்தான். அவளது வலது கையை முரட்டுத் தனமாய் பற்றி அவளை எழுப்பினான்.

அவன் கைப்பிடித்த இடம் அவளுக்கு வலிக்கவே செய்தது. ஆனால் கணவன் முதல் முறையாகத் தன்னிடம் உரிமையுடன் கோபப்பட்டு சண்டை போடுகிறான் என்ற எண்ணம் அவளது வலியை மட்டுப்படுத்தியது.

அவளை முறைத்துக் கொண்டே, ''ஏன் என்னிடம் சொல்லாமல் தியாவைக் கூட்டிட்டு வந்தே?'' என்று கடுப்புடன் கேட்டான்.

மகளின் தூக்கம் கெடக்கூடாது என்று அவன் குரலை உயர்த்தவில்லை. ஆனால் அந்த குரலில் அடக்கப்பட்ட சீற்றம் இருந்தது.

அவனது முறைப்பிலும், குரலிலும் சற்றும் பாதிப்பு அடையாதவளாய் அவனது பார்வையை நேராக எதிர்கொண்டவள்,

''ஏன்? பொண்ணைக் காணோம்ன்னு மனசு பதறுச்சா? ஆனா அன்னைக்கு பார்ட்டி முடிஞ்சு நான் வீட்டுக்கு வந்தப்போ இப்படி பதறினதா எனக்கு ஞாபகம் இல்லையே! அது ஏன்? ஓ! தியா உங்க பொண்ணில்லை? அதான்... சதை ஆடுச்சு போல!'' என்று அவள் நக்கல் பண்ணவும்,



ஷ்யாம் தன் பிடியைத் தளர்த்தினான். அப்பொழுதும் முறைத்துக் கொண்டே,

''ஏன் என்னிடம் சொல்லலைன்னு கேள்வி கேட்டால் என்னமோ பதில் சொல்லிக்கிட்டு இருக்கே?'' என்று கடுப்புடன் மொழிந்தான்.

''நீங்க பார்ட்டிக்குக் கூட்டிட்டுப் போவீங்க. அங்கே உங்களை யாராச்சும் அவங்க வீட்டிலே இறக்கி விட முடியுமான்னு கேட்பாங்க. உடனே சரின்னு சொல்வீங்க. என் பொண்ணும் என்னை மாதிரி தான்... போகும் போது கூட்டிட்டுப் போன நீங்க திரும்பவும் வீட்டுக்கு அழைச்சிட்டு வருவீங்கன்னு நம்பி என்னை வீட்டிலே விடுங்கன்னு உங்ககிட்டே சொல்லாமல் நிற்பாள்.

அன்னைக்கு என்னை அம்போன்னு விட்டுட்டுப் போன மாதிரி இன்னைக்கு தியாவை விட்டுட்டுப் போனால் என்ன செய்வது? அவளோ குழந்தை. என்னை மாதிரி பஸ் பிடிச்சு வரத் தெரியாதே! எதுக்கு வம்புன்னு தான் உங்களை நம்பாமல் நானே கூட்டிட்டு வந்துட்டேன்'' என்று சொன்னவள் அவளது படுக்கையில் சென்று படுத்துக் கொண்டாள்.

'இந்த விளக்கத்தைச் சொல்லத் தான் காத்திருந்தேன். சொல்லிவிட்டேன். நான் போய் தூங்குறேன்' என்று சொல்லாமல் சொல்லியது அவளது செயல்.

ஷ்யாம் அப்படியே சோபாவில் அமர்ந்தான். தான் மீராவைப் பார்ட்டிக்கு அழைத்துச் சென்ற அன்று தான் நடந்து கொண்ட முறையை நினைத்துப் பார்த்தான்.

'அது மாதிரி எப்படி என்னால் நடந்து கொள்ள முடிந்தது? மீரா என்னைக் கேட்ட கேள்வியிலும் என்னை

நம்ப மறுத்ததிலும் தப்பேயில்லை. நானும் அப்படி ஒரு பொறுப்பில்லாத காரியத்தைத் தானே செய்திருக்கிறேன். இன்னைக்கு என் பொண்ணுன்னு பதறித் துடிச்ச என் இதயம் அன்னைக்கு என் மனைவின்னு பதறித் துடிக்கலையே!

மீராவிற்காக அன்று நான் பதறவில்லை. ஆனால் இன்று? அதே மீராவிற்கு ஒன்றென்றால் பதறுவேனா? என் மனநிலையில் மாற்றம் நிகழ்ந்திருக்கிறதா? என்ற சுய அலசலில் ஈடுபட்டான்.

அவள் என்னைப் பிரிந்திருந்த இரண்டரை வருடங்களில் 'மீரா என் மனைவி' என்ற நினைப்பு மட்டும் இருந்தது. அவளை நான் பார்க்க வேண்டும் என்ற ஆசையோ இல்லை அவள் என்னை வந்து பார்க்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போ கண்டிப்பாக இருந்ததில்லை.

ஆனால் அவள் திரும்பி வந்த பின்பு...

இந்த இரண்டரை மாத காலத்தில் என்னிடம் மாற்றம் நிகழ்ந்திருப்பது நிஜம். அதனால் தான் அவள் கையால்... அவள் தான் சாப்பாடு பரிமாற வேண்டும் என்று என் மனம் எதிர்பார்க்கிறது.

ஆபீஸில் இருந்து வந்ததும் ஓடி வரும் மகளைத் தூக்கியவுடன் மனைவியைப் பார்க்க கண்கள் அலை பாய்கிறது.

அவள் என்னருகில் படுத்தால் தான் எனக்கு நிம்மதியான தூக்கம் வருகிறது. அதனால் தான் போன வாரம் அவள் தன் அண்ணன் வீட்டிற்குச் சென்றிருந்த அன்று என்னால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.



என் மனதில் என் மகளுக்கு மட்டுமல்ல மனைவிக்கும் இடமுண்டு என்று அந்த சுய அலசலில் அவனுக்குப் புரிந்தது. அது அவனுக்கு நிம்மதியை அளித்தது.

ஆனால் அவள் மனதில் எனக்கான இடம் இருக்கிறதா?' என்று யோசித்துக் கொண்டே இருந்தவன் சோபாவிலேயே தூங்கியும் விட்டான்.

# 18

காலையில் கண் விழித்த மீரா அருகில் கணவனைக் காணாது திகைத்தாள்.

'அதுக்குள்ளே எழுந்திட்டாரா? நான் ரொம்ப நேரம் தூங்கிட்டேனா?' என்று குழம்பிப் போய் மணி பார்க்க... அது ஐந்தரை என்று காட்டியது.

படுத்திருந்தவள் எழுந்து அமர்ந்தாள். அறையைச் சுற்றி நோட்டம் விட... ஷ்யாம் சோபாவில் உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

விடிய விடிய உட்கார்ந்துகிட்டேவா தூங்குகிறார்? என்று அவனுக்காகப் பரிதாபப்பட்டவள் சப்தம் எழுப்பாது தன் வேலைகளை முடித்துக் கொண்டு கீழே சென்றாள்.

அன்று அவன் அலுவலகம் கிளம்பும் வரையிலும் ஷ்யாம் மாடியில் இருந்தால், மீரா தரை தளத்தில்

இருந்தாள். அவன் கீழே என்றால் அவள் தங்களது அறையில் இருந்தாள்.

அவளது கண்ணாமூச்சி ஆட்டம் புரிந்தாலும் ஷ்யாம் அதைக் கண்டு கொள்ளாமல் அலுவலகத்திற்குத் தயாராகி சாப்பாட்டு மேஜை முன் சாப்பிட அமர்ந்தான்.

கமலா உணவு பரிமாற வந்தார்.

அவரைப் பார்த்து புருவம் உயர்த்திய ஷ்யாம், ''மீரா எங்கே?'' என்று கேட்டான்.

''தெரியலையே தம்பி. மீராம்மா என்னைச் சாப்பாடு போடச் சொன்னது'' என்று சொன்னதுமே விருட்டென்று எழுந்து வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கமலா திகைத்துப் போய் நின்றார்.

'காலையிலே இருந்து என் கண் முன்னாடி வராமல் ஆட்டம் காட்டுறாள் என்று பார்த்தால்... சாப்பாடு வைக்கக் கூட வர மாட்டாளாமா? யாருக்கு வேணும் சாப்பாடு?' என்று மனதில் மனைவியைத் திட்டியவாறு அவன் நடக்க ஆரம்பிக்க...

மாடியில் ஒளிந்து கொண்டு நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மீரா, 'ஐயோ! அவர் நேற்று இரவும் சாப்பிடவில்லை. இப்போதும் சாப்பிடாமல் போகிறாரே!' என்று பதறியவளாய் படிகளில் இறங்கி ஓடி வந்தாள்.

அவளைப் பார்த்த கமலா, ''தம்பி, மீராம்மா வருது'' என்றதும் வெளியேறத் தொடங்கியவன் நின்று திரும்பி னான்.

கமலா சமையலறையின் உள்ளே புகுந்து கொண்டார்.



ஷ்யாம் அசையாது அதே இடத்திலேயே நின்று கொண்டு மனைவியின் மீது வைத்த பார்வையை அகற் றாது பார்த்துக் கொண்டிருந்தான்.

மீரா சாப்பாட்டு மேஜையை அடைந்து தட்டை வைத்து அவனுக்கான உணவைப் பரிமாறி டம்ளரில் தண்ணீர் ஊற்றி வைத்துவிட்டு அவனை நிமிர்ந்து பார்க்க...

அவன் அப்பொழுதும் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. தன்னுடைய பார்வையையும் விலக்க வில்லை.

'அடம் பிடிக்கறதைப் பாரு' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டே, 'சாப்பிட வாங்க' என்று அழைத்தாள்.

அவள் அழைத்தவுடன் அவன் சாப்பிட வந்து அமர்ந் தான்.

''நீயும் உட்கார்ந்து சாப்பிடு'' என்றான்.

''இல்லைங்க. நான் அப்புறமா சாப்பிட்டுக்கிறேன்'' என்றாள்.

அவன் தன் சாப்பாட்டில் கை வைக்காமல் அமைதி யாக வேடிக்கை பார்க்க...

அவள் அவன் சொன்னபடியே தனக்கும் ஒரு தட்டில் சாப்பாட்டைப் பரிமாறிச் சாப்பிட ஆரம்பித்ததும் அவ னும் சாப்பிட ஆரம்பித்தான்.

'வார்த்தைகளைச் சிதற விடாமல் தன் கோபத்தையும் காட்டிட்டார். பிடிவாதம் பிடித்து என்னையும் சாப்பிட வைச்சிட்டார். மொத்தத்தில் வாயைத் திறக்காது தான் நினைத்ததைச் சாதிச்சுட்டார். ரொம்பத் தான் முன்னேறிட்

"டா" என்று மனதுக்குள் மீரா கணவனுக்குப் பதிலுக் காட்டினாள்.

அந்த அவளது இதழோரப் புன்னகையைத் தோற்றுவித்தது.

ஷ்யாமிற்கு மனைவியின் கள்ளச் சிரிப்பைப் பார்த்ததும் கோபம் குறைந்தும் அதை... சந்தோஷத்துடனே அலுவலகம் கிளம்பினான்.

"ஆபீஸ் போயிட்டு வரேன்" என்று முதல் முறையாக மீராவிடம் விடைபெற்றான்.

இதுவரைத் தலையை மட்டுமே அசைப்பவன் இன்று முறையாய் தன்னிடம் விடைபெற்றதும் அவளது முகம் மலர்ந்தது.

மலர்ந்த அவளது முகத்தைப் பார்த்து அவனும் மலர்ந்தான். இப்படிச் சிரிக்கிறதை விட்டுட்டு [illegible] முறைக்கிறாள் என்று மனைவியைச் செல்லமாக மனதிற்குள் திட்டிக் கொண்டு அலுவலகம் சென்றான்.

அன்று மாலை ஷ்யாமின் கார் வீட்டின் உள்ளே நுழைந்தது. சரியாக அந்த நேரம் அவனுக்கு அலைபேசியில் அழைப்பு வர அவன் அதை எடுத்துப் பேச ஆரம்பித்தான்.

மாடியில் இருந்து மீரா இறங்கி வந்தாள். ஷ்யாம் வந்ததை அவள் கவனிக்கவில்லை. வரவேற்பறையில் அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த மகளின் அருகே சென்றாள். தொலைக்காட்சியில் லயித்திருந்த தியாவும் தந்தை வந்ததைக் கவனிக்கவில்லை.

"அம்மா, போர் அடிக்குதும்மா" என்று சொல்லிக் கொண்டே தொலைக்காட்சியை தியா அணைத்தாள்.

"அதுக்கு இப்போ என்ன செய்யலாம்?"



"அம்மா, பாட்டுப் பாடுங்கம்மா."

"பாட்டா? என்ன பாட்டு?"

"கீதம் பாட்டும்மா? தியாக்காக..." என்று அவள் தலையைச் சாய்த்து கேட்டதும் பார்த்து புன்னகை செய்த மீரா சரி என்று சம்மதித்தாள்.

மீரா தன் கண்களை மூடிக் கொண்டு பாடுவதற்கு ஆயத்தமானாள்.

சரியாக அந்த நேரம் ஷ்யாம் வீட்டின் உள்ளே நுழைந்தான். கண்களை மூடிக் கொண்டு அமர்ந்திருந்த மனைவியைப் பார்த்து புருவம் உயர்த்தினான்.

தியா தனது வாய் மேல் விரலை வைத்து அவனைச் சத்தம் எழுப்பாது அமைதியாக இருக்கும்படி சைகை செய்தாள்.

மகளது கட்டளைக்கு இணங்கி சத்தம் எழுப்பாமல் அவர்களுக்கு எதிரே வந்து அமர்ந்தான். மீரா பாட ஆரம்பித்தாள்.

காற்றினிலே வரும் கீதம்
கண்கள் பனித்திடப் பொங்கும் கீதம்
கல்லும் கனியும் கீதம்

பட்ட மரங்கள் தளிர்க்கும் கீதம்
[illegible] கீதம்

தாயின் அருகில் அமர்ந்து கொண்டு தானும் பாடத் தெரிவது போல் பாவனை செய்து கொண்டும், [illegible] தாளம் தட்டிக் கொண்டும், மீரா பாடும் 'கீதம்' என்ற வார்த்தையை மட்டும் அவளுடன் இணைந்து ராகம் போட்டுப் பாடிய மகளைப் பார்க்கப் பார்க்க ஷ்யாமிற்குப் பொழுது போனதே தெரியவில்லை.

ஒரு புன்முறுவலுடனே அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் கடைசி நான்கு வரிகளைப் பாடிய மனைவியின் குரலில் தெரிந்த பாவத்தில் மகளையும் மறந்து மனைவியின் பாட்டில் லயித்தான்.

நிலா மலர்ந்த இரவினில் தென்றல் உலாவிடும் நதியில்

நீல நிறத்து பாலகன் ஒருவன் குழல் ஊதி நின்றான்

காலமெல்லாம் காலமெல்லாம் அவன் காதலை எண்ணி

உருகுமோ என் உள்ளம்.

என்ற வரிகளைப் பாடி முடித்ததும் மீரா பாட்டை நிறுத்தினாள்.

பாட்டை அனுபவித்துப் பாடிக் கொண்டிருந்தவள் கடைசி இரண்டு வரிகளில் மூழ்கிப் போனாள். அவளது கண்களில் கண்ணீர் உற்பத்தியாகி அது கன்னங்களில் உருண்டோடியது. கண்களைத் திறக்காது அவள் கனவு லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

மீராவின் பாதிப் பாட்டில் அங்கு வந்த மகாலிங்கமும் அமைதியாக நின்று பாட்டை ரசித்துக் கொண்டிருந்தார். மீரா பாட்டை நிறுத்தி கண்ணீர் விட ஆரம்பித்ததும் சப்தம் எழுப்பாது தியாவை அந்த இடத்தில் இருந்து அழைத்துக் கொண்டு வெளியேறினார்.

ஷ்யாமிற்கு மனைவியின் கண்ணீரைத் துடைத்து அவளுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் போல் தோன்றியது. ஆனால் அவர்களுக்கு இடையே இன்னமும் நெருக்கம் ஏற்படாததால், எந்த உரிமையில் அதைச் செய்வது என்ற கேள்வி அவனை நகர விடாமல் செய்தது. மனைவியை விட்டுப் பார்வையை அகற்றாது அமர்ந்திருந்தான்.



ஷ்யாமை நினைத்து அந்தக் கடைசி இரு வரிகளைப் பாடிய மீராவிற்கு அவளையும் அறியாமல் கண்களில் கண்ணீர் சுரந்தது. தன்னையும் மறந்து அவள் அமைதியாக சில நிமிடங்கள் இருந்துவிட்டாள். அதன் பின்பே சுற்றுப்புறமும்... முக்கியமாக தன் மகள் பற்றிய எண்ணமும் நினைவிற்கு வர கண்களைத் திறந்தாள்.

தன் கண் முன்னே அமர்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ஷ்யாமைக் கண்டாள். அவனை விட்டு அவளது பார்வை அகலவில்லை. இமைக்கவும் மறந்தாள்.

அவள் கண்களையும், முக பாவனையும் பார்த்த ஷ்யாம், 'தன் மனைவி பக்த மீராவாக மாறி அந்தக் கண்ணனை நினைத்துப் பாடவில்லை என்பதைப் புரிந்து கொண்டான். அவளுடைய கண்ணனான தன்னை நினைத்த அவள் பாடியதாக அவனுக்குத் தோன்றியது. என் காதலுக்காக ஏங்குகிறாளா?' என்ற எண்ணம் அவனுக்குள் எழுந்தது.

இருவரும் அடுத்தவரை அசையாது பார்த்துக் கொண்டிருந்தனர். முதலில் சுதாரித்தவள் மீரா தான். சோபாவில் இருந்து எழுந்து தனது கண்களைத் துடைத்துக் கொண்டே அங்கிருந்து அகன்றாள்.

செல்லும் தன் மனைவியைத் தன் பார்வையால் தொடர்ந்த ஷ்யாம் அவள் அவனது கண் பார்வையை விட்டு மறைந்ததும் தனது கண்களை மூடி அமைதியாக சிந்திக்க ஆரம்பித்தான்.

'இவர்கள் இருவரும் திரும்பி வந்த பின் என் குழந்தைகளிடம் நான் நெருக்கம் காட்டினேன். ஆனால் நான் மீராவைப் பற்றி ஏன் சிந்தித்துப் பார்க்கவில்லை?

இந்த ஜென்மத்தில் இவளைத் தவிர வேறொரு பெண் என் வாழ்க்கையில் வரப் போவதில்லை. அவள்

இடத்தில் வேறு ஒருத்தி என்ற நினைப்பே கசப்பாக இருக்கிறது. அப்படியெனில் மனைவி என்ற ஸ்தானத் தில் இருப்பவளுக்கு, அவளுக்கு உரிய மரியாதையை யும், உரிமையையும் நான் தர வேண்டும் தானே!" என்று எண்ணிப் பார்த்தான்.

மீரா பாடிய 'காலமெல்லாம் காலமெல்லாம். அவன் காதலை எண்ணி உருகுமோ என உள்ளம்' என்ற வரிகள் அவனது காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

என் குழந்தையிடம் இயல்பாய் ஒட்ட முடிந்த என்னால் ஏன் இவளிடம் ஒட்ட முடியாமல் போனது? என்ற கேள்வி மனதில் எழுந்ததும் முன்பு தான் அவ ளுக்குக் காட்டிய பாராமுகமும், அலட்சியமும் அவன் கண் முன் வந்து நின்றது.

என்னையும் அறியாமல் நான் செய்த தவறுகளுக்கு அவளிடம் மன்னிப்பைக் கேட்டு அவளுக்கு நல்ல கண வனாக மாறுவேன் என்ற உறுதிமொழியை எடுத்தான்.

பின் மாடியேறிச் சென்றான். ஷ்யாம் மாடி ஏறுவதைப் பார்த்து தியாவும் அவன் பின்னோடு மாடியேறினாள்.

மீரா தட்டு நிறைய முறுக்குகளுடன் மேலே சென்றாள். அறைக்குள் நுழைந்த தாயின் கைகளில் இருந்த முறுக்கைப் பார்த்து,

''அம்மா, இன்னைக்கு முறுக்கு போட்டீங்களா? அப்போ மாவு?'' என்று தியா கேட்டதும்,

மீரா கையில் இருந்த கிண்ணத்தை தியா முன் நீட்டினாள்.

''முறுக்கு மாவு எதுக்குடா பேபி?'' என்று ஷ்யாம் கேட்டதும்,

''அப்பா, நீங்க இந்தப் பக்கம் திரும்பக் கூடாது'' என்று அவன் மகள் அவனுக்குக் கட்டளை பிறப்பிக்க, அவனும்



அதற்கு அடிபணிந்து குளியலறைக்குள் சென்று மறைந் தான்.

மீரா முறுக்கு மாவை எடுத்து கொஞ்சமாக தண்ணீர் தொட்டு தியாவின் கன்னத்தில் முறுக்கு மீசையை ஒட்ட வைக்க... அதை தியா தன் பிஞ்சு விரல்களால் பற்றிய படியே குளியலறையில் இருந்து வெளிப்படும் தந்தைக் காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

அவன் குளியலறையில் இருந்து வெளிப்பட்டதும், ''டாடி, தியாக்கு எவ்ளோ பெரிய மீசை பாருங்க'' என்று காட்டி மகிழ்ந்தாள்.

''ஹேய் பேபி! சிங்கம் சூர்யா மீசை வைச்சிருக் கீங்களா?'' என்று ஷ்யாம் வியப்புக் காட்டி விசாரிக்கவும்,

தந்தை குறிப்பிடும் சினிமா பற்றி ஒன்றும் அறியாத தியா, ''இல்லைப்பா இது முறுக்கு மீசை'' என்று பதிலளிக்க,

''இல்லைடா பேபி. சிங்கம் படத்திலே சூர்யா இப்படித் தானே மீசை வைச்சிருப்பார்'' என்று அவன் விளக்கியும் தியாவிற்குப் புரியவில்லை.

கார்ட்டூனில் வரும் அனைத்து காரெக்டர்களையும் கரைத்துக் குடித்திருந்த தியாவிற்கு சினிமா கதாநாய கர்கள் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

அதனால் அவள் ஷ்யாமிடம், ''சூர்யா யாருப்பா?'' என்று விளக்கம் கேட்டாள். ஷ்யாமும் சிறு குழந்தைக்குப் புரியும் வண்ணம் சினிமா பற்றி விளக்கிச் சொன்னான்.

''சினிமான்னா பெருசா இருக்குமா? இவ்ளோ பெருசா இருக்குமா?'' என்று தன் இரு கைகளையும் விரித்து தியா கேட்க,

ஷ்யாமும் மகளைப் பின்பற்றித் தனது இரு கைகளை யும் விரித்து, ''இதை விடப் பெருசா இருக்கும்'' என்றான்.

அவளது கண்கள் ஆர்வத்தில் மின்னின. ''அது எங்க இருக்கு?'' என்று அவள் ஆசையும், ஆர்வமும் போட்டி போடக் கேட்டதும்,

''அதைப் பார்க்கணும்ன்னா தியேட்டருக்குப் போகணும்டா குட்டி'' என்று மகளைப் பார்த்துச் சொன்னவன் மனைவியைப் பார்த்து,

''நீ இதுவரைக்கும் இவளைத் தியேட்டருக்குக் கூட்டிட்டுப் போனதில்லையா மீரா?'' என்று கேட்டான்.

''நான் தியேட்டருக்குப் போய் கிட்டதட்ட நாலு வருஷம் ஆகப் போகுது. நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி தியேட்டர் போனது தான். அதுக்கு அப்புறமா போகலை. இந்த லட்சணத்திலே இவளை எங்கே கூட்டிட்டுப் போக...'' என்றாள்.

''ஓ'' என்று சொன்னவன் மகள் புறம் திரும்ப.... தியா ஷ்யாமிடம், ''நாம அங்க போவமா? இன்னைக்குப் போவமா?'' என்று கேட்டாள்.

ம்ம்ம் என்று சில நொடிகள் யோசித்தவன், ''இப்போ போக முடியாதுடா குட்டி. நாம நாளைக்குப் போவோமா? நீயும், அம்மாவும் டிரஸ் பண்ணி ரெடியா இருங்க. நான் நாளைக்கு ஆபீஸில் இருந்து வந்ததும் கூட்டிட்டுப் போறேன்'' என்றான்.

அன்று நண்பனின் பார்ட்டிக்குச் சென்ற பொழுது, 'இனி வெளியே எங்கு செல்வதானாலும் மீராவையும் அழைத்துச் செல்ல வேண்டும்!' என்று தான் எடுத்துக் கொண்ட தீர்மானத்தின்படி ஷ்யாம் தன் மனைவியையும் தியேட்டருக்குக் கூட்டிச் செல்வதாகச் சொன்னான்.

மீராவோ மனதுக்குள் 'என்னை மாதிரி தியாவும் ஏமாறப் போகிறாள். இவர் தியேட்டர் கூட்டிட்டுப் போகும்



லட்சணம் எனக்குத் தெரியாதா?' என்று நொடித்துக் கொண்டிருந்தாள்.

சரி என்று தலையாட்டி தியா சினிமாவைப் பற்றிய பேச்சைக் கைவிட்டாள். அவளின் கவனம் மீண்டும் முறுக்கு மாவு மீசையில் வந்து நின்றது. தன் தாயிடம் திரும்பி, ''அம்மா, அப்பாக்கும் மீசை வைங்க'' என்றாள்.

''அப்பாக்குத் தான் ஏற்கனவே இருக்கே!'' என்று மீரா சொன்னதும் தகப்பனை நிமிர்ந்து பார்த்த தியா ஆமாம் என்பது போல் தலையாட்டிக் கொண்டே தாயைத் திரும்பிப் பார்த்தாள்.

ஷ்யாமையும் மீராவையும் மாறி மாறி தலையைத் திருப்பி அவள் பார்ப்பதைக் கண்ட அவளது பெற்றோர்க்கு முறுவல் பிறந்தது.

''என்னடா பேபி பார்க்கிறே?'' என்று ஷ்யாம் கேட்டவுடன்,

தாயை இழுத்துக் கொண்டு தந்தையின் அருகில் படுக்கையில் உட்கார வைத்தவள் தாயன் கையிலிருந்த கிண்ணத்தை வாங்கி ஷ்யாமிடம் தந்து, ''அப்பா, நீங்க அம்மாக்கு மீசை வைங்கப்பா!'' என்று பொறுப்பைத் தந்தையிடம் ஒப்படைத்தாள்.

'இதைத் தான் இவ்வளவு நேரமா ஆராய்ச்சி பண்ணினாயா?' என்று நினைத்துக் கொண்ட ஷ்யாம் மீராவை அமைதியாகப் பார்க்க,

''செய்யுங்கப்பா!'' என்று வற்புறுத்திய தியா, ''நான் போய் தாத்தாகிட்டே என் மீசையைக் காட்டிட்டு வரேன்'' என்று கீழே சென்றுவிட்டாள்.

ஷ்யாம் மீராவின் தாடையைப் பிடித்துத் தன் புறம் திருப்பினான். மீராவின் கண்களைப் பார்க்க... அவனும்

அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்கள் நான்கும் கலந்தன. அவன் தன் பெருவிரலால் அவள் கன்னத்தில் முன்னும் பின்னும் கோடு இழுத்தான்.

மீராவிற்கு இன்ப அவஸ்தையாக இருந்தது. ஷ்யாமிற்கோ சற்று முன் அவள் பாடிய பாடல் காதில் ஒலிக்க... மனைவியின் முகத்தை அருகில்... வெகு அருகில் பார்ப்பது புதுவித உணர்வைத் தர... அங்கே மௌனமே ஆட்சி செய்தது.

*விழியில் விழுந்து இதயம் நுழைந்து*

*உயிரில் கலந்த உறவே*

*எனக்கு மட்டும் கேட்கும் உனது உயிர் உருகும் சத்தம்*

என்று அவர்கள் இருவரும் அடுத்தவர் மீது வைத்த பார்வையை மாற்றாமல் மனதுக்குள் பாடிக் கொண்டிருக்க...

"அம்மா, என் மீசை விழுந்திடுச்சு. நான் இன்னும் தாத்தா கிட்டே காட்டலை. எனக்கு வேற வைங்க" என்று அழுது கொண்டே தியா அறைக்குள் ஓடி வந்தாள். தங்களின் மோன நிலையில் இருந்து இருவருமே கலைந்தனர்.

அதன் பின் மகளைக் கவனிப்பதில் அன்றைய பொழுது கழிந்தது.

எப்பொழுதும் தூங்கும் போது மீராவின் மீது தன் கையைப் போட்டுக் கொண்டு தூங்கும் ஷ்யாம் அன்று இரவு அவளிடம் நெருங்கிப் படுத்து அவளை அணைத்தவாறு தூங்கினான்.

மீராவிற்கு கணவனது அணைப்பு ஆறுதலையும், எதிர்காலம் குறித்த நம்பிக்கையும் அளித்ததால் அன்று நிம்மதியாகத் தூங்கினாள்.



# 19

அடுத்த நாள் தியா மீராவையும், தாத்தாவையும் ஷ்யாமிற்கு போன் போட்டு தரச் சொல்லி அன்று அவர்கள் சினிமா செல்ல வேண்டியதை நினைவு படுத்திக் கொண்டே இருந்தாள்.

மகளின் ஆர்வத்தினால் அருகில் இருந்த அபிராமி மாலில் டிக்கெட் கிடைக்காத போதும் வேறு தியேட்டரில் ஷ்யாம் முன் பதிவு செய்தான்.

தந்தை தன்னை சினிமா பார்க்கக் கூட்டிச் செல்வான் என்று நம்பி மாலையே தான் நன்றாக உடை அணிந்ததோடு மட்டுமல்லாமல் தாயையும் நன்றாக உடை அணிய வைத்து தியா காத்திருக்க ஆரம்பித்தாள்.

மகள் ஏமாற்றத்தை எப்படி எதிர்கொள்வாளோ என்று பயந்த மீரா, "தியா, அப்பாக்கு நிறைய வேலை இருந்தால் வரமாட்டாங்க. நாளைக்குப் போகலாம். தியா அழுது ஆர்ப்பாட்டம் பண்ணக்கூடாது" என்று மெதுவாக மீரா மகளுக்கு எடுத்துரைக்க,

"அப்பா வருவாங்க. என்னைக் கூட்டிட்டுப் போவாங்க" என்று தியா அழுத்தம் திருத்தமாகச் சொல்ல, மீராவிற்குத் தான் மகளை நினைத்து கவலையாக இருந்தது.

மாலை ஆறரை மணிக்கு ஷ்யாம் வீடு திரும்ப... "அப்பா வந்தாச்சு" என்று தியா துள்ளிக் குதித்து ஓடினாள்.

ஷ்யாம் மகளை வாரி அணைத்ததும் தியா அவனது தாடையைத் தன் புறம் திருப்பி, ''அப்பா நாம சினிமா போறோம் தானே?'' என்று கேட்டாள்.

"கண்டிப்பாடா பேபி. அப்பா டிக்கெட் வாங்கிட்டேனே!"

'இதைப் பாருடா அதிசயத்தை! மகள் என்றால் இவருக்கு ஸ்பெஷல் தான் போல! சொன்ன சொல்லைக் காப்பாத்துறார்' என்று மீரா மனதிற்குள் கணவனுக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்கினாள்.

''அப்போ வாங்க போவோம்'' என்று தியா வாசல்புறம் கைகாட்ட,

''அப்பா அஞ்சு நிமிஷத்திலே டிரஸ் மாத்திட்டு வந்துடுறேன்'' என்று சொல்லி அவளை இறக்கி விட்டவன் மேலே சென்று உடை மாற்றி வந்த பொழுது பத்து நிமிடங்கள் கடந்திருந்தது.

சரியாக அந்த நேரம் அவர்கள் வீடு தேடி வந்த உறவினர் குடும்பத்தை உபசரித்து மகாலிங்கம் பேசிக் கொண்டிருக்க ஷ்யாமால் உடனே வெளியே கிளம்ப முடியாமல் போனது.

அவர்கள் அருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவனுக்கு பொறுமை பறந்ததோ இல்லையோ அவன் மகளுக்குப் பொறுமை பறந்தது.

''அப்பா போலாம்'' என்று கத்தத் தொடங்கி விட்டாள்.

வந்திருந்த உறவினர்களிடம் நிலைமையை விளக்கி அவர்கள் மூவரும் வெளியேறி காரில் வந்து அமரும் பொழுது மணி 7.15 ஆனது.

வெகு நாட்களுக்குப் பின் கணவனுடன் காரில் பயணிப்பது மீராவிற்கு சந்தோஷத்தை தந்தது. முன்



னிருக்கையில் உட்கார்ந்து, மகளை மடியில் வைத்துக் கொண்டாள்.

''எந்தத் தியேட்டருக்குங்க போறோம்?''

''பெரம்பூரில்இருக்கும் S2 மீரா.''

''அங்கே போக எவ்வளோ நேரம் ஆகும்?''

''சீக்கிரம் போயிடலாம்.''

''எத்தனை மணிக்கு ஷோ?''

''ஏழு மணிக்கு.''

''என்னது ஏழு மணிக்கா? மணி இப்போ என்னன்னு தெரியுமா?'' என்று முறைத்துக் கொண்டே கேட்டவளிடம்,

''தெரியும்மா... என்ன செய்யுறது? லேட் ஆகிடுச்சு. எப்படியும் இவளும் எவ்வளவு நேரம் தியேட்டரில் உட்கார்ந்து இருப்பாளோ? அவ உட்கார்ந்திருப்பாளா மாட்டாளா என்று டிரையல் பார்க்கப் போறதா நினைச்சிக்கோ'' என்று அவன் மீராவை சமாதானம் பண்ணினான்.

அவர்கள் தியேட்டருக்குள் நுழைந்து தங்களின் இடம் தேடி அமர்ந்தார்கள். ஓரமாக உள்ள மூன்று சீட் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

''நான் அப்பா மடியிலே தான் உட்கார்வேன்'' என்று சொல்லி தியா ஷ்யாமின் மடியில் உட்கார்ந்து கொண்டு, ''ரொம்ப பெருசா இருக்கில்லப்பா!'' என்று வியக்க ஆரம்பித்த ஐந்தாவது நிமிடம் இடைவேளை விட்டார்கள்.

மீரா வெளியே வருகிறாளா என்று கேட்டு, அவள் வரவில்லை என்று மறுத்ததும் ஷ்யாம் தியாவைக்

கூட்டிக் கொண்டு வெளியே சென்று பாப் கார்ன் வாங்கிக் கொண்டு வந்தான். படம் ஆரம்பித்து ஐந்து நிமிடங்கள் தியா அமைதியாக இருந்தாள்.

ஆனால் அவளுக்கு சினிமாவில் பேசும் வசனம் புரியாத காரணத்தாலும், ஐந்து நிமிடங்கள் கழித்ததும் திரும்பவும் விளக்குகள் ஒளிர்ந்து மீண்டும் வெளியே செல்லலாம் என்று அவள் நினைத்தது நடக்காததாலும் ஷ்யாமை சுரண்ட ஆரம்பித்தாள்.

''அப்பா வெளியே போலாம்'' என்று அவள் நச்சரித்த தால், அவன் மீராவிடம் சொல்லிவிட்டு தியாவை வெளியே அழைத்துச் சென்றான். மீரா படத்தில் மூழ்கி னாள்.

படம் முடிந்தவுடன் மீரா அருகே திரும்பிப் பார்க்க... அங்கே ஷ்யாமையும், மகளையும் காணாது குழம்பி னாள்.

''அப்போ போனவங்க இன்னமுமா வரலை? இங்கே எங்காவது இருப்பாங்களோ? இல்லை வழக்கம் போல் என்னை விட்டுட்டுப் போயிட்டாரா?' என்ற எண்ணம் தோன்றவும் அவளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

'இவருக்கு இதே வேலையாப் போச்சு' என்று திட்டிக் கொண்டே தியேட்டரை விட்டு வெளியே வந்தாள்.

ஷ்யாம் தான் தியாவைத் தூக்கிச் சென்றான் என்ப தால் அவள் தியாவைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படவில்லை. மகளைக் கணவன் பத்திரமாக வீடு சேர்த்திருப்பான் என்று திட்டவட்டமாக நம்பினாள். தன்னைத் தான் நட்டாத்தில் தவிக்கவிட்டு விட்டான்



என்று திட்டிக் கொண்டே தியேட்டரை விட்டு வெளி யேறினாள்:

மணி இரவு பத்தானது. ஆனாலும் தியேட்டர் வாசலில் மக்கள் நடமாட்டம் அதிகரிக்கவே காணப்பட்டது அவளுக்குச் சிறிது தெம்பை வரவழைத்தது.

மூன்று ஆட்டோ ஓட்டுநர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டு, ''ஆட்டோ வேணுமா? எங்கே போகனும்?'' என்று கேட்டதும் மீராவிற்கு பழைய ஞாபகம் வந்தது.

அவளுக்கு இப்போது தனது வீடு இருக்கும் இடத்தை ஆட்டோ ஓட்டுநருக்கு விளக்கிச் சொல்ல முடியும் என்ற போதிலும் இரவு நேரத்தில் பயணிக்க வேண்டி இருப்பதால் எந்த ஆட்டோவில் பயணிக்கலாம் என்று அந்த ஆட்டோ ஓட்டுநர்களின் முகத்தை ஆராய ஆரம் பித்தாள்.

''என்னம்மா ஆட்டோ வேணுமா வேண்டாமான்னு பதில் சொல்லாமல் முழிக்குறே'' என்று ஒருவன் சுத்த மீராவிற்கு லேசாக பயம் வந்தது.

சரியாக அந்த நேரம் அந்த ஆட்டோ ஓட்டுநருக்கு மீராவிற்கும் இடையில் ஒரு பைக் சீறிக் கொண்டு வந்து நின்றது. அதில் இருந்த ஷ்யாம் ஆட்டோ ஓட்டுநரைப் பார்த்த பார்வையில் அவன் வேறுபுறம் சென்றான்.

ஷ்யாமைப் பார்த்த மீராவிற்கு நிம்மதி வந்தது. மீரா பின்னால் ஏறி அமர்ந்ததும் ஷ்யாம் பைக்கை கிளப்பிக் கொண்டு சென்றான்.

சரியான நேரத்தில் கணவன் தன்னை அழைத்துச் செல்ல வந்துவிட்ட போதும் மீராவிற்கு அவன் மீதிருந்த

கோபம் வடியவில்லை. 'எதுக்கு விட்டுட்டுப் போக ணும்? அப்புறமா வரணும்' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டிருந்தாள்.

வீட்டில் இறங்கியவுடன் மீரா கத்த ஆரம்பிக்க... ஷ்யாமோ, ''இங்கே வைச்சு எதுவும் பேசாதே. நம்ம ரூமுக்கு வா'' என்று சொல்லி மாடிக்குக் கூட்டிச் சென் றான்.

அறைக்குள் நுழைந்ததும் மீரா பொரிய ஆரம்பித்தாள்.

''உங்க மனசிலே என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க? தியாவைப் பார்ட்டிக்குக் கூட்டிட்டுப் போன அன் னைக்கே உங்களுக்கு அவ்வளவு தூரம் பாடம் எடுத் தேனா இல்லையா? நீங்க திரும்பவும் அப்படியே தான் செய்வீங்கன்னா என்ன அர்த்தம்? எதுக்கு என்னை விட்டுட்டுப் போனீங்க? உங்களுக்குப் பொண்டாட்டி வேண்டாமா? பொண்ணு மட்டும் போதுமா?'' என்று அவள் பாட்டுக்குக் கத்திக் கொண்டே இருக்க,

அவன் தனது கைகளை மார்பிற்குக் குறுக்கே கட்டிக் கொண்டு அவளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தான்.

''இப்போ எதுக்கு ஸ்டைலா போஸ் கொடுக்குறீங்க?'' என்று அவனது தோற்றத்தைக் கிண்டலடித்தவள் மேலும், ''ஆனால் நான் உங்களை நம்பாமல் செல்போன், பணம் எல்லாத்தையும் எடுத்திட்டுத் தான் போனேன்'' என்று சொன்னதும் அவளைப் பார்த்து முறுவல் புரிந்தவன்,

''கொண்டு போனால் மட்டும் போதாதும்மா. அதை யூஸ் பண்ணவும் செய்யணும்'' என்று கிண்டல் பண்ணி னான்.



அவனது கிண்டலும், முறுவலும், தெனாவட்டாச அவன் நின்ற கோலமும் அவளுக்குக் குழப்பத்தை ஏற் படுத்தின. அவள் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு நிற்கவும்,

''உன் செல்போன் எங்கே?'' என்று அவன் கேட்டான்.

தனது ஹேண்ட் பேகில் இருந்து வெளியே எடுத் தவள் அதை ஆராய... அதில் கணவனின் எண்ணி லிருந்து வந்திருந்த கணக்கிலடங்கா மிஸ்டு கால்களை யும்,

மீரா, தியா வீட்டுக்குப் போகணும்ன்னு அடம் பிடிக்கிறாள். படம் பார்த்தது போதும். வெளியே வா.

நீ படத்தைப் பார். நான் மட்டும் போய் அவளை வீட்டில் விட்டுவிட்டு வருகிறேன்.

வீட்டுக்கு வந்திட்டேன். அவளைச் சாப்பிட வைச்சுத் தூங்க வைச்சிட்டு உன்னைக் கூட்டிட்டுப் போக வரேன்.

என்று வந்திருந்த குறுஞ்செய்திகளையும் பார்த்தவள் தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்து விட் டாள்.

மெதுவாக கணவனின் முகம் பார்த்து, ''தியேட்டருக் குள்ளே போனதும் போனை சைலன்ட் மோடிலே போட்டேங்க...'' என்று மெதுவாகத் தயங்கி இழுக்க,

''கொஞ்ச நேரத்துக்கு முன்னே வரைக்கும் சத்தம் ஜாஸ்தியா வந்துச்சு. இப்போ வெறும் காத்து தான் வருதா மீரா?'' என்று அவளைக் கிண்டல் பண்ணியவன் அவளது தலையில் செல்லமாகத் தட்டினான்.

அவள் அவனைப் பார்த்து அசடு வழிந்தாள்.

''சைலன்ட் மோடிலே போட்டது தப்பில்லை மீரா. ஆனால் அது கூடவே வைப்ரேஷனை ஆன் பண்ணி இருந்தால் எந்தப் பிரச்சனையும் வந்திருக்காது'' என்று சொன்னவன் மேலும் நகைத்துக் கொண்டே,

''ஏன் மீரா, பாதி படத்தில் போனதுக்கே கூட வந்த புருஷனும், பொண்ணும் என்ன ஆனாங்கன்னு பார்க்காமல் படத்திலே மூழ்கிட்டியே. முழுப் படமும் பார்த்திருந்தால் என்னவாகி இருக்கும்?'' என்று அவளை வம்பிழுத்தான்.

''நீங்க பாதிப் படத்தில் கூட்டிட்டுப் போனதால் தான் இந்தப் பிரச்சனையே! முதல் பாதியில் என்ன நடந்து இருக்கும் என்று அதைப் பத்தியே சிந்திச்சதிலே உங்க ரெண்டு பேரையும் கவனிக்க மறந்துட்டேன். படம் வேறு விறுவிறுப்பா போச்சா... இது தான் நான் தியேட்டரில் பார்க்கிற முதல் தமிழ் படமா... அதான்... சாரி'' என்றதும்,

அவன் சிரித்துக் கொண்டே, ''ஓ.கே. கீழே போய் சாப்பிட்டு முடிச்ச பின் தாத்தா ரூமில் இருந்து தியாவைக் கூட்டிட்டு வருவோம். வா...'' என்று சொல்லி அழைத்துச் சென்றான்.

தான் பொறுப்பில்லாமல் நடந்து கொண்ட போதும் கணவன் தன்னைத் திட்டாததோடு, தனக்காகத் திரும்பவும் தியேட்டர் வரை அழைத்துச் செல்ல வந்ததும் மீராவிற்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தந்தது. ஒரு புன்முறுவலுடனே அவனைப் பின்பற்றி கீழே சென்றாள்.



# 20

மறுநாள் சீக்கிரமாக வீடு திரும்பிய ஷ்யாமிடம், ''ஹேய் டாடி! இன்னைக்கும் சீக்கிரம் வந்துட்டீங்க ஜாலி!'' என்று சந்தோஷமாக தியா கூவவும்,

''டாடிக்கு காலையில இருந்து ஒரு மீட்டிங். அது முடிஞ்சதும் நேரா தியா பேபியைப் பார்க்க வந்துட்டேன்'' என்று கூறிக் கொண்டே மகளது கன்னத்தில் முத்தமிட்டவன் தனது அறைக்குச் சென்று உடை மாற்றி வந்தான்.

வரவேற்பறையில் அமர்ந்து கொண்டு அவன் தொலைக்காட்சியில் மூழ்கினான். அப்பொழுது மழை பொழிய ஆரம்பித்தது. மழையைக் கண்டதும் தியாவிற்கு குஷி பிறந்தது.

''அம்மா மழை பெய்யுது பாருங்க!'' என்று அடுக்களையில் உள்ள மீராவுக்கு கேட்குமாறு கூவியவள் ஷ்யாமிடம் விரைந்து வந்தாள்.

''அப்பா நாம தண்ணிலே கப்பல் விடுவோமா?'' என்றாள்.

''கப்பல் தண்ணியிலே தான்டா பேபி போகும். பின்னே தரையிலா போகும்?'' என்று அவன் கேட்டதும்,

அவனை முறைத்துக் கொண்டே, ''அப்பா, நான் பேப்பரில் கப்பல் செஞ்சு மழை தண்ணியிலே விட்டு விளையாடலாமா கேக்குறேன்'' என்றாள்.

"பேப்பரிலே கப்பலா? அதை எப்படிடா பேபி செய்ய முடியும்?"

"நீங்க விளையாடினதே இல்லையா? உங்க அப்பா செஞ்சு தரலையா?"

"எங்க அப்பாவா?" என்று இகழ்ச்சிப் புன்முறுவல் பூத்தவன், "நான் எங்கப்பா கூட இருந்ததே இல்லையே! எங்க வார்டன் மழை பெய்தால் ரூமுக்குள்ளே போட்டுப் பூட்டி வைச்சிடுவார்" என்று வருத்தத்துடன் மொழிந் தான்.

கேட்டுக் கொண்டிருந்த மீராவிற்கு சங்கடமாக இருந்தது. அவன் தனது இளமைப் பருவத்தில் மிகவும் தனிமைப் படுத்தப்பட்டு இருப்பது புரிந்து வருந்தினாள்.

மீராவிடம் வந்த தியா, "அம்மா சந்துரு மாமாக்கு போன் பண்ணுங்க!" என்றாள்.

"எதுக்கடா தியாம்மா?"

"போன் போடுங்க சொல்லுறேன்" என்று வற்புறுத்தி சந்துருவை அழைக்க வைத்தாள்.

ரிங் போகும் சத்தம் கேட்டவுடன் மீராவிடம் இருந்து கைப்பேசியைப் பறித்தவள் சந்துருவின் குரலுக்குக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

அந்தப் பக்கம் சந்துரு "ஹலோ" என்று சொன்ன வுடன், "மாமா, பேப்பர் கப்பல் எப்படிச் செய்யணும்?" என்று கேட்டாள்.

"ஹேய் தியா குட்டி! எப்படி இருக்கீங்க? ஊருக்குப் போன பின்னாடி மாமாவை மறந்துட்டீங்களா? ஏன் போன் பண்ணலை?" என்று அவன் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போக,



"மாமா, நான் கப்பல் எப்படிச் செய்யணும்னு கேட்டேன்" என்று அவள் தன் கேள்வியிலேயே பிடி வாதமாக நின்றாள்.

"போனிலே சொன்னா உனக்குப் புரியாதுடா குட்டி. நீ சின்ன பொண்ணு தானே!"

"இல்லை நான் பிக் கேர்ள் ஆகிட்டேன். ஸ்கூல்கெல் லாம் போறேனே! நீங்க சொல்லுங்க" என்று அழுத்திச் சொன்னதும்,

"உங்க அம்மாக்கே செய்யத் தெரியுமே!" என்று சந்துரு சொன்னதும்,

"அப்போ பை" என்று சொல்லி அவனது பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் அழைப்பைத் துண்டித்தாள்.

நேரே மீராவிடம் சென்றவள் அவளது புடவையைப் பிடித்து இழுத்து, "அம்மா, உங்களுக்குக் கப்பல் செய்யத் தெரியுமாமே! சந்துரு மாமா சொன்னார். எனக்கு இப்பவே கப்பல் செஞ்சு தாங்க" என்றாள்.

அவளது பேச்சைத் தட்டாது மீரா உடனே காகிதக் கப்பல் செய்து தந்தாள்.

"அம்மா இதை விடப் பெருசா இன்னொண்ணு செஞ்சு தாங்க" என்றாள்.

"அதான் ஒண்ணு செஞ்சு தந்துட்டேனே! இன் னொண்ணு எதுக்குடா குட்டி?"

"அது அப்பாக்கு."

"அப்பாவுக்கா? அவருக்கு எதுக்கு?"

"அப்பா பாவம். கப்பல் செஞ்சு விளையாண்டதே இல்லையாம். அவங்க டாடி செஞ்சு தரலையாம். பேட்

டாடி இல்லை! அதான் நானும் அப்பாவும் இன்னைக்கு விளையாடப் போறோம். என்னைவிடப் பெரிய கப்பலா டாடிக்கு செஞ்சு தாங்க'' என்று சொன்னதும் மீரா நிமிர்ந்து ஷ்யாமைப் பார்த்தாள்.

அவன் தியாவைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் தனது மகளது பேச்சில் கலங்கி இருப்பது மீராவிற்கு புரிந்தது. மீரா மகளின் ஆசைப்படி சற்றுப் பெரிய காகிதக் கப்பலை செய்து நீட்டவும், அதை வாங்கிக் கொண்டு தியா உற்சாகமாகத் தந்தையிடம் ஓடினாள்.

''டாடி எங்கூட வாங்க. நான் உங்களுக்கு கப்பல் வச்சு விளையாடச் சொல்லித் தரேன்'' என்று கைப் பிடித்து இழுத்தாள்.

''மழையிலே நனைஞ்சா உனக்கு ஜுரம் வந்திடு மேடா பேபி.''

''தியா ரெயின் கோட் போட்டுக்குவாள். நீங்க வாங்க டாடி'' என்றதும் அவனும் எழுந்தான்.

மீரா தியாவின் மேல் மழை நீர் படாமல் இருப்பதற்கு அவளுக்கு ரெயின் கோட்டையும், காலில் தண்ணீர் படாமல் இருப்பதற்கு ஷூவையும் அணிவித்து விட்டாள்.

அவளிடம் மீரா இரு துடைப்பக் குச்சிகளைக் கொண்டு வந்து கொடுக்கவும், ஒரு தாங்க்ஸ்மா சொல்லி வாங்கிக் கொண்டாள்.

''டாடி தியா ரெடி. நீங்க ரெடியா?'' என்று ஷ்யாம் முன்னே வந்து கேட்டதும்,



''டாடி ரெடி தான். குச்சி எதுக்குடா பேபி?'' என்று அவன் தன் சந்தேகத்தைக் கேட்டான்.

அவனது கேள்விக்கு பதில் சொல்லாமல், ''வாங்க சொல்லுறேன்'' என்று கூட்டிச் சென்றாள்.

''இப்போ சொல்ல மாட்டியா? அது சஸ்பென்ஸா? சரி வாங்க போகலாம்'' என்று கூறி மகளைத் தூக்கிக் கொண்டு அவன் வெளியேறினான்.

அப்பாவும், மகளும் தண்ணீர் எங்கே தேங்கி இருக்கிறது என்று ஆராய்ச்சி நடத்தினார்கள். தோட்டத்தில் செடிகள் இருக்கும் இடமெல்லாம் பள்ளமாக இருக்க... தண்ணீர் அங்கே தேங்கி நின்றது.

அதுவரை பெரிதாகக் கொட்டிக் கொண்டிருந்த மழையும் லேசான சாரலாக அடிக்க ஆரம்பித்திருந்தது. அது அவர்களுக்கு வசதியாகப் போனது.

குனிந்து முதலில் தனது காகிதக் கப்பலை தண்ணீருக்குள் மெதுவாக விட்ட தியா ஷ்யாமைப் பார்த்து, ''அப்பா, இந்தாங்க இது உங்க கப்பல். நீங்களும் என்னை மாதிரி மெதுவா விடுங்க'' என்று அவனிடம் காகிதக் கப்பல் ஒன்றை நீட்டி தகப்பனுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தாள்.

அவனும் பெரிய புன்முறுவலுடனே அவள் சொன்னது போல் செய்யவும்...

''ஹையோ இப்போ ரெண்டு கப்பலும் மிதக்க ஆரம்பிச்சிடுச்சு. யார் கப்பல் வேகமா போகுது பார்க்கலாமா?'' என்று காகிதக் கப்பல் போட்டி ஒன்றை அறிவித்தாள்.

அவன் பெரிதாக சிரித்துக் கொண்டே, ''கப்பல் அதுவா தண்ணிக்குள்ளே போகப் போகுது. இதிலே போட்டி எப்படி வைக்க முடியும்?'' என்று கேட்டதும்,

தனது கையால் வாயைப் பொத்திச் சிரித்தவள், ''அப்பா, உங்களுக்கு ஒண்ணுமே தெரியலை. இந்தாங்க குச்சி. இதை வைச்சு நீங்க உங்க கப்பலை பாஸ்ட்டா ஓட்டுங்க. நான் என் கப்பலை அதை விட பாஸ்டா ஓட்டுறேன்'' என்று சொல்லி அவனிடம் ஒரு துடைப்பக் குச்சியை நீட்டியதும்,

அதைக் கை நீட்டி வாங்கிக் கொண்டவன், ''ஓ! இதிலே இவ்வளவு விஷயம் இருக்கா? சரி போட்டிக்கு நான் ரெடி'' என்றான்.

அடுத்த முக்கால் மணி நேரமும், 'என் கப்பல் உங்க ளோடதை முந்திடுச்சு. தியா தான் பர்ஸ்ட்' என்றோ 'அச்சோ! அப்பா கப்பல் வேகமா போகுது. ஹேய் தியா கப்பல் வேகமா போ!' என்ற கூக்குரலோ ஒலித்துக் கொண்டே இருந்தது.

வியாபாரத்தில் புலியாக யாருமே அணுக முடியாதவ னாக இருக்கும் ஷ்யாம் தனது மகள் வயதிற்கு இறங்கி அவளுக்குச் சரிக்குச் சரியாக ஈடு கொடுத்து விளை யாடிக் கொண்டிருந்தான்.

அடுக்களையில் தனது வேலைகளை முடித்துவிட்டு வந்த மீரா அவர்களது விளையாட்டை ரசித்துக் கொண் டிருந்தாள். மகாலிங்கமோ தனது கண்ணோரம் நீர் துளிர்க்க தன் பேரனின் மகிழ்ச்சியில் ஆனந்தித்திருந்தார்.

'இறைவா! என் பேரனின் வாழ்க்கையை இனியாவது இன்பம் நிறைந்ததாக மாற்று. அவன் இந்த வீட்டில் வந்து பிறந்ததற்கு இதுவரை அனுபவித்த துன்பங்களே போதும்' என்று அவரது மனம் கடவுளிடம் வேண்டு கோள் வைத்தது.



முக்கால் மணி நேரம் விளையாடியதில் களைத்துப் போன தியா, ''அப்பா போதும். வீட்டுக்குப் போவோம்'' என்றாள்.

''சரி வாடா பேபி'' என்று கூறி அவளைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

அவன் வீட்டினுள் நுழைந்தவுடன் மீரா அவனிட மிருந்து தியாவை வாங்கினாள். அப்பொழுது தான் கணவனின் சட்டை முழுவதும் நனைந்திருப்பதைக் கண்டாள். அவனது தலையை வேகமாக அவள் ஆராய... அதுவும் நனைந்திருந்தது.

''என்னங்க இப்படி நனைஞ்சிருக்கீங்க? சாரல் அடிச்ச துன்னா ஒரு குடையைப் பிடிச்சுக்க மாட்டீங்களா? நீங்க லைட் கலர் ஷர்ட் போட்டிருந்தால் கூட எனக்குப் பார்த்த உடனே தெரிஞ்சு இருக்கும். டார்க் கலர் சட்டை போட்ட தால் நீங்க நனைஞ்சதே எனக்குத் தெரியலை. போய் முதல்ல டிரஸை மாத்துங்க'' என்று கடிந்தாள்.

அவளது அன்பான அதட்டலை ஒரு புன்சிரிப்புடன் ஏற்றவன் தனது அறை நோக்கிச் சென்றான்.

''அம்மா பசிக்குதும்மா'' என்று தியா சொன்னவுடன்,

மீரா, ''எனக்குத் தெரியுமே! நீ இப்படித் தான் சொல்லு வேன்னு... அதான் உனக்கு வடை போட்டு ரெடியா வெச்சிருக்கேன். நீ அப்பா கூட மேலே போ. நான் வடையை எடுத்திட்டு வரேன்'' என்றாள்.

படியேறத் தொடங்கியவன் மீரா சொன்னதைக் கேட்டதும் கீழே இறங்கி மகளைத் தூக்கிக் கொண்டு மேலே சென்றான்.

மீரா வடையைத் தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு மேலே வந்து பார்த்தபோது ஷ்யாம் மகளின் ஆடைகளை மாற்றிக் கொண்டு இருந்தான்.

''நான் உங்களைத் தானே டிரஸ் மாத்தச் சொன்னேன். அவ தான் நனையலையே! அவளுக்கு மெதுவா மாத்தி னால் போதாதா?'' என்று மீரா அலுத்துக் கொள்ளவும்,

''பரவாயில்லை மீரா. அவ குழந்தை. அவளுக்குத் தான் முதல்ல மாத்தணும். எனக்கு ஒண்ணும் ஆகாது'' என்று சமாதானம் சொன்னான்.

''அவளை நான் பார்த்துக்கிறேன். நீங்க போய் டிரஸ் மாத்திட்டு தலையைத் துவட்டுங்க'' என்று அவனை அனுப்பி வைத்தாள்.

மகளது காலில் யூகலிப்டஸ் தைலம் கொண்டு சூடு பறக்கத் தேய்த்து விட்டாள்.

''இப்போ போய் சாப்பிடு'' என்று சொன்னதும், தியா தாய் கொண்டு வந்த வடையை வாங்கிக் கொண்டு அங்கிருந்த சோபாவில் அமர்ந்து தொலைக்காட்சியை இயக்கச் சொல்லி அதைப் பார்க்க ஆரம்பித்தாள். அதில் சந்திரமுகி படத்தில் வரும் கொக்கு பரபர என்ற பாடல் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்த தியா, ''அப்பா, உங்களுக்கு பட்டம் விடத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''எதுக்குக் கேட்கிறே பேபி?''



''உங்களுக்குத் தெரிஞ்சா எனக்குச் சொல்லித் தரீங்களா?''

''எனக்குத் தெரியும்டா பேபி. அப்பா சன்டே அன்னைக்கு உனக்குப் பட்டம் விடச் சொல்லித் தரேன்'' என்றான்.

''சரிப்பா'' என்று சொன்னவள் தனக்குப் பிடித்த கார்ட்டூன் சேனலை வைத்துக் கொண்டு பார்க்க ஆரம் பித்தாள்.

ஷ்யாம் தலையைத் துவட்டிக் கொண்டே மீராவை ஜாடை காட்டி அழைத்தான். கணவன் தன்னிடம் பேச முனைவதே ஒரு அதிசயமான விஷயம். அதிலும் அவன் ஜாடை காட்டி அழைப்பதென்றால்... மீராவால் நம்பத்தான் முடியவில்லை.

குழப்பத்துடனே அவன் அருகில் சென்று, ''எதுக்குக் கூப்பிட்டீங்க?'' என்று கேட்டாள்.

''உனக்குப் பட்டம் விடத் தெரியுமா?'' என்று அவன் அப்பாவியாய் கேட்கவும் மீராவிற்கு சிரிப்பு வந்தது.

தனது சிரிப்பை அடக்கிக் கொண்டவளாய், ''ஏன் உங்களுக்குப் பட்டம் விடத் தெரியாதா?'' என்று கேட்டாள்.

தன் மகள் மீது பார்வையைப் பதித்தவன் மீராவிடம், ''ஷ்... மெதுவா பேசு. எனக்கு எப்படித் தெரியும்? ஹாஸ்டலில் இதெல்லாமா சொல்லித் தருவாங்க?'' என்று கேட்டதும்,

மீராவின் முகத்தில் சிரிப்பு மறைந்து அங்கே வருத்தம் குடிகொண்டது.

அவன் என்னவோ சாதாரணமாகத் தான் சொன்னான். ஆனால் அதில் ஒளிந்திருந்த அவனது இளமைப் பருவத்து ஒதுக்கமும், ஏக்கமும் மீராவை வருத்தப்பட வைத்தது.

''எனக்குத் தெரியுங்க. நானும் எங்கண்ணனும் சின்ன வயசிலே பட்டம் விடுவோம்.''

''அப்போ தியா பார்க்காத போது எனக்குச் சொல்லித் தருகிறாயா?'' என்று கேட்டதும் அவள் சரியென்று தலையாட்டினாள்.

''அப்படின்னா நான் நாளைக்கு அவனை ஸ்கூலில் விட்டுட்டு ஆபீஸ் போகாமல் இங்கே வந்துடுறேன்.''

''காலையிலே சொல்லித் தரணுமா?''

''ஏன் உனக்கு வேற வேலை இருக்கா?''

''வேலைக்காகச் சொல்லலைங்க. காலையிலேன்னா காத்து சரியா வீசாது. சாயந்திரம் தான் காத்து வீசும். பட்டம் பறக்க வசதியா இருக்கும்.''

''ஓ! அப்படி ஒரு பாயிண்ட் இருக்கா? மதியம் தியா ஸ்கூல் விட்டு வீட்டுக்கு வந்திடுவாளேன்னு பார்த்தேன்'' என்று அவன் தயக்கத்துடன் இழுத்தான்.

தனது மகளின் முன்பு தன்னை பெரிய ஆளாக அவன் காட்ட நினைப்பது அவளுக்கும் புரிந்தது.

''அவளைத் தாத்தா கூட வெளியே அனுப்பிடலாம்'' என்று மீரா சொன்னவுடன், அவனது முகம் பிரகாச மானது.

''அப்படியே செய்யலாம் மீரா'' என்று தனது சம்மதத்தைத் தெரிவித்தான்.



# 21



அன்று இரவு அனைவரும் சீக்கிரமே சாப்பிட்டுத் தூங்கச் சென்றனர். அதிகாலையிலே மீராவிற்கு விழிப்பு வந்தது. அதனால் அவள் சீக்கிரமே குளித்து முடித்துக் கீழே இறங்கி வந்து கமலம்மாவுடன் சேர்ந்து தனது வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள்.

ஆறரை மணி போல் தியா கண்ணைக் கசக்கியவாறு சிணுங்கிக் கொண்டே படியிறங்கி வந்தாள்.

'என்ன இவள் மட்டும் தனியாக வருகிறாள்? இவர் எங்கே போனார்? நமக்குத் தெரியாமல் வெளியே வாக்கிங் போயிட்டாரா? அப்படியே போனாலும் இவளைக் கீழே தூக்கிக் கொண்டு வந்து தாத்தாவோட படுக்கையில் படுக்க வைச்சிட்டுத் தானே போவார். ஒரு வேளை குளியலறையில் இருக்காரோ?' என்று நினைத்துக் கொண்டவளாய் மகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

அவளுக்கு பல் துலக்க உதவி செய்து பாலைக் குடிக்க வைத்துக் கொண்டிருக்கும் போது அங்கு வந்த மகாலிங்கம்,

''தியா இன்னைக்கு யார் கூட குளிக்கப் போறாங்க?'' என்று கேட்டார்.

''தியா அப்பா கூடத் தான் குளிப்பாள்'' என்று சிலுப்பிக் கொண்டு சொன்னவள்.

"அம்மா நான் மேலே போகட்டுமா?'' என்று தாயிடம் உத்தரவு கேட்டு நின்றாள்.

"பாலைக் குடிச்சாச்சுன்னா இடத்தைக் காலி பண்ணு'' என்று மீரா சொன்னவுடன் தனது வாய்க்குள் ஒரு ரைம்ஸை முணுமுணுத்தவாறே அந்த இடம் விட்டு அகன்று மாடியேறினாள்.

அறைக்குள் நுழைந்த தியா அப்பொழுதும் ஷ்யாம் எழுந்து கொள்ளவில்லை என்பதைப் பார்த்ததும்,

"டாடி, இன்னும் எழுந்துக்கலையா? சோம்பேறி டாடி. தியாவே எழுந்துட்டாள்'' என்றாள்.

"....."

"அப்பா கெட் அப். ஸ்கூலுக்கு நேரமாச்சு. நீங்க ஆபீஸுக்கு போக வேண்டாமா?''

தன் தாய் தன்னை எழுப்பும் முறையைப் பின்பற்றி அவளும் தன் தந்தையை எழுப்ப முயற்சிக்க அவனிடம் அசைவே இல்லை.

அவனிடம் பதில் இல்லாது போகவும் அவனது படுக்கை மேல் ஏறி அவனருகே சென்று அவனை உலுக்கி எழுப்பினாள். அப்பொழுதும் அவன் மெதுவாக முனங்கவே செய்தான்.

"அப்பா எழுந்துக்கோங்க. சீக்கிரம்...''

ஷ்யாம் அதற்கும் பதில் சொல்லவில்லை என்றதும் தியா தனது தந்தையின் முகத்தைத் திருப்ப எண்ணி அவனின் முகம் தொட... அனலடித்தது.

தனது தந்தைக்கு காய்ச்சல் அடிக்கிறது என்பதை அந்த இரண்டே முக்கால் வயது குழந்தைக்குக் கூட



உடனே புரிந்து கொள்ளும் அளவிற்கு அவனது உடல் நெருப்பாகக் கொதித்தது.

"அச்சோ டாடி! உங்களுக்கு பீவர் அடிக்குது!'' என்று கூவியவள் வேகமாகக் கட்டிலிலிருந்து கீழே இறங்கி ஓடினாள்.

மாடிப்படியின் மேல் படியில் நின்று கொண்டு, "அம்மாஆஆஆ!'' என்று வீடே அதிரும்படி கத்தினாள்.

சமையலறையில் இருந்து எட்டிப் பார்த்த மீரா, "இப்போ எதுக்குக் கத்தறே? எதைக் காணோம்? உங்க அப்பா வால தேடி எடுக்க முடியலையா?'' என்று கேட்டாள்.

"அம்மா, அப்பாக்கு பீவர். டாடி கண்ணே முழிக் கலை'' என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு தியா கூறவும்,

"என்னது பீவரா?'' என்று கேட்டுக் கொண்டே மீரா மாடிக்கு ஓடினாள்.

'ஐயோ அது தான் காலையில் இருந்து அவர் இறங்கி வரலையா? அதைக் கூட கவனிக்காமல் இருந்திருக் கேனா?'' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டே தங்களது அறைக்குள் விரைந்தாள்.

மகாலிங்கமும் பேத்தியின் கூக்குரல் கேட்டுத் தனது அறையில் இருந்து வெளியே வந்தார். வந்தவர் விஷயமறிந்து மாடிக்கு விரைந்தார்.

அறைக்குள் புயலென நுழைந்த மீரா தனது கண வனின் நெற்றியில் கை வைத்துப் பார்க்க உடல் நெருப் பாகக் காய்ந்தது. உடனே மருத்துவருக்கு தொலைபேசி யில் விவரம் தெரிவித்து தங்களது வீட்டிற்கு வருமாறு வேண்டினாள்.

'இதுவரைக்கும் எங்கே செல்வதாய் இருந்தாலும் காரிலே சென்று பழகியதால் மழையிலே நனைந்தே இருக்க மாட்டாரோ? முதல் முறையாக நேற்று தான் நனைந்திருப்பாரோ? அதுவும் முக்கால் மணி நேரம்?' என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது மகாலிங்கம் அறைக்குள் நுழைந்தார்.

தியா தந்தையின் அருகிலேயே கவலை அப்பிய முகத்துடன் அமர்ந்து கொண்டு அவனது மேனியைத் தனது பிஞ்சுக் கைகளால் வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்பா என்று மெதுவாக விசும்பிக் கொண்டிருந்தாள்.

மீராவால் தனது மகள் செய்வது போல் எதையும் உரிமையுடன் அருகிலிருந்து செய்ய முடியாததால் கையைப் பிசைந்து கொண்டு அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடை பயின்று கொண்டிருந்தாள்.

மகாலிங்கம் அவர்கள் இருவரையும் பார்த்து, ''என்னாச்சு?'' என்று கேட்டது தான் தாமதம் மீரா படபடவெனப் பொரிய ஆரம்பித்தாள்.

''அவர் இதுவரைக்கும் மழையிலே நனைஞ்சதே இல்லைன்னு உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா?'' என்ற முதல் கேள்வி மீராவிடமிருந்து ராக்கெட் வேகத்தில் வந்து விழுந்தது.

''ம்ம்ம்... நனைஞ்சிருக்க மாட்டான்னு தான் நினைக்கிறேன்.''

''இது என்ன பதில்? அவரைப் பத்தி உங்க யாருக்குமே எதுவுமே தெரியாதா?''

''சரிம்மா. அவன் நனைஞ்சதில்லை. இப்போ அதுக்கு என்ன?''



''அதுக்கு என்னவா? ஜுரம் நெருப்பா கொதிக்குது? நேத்து அவர் நனையும் போது நீங்க ஏன் பார்த்துக்கிட்டு சும்மா இருந்தீங்க?''

தனது பேரன் மேல் கொண்ட அக்கறையில் பேரனின் மனைவி தன்னைக் குற்றம் சாட்டிக் கேள்வி மேல் கேள்வியாய் கேட்டது மகாலிங்கத்திற்கு அதிக சந்தோஷத்தையே தந்தது. ஆனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல்,

''சும்மா இருக்காமல் என்ன செஞ்சு இருக்கணும் என்று எதிர்பார்க்கிறே?'' என்று கேட்டார்.

''மழையில் விளையாடியது போதும் என்று தடுத்து நிறுத்தி இருக்கலாம் தானே!''

''அவன் சின்ன வயசிலே விளையாடாத விளையாட்டைத் தன் பொண்ணு கூட ஆனந்தமா விளையாடினான். நான் யாரும்மா அதைத் தடுக்க?'' என்று கேட்கும் போது அவரது குரல் தழுதழுத்தது.

''சரி தடுக்க வேண்டாம். குடையைப் பிடிக்கச் சொல்லி இருக்கலாம் தானே!''

''அவன் உன் புருஷன் தானே! நீ போய் இதையெல்லாம் செஞ்சிருக்க வேண்டியது தானே! நீ ஏன் கையைக் கட்டி வேடிக்கைப் பார்த்துக்கிட்டு இருந்தே?''

இதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் அவள் திரு திருவென விழித்துக் கொண்டிருந்தாள்.

அவளது முகத்தைப் பார்த்து வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''நீ இருபத்தைந்து வயசு பொண்ணு. மழையிலே சர்க்கரையாக் கரைஞ்சிடுவோமோன்னு பயந்து

போய் பேசாமல் ஒதுங்கி நின்னு வேடிக்கை பார்ப்பாய். நான் எழுபதைந்து வயசு கிழவன். நான் போய் என் பேரனுக்குக் குடை பிடிக்கணுமா? இது நல்ல கதையா இருக்கே?'' என்று எகத்தாளமாய் கேட்டார்.

மகளது உலுக்கலில் கொஞ்சமாய் சுரணை வரப் பெற்றிருந்த ஷ்யாம் கண் மூடி அமைதியாய் நடப்ப வற்றை கேட்டுக்கொண்டு படுத்திருந்தான். மனைவி யின் அக்கறையில் அவனது உள்ளம் உருகிக் கரைந்தது.

ஒருவர் தன் மீது அக்கறை செலுத்தினால் தனது மனம் சந்தோஷம் அடையும்... அளவில்லாத நிம்மதி யடையும் என்பதை முதல் முறையாக அனுபவித்து உணர்ந்தான்.

மருத்துவர் வந்ததால் மீராவிற்கு தாத்தாவின் கேள் விக்குப் பதில் சொல்லத் தேவையில்லாமல் போனது.

மருத்துவர் வந்ததும் தியாவைக் கூட்டிக் கொண்டு கீழே வந்தவள் கமலாவிடம் சென்று, ''கமலம்மா இவளைக் குளிக்க வைச்சு சாப்பிட வைங்க'' என்று கூறி மகளை அவரிடம் ஒப்படைத்தாள்.

மருத்துவர் வந்து அவனைப் பரிசோதித்து ஊசிப் போட்டுவிட்டு மருந்து மாத்திரைகளைக் கொடுத்தார். மகாலிங்கத்திடம் அமர்ந்து சிறிது நேரம் பேசிக் கொண் டிருந்தார். பின் கீழிறங்கி வந்து மீராவிடம் ஷ்யாமின் உடல்நிலை பற்றிச் சொல்லிவிட்டுச் சென்றார்.

மருத்துவர் சென்றதும் மீரா அவனுக்குச் சாப்பிடக் கொடுப்பதற்காக இட்லி எடுத்துக் கொண்டு மாடியேறிச் சென்றாள். தியாவும் தாயின் பின்னே ஓடினாள். குளிய



லறையில் இருந்து வந்தவனை மீரா படுக்கையில் சாய்ந்த வாக்கில் அமரச் சொன்னாள்.

சாப்பிடச் சொல்லித் தட்டை நீட்ட அவன் அதை வாங்கும் முன் தியா அதில் கை விட்டுத் தனது பிஞ்சு விரல்களால் இட்லியைப் பிய்த்து தனது தந்தைக்கு ஊட்டினாள்.

தியா இந்த வீட்டிற்கு வந்து இரண்டரை மாதங்கள் ஆகிற்று. இதுநாள் வரை ஷ்யாம் தான் மகளுக்கு சாப்பாடு ஊட்டியிருக்கிறான். ஆனால் தியா அவனுக்கு ஊட்டியதில்லை. தியா என்ன தியா... அவனுக்கு நினைவு தெரிந்த பின் அவனுக்கு ஒருவர் சாப்பாடு ஊட்டுவதென்பது இதுவே முதல் முறை.

மகள் தனது செப்புக் கைகளால் உணவை எடுத்து நீட்டியதும்... ஷ்யாம் தன் கண்ணோரம் நீர் துளிக்கத் தன் வாய் திறந்து வாங்கிக் கொண்டான்.

அரை இட்லி ஊட்டியதும், ''போதுமாப்பா?'' என்று தியா கேட்டாள்.

''நானே சாப்பிட்டுக்கிறேன்டா குட்டி. நீ சாப்பிட் டியா? நீ போய் சாப்பிடு'' என்றதும்,

''நான் அப்பவே சாப்பிட்டேன் டாடி. கமலம்மா தந் தாங்க'' என்றாள்.

அவன் இட்லியைச் சாப்பிட்டு முடித்ததும் மீரா அவ னுக்குக் கை கழுவ தண்ணீர் கொண்டு வந்து தந்தாள். பின்பு மாத்திரைகளை எடுத்து அவனிடம் நீட்டினாள். அவன் அதை வாங்கி விழுங்கினான்.

அவன் மாத்திரையை விழுங்கியதும் தியா அவனின் தலையை தன் பக்கமாகச் சாய்க்க முயன்றாள்.

''என்னடா பேபி பண்ணுறீங்க?'' என்று ஷ்யாம் கேட்கவும்,

அவனருகே அமர்ந்து கொண்டு தனது இரு கால்களையும் நீட்டியவள், ''நீங்க இங்க தலை வைச்சுத் தூங்குங்கப்பா'' என்று தன் மடியைத் தட்டிக் காட்டிக் கூறியவள் மீண்டும் தனது தந்தையைத் தன்னருகே இழுத்தாள்.

மகளது கவனிப்பில் உள்ளம் நெகிழ்ந்தவன் அவளது மடி மீது தனது தலையைப் பட்டும் படாமலும் வைத்து, ''எனக்கு நீயே அம்மாவா வந்திருக்கலாம்டா பேபி'' என்றான்.

''என்னப்பா சொல்லுறீங்க?''

''ஒண்ணுமில்லைடா பேபி'' என்றவன் தனது கண்களை மூடித் தனது கண்ணீருக்கு அணை கட்டினான்.

அவனது பேச்சு அவனது மனநிலையை உணர்த்த... மீராவும், மகாலிங்கமும் திகைத்துப் போய் நின்றிருந்தனர். முதலில் சுதாரித்தவர் மகாலிங்கம் தான்.

மகாலிங்கம், ''ஏன்மா மீரா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என் கூட சண்டை போட்டியே! உன் பொண்ணு செய்யுறதைப் பார்த்துக்கிட்டு சும்மா இருந்தால் என்ன அர்த்தம்?''என்று மீராவைப் பார்த்துக் கேட்டவர்,

தியாவைப் பார்த்து, ''தியா குட்டி, உனக்கு உடம்பு சரியில்லைன்னா உன்னை யாரு பார்த்துக்குவாங்க?'' என்று கேள்வி எழுப்பினார்.

''அம்மா தான் பார்த்துக்குவாங்க'' என்று தியா பதிலளித்ததும்,



''அப்படின்னா உங்க அப்பாவையும் அவளே பார்த்துக்குவாள். நாம ஸ்கூலுக்கு போவோம். இன்னைக்குத் தாத்தா கொண்டு போய் விடுறேன். வா'' என்றார்.

''அம்மா, கம். சிட்'' என்று தனது தாயை அதிகாரம் பண்ணி படுக்கையில் அமர வைத்தவள் தந்தையின் தலையை தாயின் மடிக்கு இடம் மாற்றிவிட்டே தியா அந்தப் படுக்கையில் இருந்து எழுந்தாள்.

தாத்தா தன் பங்கிற்கு கோடு போட அவரது கொள்ளுப் பேத்தியோ அதில் ரோடு போட்டு விட்டுத்தான் எழுந்தாள்.

தியாவும், மகாலிங்கமும் அறையை விட்டுச் சென்றதும் மீராவின் கை ஷ்யாமின் முடியைக் கோதிக் கொடுத்தது.

அவள் உடுத்தி இருந்த பருத்தி ஆடையின் மென்மையும், அவளது தலை வருடல் தந்த சுகத்தையும் முன் எப்பொழுதும் அனுபவித்திராத ஷ்யாமிற்கு அவை புது அனுபவத்தைத் தந்தன.

தாயின் மடியில் துயில் கொள்ளாதவனுக்கு தாரத்தின் மடியே தாயின் மடியாகிப் போனது. தாரமும் தாய் தானே!

ஐந்து நிமிடங்கள் கண் மூடி அந்த சுகத்தை அனுபவித்தவன் மெதுவாக கண்விழித்து மனைவியின் முகம் நோக்கி, ''நான் உன் மடியிலே படுத்திருக்கிறதால உனக்கு வலிக்குதாம்மா?'' என்று கேட்டான்.

அவன் அந்தக் கேள்வியைக் கேட்ட தொனியிலேயே 'இல்லை என்று சொல்லிவிடுவாய் தானே?' என்ற எதிர்பார்ப்பு தொக்கி நிற்பது மீராவிற்குப் புரிந்தது.

''வலிக்கலை. இன்னும் கொஞ்ச நேரம் படுத்துக் கோங்க'' என்று சொன்னதும் முகம் மலர்ந்தவனாய் அவளது மடியில் முகம் புதைத்து தனது கைகளால் அவளது இடுப்பைக் கட்டிக் கொண்டு தூங்க ஆரம்பித்தான்.

ஆம். தாய் மடி தந்த சுகத்தில் அவன் ஆழ்ந்த உறக்கத் திற்குச் சென்றான்.

கணவனைத் தன் குழந்தையாய் பாவித்து அவ னுக்குப் பணிவிடை செய்யலாம். ஆனால் அதற்காக எவ்வளவு நேரம் அவனை மடிதாங்க முடியும்? மீராவிற்கு கால் மரத்துப் போக ஆரம்பித்தது.

அவள் தனது காலை அசைத்ததில் அவனது தூக்கம் கலைக்கப்பட்டு கண்விழித்தவன் மீராவின் முகத்தில் தெரிந்த வேதனையைக் கண்டதும்,

''ஓ! சாரி. ரொம்ப நேரம் தூங்கிட்டேனா?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்து அமர்ந்தான்.

அவள் எழுந்து நின்று தனது காலை நீட்டி மடக்கி தட்டி என்று அந்த இடத்திற்கு சீரான ரத்த ஓட்டம் செல்லுமாறு பார்த்துக் கொண்டாள். அறையை விட்டுச் செல்ல இரண்டு அடி எடுத்து வைத்தாள்.

''கீழே போறியா மீரா? வேலை இருக்கா?''

''மதியச் சமையல் வேலைகளைச் சொல்லிட்டு வரேங்க. உங்களுக்கு ஏதாச்சும் இப்போ வேணுமா?''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம். நீ இங்கே வந்து உட்கார்ந்திரு. அது போதும்'' என்றான்.

''தாத்தாவையும் பார்த்திட்டு அஞ்சு நிமிஷத்திலே மேலே வரேன். நீங்க படுத்திருங்க'' என்று சொல்லி அகன்றாள்.



கீழே சென்று மதிய வேலைகள் பற்றி கமலம்மா விடம் சொல்லிவிட்டு அவர் கட்டாயப்படுத்தி நீட்டிய இட்லியைப் பிய்த்து விழுங்கிவிட்டு மகாலிங்கத்தின் அறைக்கு விரைந்தாள்.

தனது அறைக்குள் நுழைந்த மீராவைக் கண்டதும், ''எப்படிம்மா இருக்கான்? கொஞ்சமாச்சும் ஜுரம் இறங்கி இருக்கா?'' எனக் கேட்டார்.

''ஜுரம் இறங்கி இருக்கு தாத்தா. நல்லா தூங்கிட்டார். நீங்க தியாவை ஸ்கூலிலே விட்டுட்டீங்களா? இன்னும் கொஞ்ச நேரத்திலே போய் கூட்டிட்டு வந்துடுறீங்களா? நான் மாடியிலே அவர் பக்கத்திலே இருக்கேன்'' என்று தயக்கத்துடன் கூற,

''நீ அவனைப் பாரும்மா. தியாவை நான் பார்த்துக் கிறேன்'' என்றார்.

''உங்களுக்கு ஏதாச்சும் வேணுமா தாத்தா?''

''அப்பவே கமலாகிட்டே கேட்டுவாங்கி ஒரு டீ குடிச் சிட்டேன். எனக்கு ஒண்ணும் தேவையில்லம்மா'' என்றதும் அவரிடம் விடைபெற்று அவசர அவசரமாய் மாடி ஏறிப் போனாள்.

செல்லும் அவளையே மகாலிங்கம் புன்முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார். இனி தனது பேரனைப் பற் றிக் கவலைப்பட ஏதுமில்லை என்று நிம்மதியடைந்தார்.

ஐந்து நிமிடத்தில் வருகிறேன் என்று சொன்னவள் பத்து நிமிடங்கள் கழித்து அரக்க பரக்க அறைக்குள் நுழைந்தாள். அவன் கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந் தான். விரைவாகப் படியேறியதால் அவளுக்கு மூச் சிரைத்தது.

''எதுக்கும்மா இவ்வளவு அவசரமா வந்தே?''

அவனது கேள்விக்குப் பதிலளிக்காமல், ''உங்களை படுக்கத் தானே சொன்னேன்! படுக்கலையா?'' என்று செல்லமாய் அதட்டினாள்.

''அதான் தூங்கிட்டேனேம்மா.''

''பரவாயில்லை. நல்லா ரெஸ்ட் எடுத்தால் தான் சரியாகும்ன்னு டாக்டர் சொல்லிட்டுப் போனார். பேசாமல் படுத்துக்கோங்க.''

''நீ பக்கத்திலே உட்கார்ந்து ஏதாச்சும் புக் படி.'' என்று சொன்னவன் அவளை அருகே அமர வைத்து அவளது மடி மீது தன் கையைப் போட்டுக் கொண்டு தூங்க ஆரம்பித்தான்.

## 22



மதியம் தியா வரும் நேரம் கீழே செல்லலாம் என நினைத்து கணவனின் கையை மெதுவாக தன் மடியில் இருந்து அவள் நகர்த்த முயற்சிக்க... அந்த ஆழ்ந்த தூக்கத்திலும் அவனது கை அங்கே இருந்து அசைய மறுத்தது.

'பிடிச்சால் உடும்பு புடி தானா? இந்த இரண்டரை வருடமும் நீயாடா எங்களைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் இருந்தது? இப்போ வந்து இப்படி ஒட்டிக்கிறியே... அன்னைக்கே இப்போ காட்டுற பாசத்திலே கொஞ்சம் என் மீது காட்டியிருந்தாலும் நான் உன்னை விட்டுப் போயிருக்க மாட்டேனே!



ஏன்டா என்னைத் தவிக்கவிட்டாய்?' என்று மனதுக்குள் கணவனைக் கேள்வி கேட்டவள் குனிந்து அவனது நெற்றியில் முத்தமிட்டு அவனது தலையை வாஞ்சையுடன் வருடிக் கொடுத்தாள்.

தியா வீட்டிற்குள் நுழைந்ததுமே வேகமாக மாடி ஏற ஆரம்பித்தாள். மகாலிங்கமும் பேரனைப் பார்ப்பதற்காக மேலே ஏறி வந்தார்.

அறைக்குள் நுழைந்த தியா, ''டாடி...'' என்று கூவவும் மீரா தன் உதட்டின் மீது கை வைத்து,

''தியா அப்பா தூங்குறாங்க. தொல்லை பண்ணக் கூடாது. மெதுவாப் பேசணும்'' என்று எச்சரித்தாள்.

அந்தச் சின்ன குட்டியும் தாய் சொல்லைத் தட்டாது, ''அப்பாக்கு பீவர் போயிடுச்சா?'' என்று கிசுகிசப்பான குரலில் கேள்வி கேட்டாள்.

''ஜுரம் கொஞ்சம் இறங்கியிருக்கு. இன்னும் கொஞ்ச நேரம் தூங்கி எழுந்தால் சரியாகிடும்'' என்று மீரா சொல்லிக் கொண்டிருக்கும் போதே மகாலிங்கம் உள்ளே வந்தார்.

அவரும் தியா கேட்ட கேள்வியையே திரும்பக் கேட்க... மீரா அதே பதிலையே திரும்பவும் சொன்னாள். தியா ஷ்யாமின் நெற்றி மற்றும் கழுத்தில் கை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது ஷ்யாம் கண் விழித்தான்.

கண்விழித்தவன் தன்னருகே நின்று கொண்டிருந்த மகளைப் பார்த்ததும், ''ஹேய் பேபி! ஸ்கூலிலே இருந்து வந்துட்டீங்களா?''என்று கேட்டுக் கொண்டே எழுந்து அமர்ந்தான்.

''உங்களுக்குச் சரியாகிடுச்சா டாடி?'' என்று கவலையுடன் கேட்ட மகளது முகத்தைப் பார்த்தவனின் மனமும், முகமும் கனிந்தது.

''என்னோட தியா பேபியும், மீரா அம்மாவும் இருக்கும் போது ஜுரம் சரியாகாமல் போயிடுமா என்ன?'' என்று கேட்டு மகளது கன்னத்தைத் தட்டிக் கொடுத்தான்.

''தியா சாப்பிட வா'' என்று மீரா அழைக்கவும்,

''எனக்கு இங்கே கொண்டு வாங்கம்மா'' என்று தியா கூறி விட,

''சரி நான் உங்க ரெண்டு பேருக்கும் சாப்பாடு இங்கே எடுத்திட்டு வரேன்'' என்று சொல்லி கீழே இறங்கிச் சென்றாள்.

மகாலிங்கம் பேரனின் அருகே அமர்ந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். பின்பு கீழே இறங்கிச் சென்றார்.

கீழே இறங்கி வந்தவருக்கு மீரா உணவு பரிமாற முனைய...

''எனக்குக் கமலா சாப்பாடு வைப்பாம்மா. நீ போய் தியா குட்டியைக் கவனி'' என்றதும் சரி என்று சொல்லி உணவை எடுத்துக் கொண்டு மாடியேறினாள்.

தகப்பனும், மகளும் அருகருகே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அம்மா ரசம் சாதமா? இல்லை கஞ்சியா?'' என்று முகத்தை அஷ்ட கோணலாக மாற்றிக் கொண்டு தியா கேட்கவும்,

''ஏன்டா குட்டி கஞ்சியான்னு கேட்கிறே?'' என்று மகளைப் பார்த்துக் கேட்டவன், ''ஏன் மீரா பருப்பு சாதம்



இல்லையா?'' என்று மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

மீராவை முந்திக் கொண்டு, ''உங்களுக்கு ஜுரம் இருக்கில்ல... அப்போ இன்னைக்குக் கஞ்சி தானே சாப்பிடணும். அம்மா எனக்கு ஜுரம்ன்னா அவங்களும் கஞ்சி தான் சாப்பிடுவாங்க'' என்று தியா விளக்கினாள்.

''எப்பவும் போல அம்மா கஞ்சி சாப்பிட்டுக்குவேன். தியா குட்டி பருப்பு சாதம் சாப்பிடுங்க'' என்று மீரா சொன்னதும் தியாவின் முகம் மலர்ந்தது.

''அப்போ எனக்குப் பருப்பு சாதமா?'' என்று கேட்டவள் ஆசையுடன் தன் வாயைத் திறந்து காட்ட, மீரா ஊட்ட ஆரம்பித்தாள்.

அவள் சாப்பிட்டு முடித்ததும் ஷ்யாமிற்கான கஞ்சியைக் கிண்ணத்தில் கரண்டி போட்டு நீட்டவும் அதை வாங்கிக் கொண்டான். அவளும் இன்னொரு கிண்ணத்தில் உள்ள கஞ்சியை சாப்பிட ஆரம்பித்தாள்.

''நீ ஏன்மா கஞ்சி குடிக்கணும்? அவ குழந்தை அவளுக்காக நீயும் அதையே சாப்பிட்டு இருப்பாய். ஆனால் இப்போ...'' என்று சொல்லத் தொடங்கியவனை இடைமறித்து,

''ம்ம்ம்... நமக்காக ஒருத்தர் இருக்காங்க அப்படிங்கிற நினைப்பே நம்மைத் தெம்பாக்கும். இதிலே எனக்கு ஒண்ணும் கஷ்டமில்லைங்க'' என்று கூறினாள்.

அவளது கண்களை நேராகப் பார்த்து, ''இது மாதிரி என்னையும் என் அம்மா கவனிச்சிருந்தால் உனக்கு பீவர் வந்த அன்னைக்கு உன்னை நான் நல்லாப் பார்த்திருப்பேனோ?'' என்று கூறி வருத்தப்பட்டான்.

''பழசைப் பேசி என்ன ஆகப் போகுது? வீணாக் கவலைப்படாதீங்க. சாப்பிடுங்க'' என்று சொல்லி அவனைச் சாப்பிட வைத்தாள்.

அவன் சாப்பிட்டதும் அவனுக்கான மாத்திரையை எடுத்துக் கொடுத்தவள், ''தியா தூங்குறியா?'' என்று மகளைப் பார்த்துக் கேட்டாள்.

''அப்பா பக்கத்திலே தூங்கட்டுமா?''

''வேண்டாம்டா குட்டி. அப்பாவோட ஜுரம் உனக்கு வந்திடும்.''

''அப்போ வேண்டாம். தியாக்கு மாத்திரை வேண் டாம். ஊசி வேண்டாம். கஞ்சி வேண்டவே வேண்டாம்'' என்று கண்களை உருட்டி அவள் சொன்ன விதத்தில் ஷ்யாமிற்கு சிரிப்பு வந்தது.

''தியா பேபிக்கு கஞ்சியைப் பார்த்தால் அவ்வளவு பயமா?'' என்று சிரிப்புடனுடனே அவன் கேட்க,

''கஞ்சி உவ்வே டாடி'' என்று வாந்தி வருவது போல் நடித்துக் காண்பித்தாள்.

''உன் பெட் ரெடி. வா வந்து தூங்கு'' என்று மீரா அழைத்ததும் அவள் அங்கு சென்று படுத்துக் கொண் டாள்.

மறுநாள் காலை ஷ்யாம் படுக்கையை விட்டு எழும் போதே தெம்பாக உணர்ந்தான்.

''டாடி, இன்னைக்கு ஸ்கூலுக்கு வருவீங்களா?'' என்று சந்தேகமாக மகள் கேட்டவுடன்,

''கண்டிப்பா. இன்னைக்கு அப்பா தான் தியா பேபியை கொண்டு போய் விடுவேன்'' என்று உறுதி அளித்தான்.



மீரா கணவனை இன்றும் வேலைக்குச் செல்லாமல் ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொல்ல வேண்டும் என நினைத்தாள். ஆனால் அதிகப்படி உரிமை எடுத்துக் கொண்டால் என்ன சொல்வானோ என்று பயமாகவும் இருந்தது.

அவள் தயங்கிக் கொண்டு நிற்பதைப் பார்த்த ஷ்யாம், ''என்னம்மா?'' என்று கேட்டான்.

''இல்லை... இன்னைக்கும் கொஞ்சம் ரெஸ்ட் எடுத் தால்...'' என்று சொல்ல வந்ததைச் சொல்லாமல் பாதி யில் நிறுத்தினாள்.

அவளது தயக்கம் அவனுக்கு வருத்தத்தை அளித்தது. 'நீ அந்த அளவிற்குத் தானே அவளுக்கு உரிமை கொடுத்து இருக்கிறாய்' என்று அவனது மனசாட்சி எடுத் துரைத்தது.

படுக்கையில் அமர்ந்து கொண்டு அவளை அருகே அழைத்தவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு, ''நீ சொல்ல நினைப்பதைத் தயங்காமல் சொல்லும்மா. நான் முன்னாடி மாதிரி இல்லை. மாறிக்கிட்டு வருவது உனக்குத் தெரியலையா?'' என்று வருத்தத்துடன் மொழிந்தான்.

அவனது கையை அழுத்திக் கொடுத்துக் கொண்டே, ''இல்லைங்க. இன்னைக்கும் ரெஸ்ட் எடுத்தால் சீக் கிரமே நல்லாகிடுமேன்னு நினைச்சேன். அதான்...''

''ஆபீஸுக்குப் போயிட்டு சீக்கிரமா வந்திடுறேன்மா. அங்கே நிறைய நேரம் இருக்க மாட்டேன்'' என்றதும்,

''சரிங்க. போயிட்டு வாங்க'' என்று விடை கொடுத் தாள்.

பதினோரு மணி போல் மீரா மகாலிங்கத்திடம் சொல்லிக் கொண்டு கோவிலுக்குக் கிளம்பினாள். அவள் சென்ற பத்தாவது நிமிடம் ஷ்யாமின் கார் வீட்டிற்குள் நுழைந்தது.

பேரனை அவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்காத மகாலிங்கம், "என்ன விஷயம் ஷ்யாம்? ரொம்பச் சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்திட்டே?" என்று கேட்டார்.

"மீரா சீக்கிரமா வரச் சொன்னாள்" என்று ஷ்யாம் சொல்லவும் மகாலிங்கம் புன்முறுவல் புரிந்தார்.

"ம்ம்ம்... எனக்கும் ரொம்ப டயர்டா இருந்தது. அதான் ரெஸ்ட் எடுக்கலாம் என்று வீட்டுக்கு வந்தேன்" என்று கூறி ஷ்யாம் தன் தாத்தாவின் கேலிப் புன்னகையில் இருந்து தப்பிக்க முயன்றான்.

தன் பார்வையை வீட்டைச் சுற்றி சுழலவிட்டவன் தன் மனைவியைக் கண்ணில் காணாது தன் தாத்தாவிடம், "மீரா எங்கே தாத்தா?" என்று கேட்டான்.

"கோவிலுக்குப் போயிருக்காடா."

"என்னை வரச் சொல்லிட்டு இவ கோவிலுக்குப் போயிட்டாளா?" என்று முணுமுணுத்தவன் பின் சத்தமாக, "எந்தக் கோவிலுக்குப் போயிருக்காள்?" என்று கேட்டான்.

"ரெண்டு தெரு தள்ளி ஒரு பிள்ளையார் கோவில் இருக்கில்லே. அங்கே தான் போயிருக்காள்."

"சரி" என்று சொல்லி நகர்ந்தவன் தொலைக்காட்சியை இயக்கி ஐந்து நிமிடத்திற்கு சேனல் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டு இருந்தான்.



அதற்கு மேல் அவனால் பொறுமையாகக் காத்திருக்க முடியாமல் தொலைக்காட்சியை அணைத்தவன் வீட்டை விட்டு வெளியேறினான். நேராகக் கோவிலை அடைந்தான்.

கோவிலில் சாமி கும்பிட்டு முடித்து பிரகாரத்தைச் சுற்றிக் கொண்டிருந்த மீராவின் கண்களில் கோவிலில் உள்ளே நுழைந்து கொண்டிருந்த ஷ்யாம் தென்பட்டான்.

'இந்நேரம் இவர் எதுக்கு கோவிலுக்கு வந்தார்?' என்று நினைத்தவள் அவனை நோக்கி விரைந்தாள்.

தன்னருகே மீரா வந்ததும், ஷ்யாம் அவளைப் பார்த்து, "சாமி கும்பிட்டாச்சா? வா போகலாம்" என்று கூறித் திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

மீராவிற்கு கணவன் இவ்வளவு தூரம் வந்துவிட்டு... அதுவும் கோவிலின் உள்ளே நுழைந்துவிட்டு சாமி கும்பிடாமல் போவதா என்றிருந்தது. அதனால் அவள் நகராமல் அதே இடத்திலேயே அசையாது நின்றாள்.

நான்கடி நடந்த பின்பே மனைவி தன்னைப் பின் தொடரவில்லை என்பதை உணர்ந்த ஷ்யாம், "என்னம்மா? என்ன விஷயம்?" என்று புருவம் உயர்த்திக் கேட்டான்.

அன்று காலையில் தான் எந்த விஷயமாக இருந்தாலும் தயங்காமல் என்னிடம் கேள் என்று கணவன் சொல்லியிருந்ததால் மீரா தயக்கம் சிறிதுமின்றி, "இவ்வளவு தூரம் வந்துட்டீங்களே! சாமி கும்பிட்டுவிட்டுப் போகலாமே!" என்றாள்.

"நானா? சாமி கும்பிடணுமா? நான் இதுக்கு முன்னாடி கோவிலுக்குப் போனதே இல்லையேம்மா! நான்

படிச்சதெல்லாம் கிறிஸ்டியன் ஸ்கூல். அதனால எனக்கு எப்படி சாமி கும்பிடணும் என்று கூடத் தெரியாதே!'' என்று பரிதாபமாகச் சொன்னான்.

அவன் அவ்வளவு சொல்லியும் மீரா தன் கருத்தி லிருந்து மாறாமல் நின்று கொண்டிருந்தாள்.

மீராவின் முகத்தில் தென்பட்ட பிடிவாதத்தைப் பார்த்தவன், ''இப்போ நான் உள்ளே வந்து தான் ஆகணுமா? சரி வா'' என்று சொல்லி கோவிலின் உள்ளே நடந்தான்.

''ஒண்ணும் பிரச்சனையில்லை. நான் செய்யுற மாதிரியே செய்யுங்க'' என்று சொல்லி அவனை மூலவர் சன்னதிக்கு அழைத்துச் சென்றாள்.

அவளை மாதிரியே கை கூப்பி வணங்கி, தோப்புக் கரணம் போட்டு, குருக்கள் கொண்டு வந்து காண்பித்த தீபாராதனையைத் தொட்டு வணங்கி, விபூதியை நெற்றியில் பூசினான். அடுத்ததாக குருக்கள் குங்குமம் கொடுத்தார். அதை வாங்கிய மீரா குனிந்து கொண்டே தனது வகிட்டில் வைத்தாள். அப்பொழுது தான் நினை விற்கு வந்தவளாக எங்கே கணவனும் தன்னைப் பின்பற்றித் தனது வகிட்டில் வைத்துக் கொண்டானோ என்று பயந்தவளாக வேகமாக அவன் முகம் பார்த்து நிமிர...

ஷ்யாம் தன் கையில் இருந்த குங்குமத்தை தனது மனைவியின் வகிட்டில் வைத்துவிட்டு அவளது உள்ளத்தைப் படித்தவனாய், ''நான் சாமி தான்மா கும்பிட்ட தில்லை. அதுக்குன்னு இது கூடத் தெரியாமலா இருப்பேன்?'' என்று கேட்டுப் புன்முறுவல் பூத்தான்.



அவனைப் பார்த்து அசடு வழிந்துவிட்டு அவனுடன் வெளியேறினாள்.

காரில் ஏறி அமர்ந்ததும், ''என்ன விஷயமா என்னைத் தேடி வந்தீங்க?'' என்று கேட்டாள்.

''நீ தானே சீக்கிரமா வீட்டுக்கு வரச் சொன்னே. அதான் வந்தேன். நீ வீட்டிலே இல்லை. அதான் உன்னைத் தேடி நீ இருக்கிற இடத்துக்கு வந்தேன்'' என்று சர்வ சாதா ரணமாய் சொன்னான்.

வார்த்தைகளால் விவரிக்க முடியாத நிம்மதி அவள் மனமெங்கும் பரவியது. அந்த நிம்மதி அவளது முகத் திலும் பிரதிபலித்தது. மனைவியின் முகத்தில் தெரிந்த சந்தோஷத்தைக் கண்டு மகிழ்ந்தவனாய் வீட்டிற்கு காரைத் திருப்பினான்.

வீட்டிற்குள் நுழைந்ததும், ''ஏதாச்சும் ஜூஸ் தரட்டு மாங்க?'' என்றாள்.

''ஒண்ணும் வேண்டாம்மா.'' என்று சொல்லிக் கொண்டே மாடியேறினான்.

அவனைத் தொடராது கையை பிசைந்து கொண்டு நின்றவளைப் பார்த்து, ''இப்போ என்ன?'' என்று அலுப்புடன் கேட்டான்.

''தியாவை கூப்பிட ஸ்கூலுக்கு போகணுங்க'' என்று மீரா இழுக்கவும்,

''ஒருத்தனை வீட்டுக்கு வான்னு வரச் சொல்லிட்டு கோவிலுக்குப் போறேன் ஸ்கூலுக்கு போறேங்கிறே... அப்புறம் எதுக்கு என்னை வரச் சொன்னே?'' என்று கடுப்புடன் கேட்டான்.

"உங்களை ரெஸ்ட் எடுக்கத் தானேங்க வரச் சொன்னேன்."

"எனக்கும் அது தெரியும். நீ பக்கத்திலே வந்து உட்காரு. அப்போ தான் நான் ரெஸ்ட் எடுப்பேன்" என்றான்.

'என்னடா இது வம்பாப் போச்சு! இவர் படுத்துத் தூங்கணும்ன்னா நாம அந்த அறையிலேயே தவம் கிடக்கணுமா? வேற வேலையைப் பார்க்க வேண்டாமா?' என்று எண்ணிக் கொண்டாள்.

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன், "கமலம்மா!" என்று உரக்க அழைத்தான்.

"என்ன தம்பி?" என்று வந்து நின்ற கமலம்மாவிடம்,

"காரிலே போய் தியாவை ஸ்கூலில் இருந்து கூட்டிட்டு வாங்க" என்று அனுப்பி வைத்தான்.

தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஷ்யாமை பார்த்து, "அவங்க இப்போ அறை குறையா விட்டுட்டுப் போன சமையலை நான் பார்க்கணும். என்னால மாடிக்கு வர முடியாது" என்று சொல்லிக் கொண்டே அவள் சமையலறைப் பக்கம் நகர்ந்தாள்.

"அது பரவாயில்லை. இங்கே... என் கண் பார்வையிலே தானே இருப்பே!" என்று சொன்னவன் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து கொண்டு புத்தகம் ஒன்றைப் புரட்ட ஆரம்பித்தான்.

"இதுக்கு பேரு தான் உங்க ஊரிலே ரெஸ்ட் எடுக்கிறதா?" என்று முணுமுணுத்துக் கொண்டே கணவனுக்கு பழச்சாறு தயாரித்தாள்.



பழச்சாறு வேண்டாம் என்று சொன்னவன் அவள் கொண்டு வந்து நீட்டியதும் மறுபேச்சில்லாமல் வாங்கிக் குடித்ததோடு இல்லாமல்,

"எனக்கு என் மீராவைப் பார்த்துக்கிட்டு இருந்தால் ரெஸ்ட் எடுத்த மாதிரி" என்று அவளது முணுமுணுப்பிற்கான பதிலையும் சொன்னான்.

ஹையடா என்று வெளியே நொடித்துக் கொண்டும், மனதுக்குள் மகிழ்ந்து கொண்டும் சமையலறைக்குச் சென்று தனது வேலையைத் தொடர்ந்தாள்.

அவள் கணவனின் புறம் ஒரு பார்வையும், சமையல் வேலையில் ஒரு கண்ணுமாய் இருக்க... ஷ்யாமும் மனைவியைப் பார்ப்பதும் பின் குனிந்து புத்தகத்தைப் பார்ப்பதுமாய் இருந்தான்.

## 23

தியா பள்ளியில் இருந்து வந்ததும் அவர்கள் சாப்பிட்டு விட்டு மாடிக்குச் சென்றார்கள்.

ஷ்யாம் தனது உடையை மாற்றிவிட்டு வந்தான். மீரா தியாவிற்கும் வேறு உடையை மாற்றிவிட்டாள்.

படுக்கையில் மீரா அமர்ந்ததும் தியாவைத் தூக்கிக் கொண்டு வந்தவன் மீராவின் மடி மீது தலை வைத்துப் படுத்துக் கொண்டு தனது மார்பு மீது மகளை அமர வைத்துக் கதை பேச ஆரம்பித்தான். அவர்களது பேச்சு கார் ரேஸ் பற்றி திரும்பியது.

''உங்களுக்கு ரேஸ் கார் ஓட்டத் தெரியுமாப்பா?'' என்று தியா கேட்டதும் மீராவின் முகம் மாறியது.

மீராவிற்கு கார் பந்தயத்தில் அவனுக்கிருந்த விருப்பமும், அதற்கு அவள் அனுபவித்த துன்பமும் சேர்ந்தே நினைவு வந்தது. அவளது மனமும், முகமும் வாடலாயிற்று.

மனைவியின் முக மாறுதலைக் கவனிக்காத ஷ்யாமோ, ''என்ன இப்படி கேட்டுட்டே? அப்பாக்கு அதை ஓட்டுறதுன்னா ரொம்பப் பிடிக்கும். சும்மா சர் சர்ன்னு என்னமா ஓட்டுவேன் தெரியுமா?'' என்று விவரிக்க ஆரம்பித்தான்.

''ரொம்ப ஃபாஸ்டா போவீங்களா?''

''ரொம்ப ரொம்ப ஃபாஸ்டா! கார் ரேஸிலே போறதா நினைச்சுக்கிட்டு பைக்கிலே... அதுவும் ரோட்டிலே பாஸ்டா போகும் போது தான் அப்பாக்கு அடிபட்டு ஹாஸ்பிட்டலில் இருந்தேன். ரெண்டு வருஷம் பெட்டிலேயே இருந்தேன். நடக்க முடியாமல் ஒரே ரூமுக்குள்ளே இருந்தேன். அதான் அப்பா தியா பாப்பாவைப் பார்க்க வரலே இல்லை.''

''இன்னொரு தடவை ரேஸ் கார் ஓட்டப் போவீங்களாப்பா?''

''ஏன் பேபி கேட்கிறே?''

''போக வேண்டாம்ப்பா.''

''ஏன்மா அப்படிச் சொல்லுறே?''

''அப்புறம் உங்களுக்குத் திரும்பவும் அடிபட்டா என் கூட யார் விளையாடுவா? எனக்கு என் டாடி வேணும்''



என்று அழுகையில் பிதுங்கின உதடுகளுடன் அவள் சொன்னதும் தான் ஷ்யாமிற்கு மனைவியின் மனநிலை பற்றிய ஞாபகமே வந்தது.

சரேலென நிமிர்ந்து அவள் முகம் பார்க்க அவளது கண்களில் கண்ணீர் நிற்காமல் வடிந்து கொண்டிருந்ததைக் கண்டவன், 'அடக் கடவுளே! இவளை எப்படி மறந்தேன்!' என்று நொந்து போனான.

இப்போ தானேடா இவங்களையெல்லாம் நீ நினைக்கப் பார்க்கவே ஆரம்பிச்சு இருக்கே! என்று கேட்டு அவனது மனசாட்சி எள்ளி நகையாடியது.

எழுந்து அமர்ந்தவன் தன் நெஞ்சோடு மகளை அணைத்துக் கொண்டு தனது மனைவியைத் தன் தோள் மீது சாய்த்துக் கொண்டான்.

''உங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு அப்பா எங்கேயும் போக மாட்டேன்டா. முன்னாடி இருந்த அப்பா பொறுப்பில்லாதவன். உணர்ச்சியில்லாதவன். யாரைப் பத்தியும் கவலைப்படாதவன். குடும்பன்னா என்னன்னு தெரியாதவன். யாருக்கு முக்கியத்துவம் கொடுக்கணும் என்று தெரியாதவன். அதனால தான் விளையாட்டுத்தனமா இருந்துட்டேன்.

இனிமேல் அப்படி இருக்க மாட்டேன். நான் உனக்கு உயிர் கொடுத்தேன்டா பேபி. ஆனால் ஜடமா இருந்த உன் அப்பாக்கு உணர்ச்சி கொடுத்து பாசத்தை உணரக் கத்துக் கொடுத்தவளே நீ தான்டா பேபி!'' என்று அவன் பாட்டிற்கு சொல்லிக் கொண்டே போனான்.

மூன்று வயது கூட நிரம்பியிராத குழந்தைக்கு தான் பேசுவது புரியுமா புரியாதா என்றெல்லாம் அவன்

சிந்தித்துப் பார்க்கவில்லை. ஆனால் வயதில் பெரிய வளான மீராவிற்கு அவனது மாற்றமும், அவனது மன்னிப்புக் கேட்கும் படலமும் புரிந்தது.

மகளது முதுகை வருடிக் கொடுத்துக் கொண்டே அவன் தன்னிலை விளக்கம் கொடுத்துக் கொண்டு இருந்தான்.

மீரா அன்று அவன் இதே கார் பந்தயத்தைக் காரணம் காட்டித் தானே தன்னுடன் குடும்பம் நடத்தினான் என்று ஒரு மூச்சு அழுதாள். பின் தன் மகள் கேட்ட 'உங்களுக்கு மீண்டுமொரு முறை அடிபட்டால்?' என்ற கேள்வியை நினைத்துப் பார்த்து கண்ணீர் விட்டாள்.

தியா வழக்கமாகத் தூங்கும் நேரம் என்பதாலும், தந்தையின் வருடலும் சேர்ந்து கொள்ள தந்தையின் மீது சாய்ந்த வாக்கில் தூங்கிப் போயிருந்தாள்.

ஷ்யாம் தன் மகள் தூங்கிவிட்டதைப் பார்த்தவன் மனைவியைத் தோளில் இருந்து நிமிர்த்திவிட்டு படுக்கையில் இருந்து எழுந்து போய் தியாவை அவளது படுக்கையில் படுக்க வைத்துப் போர்த்திவிட்டு வந்தான்.

வந்தவன் மனைவியின் முகத்தை நிமிர்த்திப் பார்க்க முயன்றான். அவளோ அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு கண்ணீர் சொரிந்தாள்.

''மீரா, நான் தான் சாரி சொல்லுறேனேம்மா. இனிமேல் ரேஸ் பத்தி நினைச்சுப் பார்க்க மாட்டேன் என்றும் சொல் லிட்டேன். அப்புறம் ஏன்மா இப்படி அழறே?''

அவளது அழுகை குறைந்தபாடாய் இல்லை.

''இப்படி அழுதால் உனக்கு ஜுரம் வந்திடப் போகுது. அப்புறம் எங்க ரெண்டு பேரையும் யார் பார்த்



துக்குவாங்க? உன் ஹஸ்பண்ட் இப்போ கூட சுயநலமா யோசிக்குறான் இல்லை?'' என்று தன்னைத் தானே கேலி பண்ணினான்.

அதற்கும் அவளிடம் எந்தவொரு மாற்றமும் தெரிய வில்லை.

கடைசியாக, ''போதும்மா. நீ இவ்வளவு கண்ணீர் விடுற அளவுக்கு இந்த ஷ்யாம் அவ்வளவு தகுதி யானவன் இல்லை'' என்றதும் வெடுக்கென்று நிமிர்ந்து பார்த்து அவனை முறைத்தாள்.

அவளைப் பார்த்து புன்முறுவல் புரிந்தவன், ''உண் மையைச் சொன்னால் முறைக்கக் கூடாதும்மா. சரி அதை விடு. மனசைப் போட்டு அலட்டிக்காதே. கொஞ்ச நேரம் படுத்திரு. எனக்காக... ப்ளீஸ்'' என்று கெஞ் சியதும்,

அவள் பதில் ஒன்றும் சொல்லாது படுக்கையில் படுத்துக் கொண்டாள். அவனும் அவளருகில் படுத்துக் கொண்டு அவளது முதுகை வருடிக் கொடுத்துக் கொண்டே இருந்தான்.

இருவரில் யார் முதலில் தூங்கினார்கள் என்பதை அவர்களே அறியவில்லை.

தியாவின் சிணுங்கலில் முதலில் கண் விழித்த மீரா, தான் கணவனின் கை அணைப்பில் இருப்பதை அறிந்து அவசரமாக விலகினாள்.

விரைந்து சென்று தியாவைத் தூக்கிக் கொண்டவள் ஓசை எழுப்பாது அந்த அறையை விட்டு வெளியேறி னாள்.

அவளைத் தூக்கிக் கொண்டு கீழே வந்தவள் தியாவை முகம் கழுவச் செய்து பால் ஆற்றிக் கொடுத்தாள்.

மகாலிங்கம் தனது அறையில் இருந்து வரவேற் பறைக்கு வரவும் அவருக்கான பாலையும் ஆற்ற ஆரம் பித்தாள். அவரிடம் பாலைக் கொண்டு போய் நீட்ட அவர் அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

அவளது வீங்கிய இமைகளைக் கண்டு அவரது முகம் யோசனையில் ஆழ்ந்தது.

''என்ன தாத்தா பாலை வாங்கலாமா வேண்டா மான்னு ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்கீங்க. என்ன விஷயம்? இந்த வயசுக்கு அப்புறம் ஏதாச்சும் பிஎச்.டி பட்டம் வாங்குற ஐடியா இருக்கா?'' என்று கேலி பேசிச் சிரித்தாள்.

எப்பொழுதும் அழுததை மறைக்க மீரா புன்னகை என்ற பெயரில் தனது உதடுகளை இழுத்து வைத்துக் காட்டுவாள். ஆனால் இன்று நிஜமாகவே அவளது முகம் மலர்ந்திருந்தது கண்டு சற்றே நிம்மதியானார்.

அவளது சிரிப்பு அவரையும் தொற்றிக் கொள்ள, ''பிஎச்.டி தானே? வாங்கிட்டால் போச்சு!'' என்று சொல்லிக் கொண்டே அவளிடமிருந்து பாலை வாங்கிப் பருக ஆரம்பித்தார்.

அவர் தன்னை அளவிட்டதைக் கண்ணுற்ற மீரா, 'எங்களுக்காக இந்த வயதில் இவர் மனதாலும், உட லாலும் பட்ட சிரமங்கள் தான் எத்தனை!' என நினைத்து வருந்தியவள் அவருக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாய் தங்கள் இருவரின் நிலை பற்றியும் அவரிடம் பேச விரும்பினாள்.



எங்கே இருந்து தொடங்குவது என்ற யோசனையுடன் அவர் அருகில் அமர்ந்து கொண்டு அவரது முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

பேரனின் மனைவி தன்னிடம் பேச விரும்புகிறாள் என்பதை அவளது முகத்தில் இருந்து படித்த மகாலிங்கம் பாலை வேகமாகக் குடித்து முடித்தார்.

''என்னிடம் ஏதாச்சும் சொல்லணுமா மீரா?'' என்று அவரே பேச்சைத் துவக்கி வைத்தார்.

எழுந்து சென்று அவரது காலடியில் அமர்ந்தவள் அவரது முகம் பார்த்தவாறு பேச ஆரம்பித்தாள்.

''தாத்தா, எனக்காக நீங்க எவ்வளவோ செஞ்சு இருக் கீங்க. அதுக்கு ரொம்ப ரொம்ப தாங்க்ஸ். உங்க பேர னுக்காக நீங்க என்னிடம் எதிர்பார்த்த நிறைய ஆசை களை நான் பூர்த்தி பண்ணியதே இல்லை. அதுக்கு ஒரு சாரி...'' என்று தொடங்கியவளை அவர் இடைமறித்துப் பேச முயல,

''நான் சொல்லி முடிச்சிடுறேன் தாத்தா. உங்களோட ஆசைகளை என்னால பூர்த்தி பண்ண முடியாமல் போன தற்கு தன்மானம், சுய கவுரவம் என்று நான் அதுக்கு எத்தனையோ பேர் சூட்டினேன். நல்ல தாம்பத்தியத் திற்கு இடையிலே அதுக்கெல்லாம் அவசியம் இல்லை.

என் விஷயத்தில் எங்களுக்கு இடையே புரிதல் மட்டுமில்லை... அன்பு, பாசம், காதல் இதுமாதிரி எது வுமே இல்லாமல் இருந்துச்சு. அதனால என்னன்னவோ நடந்து போச்சு.

எங்க பொண்ணு தியா... அவ எங்க வாழ்க்கையிலே விளக்கேத்தி வைச்ச தேவதை. ஈகோ பார்க்காமல்

அவளோட அப்பாகிட்ட ஒவ்வொரு விஷயத்துக்காகவும் மீண்டும் மீண்டும் போராடி அவரை மொத்தமா மாத்தி யிருக்காள்.

இன்னைக்கு அவளுக்கு ஒரு நல்ல அப்பாவா, என்னைப் புரிஞ்சுக்க முயற்சிக்கிற நல்ல கணவரா அவர் மாறியிருக்கார். இது எல்லாமே அவளால தான் சாத் தியமாச்சு.

அன்னைக்கே நானும் இதே மாதிரி திரும்ப திரும்ப முயற்சி செய்திருந்தால் இவரை எப்பவோ மாத்தியிருக்க லாமோ என்னவோ! ஆனால் குழந்தைக்கிட்டே இல் லாத ஈகோ என்னிடம் வண்டி வண்டியா இருந்துச்சு. அது என்னை அவரிடம் நெருங்கவிடலை.

இனிமேல் எங்க வாழ்க்கையை பத்திக் கவலைப்பட எதுவுமே இல்லை தாத்தா. இனி எது நடந்தாலும் நான் அவரை விட்டுப் பிரிய மாட்டேன். அவர் பக்கத்தில் இருந்து போராடுவேன்'' என்று சொன்னாள்.

''இது போதும்மா மீரா. இந்தக் கிழவனுக்கு இது போதும். இந்த வீட்டில் வந்து பிறந்ததுக்கு அவன் பட்ட கஷ்டமெல்லாம் போதும். இனிமேலாவது அவன் சந்தோஷமாக இருக்கணும். அவன் முகத்தில் முன் எப்போதும் இல்லாத சந்தோஷத்தை நான் பார்க்கிறேன். உங்க வாழ்க்கை நல்லா இருக்கும்மா'' என்று தழுதழுத் தார்.

'அவர் என்னைத் தன் தாயா பார்க்க ஆரம்பித்து விட்டார். என்னைத் தன் மனைவியாகவும் நடத்தும் நாள் கூடிய சீக்கிரமே வரும் என்று நம்புறேன்' என்று மனதில் எண்ணிக் கொண்டு அங்கிருந்து எழுந்தாள்.



அப்பொழுது அங்கே வந்த தியா, ''தாத்தா நாம வெளியே போவோமா?'' என்று கேட்டாள்.

அதைக் கேட்டதும் மீரா ஒரு தாயுக்கே உரிய கண் டிப்புடன், ''தியா எந்த பொம்மையும் வாங்கக் கூடாது. ஏற்கனவே பொம்மைக் கடை வைக்குற அளவுக்கு பொம்மையா வாங்கிக் குவிச்சிருக்கே. அதனால நோ பொம்மை'' என்றாள்.

''நான் பொம்மை வாங்கப் போகலைம்மா'' என்று தனது இரு கையையும் விரித்து அவள் காட்ட,

''பொம்மை இல்லைன்னா ஐஸ்-க்ரீமா? அப்பாக்கு போட்ட மாதிரி உனக்கும் ஊசி போடணுமா?''

''நோ... நோம்மா தியாக்கு கஞ்சி வேணாம்'' என்று அவள் வேகமாக மறுத்த தினுசில் மகாலிங்கம் சிரித்தார்.

''அப்போ சாக்லெட்டா?''

இதற்கும் தன் உதடுகளைப் பிதுக்கிக் கொண்டு அவள் மறுப்பு தெரிவித்ததும், வேறு என்ன வாங்கு வதற்கு தன் தாத்தாவை வெளியே அழைக்கிறாள் என்று மீரா தன் மூளையைக் கசக்கி யோசித்துக் கொண்டு இருக்க...

தாத்தாவும் பேத்தியும், ''பை!'' என்று சொல்லிக் கொண்டு விடைபெற்றனர்.

'திரும்பி இங்கே தானே வந்தாகணும். அப்போ பார்த்துக்கிறேன்' என நினைத்தவள் கணவனுக்காக காபி தயாரிக்க ஆரம்பித்தாள்.

'இவருக்கு இன்னமும் உடம்பு சரியா வரலையோ? இல்லாவிட்டால் இப்படி அசந்து தூங்க மாட்டாரே!

டாக்டரிடம் கூட்டிட்டுப் போய் காட்டணுமா?'' என்று எண்ணிக் கொண்டே காபியுடன் மாடியேறினாள்.

# 24



மாடியில் தங்களது அறைக்குள் நுழைந்த மீரா படுக்கையின் ஓரத்தில் அமர்ந்து கொண்டு, ''என்னங்க... எழுந்துக்கலையா?'' என்று கூறி கணவனை எழுப்ப முயற்சித்தாள்.

ம்ம் என்ற முனங்கலோடு அவன் மீராவின் மடி மீது தலை வைத்துப் படுத்துக் கொண்டு தனது தூக்கத்தைத் தொடர்ந்தான்.

அவனது கேசத்தை வருடிக் கொண்டே, ''காபி கொண்டு வந்திருக்கேன். எழுந்து குடிங்க'' என்றாள்.

அவன் பதிலொன்றும் சொல்லாமல் மேலும் அழுத்தமாக அவளது மடியில் புதைந்து கொண்டான்.

''உடம்புக்கு இன்னமும் சரியா வரலையாங்க? டாக்டரிடம் போவோமா?''

வேண்டாம் எனும் விதமாய் அவன் தலையாடியது.

''உங்க பொண்ணு தாத்தா கூட உலாப் போயிட்டாள். அவ இல்லாத போது பட்டம் விடக் கத்துக்கணும் என்று சொன்னீங்களே!'' என்றதும் படக்கென எழுந்து அமர்ந்தான்.

''இப்போ போய் கத்துக்கலாமா?'' என்று கேட்டுக் கொண்டே முகம் கழுவச் சென்றான்.



அவனது வேகத்தைப் பார்த்துப் புன்முறுவல் புரிந்தவள், ''பட்டம் என்று சொன்னதும் படக்குன்னு எழுந்துட்டீங்க. அது அவ்வளவு முக்கியமானதா?'' என்று கேலி செய்தாள்.

''என் பொண்ணுக்கு சொல்லித் தரேன் என்று சொல்லியிருக்கேனே. அவ தான் என் உயிரே. அப்போ பட்டம் விடுறது ரொம்ப முக்கியமானது தானே?'' என்று அவன் உணர்ந்து சொன்னதைக் கேட்ட மீராவிற்கு தன் மகள் மீதே பொறாமை வந்தது.

''காபியைக் குடிச்சிட்டு மொட்டை மாடிக்கு வாங்க'' என்று சொல்லி அகன்றாள்.

அடுத்த இரண்டாவது நிமிடத்தில் அவன் மொட்டை மாடியை நோக்கிச் சென்றான்.

''மீரா, பட்டத்திற்கு எங்கே போவது? எந்தக் கடையிலே கிடைக்கும்?'' என்று கேட்டுக் கொண்டே வந்தவன் மீராவின் கையில் இருந்த நீண்ட வாலுடன் கூடிய பட்டத்தைப் பார்த்து,

''ஓ! ஏற்கனவே வாங்கி வைச்சிட்டியா?'' என்று கேட்டான்.

''கடையிலே வாங்கலை. நானே செஞ்சேன்.''

''என்னது நீயே செஞ்சியா? உனக்கு எல்லாமே தெரியுது! எனக்கு தான் ஒண்ணுமே தெரியலை'' என்று பரிதாபமாகச் சொல்லவும்,

''பாரினிலே போய் படிச்சு பட்டம் வாங்கினவரு பேசுற பேச்சா இது?'' என்று மீரா கிண்டல் பண்ணினாள்.

''என்னம்மா செய்யுறது? என் பொண்ணுக்கு நான் படிச்சு வாங்கின பட்டம் பிடிக்கலையே! இது தானே பிடிச்சிருக்கு'' என்று சந்தோஷமாய் அலுத்துக் கொண்டான்.

காற்று வீசும் திசை, பட்டம் பறக்க வேண்டிய திசை, கையை எப்படிச் சுண்டி விட்டுப் பறக்க வைக்க வேண்டும் என்பது போன்ற அரிய(?) பாடங்களை அவனுக்குக் கற்றுக் கொடுத்தாள்.

''ஹேய் நான் சூப்பரா பறக்கவிடுறேன் இல்லே? தியாகிட்டே சொதப்பிட மாட்டேன் தானே?'' என்று ஆர்வமும், சந்தேகமுமாய் அவன் கேட்டதும்,

''ஆமா உங்க பொண்ணு ஒரு அரை டிக்கெட்டு. அவ முன்னாடி உங்களால சரியா பறக்கவிட முடியாதா என்ன?''

''ஹேய்! என் பொண்ணை எதுக்கு இப்போ நீ அரை டிக்கெட்டுன்னு சொல்லுறே?''

''ஆமா பொண்ணைப் பத்திப் பேசினதும் பொத்துக் கிட்டு வந்திடுமே!'' என்று முணுமுணுத்தவள்,

''இப்போ பட்டத்துக்கு எப்படி மெசேஜ் அனுப்பற துன்னு பார்ப்போம்'' என்றாள்.

''என்னது மெசேஜா? அதுவும் பட்டத்துக்கா? சின்ன வயசிலே சூப்பரா தான் விளையாடியிருக்க மீரா. எனக்கு உன்னைப் பார்த்தால் பொறாமையா இருக்கு.''

கணவனது பேச்சைக் காதில் வாங்காத பாவனையில், ''ஒரு பேப்பரைச் சின்ன சதுரமா கிழிச்சு அதுக்கு நடுவிலே சின்ன ஓட்டை போடணும். அதை நூலோட



முனையிலே நுழைச்சு விடணும். அது நேரா பட்டத் திடம் போய் சேர்ந்திடும்'' என்று சொன்னவள்,

அதே மாதிரி சின்ன சதுரம் செய்து அதில் பேனாவை வைத்து 'ஹலோ' என்று எழுதி நூலின் முனையில் நுழைத்து விட்டாள். அது ஆடிக் கொண்டே பட்டத்திடம் போய் சேர்ந்தது.

''அவ்வளவுதான்!'' என்று கணவனைப் பார்த்து முறுவலித்தாள்.

அவர்கள் இருவரும் கீழே இறங்கி வந்த சிறிது நேரத்தில் தியா பெரிய விளையாட்டு பொருளுடன் உள்ளே வந்தாள்.

மீரா தன் இடுப்பில் கை வைத்துக் கொண்டு மகளை முறைத்தாள்.

''எதுக்கு தாத்தா வாங்கிக் கொடுத்தீங்க? நான் தான் வேண்டாம் என்று சொன்னேன் இல்லையா?'' என்று மீரா மகாலிங்கத்தைப் பார்த்துக் கேட்க,

அவர் வாய் திறந்து பதில் சொல்லும் முன்பு ஷ்யாம், ''அந்தக் காலத்திலே எனக்குத் தான் அவர் வாங்கித் தரலை. என் பொண்ணுக்காச்சும் வாங்கித் தாட்டுமே!'' என்றான்.

''ரொம்ப நல்லாயிருக்குங்க. இப்படியே அவ காதுபட நாலு தடவை சொல்லுங்க. அவ அதையே பிடிச்சுத் தொங்கட்டும்'' என்று அவள் ஷ்யாமை மிரட்ட ஆரம்பித் ததுமே, மகாலிங்கம் சிரித்துக் கொண்டே அவரது அறைக்குச் சென்றார்.

''நான் சொன்னதை மீறி எதுக்கு வாங்கினாள் என்று கேளுங்க'' என்று ஷ்யாமை மீரா ஏவிவிட்டாள்.

''அம்மா வேண்டாம் என்று சொல்லியும் எதுக்குடா பேபி வாங்கினே?'' என்று கொஞ்சும் குரலில் அவன் தன் மகளை விசாரிக்க,

'விசாரிக்குற லட்சணத்தைப் பாரு!' என்று உள்ளுக்குள் புகைந்தவளாய் அவனது அருகில் சென்று பேசாமல் அமர்ந்தாள்.

அவர்கள் இருவரின் முன்பும் நின்று கொண்டு தியா பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

தனது இடது கை சுண்டு விரலை மட்டும் நீட்டி மீதி விரல்களை மடக்கிக் கொண்டு, ''நான் பொம்மை வாங்கலை'' என்று சொன்னவள்,

மேலும் இரு விரல்களை நீட்டி, ''ஐஸ்-க்ரீம் வாங்கலை'' என்றவள் மேலும் இரு விரல்களை நீட்டி, ''சாக்லெட்டும் வாங்கலை'' என்று கண்களை உருட்டிக் கொண்டு சொன்னாள்.

ஷ்யாமிற்கு மகளது விளக்கமும், செய்கையும் சிரிப்பை வரவழைத்த போதும் சிரித்தால் மீரா திட்டுவாளோ என்று நினைத்து, வந்த சிரிப்பை அடக்கினான்.

''அம்மா கார் வாங்கக் கூடாதுனு சொல்லலையே. கேளுங்கப்பா'' என்று தன் கையை மீராவை நோக்கி நீட்டினாள். தன் தாயைப் பார்த்துக் கேள்வி கேட்குமாறு தகப்பனுக்கு உத்தரவு போட்டாள்.

அவளது தந்தையும் மகள் பேச்சைத் தட்டாது, ''அவ கரெக்ட்டா தானே பண்ணியிருக்காள். நீ கார் வாங்கக் கூடாதுன்னு சொல்லலையாமே!'' என்று மகளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு மனைவியைக் கேள்வி கேட்டான்.



தகப்பன் தாயை மிரட்டவும் குஷியான தியா ஓடிச் சென்று ஷ்யாமின் கன்னத்தில் முத்தம் பதித்தாள்.

ஷ்யாம் உடனே மீராவின் கன்னத்தில் முத்தம் பதிக்க... தகப்பனும் மகளும் ஒன்று கூடிவிட்டார்கள் என்ற பொறாமையில் இருந்த மீரா என்ன செய்கிறோம் என்று தெரியாமலே தனது கன்னத்தை துடைத்துக் கொண்டே அங்கிருந்து எழுந்து சென்றாள்.

அவள் தன் கன்னத்தைத் துடைத்ததைப் பார்த்த ஷ்யாம் முகம் மாறினான்.

'இப்போ எதுக்கு துடைச்சிட்டுப் போறாள்? நான் முத்தம் கொடுத்தால் இவ என்ன தேஞ்சா போயிடுவாள்?' என்று மனதுக்குள மனைவிக்கு அர்ச்சனை செய்தான்.

''அப்பா இதை செட் பண்ணித் தாங்க. நான் விளையாடணும்'' என்று கூறி அவனது கவனத்தை அவனது மகள் கலைத்தாள்.

தியா வாங்கி வந்த விளையாட்டுப் பொருளைப் பிரித்து அதில் உள்ள துண்டுகளை அதில் கொடுத்திருந்த வழிமுறைகளின் படி இணைத்தான். எல்லாவற்றையும் இணைத்த பொழுது நெடுஞ்சாலையும், பாலமும் வந்தன.

இரு சின்ன கார்கள் இருந்தது. அதை இயக்கி அந்தச் சாலையில் ஒன்றன் பின் ஒன்றாக வைக்க அது அந்தச் சாலையில் வழுக்கிக் கொண்டு ஓடியது. பின் பாலத்தில் மேலேறி சறுக்கிக் கொண்டு கீழிறங்கி ஓட ஆரம்பித்தது.

''ஹைய்யா சூப்பரா போகுது டாடி!'' என்று கை தட்டி தியா ஆர்ப்பரித்தாள்.

ஷ்யாம் மகளது சந்தோஷத்தில் பங்கெடுத்துக் கொண்டாலும், மனைவியின் நிராகரிப்பினால் அவனது மனம் சுருங்கித் தான் போனது.

அரைமணி நேரம் விளையாடிய பின் ஷ்யாம் தியா விடம், ''பேபி, நாம இன்னைக்கு மொட்டை மாடியிலே போய் சாப்பிடுவோமா?'' எனக் கேட்டான்.

''அங்க இருட்டா இருக்குமே டாடி.''

''இல்லைடா பேபி. நிலா வெளிச்சம் சூப்பரா இருக் கும். நம்ம மாடியிலே லைட்டும் இருக்கேடா.''

''அப்போ போலாம்.''

''அம்மாவை சாப்பாட்டை அங்கே கொண்டுவரச் சொல்'' என்று சொல்லிவிட்டு அவன் முதலில் மாடியேற ஆரம் பித்தான்.

''அம்மா...'' என்று தியா கத்தியதும் சமையலறையில் இருந்து மீரா எட்டிப் பார்க்க,

''நானும் டாடியும் மொட்டை மாடிக்குப் போறோம். சாப்பாட்டை அங்கே கொண்டு வாங்க'' என்று சொல்லி விட்டுத் தன் தாயின் பதிலுக்குக் கூடக் காத்திராமல் தன் தந்தையைப் பின் தொடர்ந்து மாடி ஏறினாள்.

''எல்லாம் என் நேரம்'' என்று மீரா சொல்லவும், அப்பொழுது அவளருகே வந்த மகாலிங்கம்,

''என்னாச்சு மீரா?'' என்று விசாரித்தார்.

''எல்லாம் உங்க பேத்தி தான்... முளைச்சு மூனு இலை விடலை. எனக்கு ஆர்டர் போட்டுட்டு போகிறாள். எலலாம் அவ அப்பா கொடுக்கிற இடம்'' என்று தன் மகள் மீது புகார் வாசித்தாள்.



மகாலிங்கம் சிரித்துக் கொண்டார். அவரை முதலில் சாப்பிட வைத்த மீரா அவர்களுக்கான சாப்பாட்டை எடுதது‌க் கொண்டு மொட்டை மாடிக்கு சென்றாள்.

தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தியா கதை அளந்து கொண்டிருந்தாள். ஷ்யாம் குறுக்கும் நெடுக்கு மாக நடந்து கொண்டிருந்தான்.

''அம்மாடி பெரிய மனுஷி! நீ சொன்ன மாதிரி சாப் பாட்டைக் கொண்டு வந்தாச்சு. இப்போ என்ன செய்ய ணும்?'' என்று மீரா கேலியாக வினவ,

''இப்போ ஊட்டணும்'' என்று தியா பதிலளித்தாள்.

அங்கே இருந்த சிமெண்ட் நாற்காலியில் அமர்ந்த மீரா, ''அப்படின்னா இங்கே வந்து உட்கார்'' என்றதும்,

''முடியாது. நான் டாடிகிட்ட தான் இருப்பேன்.''

''அடம் பண்ணாதே தியா!'' என்று மீரா கத்தவும்,

''இப்போ எதுக்குக் கத்துறே? அவளை உன் பக்கத்தில் நான் தூக்கிட்டு வரேன்'' என்று மனைவி மீது இருந்த கடுப்பில் சற்று கடுப்பாக ஷ்யாம் பதிலளித்தான்.

அவன் கொடுத்த முத்தத்தைத் துடைத்ததால் தன் மேல் கணவன் கடுப்பாக இருக்கிறான் என்பதை அறியாத மீரா, 'பொண்ணைச் சொன்னதும் இவருக்குக் கோபம் பொத்துக்கிட்டு வந்திடுமே! இவருக்குப் பொண்ணு மட்டும் போதும்! பொண்டாட்டி வேண்டாம்' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டாள்.

முதல் வாய் உணவை மகளுக்கு ஊட்டியவள் கண வனைப் பார்த்து,''இனிமேல் உங்க பொண்ணை நான் ஒண்ணும் சொல்லலைங்க. நீங்களாச்சு அவளாச்சு''

என்று கூறியவள் சமாதான நடவடிக்கையாக தன் கையில் எடுத்த அடுத்த வாய் உணவை கணவனின் வாய் அருகே கொண்டு போனாள்.

அதில் அவனது கோபம் நொடியில் மாயமாய் மறைந்து போனது. வேகமாக வாய் திறந்து வாங்கிக் கொண்டவன்,

''நீ தாராளமா என்னையும் அவளையும் கண்டிச்சே வளர்க்கலாம் மீரா'' என்றான்.

''உங்களை வளர்க்கணுமா? இனிமேல் வளர்ந்தால் என்னவாகிறது?''

''ஆமா நான் இப்போ தானே புது பிறவி எடுத்திருக்கேன். நான் சின்ன பையன்தான். அதான் கப்பல் விட்டு, பட்டம் விட்டு விளையாடிக் கொண்டு இருக்கேன்'' என்று சிரித்துக் கொண்டே கூறியவன் அடுத்த வாய் உணவிற்கு வாயைத் திறந்து காண்பித்தான். மீரா அவனுக்கும் உணவை ஊட்ட ஆரம்பித்தாள்.

''டாடி, எப்போ பட்டம் விடலாம்? சன்டே அன்னைக்கா?''என்று தியா கேட்டாள்.

''சன்டே வேண்டாம்டா. அன்னைக்கு ஒரு பார்ட்டிக்குப் போக வேண்டி இருக்கு'' என்றவன்,

மகளது முகத்தில் படிந்த ஏமாற்றத்தைக் கண்ணுற்றவாறே, ''அப்பா சனிக்கிழமை சீக்கிரமா வரேன். அன்னைக்கு சாயங்கரலம் பட்டம் விடலாம்'' என்றான்.

''பார்ட்டிக்கு அப்பாவும் தியாவுமா போறோம்?''

''இல்லைடா. நாம எல்லோருமே போறோம்.' தாத்தா, அப்பா, அம்மா, தியா'' என்று சொன்னான்.



அவர்கள் இருவருக்குமான உணவை ஊட்டி முடித்ததும் மீரா சாப்பிட ஆரம்பித்தாள்.

ஷ்யாம் தியாவைத் தனது தோளில் சாய்த்துக் கொண்டு அவளது முதுகில் தட்டிக் கொடுத்தவாறு நடக்க ஆரம்பித்தான்.

மூன்று மாதங்களுக்கு முன்பு இவர் இருந்த நிலை என்ன? இப்போ இருக்கும் நிலை என்ன? என்று எண்ணிப் பார்த்த மீராவிற்கு விவேக்கின் காமெடி வசனமான 'எப்படி இருந்த நான் இப்படி ஆகிட்டேன்!' தான் ஞாபகத்திற்கு வந்தது.

## 25

சனிக்கிழமை மாலை சொன்னபடி ஷ்யாம் சீக்கிரமாகவே வீடு திரும்பினான்.

அவன் வீட்டிற்குள் நுழையும்போதே, ''அப்பா வந்தாச்சு. அம்மா, நாங்க பட்டம் விடப் போறோம்'' என்று தியா கத்தவும்,

''அப்பா உள்ளே வந்து காபி குடிக்கட்டும். அதுக்குள்ளே உனக்கு என்ன அவசரம்?'' என்று மீரா மகளைக் கண்டித்தாள்.

''அப்பாக்கு பைவ் மினிட்ஸ் கொடுங்கடா குட்டி. அப்பா டிரஸ் மாத்திட்டு காபி குடிச்சிட்டு அப்புறமா பட்டம் விடப் போகலாம்'' என்றான்.

''ஓ.கே.'' என்று பெரிய மனுஷியாய் தியா தன் தந்தைக்கு அனுமதி வழங்கினாள்.

அவன் சொன்னபடி அடுத்த பத்தாவது நிமிடத்தில் மகளுடன் மொட்டை மாடியில் பட்டத்துடன் நின்றான்.

தனக்கு வெகு நாட்களாக பட்டம் விடத் தெரிந்தவன் போல் மகள் முன்பு நடித்தான். மீரா கற்றுக் கொடுத்த மெசேஜை அனுப்பிக் காட்ட எண்ணியவனாய் ஒரு பேப்பரை எடுத்து அதில் தியா என்று எழுதினான்.

''இதிலே என்னப்பா எழுதுறீங்க?'' என்று மகள் கேட்டதற்கு.

''உன் பேர் எழுதி இருக்கேன்டா குட்டி. இப்போ அது பட்டத்துக்கிட்டே போகும் பாரு!'' என்று சொல்லி அதை நூலின் முனையில் நுழைத்து அனுப்ப தியா சந்தோஷக் கூச்சலிட்டாள்.

''ஹேய் தியா ஹைட்டிலே போயிட்டாள். பட்டம் வரைக்கும் போயிட்டாள்'' என்று ஆர்ப்பரித்தாள்.

அடுத்த பேப்பரை எடுத்தவன் அதிலும் எதையோ எழுத...

''இது என்னப்பா?'' என்று கேட்டாள்.

''இது அம்மா பேர்டா பேபி'' என்றவன் நூலில் நுழைக்கும் பொழுது மனம் மாறி மேலும் சில எழுத்துக் களை எழுதி அதன் பின்பே நூலில் நுழைத்துப் பறக்க விட்டான்.

இருட்டும் வரை பட்டம் விட்டு மகிழ்ந்தவர்கள் பின்பு கீழே இறங்கித் தங்களது அறையில் சிறிது நேரம் தொலைக்காட்சியைப் பார்த்தார்கள்.

''பேபி, அம்மாவைக் காணோமே! கீழே அம்மாகிட்டே போவோமா?'' என்று கேட்டுக் கொண்டே அவளைத் தூக்கிக் கொண்டு கீழே வந்தான்.



தியா தன் தாயிடமும், தாத்தாவிடமும் தாங்கள் பட்டம் விட்ட கதையை பத்து நிமிடத்திற்கும் மேலாக அளந்தாள்.

தாத்தா வெகு சீக்கிரத்திலேயே சாப்பிட்டுவிட்டுச் செல்ல மூவரும் சாப்பிட அமர்ந்தார்கள். கணவனுக்குப் பரிமாறியவள் மகளுக்கு ஊட்ட ஆரம்பித்தாள்.

அப்பொழுது தியா கர்ம சிரத்தையாக, ''அம்மா ஐ.எல்.யுன்னா என்ன?'' என்று கேட்டாள்.

''அப்படிப் போட்டுத் தாக்கு'' என்று ஷ்யாம் சிரிக்க...

''உன் வயசு பிள்ளைங்க தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம் தான்'' என்று முணுமுணுத்தவள், ''இதை எங்கே இருந்துடி பிடிச்சே?'' என்று கேட்டாள்.

''அப்பா தான் மீரா ஐ.எல்.யு அப்படின்னு எழுதி பட்டத்துக்கு மெசேஜ் அனுப்பினார்'' என்றதும் சாப் பிட்டுக் கொண்டிருந்த ஷ்யாமிற்கு புரை ஏறியது.

இது தான் சாக்கு என்று அவனை முறைத்துக் கொண்டே மீரா அவனது தலையில் இரண்டு தட்டு தட்டினாள்.

'நம்மகிட்டே தனிமையிலே சொல்லுறதை விட் டுட்டு பொண்ணு முன்னாடி அதுவும் பட்டத்துக்கிட்டே சொல்லி இருக்கிறார். இவரை...' என்று கடுப்பானவள்,

''பட்டம் உன் அப்பாக்கு பதில் சொல்லுச்சா?'' என்று நக்கலாகக் கேட்டாள்.

ஷ்யாமோ மகளிடம், ''உனக்கு ஏ,பி,சி,டி தெரியுமாடா பேபி?'' என்று விசாரித்தான்.

''ஓ! தெரியுமே டாடி.''

''ஆனாலும் இந்த வயசிலே நீ இப்படி எல்லாத்தையும் தெரிஞ்சு வைச்சுக்கக் கூடாதுடா பேபி'' என்று பெருமூச்சு விட்டான்.

தியா சாப்பிட்டு முடித்ததும் வரவேற்பறையில் இருந்த தொலைக்காட்சியில் கார்ட்டூன் பார்க்க ஆரம்பித்தாள்.

மகள் நகர்ந்து சென்றதும் சாப்பாட்டு மேஜையை விட்டு நகரப் போன மீராவின் கரம் பற்றி தடுத்த ஷ்யாம்,

''பட்டம் பதில் சொல்லலைன்னா என்ன? நீ பதில் சொல்லேன் மீரா'' என்று ஆவலும் எதிர்பார்ப்புமாய் அவளது கண்களைப் பார்த்துக் கேட்க,

அவனை முறைத்துக் கொண்டே, ''இட்லு'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

'இது எந்த ஊர் பாஷை? ஹிந்தியா? குஜராத்தியா? என்ன சொல்லுறாள்? போடான்னு திட்டுறாளோ?' என்று பலவாறு குழம்பினான்.

அன்று இரவு படுக்கையில் படுத்ததும் வழக்கமாக அவள் மேல் போடும் கையைக் கூடப் போடாமல் அமைதி காத்தான். இல்லையில்லை தூங்குவதாக பாவனை செய்தான்.

'என்மேல் இன்னமும் கோபமாகத்தான் இருக்கிறாளா? என்னை மன்னிக்க மனமில்லையா? ஏன் என்னிடம் விலகியே இருக்கிறாள்?' என்று நினைத்து அவன் வருந்திக் கொண்டிருந்தான்.

மீராவோ கணவனின் செயலால்... பட்டம் விடு தூதால் மகிழ்ந்திருந்தாள். கணவன் தன்னிடம் அதிக



நெருக்கம் காட்டுவான் என்று அவள் நினைத்ததிற்கு நேர்மாறாக அவனது நடவடிக்கை அமைய... அவள் குழம்பினாள். திரும்பி அவனைப் பார்த்தாள். அவன் தூங்கிக் கொண்டிருந்தான்.

'ஆபீஸிலும் வேலை. வீட்டிலும் இந்தச் சின்ன குட்டி ஒரு நிமிஷம் கூட ரெஸ்ட் எடுக்க விடமாட்டேங்கிறாள். அசதியில் தூங்கிவிட்டார் போல!' என்று நினைத்தவள் அவனை நெருங்கி அவனை அணைத்தவாறு படுத்து விரைவிலேயே தூங்கிப் போனாள்.

தூங்காமல் விழித்துக் கொண்டிருந்த ஷ்யாமோ, 'தூக்கக் காலத்தில் என்னை நெருங்கிப் படுத்து இம்சிக்குறாள். முழிச்சிருந்தா முறைக்குறாள். தூங்கும்போது தூண்டிவிடுறாள். இவளை...' என்று மனதுக்குள் திட்டியவன் தானும் அவளை அணைத்துக் கொண்டு 'உனக்கு விதிச்சது இவ்வளவு தான்டா ஷ்யாம்' என்று நினைத்துக் கொண்டே தூங்கிப் போனான்.

மறுநாள் ஞாயிறு என்பதால் அனைவருமே மெதுவாகத் தான் படுக்கையை விட்டு எழுந்தார்கள்.

மீரா கீழே தாத்தாவைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது தான் அப்பாவும், மகளும் எழுந்து வந்தார்கள்.

கணவனின் சோர்ந்த முகத்தைப் பார்த்தவள், ''என்னாச்சுங்க? உடம்பு சரியில்லையா?'' என்று அக்கறையுடன் கேட்டவாறு அவனது கழுத்து மற்றும் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

மனைவியின் செயலில் அவனுக்கு மகிழ்ச்சியும், குழப்பமும் சேர்ந்தே வந்தது. ஒரு சமயம் நெருக்கம் காண்பிக்கிறாள். சில சமயம் விலகிப் போகிறாள்.

இவளைப் புரிஞ்சுக்க முடியலையே என்று நினைத்துக் கொண்டான்.

''ஒண்ணுமில்லைம்மா. நல்லாத் தான் இருக்கிறேன்'' என்று அலுப்பான குரலில் பதிலளித்தான்.

அவனது குரலிலும் தென்பட்ட சோர்வைப் பார்த்தவள் மகளிடம் திரும்பி, ''தியா, டாடி டயர்டா இருக்கார். நீ பாட்டுக்கும் பட்டம் விடணும் கப்பல் விடணும்ன்னு அவரைப் படுத்தி வைக்கக் கூடாது'' என்றாள்.

''நானா தனியா எப்படிம்மா விளையாட முடியும்? எனக்குக் கூட விளையாட ஆள் வேணுமே!''

''நீ கவலைப்படாதே தியா. சீக்கிரமே உன் டாடியும் மம்மியும் உனக்கு ஆளை ரெடி பண்ணித் தருவாங்க'' என்று மகாலிங்கம் இடை புக,

அவரது வார்த்தையில் வெட்கம் அடைந்த மீரா, 'மொத்த குடும்பமும் குழந்தை முன்னாடி தான் இந்தப் பேச்செல்லாம் பேசுவாங்க போல!' என்று மனதில் செல்லமாகத் திட்டிக் கொண்டாள்.

மனைவியின் வெட்கம் நிறைந்த முகம் ஷ்யாமிற்கு திருப்தியை அளித்தது. இன்று அவளிடம் மனம் திறந்து பேச வேண்டும் என்று அவன் முடிவெடுத்துக் கொண்டான்.

அன்று மதியச் சாப்பாட்டிற்குப் பின் அவன் தூங்காமல் தன் லேப்டாப்பில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான். தியாவும் தூங்காமல் சுற்றிக் கொண்டிருந்தாள்.

''தியா தூங்கலையா? வா வந்து படு'' என்று மீரா அழைக்கவும்,



''எனக்குத் தூக்கம் வரலைம்மா'' என்றாள்.

''உங்க அப்பா வீட்டிலே இருந்தால் உன்னைத் தூக்கம் வராதே...'' என்று மீரா நக்கல் பண்ணவும்,

''நான் அப்பாவை டிஸ்டர்ப் பண்ணாமல் அவர் பக்கத்திலே இருக்கேன்'' என்று சொன்னவள் படுக்கையில் ஏறி அவன் மீது சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

''என்னடா பேபி போர் அடிக்குதா?'' என்று அவள் தலையை ஷ்யாம் கலைத்து விட்டான்.

அவள் எழுந்து அவனது காதில் கிசுகிசுப்பான குரலில், ''அப்பா ஏதாச்சும் விளையாடுவோமா?'' என்று கேட்டாள்.

ஷ்யாம் நிமிர்ந்து மீராவைப் பார்க்க...

அவனது பார்வையிலேயே மீராவிற்கு மகளது கேள்வி புரிந்து போக, ''தியா அங்கே என்ன கிசுகிசுக்கிறே?'' என்று கேட்டாள்.

ஒண்ணுமில்லை என்பது போல் தியா கைவிரித்துத் தனது தலையை இடதும் வலதுமாக ஆட்டினாள்.

''உனக்கு ஏதாச்சும் விளையாடணும்ன்னா என் கூட விளையாடு. வா...'' என்றதும்,

தியா துள்ளிக் குதித்து ஓடி வந்து தாயைக் கட்டிக் கொண்டு, ''என்ன விளையாடலாம்?'' என்று கேட்டாள்.

''ஸ்நேக் அன்ட் லேடர் விளையாடுவோமா?'' என்றதும் தலையை வேகமாக ஆட்டித் தனது சம்மதத்தைத் தெரிவித்தாள்.

அவளைக் கீழே இறக்கிவிட்டு அந்த பரமபத அட்டையை எடுத்து வந்தாள்.

''உனக்கு என்ன கலர் காயின் வேண்டும்?'' என்று கேட்டு முடிவு செய்து டைஸ் என்று சொல்லப்படும் தாயக் கட்டையை உருட்டி விளையாட ஆரம்பித்தார்கள்.

மீராவே அவர்கள் இருவரது காயையும் தாயக் கட்டையில் விழுந்த எண்ணிற்குத் தகுந்த மாதிரி நகர்த்துவாள்.

அவள் காயை நகர்த்தும் முன்பே, ''எனக்கு லேடர் வருதா? ஸ்நேக் வருதாம்மா? தியா மேலே போயிட்டாளா?'' என்பது போன்ற கேள்விகளால் அவளைக் குடைந்து எடுத்தாள்.

மகளின் கேள்விகளைக் கேட்டுப் புன்னகைத்துக் கொண்டே ஷ்யாம் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

முதல் ஆட்டத்தில் தியா வெற்றி பெற்றாள். அந்த வெற்றியை ஷ்யாமிடம் பகிர்ந்து கொண்டு ஆனந்தக் கூத்தாடினாள். இரண்டாவது ஆட்டம் தொடங்கியது. முதல் ஆட்டம் போலவே தியாவின் குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

சிறிது நேரம் கழித்து தியா அமைதியாகிவிட ஷ்யாம் தன் வேலையை விட்டுவிட்டு மகளை நோட்டம் விட்டான்.

மகளது முகத்தில் தெரிந்த கவலை ரேகையைப் பார்த்தவன் குனிந்து அந்த பரமபத அட்டையைப் பார்க்க... மீரா ஜெயிக்கும் தருவாயில் இருந்தாள். தியாவோ மிகவும் பின் தங்கி இருந்தாள்.

'ஓ! மேடம் தோற்கிறோம் என்று ஓவரா ஃபீல் பண்ணுறாங்களா?' என்று நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டான்.



மகளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த மீராவும், ''தியா, நாம நாளைக்கு விளையாடுவோமா? மணி நாலாகிடுச்சு. பால் குடிச்சிட்டு வெளியே கிளம்பணுமே!'' என்றதும்,

தியாவின் முகம் பூவாய் மலர்ந்தது. வேகமாக எழுந்து கீழே செல்ல ஆரம்பித்தாள்.

கீழே சென்றவர்கள் அரை மணி நேரங்கழித்து ஷ்யாமிற்கான காபியுடன் மேலே வந்தார்கள்.

''அப்பா, தியாவே காபி போட்டாள். எப்படி இருக்கு?'' என்று ஆர்வமாக தியா கேட்டதும்,

''நீங்களா காபி போட்டீங்க? அவ்வளவு பெரிய பொண்ணாகிட்டீங்களா?'' என்று ஆச்சரிய பாவனையை ஷ்யாம் தன் முகத்தில் தேக்கிக் கேட்டதும்,

''நான் காபி கலக்கும்போது என் கையை தொட்டுக் கொண்டாள். அதனால அவ காபி போட்டதா பெருமையாச் சொல்லிக்கிறாள்'' என்று சொன்ன மீரா மகளுக்குக் கை கால்களைக் கழுவிவிட்டு துடைத்து வேறு நல்ல உடையை அணிவிக்க ஆரம்பித்தாள்.

தியாவிற்கு உடை மாற்றிக் கொண்டே தியா, ''விளையாட்டிலே தோத்தா நீ அழுவியா?'' என்று கேட்டாள்.

மகளிடம் இருந்து பதிலை எதிர்பார்க்காதவளாய், ''நானெல்லாம் விளையாட்டிலே தோத்துப் போனா அழமாட்டேன். யார் ஜெயிச்சாங்களோ அவங்களை கங்கிராட்ஸ்ன்னு சொல்லி கை கொடுத்து வாழ்த்துவேன். அடுத்த தடவை எப்படியாச்சும் ஜெயிக்க முயற்சி

பண்ணுவேன். தோத்திடுவோமோன்னு பயந்து பாதியிலே பின் வாங்க மாட்டேன்.

அப்படிப் பண்ணினால் அதுக்கப்புறம் யாருமே நம்ம கூட விளையாடவும் வரமாட்டாங்க. நம்மளை பிரண்டாவும் எத்துக்க மாட்டாங்க. அம்மா குட் கேர்ள். அதனால அப்படிப் பண்ணினேன். தியா...'' என்று கேள்வியாக நிறுத்த.

''தியாவும் குட் கேர்ள் தான். இனிமே அழ மாட்டா'' என்று வேகமாகச் சொன்னாள்.

''என் தியா எப்பவுமே குட் கேர்ள் ஆச்சே!'' என்று கூறி அவளது கன்னத்தில் முத்தம் பதித்தாள்.

ஷ்யாம் மனைவி மற்றும் மகளது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். அதன் விளைவாய் யோசனையில் ஈடுபட்டான்.

''நான் கீழே தாத்தாகிட்டே போறேன்'' என்று சொல்லி தியா ஓடிவிட... மீரா உடை மாற்றிக் கிளம்ப ஆரம்பித்தாள்.

## 26

மீரா இளம் ரோஜா வண்ணத்தில் டிசைனர் புடவை உடுத்தினாள். முத்துத் தோடும், முத்துக்கள் கொண்டு சின்ன நெக்லஸும் அணிந்து வந்தாள்.

மலர்ந்த ரோஜாவைப் போல் தன் முன் வந்து நின்ற மனைவியின் மீதிருந்து பார்வையை ஷ்யாமால் விலக்க முடியவில்லை.



கணவனது பார்வையில் வெட்கம் அடைந்தவளாக, ''நான் ரெடிங்க. போகலாமா?'' என்று கேட்டாள்.

''இங்கே வா. உன்னிடம் கொஞ்சம் பேசணும்.''

''என்ன சொல்லுங்க...'' என்று அவனது அருகே வந்து நின்றாள்.

படுக்கையில் அமர்ந்திருந்தவன் அவளது கண்களைப் பார்த்தவாறு, ''உனக்கு என்னைப் பிடிக்காதா?'' என்று கேட்டான்.

''இப்போ வந்து இப்படி ஒரு கேள்வி கேட்கிறீங்க? உங்களுக்கு என்னாச்சு?''

''ப்ச்சு. எழுப்பாதே. நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்.''

''உங்களைப் பிடிக்காமலா உங்களை கல்யாணம் பண்ண சம்மதிச்சேன்?''

''அது அப்போ! கல்யாணம் முடிஞ்சு நமக்கிடையிலே இவ்வளவு நடந்த பிறகும் உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?''

''நீங்க தானேங்க என் ஹஸ்பண்ட். அப்புறம் உங்களைப் பிடிக்காமல் போகுமா?''

'நேரடியாக பதில் சொல்லாமல் இப்படிச் சுற்றி வளைக்கிறாள். அப்படி என்றால் என்னைப் பிடிக்கவில்லை என்று அர்த்தமா? நான் அன்று செய்த தப்புகளை மன்னிக்க மனசில்லையா?

அதனால் தான் நான் கொடுத்த முத்தத்தை துடைத்து எறிந்தாளோ? நேற்று வேறு முறைத்துக் கொண்டே புரியாத பாஷையில் திட்டினாள்' என்று நினைத்தவனின் மனமும் முகமும் வாடியது.

அவனது அமைதியைப் பார்த்தவள், ''என்னாச் சுங்க?'' என்று கேட்டாள்.

அவளை அருகே இழுத்து அவளது இடுப்பை அணைத்துக் கொண்டு அவளது கண்களைப் பார்த்த வாறு, ''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தியாகிட்டே என்ன சொன்னே! ஒரு தடவை தோத்துப் போனால், சோர்ந்து போகாமல் திரும்பப் போராடுவேன் என்று சொன்னே தானே? அப்படின்னா ஒரு தடவை என்னைத் திருத்தும் முயற்சியில் தோத்துப் போய்விட்டாய் என்று அப்படியே விடக்கூடாது தானே? எனக்கு இன்னொரு சான்ஸ் கொடுக்கலாமே?

நானும் மாறிகிட்டே தானே இருக்கேன். அது உனக்குத் தெரியலையா? தியா தப்பு செஞ்சால் மன்னிக்க மாட் டாயா? நானும் தியா மாதிரி உனக்கு ஒரு குழந்தை இல்லையா?'' என்று கேட்கும் பொழுது அவனது குரல் கரகரத்து ஒலித்தது.

''அம்மா...'' என்று தியாவின் குரல் தூரத்தில் கேட்டது.

'என்ன இவர் இப்படிக் கேட்கிறார்? இவர் நம்மை நெருங்கவில்லை என்று நாம நினைத்துக் கொண்டிருக் கிறோம். இவர் என்னடான்னா நாம மன்னிக்கலைன்னு சொல்கிறார்' என நினைத்துக் கொண்டே, தனது இரு கைகளால் அவனது கன்னம் தாங்கி தனது மனநிலையை எடுத்துக் கூற எண்ணித் தன் வாயைத் திறக்க,

''அம்மா...'' என்று கூவிக் கொண்டே தியா அறைக் குள் நுழைந்தாள்.

மீராவும், ஷ்யாமும் தங்களது கைகளை விலக்கிக் கொண்டனர்.



நால்வரும் பார்ட்டிக்குக் கிளம்பிச் சென்றார்கள்.

பிறந்த நாள் நாயகனான ஆறு வயது விஸீத் கோட், சூட் அணிந்து அமர்க்களமாக இருந்தான்.

சரியாக சொன்ன நேரத்திற்கு கேக் வெட்டி பார்ட் டியை ஆரம்பித்து வைத்தார்கள். அதன் பின் டிரிங்க்ஸ் பார்ட்டி ஆரம்பமானது.

'சிறு குழந்தையின் பிறந்த நாள் விழாவில் கூடவா டிரிங்க்ஸ்?' என நினைத்த மீரா முகம் சுளித்தாள்.

ஷ்யாமிற்கும் தியாவை இங்கே கூட்டி வந்திருக்க வேண்டாமோ? தப்புப் பண்ணி விட்டோமோ? என் றிருந்தது.

சிறிது நேரத்தில் ஒரு பதினைந்து பேர் கொண்ட கும்பல் ஷ்யாமின் குடும்பத்தைச் சுற்றி வளைத்தது.

''ஹேய் ஷ்யாம்! இது தான் உன் பொண்ணா? பேர் என்ன?'' என்று ஒருவர் கேட்டதும்,

ஷ்யாம் முகம் கொள்ளாப் பெருமையுடன், ''இது தான் என் பொண்ணு தியா!'' என்று அவர்களிடம் அறிமுகப் படுத்தினான்.

''தியா... நல்ல பேர். தியான்னா என்ன அர்த்தம்?'' என்று ஒருவர் கேட்க,

ஷ்யாம் பதிலளிக்கும் முன்... தியா அவனை முந்திக் கொண்டு, ''எனக்கு எங்கம்மா தான் இந்தப் பேரை வைச்சாங்க. எங்க அப்பாக்கு என் பேரே தெரியாது. நான் தான் அவருக்கே சொன்னேன்'' என்றாள்.

தன் தந்தைக்கு பொது இடத்தில் தலை குனிவை ஏற்படுத்துகிறோம் என்று தெரியாமல் தலை நிமிர்ந்து தியா உற்சாகமாகச் சொல்லி முடித்தாள்.

ஷ்யாமின் வாழ்க்கையில் நடந்தவற்றை அறிந்தவர்கள் என்ற முறையில் கூடி இருந்த அனைவரும் கேலியாக நகைக்க ஆரம்பித்தனர்.

அவர்களது நகைப்பொலி கேட்டு விழாவிற்கு வந்த அனைவரின் கவனமும் இவர்கள் பக்கம் திரும்பியது.

"பெத்தவங்க தான் குழந்தைகிட்டே இதுதான் உன் பேர்ன்னு சொல்லிப் பழகுவாங்க. இங்கே உல்டாவா நடக்குதுபோல!" என்று ஒருவரும்,

"ஷ்யாம் எப்பவுமே ஸ்பெஷல் இல்லையா?! அதான் இப்படி!" என்று மற்றொருவரும்,

"குழந்தை தெரியாமல் சொல்லுதோ என்னவோ?" என்று வேறொருவர் சென்னதும்,

"குழந்தை பொய் சொல்லாது" என்று வினீத்தின் தாயும் கூற,

ஷ்யாம் செய்வதறியாது திகைத்து நின்றான். மகாலிங்கத்திற்கோ வியர்க்க ஆரம்பித்தது.

தன் வீட்டு ஆண்களின் நிலைமையை நொடிப் பொழுதில் கணக்கெடுத்த மீரா தன் வாய் திறந்து பேச ஆரம்பித்தாள்.

கூட்டத்தினரைப் பார்த்து, "ஒரு நிமிஷம் நான் பேசலாமா?" என்று அனுமதி கேட்கும் பாவனையில் அவர்களின் கேலிகளுக்கும், கேள்விகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்தாள்.

தன் மகள்புறம் திரும்பி, "தியா, டாடிக்கு ஹிந்தி தெரியுமா?" என்று கேட்டாள்.



உடனே தியா பெருமையாக, "என் டாடிக்கு ஹிந்தி தெரியாது. நான் தான் கத்துத் தருவேன்" என்றாள்.

மீரா வீனித்தின் தாயைப் பார்த்து, "குழந்தைங்க பொய் சொல்லாதில்லே!" என்று எகத்தாளமாகக் கேட்டவள்,

கூட்டத்தினரைப் பார்த்து, "ஷ்யாம் எவ்வளவு நல்லா ஹிந்தி பேசுவார்ன்னு உங்க எல்லோருக்கும் தெரியும் தானே! இருந்தும் தன் பொண்ணுகிட்டே ஹிந்தி கத்துக் கிறார்ன்னா என்ன அர்த்தம்?" என்று கேட்டு ஒரு நொடி அவர்கள் அனைவரையும் பார்க்க... அவர்கள் அனைவரும் அமைதி காத்தார்கள்.

"நீங்கெல்லாம் உங்க பிள்ளைங்ககிட்டே உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு சொல்லி தோத்துப் போக விரும்ப மாட்டீங்களா? அப்படின்னா நீங்க லைஃபிலே நிறைய மிஸ் பண்ணுறீங்கன்னு அர்த்தம்" என்றவள்,

வினீத்தின் தாயைப் பார்த்து, "பார்ட்டி நடத்தினால் மட்டும் போதாது. அதுக்குன்னு ஒரு மேனர்ஸ் இருக்கு. அதையும் கடைபிடிக்கணும். முதல்ல அதைத் தெரிஞ்சுக்கோங்க. விருந்துக்கு வந்த விருந்தாளிகளை நல்லபடியா கவனிச்சு அனுப்பணும். இப்படி மத்தவங்களோட சேர்ந்து கேலி பேசி அவமானப்படுத்தக் கூடாது" என்று பாடம் எடுக்கவும், வினீத்தின் தாய் பொங்கி விட்டாள்.

"எனக்குப் பாடம் சொல்லித் தருவது இருக்கட்டும். நீ ரொம்ப ஒழுங்கோ? உன் புருஷன் அடிபட்டு ரெண்டு வருஷம் ஹாஸ்பிட்டலுக்கும் வீட்டுக்குமா அலைஞ்சப்போ நீ எங்கே போனே? ஒரு நாள் ஒரு பொழுது நீ அவரை வந்து பார்த்தியா? நீயெல்லாம் பேச வந்திட்டே!" என்றாள்.

இப்பொழுது செய்வதறியாது திகைத்து நிற்பது மீராவின் முறையாயிற்று.

ஆனால் மனைவி தனக்காகப் பேச ஆரம்பித்தவுடன் ஷ்யாம் தெளிவு பெற ஆரம்பித்திருந்தான். அதனால் அவரின் கேள்விக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தான்.

"ஏன் எனக்கு என் பொண்ணு பேர் தெரியலை? ஏன் என் வைஃப் என்னைப் பார்க்க ஹாஸ்பிட்டல் வரலை? இதெல்லாம் எங்க பெர்சனலான விஷயம். ஆனால் பொதுவிலே அலச ஆரம்பிச்சிட்டீங்க. அதனால பதில் சொல்லுறேன்.

தியாவுக்கான அர்த்தம் கேட்டீங்க இல்ல... தியான்னா வெளிச்சம்ன்னு அர்த்தம். எங்களோட இருட்டான திருமண வாழ்க்கையிலே வெளிச்சத்தை ஏத்தி வைக்கப் போறவள் எங்க பொண்ணு தான் என்று தெரிஞ்சு என் மனைவி வைச்ச பேர் தான் அது! ரொம்பப் பொருத்தமா வைச்சிருக்காள் இல்ல?" என்று மனைவியைப் பற்றி பெருமையாகக் கூறியவன் அவளைப் பார்த்துப் புன்முறுவல் புரிந்தான்.

"இதே மாதிரி ஒரு பார்ட்டிக்கு என் மனைவியைக் கூட்டிக்கிட்டு வந்த நான் பொறுப்பில்லாமல் அவளைத் தனியா தவிக்க விட்டுட்டுப் போனேன். அது ஏன்?

பிரசவ சமயத்திலே அவ பக்கத்திலே துணை இருக்காமல் ஆபீஸுக்கு போனேன். அது ஏன்?

பிறந்த குழந்தையை ஒரு தடவை கூட போய் பார்க்காமல் இருந்தேன். அது ஏன்?

எனக்கு அடிபட்டிருந்த போது என் வைஃப் ஹாஸ்பிட்டலுக்கு வரலை. என்னா எனக்கு அடிபட்டதே



அவளுக்குத் தெரியாது. நாங்க தெரிவிக்கலை. அவளும் என்னைப் பத்தித் தெரிஞ்சுக்க விரும்பலை. அவ தெரிஞ்சுக்க விரும்பாததுக்கு காரணம் நான் தான். நான் எப்படி அதுக்குக் காரணமாவேன்?

இப்படி என் வாழ்க்கையில் பல ஏன்கள் நிறைஞ்சு இருக்கு.

அத்தனைக்கும் காரணம் என் பொறுப்பில்லாத்தனம். அதுக்குக் காரணம் உங்களை மாதிரி பெத்தவங்க தான்" என்று வினீத்தின் தாயைச் சுட்டிக் காட்டிச் சொன்னான்.

"என்னை மாதிரியா? நான் என்ன செஞ்சேன்?" என்று வினீத்தின் தாய் எகத்தாளமாய் கேட்க,

"உங்களை மாதிரி என் அம்மா, அப்பாவும் பொறுப்பில்லாமல் நடந்துக்கிட்டதால் தான் அப்படி ஒரு பொறுப்பில்லாத ஷ்யாம் உருவானான். பிள்ளையைப் பெத்துட்டா மட்டும் போதுமா? அதுக்கு நல்லது கெட்டது சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டாமா? நீங்களும் உங்க கணவரும் அப்படியொரு பொறுப்பில்லாத தாய் தகப்பன் தான் என்று நிரூபிக்கட்டுமா? ஒரு சின்ன சாம்பிள் காட்டட்டுமா?" என்று கேட்டவன் அவர்களது மகன் வினீத்தின் புறம் திரும்பினான்.

யாரிடமும் ஒட்டாமல் ஒரு ஓரமாகச் சுருண்டு கொண்டு அமர்ந்திருந்த வினீத்தை ஷ்யாம் தன்னருகே வருமாறு அழைத்தான்.

அருகே வந்தவனிடம், "வினீத், உனக்கு உன் அம்மா பிடிக்குமா? அப்பா பிடிக்குமா?" என்று கேட்டான்.

வினீத் சற்றும் தாமதிக்காமல், "ஐ ஹேட் போத் ஆஃப் தெம்" என்றான்.

'என்னுடைய பெற்றோரை நான் வெறுக்கிறேன்'' என்று அந்த சிறுவன் சொன்னதும் அவனது பெற்றோர் அதிர்ந்து போய் விழித்தனர்!

கூடிய இருந்த கூட்டமும் அமைதி காத்தது.

''உங்களை அவமானப்படுத்துறதுக்காக நான் இந்தக் கேள்வியை உங்க பையனைப் பார்த்துக் கேட்கலை. இன்னொரு ஷ்யாமை உருவாக்கிடாதீங்ன்னு எடுத்துச் சொல்லத்தான் கேட்டேன்.

நான் பொறுப்பா நடந்துக்கலையான்னு கேட்டீங்களே! சின்ன குழந்தையோட பிறந்த நாள் விழாவிற்கு எதுக்கு டிரிங்ஸ் பார்ட்டி ஏற்பாடு செஞ்சீங்க? அதைப் பார்த்து வளரும் உங்க பையனோட மனசு பாதிக்கப்படும் என்று உங்களுக்குத் தோணலையா?

என் அம்மா, அப்பா மாதிரி ஆளுங்களெல்லாம் எனக்கும் பிள்ளை இருக்குன்னு வெளியே சொல்லிக்கிறதுக்காக பிள்ளையைப் பெத்துக்கிறாங்க. அதுக்கு அப்புறம் அவங்க தங்கள் பிள்ளைகளை கண்டுக்கறதே இல்லை. ஒண்ணு பெத்தா பொறுப்பா வளருங்க. இல்லைன்னா யாருக்காச்சும் தத்துக் கொடுத்திடுங்க.

என்னை மாதிரி தவிக்க விடாதீங்க. நானும் தவிச்சி என்னை நம்பி வந்தவளையும் தவிக்க விடுற நிலைமைக்கு ஆளாக்கிடாதீங்க.

எனக்கு அமைஞ்ச மாதிரி பொண்ணும், பொண்டாட்டியும் எல்லோருக்கும் அமையவும் மாட்டாங்க. எனக்குப் பாடம் எடுத்த மாதிரி பொறுமையா பாடமும் எடுக்க மாட்டாங்க.



இனிமேலாவது யோசிங்க!'' என்று சொல்லி நகரப் போனவன் நின்று நிதானித்து,

''என் குடும்ப விஷயத்தை நீங்களெல்லாம் பேசுவது இதுவே கடைசி முறையா இருக்கணும். என் பொண்ணு என் வாழ்க்கையிலே எனக்குக் கிடைச்ச வரம்ன்னா, என் வாழ்க்கையிலே என் வைஃப் தான். அதனால அவங்களைப் பத்தின விமர்சனத்தை இத்தோட நிறுத்திக்கோங்க.

முதல்ல உங்ககிட்டே இருக்கிற தப்பைத் திருத்திக்கப் பாருங்க. அதுக்கு அப்புறமா மத்தவங்க வாழ்க்கையைப் பத்தி கவலைப்படுங்க'' என்று சொன்னவன் தன் மனைவியின் கை பிடித்து வெளியே அழைத்து வந்தான்.

பேரன் மற்றும் பேரனின் மனைவியின் பேச்சைக் கேட்ட மகாலிங்கம் அவர்களின் புரிதலைத் தெரிந்து கொண்டதினால் மனம் நிம்மதியடைந்தார். அந்த நிம்மதி தந்த சந்தோஷத்தில் நெஞ்சை நிமிர்த்தி நடை போட்டார்.

அவர் வெளியேறும் முன் அங்கிருப்பவர்களை அற்பமாய் ஒரு பார்வை பார்க்கத் தவறவில்லை.

# 27



கணவனின் கைப்பிடியில் வெளியேறிய மீராவின் காதுகளில், 'என் வாழ்க்கையே என் மனைவி தான்!' என்ற வரியே ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

கணவனைக் கட்டியணைத்து கதறி அழ வேண்டும் போல் இருந்தது. இந்த வரிகளுக்காகத் தானே நான் இத்தனை நாளாகத் தவமிருந்தேன் என்றெண்ணிச் சிலிர்த்தது அவளது உள்ளம்.

இத்தனை நாளாக மகள் பற்றி மட்டுமே உயர்வாகப் பேசி வந்த கணவனின் வாயில் இருந்து வெளி வந்த 'என் மனைவியே என் வாழ்க்கை!' என்ற வார்த்தைகள் அவளை உருகச் செய்தது. தியா அளவிற்கு என்னையும் நேசிக்கிறாரா? என நினைத்துப் பூரித்துப் போனாள்.

''தியா... அச்சோ குழந்தை நாங்கள் பேசியதையெல் லாம் கேட்டாளா?'' என்று அப்பொழுது தான் குழந் தையைப் பற்றி எண்ணியவளாக நிமிர்ந்து மகளைப் பார்த்தாள்.

தியா ஷ்யாமின் தோளில் தூங்கிப் போயிருந்தாள். மதியம் வீட்டில் தியா தூங்காததும் நல்லதிற்குதான் என்று மீரா எண்ணிக் கொண்டாள்.

காரின் அருகே வந்ததும் மீரா ஷ்யாமின் கைகளில் இருந்து தியாவை வாங்க முற்பட...

''இல்லைம்மா. நானே வைச்சிருக்கேன். நீ காரை ஓட்டுறியா?'' என்று கேட்டான்.

மீரா நிமிர்ந்து அவனை நன்றாகக் கூர்ந்து பார்த்தாள். ஷ்யாம் பதட்டத்துடனும், படபடப்புடனும் இருப்பது புலப்பட்டது.

''டாக்டரிடம் போகணுமாங்க? ஆர் யூ ஆல்ரைட்?'' என்று கரிசனத்துடன் கேட்க,

''ஒண்ணும் பிரச்சனையில்லைம்மா. என்னால ரோட்டிலே கவனம் வைக்க முடியாதுன்னு பயப்படுறேன். அவ்வளவுதான்'' என்றான்.



சரி என்று சொல்லி மீரா டிரைவர் சீட்டில் அமர... ஷ்யாம் தியாவுடன் முன்னிருக்கையில் அமர்ந்து கொண் டான். மகாலிங்கம் பின்பக்கம் ஏறி அமர்ந்து கொண்டார்.

மீரா நேராக ஒரு உணவகத்திற்கு வண்டியை விட்டாள்.

''இங்கே எதுக்கும்மா நிறுத்தினே? எனக்கு சாப்பிடும் மூடே இல்லை.''

''உங்களுக்கும் எனக்கும் சாப்பாடு தேவைப்படாமல் போகலாங்க. ஆனால் உங்க பொண்ணும், தாத்தாவும் சாப்பிட வேண்டாமா? அவங்களால பசி தாங்க முடி யாது'' என்று சொல்லி அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

தூக்கத்தில் இருக்கும் தியாவை எழுப்பி, சாப்பிட வைத்து அவர்கள் வீடு வந்து சேரும்பொழுது மணி ஒன்பதைக் கடந்திருந்தது.

மகாலிங்கம் தன் பேரனிடம், ''தியாவை என் படுக்கை யிலே படுக்க வைப்பா'' என்று சொல்லி பேத்தியைத் தன்னுடன் இருத்திக் கொண்டார்.

அவர்கள் இருவரும் படியேறி மேலே சென்று அவர் களது அறைக்குள் நுழைந்தனர். அறையைத் தாண்டி டவன் தன் முன்னே சென்று கொண்டிருந்த மீராவைக் கைபிடித்து தடுத்து நிறுத்தினான். தன் புறம் திருப்பி அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்.

அவளும் வெகு நேரமாக தான் செய்ய நினைத் ததை... அதாவது கணவனை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

அவனது அணைப்பு மேலும் மேலும் இறுகிக் கொண்டே போக அதில் கரைந்து போக நினைப்பவளாய் மேலும் மேலும் அவனிடம் ஒண்டினாள்.

அவளது கண்ணீரை உணர்ந்தவன் அவளைத் தன்னிடமிருந்து விலக்கி அவளது கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்து, ''போதும்மா. இதுவரைக்கும் என்னால நீ கண்ணீர் விட்டதெல்லாம் போதும். நான் இதுவரைக்கும் உனக்கு பண்ணின எல்லா கொடுமைகளுக்கும் சாரின்னு ஒரு வார்த்தை சொன்னால் பத்தாது. ஆனால் அதைத் தவிர வேற என்ன சொல்லுறதுன்னும் எனக்குத் தெரியலை.

ஆனா நான் செஞ்ச எதுவுமே அப்போ எனக்குத் தப்பாத் தெரியலை. எனக்கு உறவுகளோட அர்த்தம் புரியலை. பாசம்ன்னா என்னன்னு தெரியாமலே வளர்ந்துட்டேன். வாழ்ந்துட்டேன். உனக்கு என்னோட அம்மா, அப்பா பத்தி ஏதாச்சும் தெரியுமா, மீரா? என்று கேட்டான்.

''ம்ம்ம்... இப்போ நான் திரும்பவும் தியா கூட சென்னைக்குக் கிளம்புற அன்னைக்கு தான் தாத்தா சொன்னார்.''

கசந்த முறுவலுடன் சில நொடிகள் அமைதியாய் இருந்தவன்...

''நம்ம ரெண்டு பேர் வாழ்க்கையோட தொடக்கத்திலேயே நான் தப்புப் பண்ண ஆரம்பிச்சுட்டேன் மீரா. ஒரு கல்யாணம் எப்படி நடக்கும்? ஒண்ணு பையனுக்கோ, பொண்ணுக்கோ பிடிச்சுப் போனதால கல்யாணத்தை ஏற்பாடு பண்ணுவாங்க. இல்லைன்னா



அம்மா, அப்பா பார்த்து தங்களோட பிள்ளைங்களுக்கு கல்யாணம் பேசி முடிப்பாங்க. ஆனால் நம்ம விஷயத்திலே பந்தயத்துக்காக...'' என்று தொடங்கியவன் அதற்கு மேல் தொடர முடியாமல் அமைதி காத்தான்.

''நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாங்க.''

''இல்லைம்மா. நான் சொல்லிடுறேன். என்னைத் தடுக்காதே'' என்று சொன்னவன் தன்னுடைய உள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்ட ஆரம்பித்தான்.

''நான் பந்தயத்துக்காக அன்னைக்கு கல்யாணத்துக்கு சம்மதிச்சப்போ எனக்கு எதுவும் தப்பா தெரியலை மீரா. எனக்கு நல்லது கெட்டது சொல்லித் தர எங்க வீட்டிலே யாரும் இல்லை. நல்ல நண்பர்கள் கிடைச்சால் ஒருத்தரோட வாழ்க்கை வளமா இருக்கலாம். ஆனால் யோசித்துப் பாரு... எனக்கு நண்பர்களா கிடைச்சவங்களெல்லாம் யாரு? என்னை மாதிரி வீட்டினரால் ஒதுக்கப்பட்டவங்க தானே? அவங்களும் என்னை மாதிரி தானே? அவங்களுக்கும் என்ன தெரியும் சொல்லு.

நான் சிக்ஸ்த் படிக்கும்போதே ஹாஸ்டலில் எனக்கு தனி ரூம் கொடுத்திட்டாங்க. அப்ப இருந்தே நான் தனியா தான் வாழ ஆரம்பிச்சேன்.

ஒருவேளை காலேஜ் படிப்பை நான் ஹாஸ்டலில் தங்கிப் படிச்சிருந்தால் எனக்கு நல்ல நண்பர்கள் கிடைச்சு... அவங்க மூலமா எனக்கு வாழ்க்கைன்னா என்னவென்று தெரிய வந்திருக்கலாம். ஆனால் நான் வீட்டில் இருந்து தான் காலேஜுக்குப் போயிட்டு வந்தேன். அதனால கிடைச்ச நண்பர்களோட நல்லா பழகுற வாய்ப்பும் கிடைக்கலை.

அது மட்டுமில்லை... ஸ்கூல் லைஃப் பூராவும் தனிமையிலே கழிச்சிட்டதால எனக்கு காலேஜிலே எல்லோரிடமும் ஃப்ரீயா பேசிப் பழகணும் என்று தோணாமல் போச்சு.

அதனால எனக்கு இந்த அன்பு, பாசம், பந்தம், குடும்பம் அமைப்பு... எது பத்தியும் தெரிஞ்சுக்க முடியலை.

நீ அன்னைக்குக் கேட்டியே... நீயும் உன் குடும்பமும் பூகம்பத்திலே கஷ்டப்பட்டப்போ நான் ஏன் உங்களை விசாரிக்கலை என்று... அது மாதிரி விசாரிக்கணும் அப்படிங்கிற பேசிக் மேனர்ஸ் கூட எனக்குத் தெரியாது மீரா.

இப்போ இந்த மூணு மாசமா எனக்குள்ளே ஏற்பட்ட மாற்றத்தாலே, ரெண்டு நாள் முன்னாடி நான் என் பி.ஏ. கிட்டே அவரோட பீவர் சரியாகிடுச்சான்னு விசாரிச் சப்போ அவர் முகமே மலர்ந்திடுச்சு.

அவருக்கும் எனக்கும் ரத்த சொந்தமோ, உறவோ கிடையாது. ஆனால் அவரே நான் விசாரிச்சதை நினைச்சு அவ்வளவு சந்தோஷப்பட்டால்... நெருங்கின உறவுகள் நம்மகிட்டே எவ்வளவு எதிர்பார்ப்பாங்க. நாம விசாரிச்சால் எப்படி சந்தோஷப்படுவாங்கன்னு அன் னைக்கு தான் நான் யோசிச்சுப் பார்த்தேன். அன்னைக்கு குஜராத்துக்கு வந்து உன்னைப் பார்க்காததுக்கு சாரி மீரா.

உங்க அப்பா இறந்தப்போ நான் எழுந்து நடக்க ஆரம்பிச்சு இருந்தேன். ஆனால் தாத்தா கூட மும்பைக்கு வந்து விசாரிக்கணும்ன்னு எனக்குத் தோணலை. அதுக்குக் காரணம் அலட்சியம் கிடையாது. உனக்கும் எனக்கும் இடையிலே இருந்த இரண்டரை வருஷ இடைவெளி.



அது மட்டுமில்லை... இதுவரைக்கும் நான் யார் சாவுக்கும் போனதில்லை. சாவு வீட்டுக்கு போய் அந்தக் குடும்பத்து மனுஷங்களோட துக்கத்தைப் பகிர்ந்துக் கணும் என்று எனக்குத் தெரியாது. அன்னைக்கு நான் வராததுக்கும், அது பத்தி இத்தனை நாள் உன்னிடம் நான் விசாரிக்காமல் இருந்ததுக்கும் இன்னொரு சாரி.

அன்னைக்கு உன்னை பார்ட்டியில் விட்டுட்டு வந்தது... நானும் தாத்தாவும் ஒரே பார்ட்டிக்குச் சேர்ந்தும் போவோம். தனித் தனியாவும் போவோம். அதே மாதிரி திரும்பி வரும்போதும் தனித் தனியாவும் வருவோம். அதனால அன்னைக்கு உன்னை அங்கே விட்டுட்டு வந்தது அப்ப எனக்கு தப்பா தோணலை மீரா.

ஆனால் தியாவை என்கிட்டே சொல்லாமல் தூக்கிட்டு வந்தபோது தான் எனக்கு நான் செஞ்சது எவ்வளவு முட்டாள்தனமான காரியம் என்று புரிஞ்சது. ஐயம் சாரி.

உன்னோட பிரசவத்தன்னைக்கு...'' என்று தொடங் கியவன் எதையும் சொல்லாமல் ஜன்னலோரமாக நின்று கொண்டு வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித் தான்.

அவன் அன்று செய்தது மன்னிக்க முடியாத குற்றம் தான். ஆனால் அவன் வருந்துவதைப் பார்க்க மீராவிற்கு மனம் சங்கடமாக இருந்தது.

அதனால் 'விளக்கம் சொன்ன வரைக்கும் போதும். விட்டுவிடுங்க!' என்று சொல்ல எண்ணி அவனருகில் செல்ல... அவன் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

''அன்னைக்கு நீ வலியால துடிச்சப்போ ஒரு சக மனுஷிக்கு உதவி செய்யணும் அப்படிங்கிற மனிதாபிமானத்திலே தான் நான் உன்னை ஹாஸ்பிட்டலுக்கு கூட்டிட்டுப் போனேன். இல்லைன்னா அதைக்கூட செஞ்சிருக்க மாட்டேன்.

இவ்வளவு நேரம் நான் செஞ்ச எல்லாத்துக்கும் என் பக்க நியாயமா என்னால ஒரு சின்ன விளக்கமாச்சம் சொல்ல முடிஞ்சது. ஆனால் இதுக்கு... என்னாலே உன் முகம் பார்த்துக் கூட பேச முடியலை மீரா'' என்றவனின் குரல் உடைய,

அவனை நெருங்கியவள் அவனைத் தன் புறமாகத் திருப்பி அவனது கண்களுக்குள் ஆழப் பார்த்தாள். அவனால் அவளது கண்களைப் பார்க்க முடியவில்லை. தன் பார்வையைத் தாழ்த்தி தரை மீது பதித்தான்.

அவன் முகத்தை மேல் நோக்கி நிமிர்த்திக் கொண்டே, ''நீங்க செஞ்சது தப்பு தாங்க. நான் இல்லைன்னு சொல்லலை. ஆனால் அதை உணராமலே இருந்தால் தாங்க தப்பு. உணர்ந்து வருந்துறவங்களை மன்னிக்காமல் இருப்பது அதை விடப் பெரிய தப்பு. நான் உங்களை மன்னிச்சிட்டேங்க. நீங்க அதை மறந்திடுங்க'' என்று அவள் உணர்ந்து சொன்னதும்,

அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான். அவளது தோள் வளைவில் அவனது கண்ணீர் துளிகள் படுவதை



உணர்ந்த மீரா அவனது முதுகை வருடிக் கொடுத்து சமாதானப்படுத்தினாள்.

பத்து நிமிடங்களுக்கு மேல் அங்கே அமைதியே நிலவியது. அவளிடமிருந்து விலகியவன் அவளது முகத்தைத் தன் கைகளில் தாங்கி அவளது கண்களை நேராகப் பார்த்து,

''மூணு வயசிலே இருந்து ஹாஸ்டலில் வளர்ந்துட்டதால குடும்பங்கிற அமைப்பு எப்படிப்பட்டதுன்னும் எனக்குப் புரியலை. குடும்பத்திலே உள்ளவங்ககிட்டே எவ்வளவு பாசம் காட்டணும் என்றும் தெரியலை. எவ்வளவு தூரம் அவங்ககிட்டே இருந்து எதிர்பார்க்கணும் என்றும் நானும் தெரிஞ்சுக்கலை.

என் பொண்ணு வந்து தான் எனக்கு எல்லாத்தையுமே கத்துக் கொடுத்திருக்காள். இனிமே உங்க ரெண்டு பேரையும் நான் கண்ணுக்குள்ளே வைச்சுப் பார்த்துப்பேன். உனக்கு என் மேலே நம்பிக்கை இருக்கா? என்னை நம்புவே தானே?''

''உங்களை நம்பாமலா? கண்டிப்பா நம்புவேன்.''

''அப்புறம் ஏன் அன்னைக்கு...'' என்று ஷ்யாம் தொடங்கியதுமே,

''நீங்க எது கேட்குறதுன்னாலும் அப்புறமா கேளுங்க. முதல்ல எனக்கு உங்க காயத்தைப் பார்க்கணும்.''

''அதைப் பார்த்து என்னம்மா செய்யப் போறே?'' என்று கேட்டதும் மீரா முறைத்தாள்.

''செய்டான்னு சொன்னால் செய்யப் போறேன். இதுக்கு எதுக்கு முறைக்குறே?'' என்று சொன்னவன், குளியலறை சென்று தனது பேண்டை மாற்றி பெர்

முடாஸ் மாட்டி வந்தான். மேலே சட்டை போடாமல் அவன் வந்து நின்றதும் மீராவிற்கு வெட்கமாக இருந்தது.

''மீரா, அவசியம் காயத்தைத் தான் பார்க்கணுமா?'' என்று கண்ணடித்துக் கொண்டே ஷ்யாம் கேட்ட வுடன்,

அவளுக்கு வெட்கம் வந்தாலும் அவனே காயத்தைப் பற்றி ஞாபகப்படுத்தியதால் அவனைப் படுக்கையில் அமர வைத்து அவனது முதுகில் உள்ள தழும்பை ஆராய்ந்தாள்.

நடுங்கும் விரல்களால் அதைத் தடவிக் கொடுத்தவள் அவனது காலைத் தன் மடி மீது வைத்து அங்கிருந்த தழும்புகளைக் கண்டு கண் கலங்கினாள்.

''ரொம்ப வலிச்சதா?'' என்று அவள் கண்ணீருடன் கேட்க,

தன் காலை மடக்கியவன் அவளை அருகே இழுத்து அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான்.

''இப்போ எதுக்கும்மா அந்தப் பேச்செல்லாம்?''

''ஏன் நீங்க எனக்கு சொல்லிவிடவே இல்லை. உங் களுக்கு என்னிடம் சொல்லணும் என்று தோணவேயில் லையா? அவ்வளவு வெறுப்பா?''

''உண்மையைச் சொன்னால் உன் மனசு நோகும். ஆனால் நான் உண்மையைச் சொல்வதால நீ மனசு கஷ்டப்படப் போறது இன்னைக்குத்தான் கடைசி என்பதால் இப்பவும் நான் உண்மையவே சொல்றேன்.

வலிச்சதான்னு கேட்டே இல்ல... ரொம்ப ரொம்ப வலிச்சது. நரக வலி. நடக்க முடியாமல் ரூமுக்குள்ளே



அடைஞ்சு கிடக்குறது எவ்வளவு கொடுமை தெரியுமா? கீழே உள்ள ஒரு அறையிலே தான் தங்கியிருந்தேன்.

நான் அந்த அறையை விட்டு வெளியே போனால் அது ஹாஸ்பிட்டலுக்கு தான். மறுபடியும் சர்ஜரி, மாத்திரை, மருந்து, ஊசி, வலின்னு... யாருக்கும் அப்படி ஒரு நிலைமை வரக்கூடாது.

எனக்கு ஏன் சொல்லி விடலைன்னு கேட்டே... என்னோட வலியை மீறி என்னால எதைப் பத்தியும்... யாரைப் பத்தியும் சிந்திக்கவே முடியலை.

இவ்வளவு வலியைத் தாங்கிக்கிட்டு நாம உயிரோடு இருக்கணுமான்னு யோசிப்பேன். ஆனால் அப்போ கூட உனக்காக வாழணும் அப்படின்னு எந்த எண்ணமும் எனக்குத் தோணலை. ஏன்னா நீ என்னைச் சார்ந்து எப்போதும் இருக்கலையே!

இப்போ தியா ஒவ்வொரு விஷயமும் நான் தான் பண்ணனும் அப்படின்னு பிடிவாதமா என்னைச் சார்ந்து இருந்த மாதிரி நீ அன்னைக்கு நடந்துக்கலையே!

நான் உன்னைக் குறை சொல்லலை மீரா. நீ என் னோட நடவடிக்கை பிடிக்காமல் ஒதுங்கிப் போனே! ஆனால் அதையெல்லாம் இப்போ உணர முடிஞ்ச என்னால அன்னைக்கு உணர முடியலையே. அதனால யாருக்காக நாம வாழணும்ன்னு தான் யோசிச்சேன்.

ஆனா அத்தனை வலியையும் தாங்கிட்டு நான் போராடி இன்னைக்கு நடமாடுறேன் என்றால் அதுக்குக் காரணம் என் தாத்தா.

அவர் எனக்காக பட்டபாடு கொஞ்சம் இல்லை. அவரை அழ விடக்கூடாதுன்னு தான் நான் என்னோட

அத்தனை சர்ஜரியையும் தாங்கிக்கிட்டேன்'' என்றான்.

அவன் சொல்லச் சொல்ல அவளது அழுகை அதிகரித்ததே தவிர குறையவில்லை.

அவளை அருகே இழுத்து அணைத்துக் கொண்டவன், "போதும்மா. இதுக்கு மேலேயும் அழுது என்னைச் சங்கடப்படுத்தாதே. நீ கண்ணீர் விட விட எனக்குக் குற்ற உணர்ச்சி அதிகமாகுது'' என்று தொண்டை அடைக்க அவன் சொன்னவுடன் அவளது அழுகை நின்றது.

அவளது முதுகை வருடிக் கொடுத்தான். அவள் அவனை நெருங்கி அணைத்துக் கொண்டாள். அவனும் அவளை மேலும் இறுக்கி அணைத்துக் கொண்டான்.

சற்று முன்பு அவளை அணைத்த இரு தடவையுமே அவன் அவளிடம் ஆறுதலைத் தான் வேண்டினான். ஆனால் இம்முறை மனசில் உள்ள பாரங்களை எல்லாம் இறக்கிய நிலையில் மனைவியை அணைத்ததும் அவனுக்கு உடலெல்லாம் சிலிர்த்தது. இதற்கு முன் உணராத அந்த புதிய உணர்வைக் கண் மூடி அனுபவித்தான். தன் கைகளுக்குள் இருப்பவள் தன் காதலி... தன் மனைவி... தன் வாழ்வு என்ற உணர்வு அவனை நெகிழச் செய்தது.

இதற்கு முன் அவளை கடமையாய் அணைத்ததற்கும் இன்று காதலால் கசிந்துருகி அணைப்பதற்கும் உள்ள வித்தியாசம் அவனுக்கு நன்கு புரிந்தது.

அவர்களது இந்த மோன நிலை சில நிமிடங்கள் நீடிக்க ஷ்யாம், ''மீரா, தூங்கிட்டியா?'' என்று அவளது காதில் மெதுவாகக் கேட்டான்.



அவனது மார்பில் தலையால் முட்டிக் கொண்டே, "இப்போ போய் தூங்குவேனா?'' என்று கேட்டாள்.

அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டே, ''ஏன் இப்போ என்ன ஸ்பெஷல்?'' என்று அவளைச் சீண்ட,

அவள் அவனை விட்டு விலகி நிமிர்ந்து வெடுக்கென்று அவனைத் தள்ளி விட்டாள்.

ஹா ஹா என்று சிரித்தவன் அவளை இழுத்துக் கொண்டே, ''நான் உனக்கு கிஸ் கொடுத்தப்போ...'' என்று தொடங்கியவனை இடைமறித்து,

''நீங்க எனக்கு கிஸ் கொடுத்தீங்களா? அது எப்போ நடந்துச்சு? உங்க கனவிலேயா?'' என்று ஆச்சரியமாய் கேட்ட மீராவைப் பார்த்து,

''அடிப்பாவி! அன்னைக்கு தியா பொம்மை வாங்கிட்டு வந்தபோது நம்ம வீட்டு ஹாலிலே வைச்சுக் கொடுத்தேனே? நீ தான் துடைச்சிட்டுப் போனே?'' என்று குற்றம் சாட்டினான்.

''நடு ஹாலில்... உங்க பொண்ணு முன்னாடி இது வேற நடந்துச்சா?'' என்று கணவனை முறைத்துக் கொண்டே கேட்க,

''ஏன் துடைச்சிட்டுப் போனே? அதுக்கு முதல்ல பதிலைச் சொல்லு'' என்று அவன் தன் கேள்வியிலேயே பிடிவாதமாக நின்றான்.

''நீங்க கிஸ் கொடுத்ததே எனக்குத் தெரியலை... இதிலே நான் துடைச்சேன் என்று சொல்லி, அதுக்குக் காரணம் என்னன்னு கேட்டா நான் என்னங்க பதில்

சொல்ல முடியும்?'' என்று சொன்னவள் அவனைப் பார்த்து.

''சரி இப்போ கிஸ் கொடுங்க. நான் என் கன்னத்தைத் துடைக்காமல் இருக்கேன்'' என்று சொல்லி முடிக்கும் முன்பே அவளது கன்னத்தில் அழுத்தி முத்தமிட்டான்.

அவள் அவனைப் பார்த்து ''இப்போ நான் துடைக் கலைங்க. இப்போ உங்களுக்கு திருப்தியா?'' என்று கேட்டதும்,

''கஷ்டம்டா சாமி!'' என்று சொல்லிக் கொண்டே தன் தலையில் அடித்துக் கொண்டவன் அவளைப் பார்த்து முறைக்க,

''இப்போ எதுக்கு முறைக்கிறீங்க?'' என்று பரிதாப மாகக் கேட்டாள்.

''ம்ம்ம் இதுக்கு நான் நடு ஹாலிலேயே கொடுத்து இருக்கலாம்'' என்று அவன் சலித்துக் கொள்ளவும் தான்.

அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரிந்த தினுசில் ஹிஹி என்று அசடு வழிந்தவாறே எக்கி அவனது கன்னத்தில் மென்மையாக இதழ் பதித்தாள்.

மயிலிறகாய் தீண்டின அவளது இதழின் ஸ்பரிசத்தைக் கண் மூடி அனுபவித்துக் கொண்டே சில நொடிகள் அமைதியாக இருந்தவன்,

''நான் நேத்து உன்னிடம் ஐ லவ் யூ சொன்னபோது எதுக்கு மீரா புரியாத பாஷையிலே திட்டினே?'' என்று தனது அடுத்த சந்தேகத்தைக் கேட்டான்.

ஐயோ என்று தலையில் அடித்துக் கொண்டவள், ''நான் எப்போங்க திட்டினேன். புரியலைன்னால் நேத்து



நைட்டே கேட்டுத் தெரிஞ்சுக்க வேண்டியது தானே. அதை விட்டுட்டு...'' என்று முறைத்தாள்.

''ஓ! அப்போ நான் தான் சான்ஸை மிஸ் பண்ணிட் டேனா?'' என்று உல்லாசமாகச் சிரித்தவன்,

''இப்போ கேட்கிறேன் சொல்லு. நேத்து நீ என்னைப் பார்த்து என்ன சொன்னே?'' என்று விளக்கம் கேட்டான்.

''ஹிந்தியிலே 'சௌதாகர்' அப்படின்னு ஒரு படம். மனீஷா கொய்ராலாவோட முதல் படம். அதிலே கதாநாயகன் இலு இலு அப்படின்னு ஒரு பாட்டு பாடுவான். இலுன்னா என்ன அப்படின்னு அவனைச் சுத்தி இருக்கிறவங்க கேட்பாங்க. இலுன்னா ILU... I Love Youன்னு சொல்லுவான். அதைத் தான் நான் I too Love You என்பதை (Itlu) இட்லுன்னு சொன்னேன்.''

''மை காட் இட்லுக்கு அர்த்தம் இதுவா? நேரடியாச் சொல்லுறதை விட்டுட்டு நீ தலையைச் சுத்தி மூக்கைத் தொடப் பார்த்துட்டு... விளக்கம் கேட்கிற என்னைப் பார்த்து முறைக்க வேற செய்யுறே?'' என்று அவளது காதைப் பிடித்து வலிக்காமல் திருகியவன்,

''இப்போ முறைக்கிறதை விடு. நேத்து ஏன் அதை முறைச்சுகிட்டே சொன்னே? அதிலே தான் நான் குழம்பிப் போயிட்டேன்'' என்றான்.

''முறைக்காமல் பின்னே என்ன செய்வாங்க? எங்கே வைச்சு ஐ லவ் யூ சொல்லுறீங்க. ஒண்ணு பட்டத்து கிட்டே இல்லைன்னா நடு வீட்டிலே... அதுவும் உங்க பொண்ணு முன்னாடியா சொல்லுறதுன்னு முறைச் சேன்.''

''தனிமையிலே சொல்லலைன்னு தான் உனக்குக் கோபமா? சரி இப்போ சொல்லுறேன். எந்த பாஷையிலே சொல்லட்டும்?'' என்று அவளது முகத்தில் தன் விரல்களால் கோலம் போட்டவாறே கேட்டான்.

அவனது கழுத்தில் தன் கைகளை மாலையாகக் கோர்த்துக் கொண்டே, ''தமிழ், இங்கிலீஷ், ஹிந்தி குஜராத்தி இதிலே எந்த மொழியிலே வேணா சொல்லுங்க'' என்று கொஞ்சினாள்.

''ம்ஹூம் நான் வேற மொழியில தான் சொல்லுவேன்.''

''என்ன மொழி?'' என்பது போல் பார்த்தவளிடம், ''காதலர்கள் மொழி'' என்றான்.

''அது என்ன...'' என்ற அவளது கேள்வி பாதியிலே தொக்கி நிற்க அவன் அவளது இதழ்களைத் தன் இதழ்களால் சிறை செய்தான்.

அந்த மொழி புரியாத காதலர்கள் உலகத்தில் உண்டா என்ன?